# நல்லைக் குமரன் மலர்

# 2001



வெளி[illegible]

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற

சைவசமய விவகாரக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஓம் குமாராய நம





# நல்லைக் குமரன் மலர் — 9

## 2001

பொது சன நூலகம்
20 SEP 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பதிப்பாசிரியர்:

**நல்லையா விஜயசுந்தரம்**

**B.A. (Spe. in Eco.)**

916.P

**சைவசமய விவகாரக் குழு**

மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1585 (P) CC

# யாழ்ப்பாணம்
# மாநகராட்சி மன்றத்தின்
# சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் - 2001

போஷகர் - திரு.நடராஜா இரவிராஜ்
மாண்புமிகு மாநகர முதல்வர்

உப போஷகர் - திரு. செ.கந்தையன்
கௌரவ பிரதி முதல்வர்

01. தலைவர் - திரு.இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்

02. செயலாளர் - திரு.இ.இரத்தினசிங்கம்
நிர்வாக உத்தியோகத்தர்

03. பொருளாளர் - திரு.து.சோமசுந்தரம்
சனசமூகநிலைய மேற்பார்வையாளர்

04. நிர்வாகசபை உறுப்பினர் - திரு.நா.இரகுமார்
சுகாதாரப் பரிசோதகர்

05. நிர்வாகசபை உறுப்பினர் - திரு.வை.தனபாலசிங்கம்
வேலை மேற்பார்வையாளர்

06. நிர்வாகசபை உறுப்பினர் - திரு.க.கிருஷ்ணகுமார்
பாதுகாப்பு மேற்பார்வையாளர்

07. நிர்வாகசபை உறுப்பினர் - திரு.ந.ஜீவரட்ணம்
எழுதுநர்

08. நிர்வாகசபை உறுப்பினர் - திரு.எஸ்.ஜெயபவான்
வருமான மேற்பார்வையாளர்

கௌரவ பதிப்பாசிரியர் - திரு.ந.விஜயசுந்தரம்
ஆசிரியர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

பாரதி பதிப்பகம், 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 3081.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பன் வாகனத்தில் வேலவன் வீதியுலா வரும் காட்சி



மயில் மீதேறி நல்லூரான் பவனிவரும் திருக்கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணம்
### மாநகராட்சி மன்றத்தின்

# சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் - 2001

| | | |
|---|---|---|
| போஷகர் | ~ | திரு.நடராஜா இரவிராஜ்<br>மாண்புமிகு மாநகர முதல்வர் |
| உப போஷகர் | ~ | திரு. செ.சுந்தையன்<br>கௌரவ பிரதி முதல்வர் |

| | | |
|---|---|---|
| 01. தலைவர் | ~ | திரு.இ.இராமலிங்கம்<br>மாநகர ஆணையாளர் |
| 02. செயலாளர் | ~ | திரு.இ.இரத்தினசிங்கம்<br>நிர்வாக உத்தியோகத்தர் |
| 03. பொருளாளர் | ~ | திரு.து.சோமசுந்தரம்<br>சனசமூகநிலைய மேற்பார்வையாளர் |
| 04. நிர்வாகசபை உறுப்பினர் | ~ | திரு.நா.இரகுமார்<br>சுகாதாரப் பரிசோதகர் |
| 05. நிர்வாகசபை உறுப்பினர் | ~ | திரு.வை.தனபாலசிங்கம்<br>வேலை மேற்பார்வையாளர் |
| 06. நிர்வாகசபை உறுப்பினர் | ~ | திரு.க.கிருஷ்ணகுமார்<br>பாதுகாப்பு மேற்பார்வையாளர் |
| 07. நிர்வாகசபை உறுப்பினர் | ~ | திரு.த.ஜீவரட்ணம்<br>எழுதுநர் |
| 08. நிர்வாகசபை உறுப்பினர் | ~ | திரு.எஸ்.ஜெயபவான்<br>வருமான மேற்பார்வையாளர் |

கௌரவ பதிப்பாசிரியர் ~ திரு.ந.விஜயசுந்தரம்
ஆசிரியர்,
உடுவில் கொக்குவில் இந்துக் கல்லூரி.

பாரதி பதிப்பகம், 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 3081.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பன் வாகனத்தில் வேலவன் வீதியுலா வரும் காட்சி



மயில் மீதேறி நல்லூரான் பவனிவரும் திருக்கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷு வருஷம், ஆடி மாதம்

# நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் மஹோற்சவம்

# விசேட தினங்கள் - 2001

| | | | |
|---|---|---|---|
| **25.07.2001 புதன்** | கொடியேற்றம் | **பகல் 10.00** | (1ம் திருவிழா) |
| **03.08.2001 வெள்ளி** | மஞ்சம் | **மாலை 5.00** | (10ம் திருவிழா) |
| **12.08.2001 ஞாயிறு** | கார்த்திகை உற்சவம் | **மாலை 5.00** | (19ம் திருவிழா) |
| **13.08.2001 திங்கள்** | சந்தானகோபாலர் உற்சவம் | **காலை 7.00** | (20ம் திருவிழா) |
| | கைலாச வாகனம் | **மாலை 5.00** | (20ம்திருவிழா) |
| **14.08.2001 செவ்வாய்** | கஜவல்லி மஹாவல்லி உற்சவம் | **காலை 7.00** | (21ம் திருவிழா) |
| | வேல் விமானம் | **மாலை 5.00** | (21ம் திருவிழா) |
| **15.08.2001 புதன்** | தெண்டாயுதபாணி உற்சவம் | **காலை 5.00** | (22ம் திருவிழா) |
| | ஒரு முகத்திருவிழா | **மாலை 5.00** | (22ம் திருவிழா) |
| **16.08.2001 வியாழன்** | சப்பறம் | **மாலை 5.00** | (22ம்திருவிழா) |
| **17.08.2001 வெள்ளி** | தேர் | **காலை 7.00** | (24ம் திருவிழா) |
| **18.08.2001 சனி** | தீர்த்தம் | **காலை 7.00** | (25ம் திருவிழா) |
| **19.08.2001 ஞாயிறு** | பூங்காவனம் | **மாலை 5.00** | (26ம்திருவிழா) |
| **20.08.2001 திங்கள்** | வைரவர் உற்சவம் | **மாலை 5.00** | (27ம் திருவிழா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# மன்றக் கீதம்

ராகம் - மோகனம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ்நக ராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே (ஈழத் தமிழர்....)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம் (ஈழத் தமிழர்....)

ஏழிசை வல்லோன் யாழிசைப் பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழி சூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம் (ஈழத் தமிழர்....)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதரராவர்
நமதரும் பண்பு கலைகலாச் சாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க (ஈழத் தமிழர்....)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்விரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க (ஈழத் தமிழர்....)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில் நிலையங்கள்
எழிலுறு கோட்டை கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க (ஈழத் தமிழர்....)

வேத மந்திர கீத மொலிக்கும்
விளங்கிடு குர் ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும் (ஈழத் தமிழர்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

நல்லூரான் திருவடிக்கு இது ஒன்பதாவது மலர், கலியுகவரதன் கந்தனை, நல்லூர்ப்பதியில் கண்டு களிப்புற்று வழிபடும் பேறு பெற்றவர்கள் நாங்கள், அந்த ஆறுமுகக் கடவுளின் அருட்பார்வையால் தீவினை களைந்து, திருவருள் பெறுகின்றோம். நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவமென்றால் யாழ்ப்பாண மண் புனிதமடையும், பொலிவுபெறும், எங்கும் தெய்வீகம் காட்சிதரும், கந்தா, வேலா, கடம்பா, கலியுகவரதா, என்றெல்லாம் அடியார்களின் நா உச்சரிக்கும்,

"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்பது எந்நாட்டிற்கும் உரியவனான சிவன் உறையும் தென்னாட்டிற்குப் பொருந்துமெனில் நம் நாட்டில் பஞ்சம் பசி வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும், நல்லூரில் உறையும் ஆறுமுகனின் முருகநாமமே எங்கும் ஒலிக்கும். அத்துணைதூரம் நல்லூர்க்கந்தவேளில் அசையாத நம்பிக்கையும், பக்தியும் உடையவர்கள், நாம்.

சைவசமயத்திற்குத் தொன்று தொட்டு ஏற்பட்ட அபாயங்களையெல்லாம், கடந்து, நம் சமயம் நின்று நிலைக்கிறதெனில் அதற்கெல்லாம் காரணம் நம் சைவத்திலுள்ள ஆழமான–அர்த்தமான தத்துவங்களும், இல்வாழ்வுக்குரிய இலக்கணங்களுமேயாகும். எம் மொழியினரும், எம்மதத்தினரும் விரும்பி ஏற்றுக்கொள்ளும் அருமையான தத்துவங்கள் பொதிந்துள்ள நம் சமயத்தின், கருத்துக்களை, அச்சமயம் கூறும் நல்வழிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளஞ் சந்ததியினர் கடைப்பிடிப்பதாக இல்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், சைவ சமயத்தில் கூறப்படும் ~ கடைப்பிடிக்கப்படும் ஒவ்வொரு விடயங்களுக்கும் விளக்கங்கள், வெளிப்படையாக இல்லை, நம் சமயம் மீதான ஆய்வுகள் இல்லை, ஆராய்ச்சிகள் இல்லை, நம்முன்னோர்கள் செய்தார்கள் என்ற அடிப்படையில், சைவ அனுட்டானங்கள், கிரியைகள் நீண்டகாலத்திற்குத் தொடர முடியாது.

தகவல் தொழில்நுட்பம் பரந்து விரிந்த இன்றைய விஞ்ஞான உலகில் வாழும் இளஞ்சந்ததி எந்த விடயத்தையும் ஏன்? எதற்கு? என வினவி அதன் ஆழத்தை அறியத்துடிக்கிறது. தேடலுக்கு ஏற்ற பதில் கிடைக்கவில்லையாயின் தேடப்பட்ட விடயத்தில் ஓர் வெறுப்பும், விலக்குமே ஏற்படும். இதனை நம் அறிஞர் பெருமக்கள் உணர்ந்து செயற்படுவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இதற்காக சைவசமய அமைப்புகளும் துறைசார்ந்த அறிஞர்களும் ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு, சைவம் கூறும் தத்துவங்களை வெளிப்படுத்த முன்வரவேண்டும். அவ்வாறு முன்வரும் போது சைவத்தின்பால், இறைவனின் பால், இளஞ்சந்ததியினருக்கு பற்றும் நம்பிக்கையும் ஏற்படுமென்ற இக் கருத்தை நல்லைக் குமரனின் ஒன்பதாவது மலரின் கருப்பொருளாகத்தந்து எண்ணியவை எண்ணியாங்கு எய்திட எல்லாம் வல்ல நல்லூர்க்கந்த வேளின் திருவடியை வேண்டி குமரக்கடவுளின் பாத கமலங்களில் இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

**"மேன்மை கொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெல்லாம்"**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக்குமரன் மலர்.**

**சைவசமய விவகாரக்குழு,**
**யாழ். மாநகராட்சி மன்றம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரன் திருவடிக்கு....


✦ சமர்ப்பணம்

✦ தெய்வீகம பரவட்டும் - இ. இராமலிங்கம் (தலைவர்)

✦ இறைபணியே எம்பணி - இ.இரட்ணசிங்கம் (செயலாளர்)

✦ ஆசியுரைகள்

✦ பண்ணிசைப் போட்டி முடிவுகள்

✦ நல்லைக் கந்தன் அர்ச்சனை மாலை 27

✦ நல்லூரா சொல்லு நலம் - த. ஜெயசீலன் 29

✦ பக்கம் இருந்தெம்மைக் காப்பவன்
கவிஞர் வ. யோகானந்தசிவம் 30

✦ நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ்
ச.தங்கமாமயிலோன் 32

✦ தமிழர் வாழ்வில் பூமாலை
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 43

✦ பெரியபுராணத்தில் சைவசித்தாந்தம்
செல்வி சந்திரிகா நவரத்தினம் 47

✦ மஹோற்சவங்களின் நவசந்திகளின் முக்கியத்துவம்
கே. எஸ். சிவஞானராஜா 54

✦ தெய்வம் இருப்பது எங்கே? 57
சமூகஜோதி கா. கணேசதாசன் ஜே.பி.

✦ திருவண்ணாமலை 59
பொ. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ ஈழத்து முருக வழிபாட்டுமரபில் வன்னிப்பிரதேசம் 71

✦ முருகவழிபாடு ஒருநோக்கு
பேராசிரியர் வி. சிவசாமி 80

✦ அன்புநெறி
ஸ்ரீபதிசர்மா கிருஸ்ணானந்தசர்மா 85

✦ குமாரதந்திரம் கூறும் சுப்பிரம்மண்யரின் மூர்த்திபேதங்கள்
பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் 88

✦ தீயவை புரிந்தாரேனும்
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் 94

✦ தமிழர் திருமணமுறைகள் ஒரு நோக்கு
செல்வி சுமதி கனகரட்ணம் 99

✦ சைவமும் தமிழும் இருகண்கள் திருமுறைகள் ஓதி உய்யுங்கள்
மதிவாணர் செ. மதுசூதனன் 104

✦ அடியேன் உன் அடைக்கலமே
நயினை கி. கிருபாகரன் 107

✦ சைவசித்தாந்தம்
முனைவர் சோ.ந.கந்தசாமி 110

✦ தொல்லைவினைதீர்க்கும் நல்லைக்கந்தன்
கவிமணி சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் 120

✦ இறைவனின் குழந்தைகள் நாம்
க. சிவசங்கரநாதன் சரசாலை 123

✦ ஈழத்து ஆலயவரலாற்றில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
இ. அன்னலிங்கம்
வ. கணேசமூர்த்தி 125

✦ நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகம் பரவட்டும்

ஈழத்து முருகன் ஆலயங்களில் நல்லூர் முருகனுக்குத் தனிச்சிறப்புண்டு. சிவபூமியென்று போற்றப்பட்ட ஈழத்திருநாட்டில் அன்பும், ஆன்மீகமும் செழிப்புற்று விளங்குவதற்கு, ஆலயங்களே நிலைகளனாகின. அவற்றிலும் நல்லூர் முருகனின் ஆலயப்பணி மகத்தானது.

யாழ்ப்பாணத்துக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரமெனப் போற்றுமளவுக்கு அன்பு, அறிவு, தெய்வீகம் மணங்கமழ நல்லூர்க் கந்தன் ஆலயம் பெரும்பணியாற்றியுள்ளது.

நல்லூர்ப் பதியில் நடந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் புராணபடனமும். அந்தணப் பெரியோர்களின் வேத உச்சாடனங்களும், மக்களின் அறிவுக்கு வித்திட்டதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்வர்.

நல்லூர் முருகன் ஆலயம் யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் அமைந் திருப்பது நகரிற்கு பெருமையும், புகழும் சேர்ப்பதாக அமைந்துள்ளது. கலியுகவரதனான கந்தப்பெருமானின் அருளாட்சியே நம்மையெல்லாம் வாழவைக்கும். அவன் அருளாட்சி யோங்க, அவன் புகழ்பாடுவது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

அவ்வகையில் நல்லைக் கந்தனின் புகழை, பெருமையைப் பரப்பும் பணியை யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழு "நல்லைக்குமரன் மலர்'ஐ வெளியிடுவதன் மூலம் மேற்கொண்டுவருகிறது.

அறிஞர்களின் ஆக்கங்களையும், அனுபவப்பதிவுகளையும், தாங்கிவரும் நல்லைக் குமரன் மலர் மக்கள் மத்தியில் தெய்வீக உணர்வை வலுப்படுத்த முருகனின் திருவருளை வேண்டுகின்றேன்.

இ.இராமலிங்கம்
ஆணையாளர்,
தலைவர் - சைவசமய விவகாரக்குழு.

யாழ்.மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணியே எம்பணி

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக்குழு நல்லைக் குமரன் மலரைத் தொடர்ந்து ஒன்பதாவது வருடம் வெளியிட்டு வருவது நமக்கெல்லாம் பூரிப்பைத் தந்துள்ளது.

நல்லூர்க் கந்தனின் திருவருட்படியே அவனைப் பாடிப் பரவும் பணியும் தொடர்கிறது. யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு தனியே மலர் வெளியீட்டுடன் மட்டும் நின்றுவிடாது இளம் சந்ததியினரிடையே சமய அறிவையும் ஆன்மீக உணர்வையும் ஏற்படுத்துவதில் அயராது உழைத்து வருகிறது. சமயக் கருத்துக்களை இளஞ்சமூகத்தினரிடையே பரவச் செய்வதன் மூலமே எமது கலை, கலாசாரப் பண்பாட்டுப் பிறழ்வுகளைத் தடுக்க முடியுமென்பதே எமது அசைக்கமுடியாத நம்பிக்கை.

அவ்வகையில் சைவசமய விவகாரக் குழுவின் பணி மென்மேலும் பரவ எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

இ.இரத்தினசிங்கம்,
செயலாளர்

யாழ்.மாநகராட்சி மன்றம்,
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். மாநகர முதல்வரின்
# வாழ்த்துச் செய்தி

மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு 1993ஆம் ஆண்டு முதல் "நல்லைக் குமரன்" என்ற காத்திரமான வெளியீட்டை நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் வெளியிட்டு வருவது சைவத்தமிழ் உலகமும், யாழ்.மாநகர மக்களும், நாமும் எமது சபையும் பெருமைப்பட வேண்டியதொரு விடயமாகும்.

அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட ஆலய உற்சவங்களுள் நல்லைக் கந்தனின் ஆலயமும் ஒன்றாகும். அந்த வகையில் இவ்வாலயத்தின் வருடாந்த மகோற் சவத்தினை எவ்வித குறைகளுமின்றி நிறைவாக நடாத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு மாநகர சபையைச் சார்ந்ததாகும்.

மாநகர சபையானது தமது வளங்கள் மற்றும் பணியாளர்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடந்தேறுவதில் கடந்த காலங்களில் செயற்பட்டது போன்று எதிர்காலத்திலும் முழுப் பலத்துடன் பங்களிப்புச் செய்ய எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுமென அவன் தாள் பணிந்து இறைஞ்சுகிறேன்.

நல்லைக் குமரன் மலர் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் மலர்ந்த வண்ணமாக என்றும் வாடா மலராக சைவத்தின் அருமை பெருமைகளை பறைசாற்றும் முரசாக நமது மக்களிடையே நறுமணம் பரப்பவேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

எமது சைவசமய விவகாரக் குழுவினால் தற்போது யாழ். மாவட்டப் பாடசாலைகளுக் கிடையே நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டி மற்றும் பண்ணிசைப் போட்டிகளை எதிர்காலத்தில் தேசிய மட்டத்தில் - நாடளாவிய ரீதியில் நடாத்தக் கூடியவாறு விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் மாநகர முதல்வர்களாக அரும்பணியாற்றி அமரத்துவ மடைந்த திருமதி ச.யோகேஸ்வரன் மற்றும் பொ.சிவபாலன் ஆகியோரது ஆத்மா சாந்தியடைய இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்திப்பது எமது கடமையாகும்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

மாநகரசபை, யாழ்ப்பாணம்.

நடராஜா ரவிராஜ்
மாநகர முதல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சந்திர மௌளீச்வராய நம

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி.

**ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்களின்**

# ஆசிச்செய்தி

இனிய தமிழுக்கும் இறை நலத்துக்கும் ஏற்ற மிகுசைவசமயப் பாரம்பரியத்திற்கும் தொன்றுதொட்டு நிலைக்களனாகயிருப்பது ஈழநாடு. இத்திருநாட்டில் தமிழ் மக்களின் கலாசாரத்திற்குச் சான்றாகத் திகழ்வது யாழ். நகரம்.

அரசின் கல்வித்திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு ஆண்டுதோறும் இளைய தலை முறையினரிடையே சமய ஈடுபாட்டையும், அறிவையும், பக்தி நலத் தையும் வளர்க்கும் நோக்குடன் பல்லாண்டுகளாகச் சமய அறிவு மற்றும் பண்ணிசைப்போட்டிகளை நடத்திவருவதை அறிந்து மிகுந்த சந்தோஷமடைகிறோம்.

இத்தெய்வப்பணி மேன்மேலும் வளர்ச்சி பெற்று, நலந்தரவும் வருடந்தோறும் நல்லைக்கந்தக் கடவுளின் பெருவிழாவையொட்டி வெளியிடப் பெறும் "நல்லைக்குமரன் மலர்" இப்போது சிறந்த முறையில் வெளிவரவும், ஸ்ரீதிரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌளீஸ் வரப் பெருமானின் திருவருளைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**'நாராயணஸ்மிருதி'**

**ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்**
ஸ்ரீ மடம் ஸ்மஸ்தானம்.

**1, சாலை தெரு,**
**காஞ்சிபுரம் - 631502.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அவர்களின்

# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரகுழுவினால் வருடா வருடம் வெளிவரும் நல்லைக்குமரன் மலர் இவ்வருடமும் வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாண பட்டினத்துக்கு தலைவனாக விளங்கும் நல்லூர் முருகப்பெருமானின் திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக வெளிவரும் நல்லைக்குமரன் மலர் அனைத்து மக்களின் சிந்தனையை தெளிவுபடுத்துவதாக அமைந்திருந்தது. இதில் வரும் கட்டுரைகளும் செய்திகளும் சமய கருத்துக்களை சிந்தித்து வாழ்வதற்கு வழியாக அமைந்துள்ளது.

முருகன் என்றால் அழகு. அதனை மெருகூட்டும் வகையில் நல்லைக்குமரன் மலரும் முருகனின் திருவுருவப் படத்தையும் கட்டுரைகளையும் தாங்கி இவ்வருடமும் வெளிவர இருப்பது மகிழ்ச் சியை தருகின்றது. இம்மலரை வெளியிடும் சைவசமய விவகாரக் குழுவினருக்கும், யாழ். மாநகராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், நூலாசிரியருக்கும் இறையருள் கிடைப்பதாகப். அனைவரும் நூலைப் பெற்று பயன் பெறுவோமாக.

**"என்றும் வேண்டும் இன்பஅன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய ஸ்வாமிகள்.**
2வது குருமஹா சந்நிதானம்.

**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**

292ஆவது குருமகாசன்னிதானம் - ஆதீனகர்த்தர் அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ். மாநகராட்சிமன்றம், நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் 'நல்லைக்குமரன் மலரினை' இந்த ஆண்டும் வெளியிடயிருப்பதை அறிந்து மகிழ்ந்தோம்.

'நல்லைக் குமரன் மலர்' இளைய தலைமுறையினரிடையே சமய அறிவினையும், இறை பக்தியையும், ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் முகமாக அமைந்திடவும், மலர் வெளியீட்டு விழா சிறப்புற நடந்தேறிடவும், சைவசமய விவகாரக்குழு இறைப் பணி தொடர்ந்து சிறக்கவும், யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மக்களும் வாழ்வில் எல்லா நலன்களும், வளங்களும் பெற்றிடவும் திருவருள் பாலிக்குமாறு எமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**எல்லோருக்கும் ஆசீர்வாதம்.**

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகர்.
292ஆவது குருமகாசன்னிதானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை ஆதீனகர்த்தாவின்

# ஆசிச்செய்தி

கடல் சூழ்ந்துள்ள இப்பூமண்டலம் முழுவதற்கும் அரசனெனச் சிறப்புடன் வாழ வேண்டுமா; செல்வத்திற்கதிபதியான குபேரனையும், தேவராஜனான இந்திரனையும் விஞ்சிய போகங்களைப் பெறவிருப்பமா; முக்தி வேண்டுமா; செந்தமிழ்ப் புலமை வேண்டுமா; பகையைப் போக்கவேண்டுமா; இயமனை வெல்லவேண்டுமா; பற்பல சித்திகள்பெற வேண்டுமா; இவை வேண்டுமாயின் உண்மைச் சைவமகனாக வாழ்ந்து முருகப்பெருமானது கையில் விளங்கும் வேலாயுதத்தையும், அவரது வாகனமான மயிலையும், அவரது கடைக்கண்ணழகையும் நினைந்தும், பார்த்தும் சதாசிந்தனையில் ஏற்றுக்கொண்டால் அவனருளால் அனைத்தையும் பெறலாமென கருணையே உருவமான அருணகிரிநாத சுவாமிகள் அழைக்கின்றார்.

**"அலைகடல் வளைந்துருத்த வெழுபுவி புரந்திருக்கும்**
**அரசென நிரந்த ரிக்க வாழலாம் -**
**அளகையரசன் றனக்கும் அமரர் அரசன்றனக்கும்,**
**அரசென அறஞ்செலுத்தியாளலாம்;**
**அடைபெறுவ தென்றுமுத்தி யதிமதுர செந்தமிழ்க்கும்**
**அருள்பெற நினைந்து சித்தியாகலாம்-**
**அதிரவரு மென்று முட்ட அலகில்வினை சண்டைனிற்க**
**அடலெதிர் புரிந்து வெற்றியாகலாம்;**
**எமபடர் தொடர்ந்தழைக்கி லவருடனெதிர்ந்துளுட்க**
**இடியென முழங்கி வெற்றி பேசலாம்.**
**இவையொழிய வும்பலிப்ப தகலவிடுமுங்கள் வித்தை**
**யினையினி விடும்பெருத்த பாருளீர்;**
**மலையிறை மடந்தைபெற்ற வொருமதலை யென்றுதித்து**
**மலையிடியருந்துணித்த தோளினான் -**
**மயிலையுமவன் றிருக்கையியினையு. மவன்கடைக்க**
**ணியவையு நினைத்திருக்க வாருமே",**

(கடைக்கணியல் வகுப்பு)

இப்போ கலியுகத்தின் கோர ஆட்சியில் நாம் அமிழ்ந்துள்ளோம். எம்மைக் காப்பாற்ற முருகனேயல்லாது வேறு எந்தச் சக்தியாலுமே இயலாது. முருகப் பெருமானே சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பிரசாதியான தெய்வமென சங்கப் புலவர்கள்கூட எமக்கு அறியத்தந்துள்ளனர். சனத்குமாரசம்ஹிதையில் கூட

"கலௌ குஹம் பரித்யஜ்ய ந்ருணாம்
**ஸர்வார்த்த தாயகம் நகிஞ்சிதஸ்தி..."** என அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளது.
"ஸ்கந்தஸ்ய அதுலாம் கீர்த்திம் கலி
**கல்மஷ நாசினீம்"** என பழனி ஸ்தலபுராணம் கூறுகிறது. மனமுருகி ஸ்கந்தனை மனதில் தியானித்தால் பெருமானே வலியத் தேடிச்சென்று அருள் புரிவார் என்பதனை

"மாசிலடியார்கள் வாழ்கின்ற வூர்சென்று
**தேடிவிளையாடியே யங்கன்னின்று**
**வாழுமயில்வீரனே"** என திருப்புகழ் அறிவூட்டுகிறது.

ஆறுமுகநாவலரால் பாதுகாத்துத்தந்த யாழ்ப்பாணம் இப்போ கொடிய பறங்கிக் கலாசாரங்களால் பழுதாகிறது. சுடரொளியேற்றி அமுதுபடைத்து அகமகிழ்வோடு அவரவர் பிறந்த நாட்களைத் தெய்வத்தின் முன்னிலையினின்று ஆடிப்பாடி அருள் பெறுவதை மறந்து, இப்போ பிறந்த நாட்களின் நினைவாக, சுடரொளியை வாயால் ஊதி மாய்த்தும், அருவருக்கத்தக்க ஊண் பண்டத்தை கத்தியால் வெட்டியும், தெய்வத்தை மறந்து மாசுகொண்ட மனிதனை மதித்து அவனது வாயில் வெட்டிய ஊணை ஊட்டி மகிழ்வது மான பஞ்சமா பாதகங்களைச் செய்து சூழலையும் பாதிக்குமளவில் தற்கால நடை முறைகள் பெருகிக்கொண்டு வருகின்றன. பாதகர்களும் பறங்கிய வாரிசுகளும்கூட பெருகிவிட்டதால் நாடும் நலம்குன்றி மக்களும் இடர்பட்டுத் துன்பங்களைச் சுமந்து கொண்டு அலைகின்றனர்.

எனவே, எமக்குரிய சைவக் கலாசாரங்களோடு கலியுகவரதன் கந்தசுவாமியாரை மனதிலிருத்தி நாம் அனைவரும் வழிபடுவோமாக. எமது வழிபாட்டால் நாட்டில் சுபீட்சம் பொழிய முருகப் பெருமானது துணையையும், திருவருளையும் பெறுவோமாக. நல்லைக் குமரன் மலரின் சிவதர்மங்களிற்கும் உறுதுணை கொடுத்து உய்வோமாக.

**இவற்றுக்காக யானும் முருகப்பெருமானை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.**

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனம்.

**மாவையாதீனம்,**
**மாவிட்டபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்சுவாமிகளின்

# ஆசிச்செய்தி

என்றும்போல, இவ்வாண்டும், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது, நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 'நல்லைக் குமரன் மலர்' என்ற வருடாந்த சிறப்பு மலரை வெளியிட இருப்பதை அறிந்து அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இளைய தலைமுறையினரிடையே இன்று சைவசமய அறிவும், ஆன்மீக உணர்வும் குறைந்து காணப்படுவதை உணர்ந்து, அக் குறையை நீக்கும் முயற்சிகளில் ஒன்றாக இம்மலர் அமைகின்றது. இளைஞர் சமுதாயம் இம்மலரை வாசித்து பயன்பெறுவார்களாக!

சைவசமய விவகாரக் குழுவினரது நன்முயற்சிகளை வெகுவாகப் பாராட்டுகிறோம். அவர்களை இறைவன் மனமார ஆசீர்வதிப்பாராக!

**சுவாமி ஆத்மகனாநந்தா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சுவாமிகளின்

# ஆசிச்செய்தி

"நல்லூர் வீதியில் விழுந்து ஒருக்கால்
கும்பிட்டால் வில்லங்கம்
எல்லாம் இல்லாமல் போமே"

என்றார் தவத்திருயோகசுவாமிகள். இவர் அடியேனது வாழ்வில் ஒளியேற்றிய ஞானகுரவர். நல்லைக்குமரன் மலர் ஞானதீபத்தை மீண்டு ஏற்றி எல்லாரிடத்துள்ள இருளைப்போக்க வழி வகுக்கட்டும். இன்று ஆத்மீக உணர்வு ஏற்பட இம்மாதிரியான மலர் துணைநிற்கும். எங்கள் நல்வாழ்த்துக்களுடன் அன்னையின் அடியேன்.

சுவாமி சித்ரூபானந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச் செல்வி

**துர்க்கா துரந்தரி அவர்களின்**

# ஆசிச் செய்தி

"முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்"

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் ஆண்டுதோறும் நல்லைக் கந்தனுடைய உற்சவங்களில் வெளியிடப் படும் சிறப்பு மலரை நான் பாராட்டுகிறேன். யாழ். மண்ணிலே தலைநகர் நல்லூரிலே எழுந்தருளி அருள் பாலிப்பவன் கந்தப் பெருமான். 'கந்தா கந்தா' என்ற ஏத்தொலியும் 'முருகா முருகா' என்ற வாழ்த்தொலியும் 'கந்தனுக்கு அரோகரா' என்ற இசை முழக்கமும் செறிந்து காணப்படும் திருவீதி நல்லைக் கந்தனுடைய ஆலயச் சூழலாகும். அதிகாலை நான்கு மணிக்கு அசையா மணி யின் இன்னோசை அனைவரையும் துயிலெழுப்பிவிடும். 'நல்லைக் கந்தா நீயே துணை' என்று சொல்லிக்கொண்டு அடியளித்தும் அங்கப்பிரதிட்டை செய்தும் பெருமானின் திருக்கோயிலை வலம் வருவோர் பலப்பலர்.

"கலியுக வரதன்" என்று பக்தர்களால் போற்றப்படும் பெருமான் முருகனே ஆவர். கலியுகம் தீயோரின் கிளர்ச்சியை அடக்கி நல்லோரை வாழவைக்கின்ற அருள் விளையாட்டைக் கொண்ட யுகமாகும். நீதிக்கும் உண்மைக்கும் வெற்றி கொடுக்கின்ற யுகமும் இது என்பதில் ஐயமில்லை. 'முருகா எமக்கு ஏக ஓர் இடமுமில்லை' என்று அழுது துயரப்பட்டு நின்ற தேவர்களுக்கு அபயமும் வாழ்வும் அளித்தவன் முருகப்பெருமான். துன்பத்தைத் தாங்கமுடியாது துயருறும் எம்மவர்க்கு அபயம் அளிப்பதற்கு காத்து நிற்பவன் அவனே. அறச்செயல்கள் குன்றி மறச்செயல்கள் மிகுந்து நிற்கும் இக்காலத்தில் நாம் தஞ்சமடைய வேண்டிய இடம் திருக் கோயில்களே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் ஆடிமாதம் பிறந்துவிட்டால் நல்லைக் கந்தனுடைய மகோற்சவ நினைப்பு எமது உள்ளத்தைத் தட்டி எழுப்பி மகிழவைக்கும். கடந்த ஒன்பது ஆண்டுகளாக இவ்வாலயத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு 'நல்லைக் குமரன் மலர்' வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியான நிகழ்வாகும். ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் இம்மலரின் முதற் பிரதியைப் பெற்று மகிழ்ச்சி அடையும் வாய்ப்பு எமது தேவஸ்தானத்துக்கு உண்டு. இந்த ஆண்டும் இவ்வாய்ப்பைப் பெறுவதில் நாம் மிக மகிழ்ச்சி அடைகின்றோம்.

> "தஞ்சம் தஞ்சம் சிறியேன் மதி
> **கொஞ்சம் கொஞ்சம் துரையே அருள்**
> **தந்தொன்றின்பம் தருவீடது தருவாயே"**

என்று பாடினார் அருணகிரிநாதர். எம் அனைவருக்கும் ஆன்ம பலத்தையும் அருள் வாழ்வையும் ஈட்டித்தரவல்லது முருகப்பெருமானின் திருவருளே என்பதில் ஐயமில்லை. ஆகவே இந்த நாட்களில் பக்தி சிரத்தையோடு அவன் திருவடிகளை வணங்கி இன்னருள் பெறுவோமாக.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

**தெல்லிப்பழை,**
**ஸ்ரீ லங்கா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண சபை
உள்ளூராட்சி ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வருடந்தோறும் நடாத்திவரும் இவ் ஆன்மீகச் செயற்பாடானது தெய்வீகமானதும் பாராட்டப்படக்கூடியதுமாகும்.

சைவத்தையும் தமிழையும் ஒருசேரப் போற்றும் மக்களிடையே இவ் ஆன்மீகச் செயற்பாடானது போற்றற்குரிய நல்முயற்சியாகும். சமயமும் தமிழும் தழைத்தோங்க குடாநாட்டில் மட்டுமல்ல தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கும் பரந்து விரிந்து மணம்பரப்பி மனித மனங்களில் சாந்தியும் சமாதானமும் நிலவ '**நல்லைக் குமரன் மலர்**' உதவும் என்பதை இவ்வுலகம் நன்கறியும்.

இந்நூலாக்கக் குழுவிற்கும், இந்நூலை வெளியிட அனுசரணை வழங்கும் நிறுவனங்களுக்கும் எமது ஆசியைத் தெரிவிப்பதோடு, இப்பணி தொடர்ந்து சிறப்புற நல்லைக் குமரனின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**வே. பொ. பாலசிங்கம்**
உள்ளூராட்சி ஆணையாளர்.

வடக்குகிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகரசபை பிரதி முதல்வரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள நல்லைக் குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

நல்லூர்க் கந்தனுடன் பன்னெடுங்காலமாகவே தொடர்புபட்டிருக்கும் யாழ்ப்பாண மாநகரசபை அவனது உற்சவம் சிறப்பாக நடந்தேற பல்வேறு விதத்தில் சேவையாற்றி வருவது பாரம்பரியம் மிக்கதொரு நற்பணியாகும். அவனது உற்சவ காலத்தில் இவ்வாறான தொரு மலரை வெளியிட்டுவரும் சைவசமய விவகாரக் குழுவின் முயற்சி எம் அனைவரதும் பாராட்டுக்குரியதாகும்.

கடந்த 1993ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் வெளிவந்து கொண்டிருக் கும் நல்லைக் குமரன் மலர் எமது மக்களிடையே மிகப் பிரபல்யம் பெற்று விளங்கு கின்றது. பல்கலைக்கழக மாணவர்கள்கூட இம்மலரைத் தவறாது பெற்றுப் படித்து வருவதிலிருந்து இம்மலரின் மகிமையை இலகுவில் நாம் அறிந்துகொள்ள முடியும்.

சமய அறிவினை மேம்படுத்தும் முகமாக சைவசமய விவகாரக் குழுவினால் நடாத்தப் படும் சமய அறிவு மற்றும் பண்ணிசைப் போட்டிகளுக்கு மேலாக 'பழமை பாடி செழுமை தேடல்' என்னும் பணியில் அதாவது முன்னைய காலங்களில் ஆலயங்கள் தோறும் புராண படனங்களைப் படித்துப் பயன்பெற்றது போன்று பிரபல்யமான ஆலயங் களில் புராணபடனம், கதாப் பிரசங்கங்கள் போன்றவற்றை விரைவில் நடாத்துவதற்கு இக்குழுவினர் முயற்சி எடுக்க வெண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக துன்பமான சூழலில் வாழ்ந்துவரும் எம்மக்கள் எதிர்காலத்தில் நிம்மதியாக வாழக்கூடிய காலம் விரைவில் கிட்டவேண்டு மென நல்லைக் கந்தனின் தாள் பணிந்து மனதார வாழ்த்துகின்றேன்

யாழ்.மாநகரசபை.
யாழ்ப்பாணம்.

செ.கந்தையன்
பிரதி முதல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவேல் ஏந்திய வேலவா! முருகா!!
தோள் வலிக்க காவடிகளோடு வந்தோம்
உடல் வெம்பிட உருண்டோடி வணங்குகிறோம்
ஈழமக்கள் நலம் காக்க இறைஞ்சுகிறோம் ஆறுமுகா!!!

**மங்கள நிகழ்வுகளை**

✷ அதி நவீன (MATROX) கனடா தயாரிப்பு கணனிகள் மூலம் சிறந்த வீடியோக் கமராவின் துணைகொண்டு வீடியோப் படம் பிடித்திடவும்,

✷ அதி நவீன புகைப்படக் கருவிகள் மூலம் (MIXING) வர்ணக் கலவையாக கலர், கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பிடித்திடவும்,

✷ திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் விழா என்பவற்றின் வர்ண, கறுப்பு வெள்ளைப் படங்களை LAMIART, DUROCARD மூலம் சிறந்த முறையில் அல்பம் தயாரித்திடவும்

✷ மற்றும் கணனி மூலம் CD RECORDING, படங்கள் PRINTING செய்யவும்

**அரவிந்த்**
**ARAVINTH**
**வீடியோ புகைப்பட சேவை**

291 (431), நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
உள்நாடு - 021-2190
வெளிநாடு - 0094-21-2190

Local, I.D.D., Fax
தொலைத்தொடர்பு சேவை

**எமது நற்பணிக்கு**

**உதவிய விளம்பரதாரர்களை**

**ஆதரியுங்கள்**

↓

**யாழ்.மாநகராட்சிமன்ற**
**சைவசமய விவகாரக் குழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண

# புற்றுநோய் - எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

**புற்றுநோய் சார்பான எமது பணிகள்**

- ✦ நோயாளர்களை இனங்காணல் - குறிப்பாக ஆரம்ப நிலையில் இனங்காண நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- ✦ இனங்காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்.
- ✦ ஆதரவற்ற நோயாளர்களுக்கும், இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்.
- ✦ சமூகநல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவு படுத்தல்.
- ✦ புற்றுநோய் சார்பான சமூக சுகாதாரக் கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்.

**எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்**

- ❋ இந்நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இலக்கினர்கள் மத்தியில் மேற்கொண்டு வருமுன் காத்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

எம் பணிகள் சிறக்க நிதியுதவியை வேண்டுகிறோம். புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட அழைக்கின்றோம்.

நன்றி

## வடமாகாண

## புற்றுநோய் — எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

## இல. 228, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு
# சமய அறிவுப் போட்டி முடிவுகள் - 2000

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவமாணவியருக்கிடையே வடமராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் எமது குழுவினால் கடந்த 23-12-2000ஆம் திகதி நடாத்தப்பட்ட நான்கு பிரிவுகளைக்கொண்ட சமய அறிவுப் போட்டி முடிவுகள்:

**அ) கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் - தனபாலசிங்கம் பாலரூபன், யாழ். இந்துக்கல்லூரி
2ஆம் இடம் - பரம்சோதி பாமினி, யா. சாவகச்சேரி இந்துக்கல்லூரி
3ஆம் இடம் - நர்மதா பரமசாமி, யா. வேம்படி மகளிர் கல்லூரி

**தகைமை பெற்றோர் - 07 பேர்**

01. பிரியசாளினி யோகேஸ்வரன், யா. சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
02. இராஜேஸ்வரன் மோகனசரன், யா. கொக்குவில் இந்துக்கல்லூரி
03. தாட்சாயினி கோபாலகிருஷ்ணன், யா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
04. சுஹிதா நல்லதம்பி, யா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
05. குசந்தினி இராமச்சந்திரன், யா. சாவகச்சேரி இந்துக்கல்லூரி
06. கல்பனா பாலசுந்தரம், யா. உடுவில் மகளிர் கல்லூரி
07. செல்வறஜிதா செல்வராஜா, யா. வட இந்து மகளிர் கல்லூரி

**ஆ) மத்திய பிரிவு**

1ஆம் இடம் - நிருஜானி சிவானந்தன், யா. வேம்படி மகளிர் கல்லூரி
2ஆம் இடம் - கதிரேசபிள்ளை தர்ஸனன், யா. இந்துக் கல்லூரி
3ஆம் இடம் - மகிழினி சண்முகராஜா, யா. வேம்படி மகளிர் கல்லூரி

**தகைமை பெற்றோர் - 07 பேர்**

01. அருந்தஷா சிவபாலன், யா. வேம்படி மகளிர் கல்லூரி
02. உமாநந்தினி முத்துராஜா, யா. வேம்படி மகளிர் கல்லூரி
03. லக்ஷிகா சோதிநாதன், யா. வேம்படி மகளிர் கல்லூரி
04. காயத்திரி குமாரதேவன், யா. வேம்படி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. குமாரவடிவேல் நிருத்தன், யா. இந்துக் கல்லூரி
06. அபர்ணா சிவராஜா, யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
07. நடேசன் நிரஞ்சன், யா. இந்துக் கல்லூரி

**இ) மேற்பிரிவு**

1ஆம் இடம் ~ பாரதி குணரத்தினம், யா. இந்து மகளிர் கல்லூரி
2ஆம் இடம் ~ வாருணி காசிலிங்கம், யா. மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை
3ஆம் இடம் ~ நிவேதிகா தர்மலிங்கம், யா. பெரியபுலம் மகா வித்தியாலயம்

**தகைமை பெற்றோர் - 07 பேர்**

01. கௌசல்யா விநாயகமூர்த்தி, யா. கொக்குவில் இந்துக்கல்லூரி
02. தர்சனா சந்திரலிங்கம், யா. கொக்குவில் இந்துக் கல்லூரி
03. கார்த்திகா ஸ்ரீஸ்கந்தராஜா, யா. மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
04. சுப்பிரமணியம் சத்கெங்கன், யா. இந்துக் கல்லூரி
05. துஷிக்கா சிவலிங்கம், யா. வேம்படி மகளிர் கல்லூரி
06. கௌசிகா மகாதேவா, யா வேம்படி மகளிர் கல்லூரி
07. துரைசிங்கம் கேசவன், யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**ஈ) அதி மேற்பிரிவு**

1ஆம் இடம் ~ கல்பனா ஜீவரத்தினம், யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2ஆம் இடம் ~ பார்மதி குமாரசாமி, யா. யூனியன் கல்லூரி
3ஆம் இடம் ~ கிரிசாம்பாள் லோயுதபிள்ளை, யா. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**தகைமை பெற்றோர் - 05 பேர்**

01. வனிதா அமிர்தநாயகம், யா. வேம்படி மகளிர் கல்லூரி
02. ஜெனனி கணேசரட்ணம், யா. மானிப்பாய் மகளிர் கல்லூரி
03. மதிவதனி விவேகானந்தம், யா. ஞானாசாரியார் கல்லூரி
04. விஜயவாணி மகேந்திரராஜா, யா. பெரியபுலம் மகாவித்தியாலயம்
05. சுபதீபா சின்னத்தம்பி, யா. முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை

# நல்லூர்க் கந்தன் அர்ச்சனை மாலை

| | | | |
|---|---|---|---|
| யாழ்நகர் | நல்லூர்(க்) | கந்தா | போற்றி |
| வாழ்பவர் | மனதில் | வளர்வாய் | போற்றி |
| சூழ்பவர் | தமக்குத் | துணைவா | போற்றி |
| ஏழ்மையில் | உள்ளோர்க்(கு) | இரங்குவாய் | போற்றி |
| | | | |
| ஊழ்தனை | உடைக்கும் | உருவே | போற்றி |
| நாள்கோள் | நன்மை | நல்குவாய் | போற்றி |
| ஏழ்பிறப் | பெல்லாம் | ஏற்றுவாய் | போற்றி |
| தோழ்களில் | எம்துயர் | சுமப்பாய் | போற்றி |
| | | | |
| நெஞ்சத் | துள்ளே | நிமிருவாய் | போற்றி |
| வஞ்சம் | அகற்றி | வளர்ப்பாய் | போற்றி |
| செஞ்சொல் | வாக்குச் | சேர்ப்பாய் | போற்றி |
| தஞ்சம் | அளித்துக் | காப்பாய் | போற்றி |
| | | | |
| தேவர் | குறைகள் | தீர்த்தாய் | போற்றி |
| காவல் | எமக்கு | ஆனாய் | போற்றி |
| ஆவல் | தீர்த்து | அருள்வாய் | போற்றி |
| ஏவல் | மணியாய் | இசைப்பாய் | போற்றி |
| | | | |
| பொன்செய் | வேலாய் | ஒளிர்வாய் | போற்றி |
| என்செய் | கருமம் | இயக்குவாய் | போற்றி |
| நன்செய் | கிரியை | நடத்துவாய் | போற்றி |
| உன்செய் | யோகம் | உயர்த்துவாய் | போற்றி |
| | | | |
| அறத்தின் | காவல் | ஆற்றுவாய் | போற்றி |
| திறத்தால் | சீர்மை | தூக்குவாய் | போற்றி |
| புறத்தின் | அகத்தின் | புனிதா | போற்றி |
| சிறப்பாய் | ஞானம் | செலுத்துவாய் | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியும் பயமும் தருவாய் போற்றி
நித்தியம் நிவேதனம் நிகழ்த்துவாய் போற்றி
உத்தமத் தொண்டு ஊக்குவாய் போற்றி
சித்தர் சித்தெலாம் சேர்ப்பாய் போற்றி

அழகிற்(கு) அணியாய் ஆர்ப்பாய் போற்றி
பழகப் பழகப் பயப்பாய் போற்றி
இளகும் அடியரை ஏத்துவாய் போற்றி
உளமும் உணர்வும் மலர்த்துவாய் போற்றி

முருக நாமமே கலியுக மந்திரம்
உருகிப் பலமுறை ஓதிட எழுதிட
பெருகும் கருணையில் பெருவினை தீர்ப்பைநீ
உருவும் அருவும் உன்திரு நாமமே!

கருவும் உயிரும் உன்திரு நாமமே!
மருவும் மலரும் உன்திரு நாமமே!
குருவும் குறிப்பும் உன்திரு நாமமே!
பெருகும் அன்பும் உன்திரு நாமமே!

நல்லூர் முருகா! கந்தா கடம்பா!
வெல்வேல் வடிவேல் வெற்றிவேல் கதிர்வேல்!
சொல்லேர் உழவர் தொழும்வேல் சக்திவேல்!
எல்லா நலமும் தரும்வேல் எழில்வேல்

என்றும் நாமம் எழுதுவோர் ஓதுவோர்
குன்றா இளமையும் குறைவிலா நிறைவும்
பொன்றாப் புகழும் பெற்றிட அருள்வாய்!
நன்றேர் நல்லூர்க் கந்தா அடைக்கலம்

உள்ளக் கமலம் உன்னடி வைத்தேன்
அள்ளி விழிசொரி ஆனந்தம் பெற்றேன்
மெள்ளக் கைகளை உச்சிமேற் குவித்தேன்
வள்ளல் நீஎனை வாழ்த்துக நன்றே!

**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி நினைத்து நான் செய் கருமமெல்லாம்
பண்ணி முடிக்க முருகா! நின் அருள் வேண்டுமையா
தினம் தினம் நினைந்து நெஞ்சகத்தே தாங்கிய துன்பம்
கணம் கணம் முடியுமன்றோ பற்றினாம் தங்கரத வடத்தை

**இதோ! யாழ்.நகரில் ஒரு 'சுப்பர் மாக்கற்'**
**அதுதான் இல்லயெண்ணாமல் சுரக்கும் பல்பொருள் ஸ்தாபனம்**

# குகன் களஞ்சியம்

மக்கள் சேவையே மகேசன் சேவையென பெருமிதத்துடன்
பின்வரும் உற்பத்திப் பொருட்களுக்கு வடமாகாண ஏஜெண்டாக நியமிக்கப்பட்டு
கப்பல் மூலம் வரவழைத்து விநியோகம் செய்கின்றோம்.

**யுனி லிவர் கம்பனியால் உற்பத்தி செய்யப்படும் சகல சோப், பவுடர் வகைகள்**
**உபாலி பூட், பவரேஜஸ் உற்பத்திகளான கன்டோஸ் - டெல்ரா இனிப்பு வகைகள்**
**லங்கா மில்க்பூட் உற்பத்தியான லக்ஸ்பிறே பால்மா**
**நெஷல்ஸ் உற்பத்தியான நெஸ்ரோமோல்ற், மைலோ என்பன**
**மற்றும் குழந்தைகள் பால்மா, செறியல்ஸ் உணவு வகைகள்**
**சிலோன் ருபாக்கோ உற்பத்தியான சிகரெட் வகைகள்**
**டெல்மேஜ உற்பத்திகளான கோடியல்ஸ், ஜாம், ஜெலி கிறிஸ்ரல் வகை**
**சூரியா மார்க் தீப்பெட்டி**
**இன்னும் பற்பல!**
**சில்லறையாகவோ மொத்தமாகவோ பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

**அவை மட்டுமா!!**
தரமான தானிய வகைகள், அரிசி வகைகள் இன்னும் பற்பல. எது தேவையோ அத்தனையும் ஒரே இடத்தில் பெறக்கூடிய **'சுப்பர் மாக்கட்'**

# குகன் களஞ்சியம்

**180(380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி வசதிகளும் உண்டு.**
**தொ.பே. எண் - 021.2027, 021.2993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலேறி வா முருகா! ஆடிவா முருகா!!
நாம் பாடி வருவோம் உன் திருவடியை வணங்கிட
ஆறுமுகமாகி நீ தேரேறி வாருமையா - நம் கவலையைப் போக்கிடவே
பாரினிலே மானிட துன்பம் கண்டு நாம் வடம் பிடித்து இழுப்போம் - முருகா

**ஆமாம்! வினோதம், வினோதம்**
அதுதான் நவநாகரிக நங்கையர் காலத்திற்கேற்ப
வினோதமான பல டிசைன்களில் தயாரித்த 22 கரட் ஆபரணங்களை வாங்க

# வினோ நகைப் பூங்காவை

நாடுகிறார்கள்
தனக்கென தன்னிகரற்ற முத்திரை பதித்த ஆபரண பூங்கா
நாடி வாருங்கள் பெருமிதத்துடன்
திருப்திப்படலாம்

# வினோ நகை பூங்கா

**185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி - 2824.**

ஈழநாட்டின் செங்கோல் துணைக்கு
கூர்வேல் நல்லூர்க் குமரன் துணைகள்
சேரும் சேரும் புகழ்கள் சேரும்
உய்வினை தந்து தமிழினம் காப்பாய் - முருகா.

இள நங்கையர்க்கு எப்பொழுதும் இளவரசியாக இருக்கவே விருப்பம் அதற்கேற்ப
**வர்ணங்கள் பல** **டிசைன்கள் பல**
என கவர்ந்திழுப்பது

# இளவரசி ரெக்ஸ்ரைல்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளா கண்கவர் சாறி வகைகள், பிளவுஸ் வகைகள்
எண்ணம் போல் தெரிவு செய்யக் கூடிய ஒரே இடம்
சேலைகளின் சோலை பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்

# இளவரசி ரெக்ஸ்ரைல்

**57, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. ஜெயசீலன்

# நல்லூரா சொல்லு நலம்

தோல்விகளால் என்னைத் துவண்டுஅழ வையாதே!
வேள்விகளில் நெய்யாய் விழுந்தெரியச் செய்யாதே!

"நான்யார்" எனமறந்த நாட்கள்தான் அதிகம்..அதில்
ஈனமெனுஞ் சேற்றில் இருத்தி எழுப்புறியே!

"என்பாதை இது" என்று...எனையறிந்து, புதிதணிந்து
முன்செல்ல...பின்முதுகில் இழுத்தென்னை அலைக்கிறியே!

நானென் 'நிலை' உணர்ந்து நாகரிக வழியில்
போகையிலே...சிரித்தென்னை புதைகுழிக்குள் வீழ்த்திறியே!

நடக்கையிலே நல்லதிசை காட்டாமல்...முடக்குகளில்
துடக்கு தீட்டில் நான்சிக்க தூண்டில் இடுகிறியே!

நான்நினையா தென்னால் நடத்தப்படும் செயலில்
வேண்டாதன மட்டும் விளைவிக்க நிற்கிறியே!

"சரிகளுக்கு நான்பொறுப்பு அல்ல"... எனச் சாந்தியுற்றேன்;
பிழைகளுக்கா நான்பொறுப்பு? பிடரை உலுப்பாதே!

செய்தபிழை நினைந்து சீவன் எரிந்துளேன்...நான்
உய்யும் வழியுரையாது ஊமையெனப் போகாதே!

பாவங்கள் பண்ணவைத்தாய்; பாவப்பரிகாரம்
நான்செய்ய விடாமல்..உள் ஆணவத்தை மூட்டாதே!

தவறுகள்முன் தலைகுனிந்து; தண்டனையை ஏற்க...விடா
அகங்காரம் அறுக்காமல்... அகத்துட்பேய் வளர்க்காதே!

பொம்மலாட்டக் காரன்நீ பொருத்தமாய்ச் 'செடில்பிடிப்பாய்'
என்னஆட்டம் ஆடி இளைக்கின்றேன்; வாட்டாதே!

பக்குவப் படவும்..நின் பதமோட்சம் காணவும் நான்
இக்கரையில் நிற்கிறேன்..நீ அக்கரையா? வா அருகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வ.யோகானந்தசிவம்

# பக்கம் இருந்தெமைக் காப்பவன்

நல்லை நகர்உறை நாயகன்
நாளும் எமைக்காக்கும் காவலன்
எல்லை யிலாக்கருணைப் பெருங்கடல்
எங்கள் வினைதீர்க்கும் தாயவன்
தொல்லைகள் வந்தெமைச் சூழ்ந்திடில்
தோழனாய் வந்துமே உதவுவான்
அல்லும் பகலும் தொழுதுநாம்
அவனியில் இன்பமாய் வாழ்வோமே.

தந்தைக்கு உபதேசம் செய்தவன்
தமிழரின் தனிப்பெரும் தெய்வமாம்
விந்தைகள் செய்திடும் வித்தகன்
வினைகளை தீர்த்திடும் வேலவன்
சிந்தை கவர்ந்திடும் செல்வனாம்
சேவற் கொடியுடை வேந்தனாம்
முந்தை வினைகள் அறுப்பவன்
முத்தமிழ் தன்னையும் காப்பவன்.

சுட்டபழம் ஔவைக்குத் தந்தவன்
சுந்தரி வள்ளியை மணந்தவன்
கட்டழகன் பெயர் பெற்றவன்
காக்கும் கருணைக் கடலவன்
விட்டபிழை யெலாம் பொறுப்பவன்
விண்ணவர் போற்றிடும் வேலவன்
பட்டதுன் பங்கள் பறந்திடும்
பார்வதி மைந்தனைப் பணிந்திட்டால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபடை வீடுகள் கண்டவன்
அழகனாய் நெஞ்சினில் நின்றவன்
சிறுவனாய் மாங்கனிக் காகவே
தேசமெலாம் சுற்றி வந்தவன்
குறுநகை வள்ளியை மணந்தவன்
குமரனாய் என்றுமே வாழ்பவன்
உறுதுணை யாகவே காத்திட
ஓடோடி வந்துமே நிற்பவன்.

தேவர் துயர்தனைத் துடைத்தவன்
தேடி மலைதனில் உறைபவன்
காவலாய் வந்தெமைக் காப்பவன்
கந்தன் எனப்பெயர் பெற்றவன்
சேவலும் மயிலுமாய் அசுரனைச்
சிந்தை தெளியவே செய்தவன்
பாவ வினைகள் அறுப்பவன்
பக்கம் இருந்தெமைக் காப்பவன்.

காவடிக் கந்தன்பேர் பெற்றவன்
காலமெலாம் நின்று காப்பவன்
பாவடி யாலவனைப் பாடுவோம்
பக்திப் பெருக்கில் ஆடுவோம்
தேரடியில் நின்ற செல்லப்பா
தேடிய ஞானம் பெற்றவன்
சேவடி தொழுதுமே போற்றுவோம்
சிந்தையில் வைத்துமே ஏத்துவோம்.

எழுத்தறி வித்தவனி றைவனாகும்.
வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்
ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.

**- வெற்றி வேட்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.தங்கமாமயிலோன்

# நல்லைக் கந்தன் பிள்ளைத்தமிழ்

(நல்லைக் குமரன் 8வது மலரின் தொடர்ச்சி)

## முத்தப் பருவம்

முத்துமுத் தாகவருள் முத்தந் தருகவே
முத்துக்கு மார முழுமுதலே ~ நித்தநித்தம்
வீதிவரு வோர்வினைகள் வீசியறஞ் சூழுநல்லை
நீதிதரு வாய்முருக நீ. 31

நீநாளுந் தந்துமுத்தம் நீணல்லை வாசலிலே
பூநாளும் பூத்தொளிரும் புண்ணியனே ~ காநாளுங்
கந்தா கடம்பா கணங்களொடு சூர்தடிந்த
எந்தா யெளியோமுக் கே. 32

வண்ணமயில் வாகனத்தில் வண்ணமுறு வானவனே
கண்ணனருள் கற்பகத்தின் கண்ணவனே ~ திண்ணமுறத்
தேவான மிர்தமுத்தந் தித்திக்கத் தந்தருள்வாய்
மூவாநல் லூரா முகிழ்த்து. 33

இருந்துங் கிடந்தும் எழுந்தும் நடந்தும்
பொருந்துஞ் சிவயோகப் போதாய் ~ திருந்தும்
பணிபூண்ட நல்லைப் பதிவாழ மெந்தாய்
அணிபூண்ட முத்த மருள். 34

வாமுருகா வாவந்து வானமிர்த முத்தமது
தாமுருகா தாவென்றுன் தாள்பணிந்தே ~ நாமுருகா
நாளுண்டோ போதுண்டோ நல்லூரா பன்னிரண்டு
தோளுண்டாஞ் செல்லத் துரை. 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமேசர் பெற்றெடுத்த சோமாஸ்கந் தாவென்று
கோமே தகஞ்சூட்டுங் கோமானே - தாமேயாய்
முத்தமொன்று தந்தாயேல் முன்னவனே நின்னடிக்கீழ்ச்
சித்தமொன்றும் நல்லூரா சேர்ந்து. 36

தும்பிமுகர் தம்பிதுயர் தும்பெடுத்த லாய்க்கண்டு
வம்பிழுத்த வள்ளிமண வாளனே - நம்பிவந்த
நாயோமுக் கோர்முத்தம் நல்லூரா நல்குதியேல்
தாயோடும் பஞ்சாட் சரம். 37

எண்ணார் புரமெரித்த வெண்ணுமுக் கண்ணனவன்
திண்ணார் திருவிழியின் தேனமுதே - விண்ணாளும்
வேந்தர்க்கு வேந்தே மிகுமுத்தந் தந்தருள்க
தாந்தாமாய் நல்லூரா தாம். 38

விண்ணோங்கு வேலவனே வேதாந்த சித்தாந்தப்
பண்ணோங்கு மார்க்கம் பரந்தோனே - தண்ணோங்கு
நல்லைப் பதிவாழு நாதனே தந்துமுத்தந்
தொல்லைப் பிறப்பொழிக்கத் தோன்று. 39

கொஞ்சுந் தமிழ்பேசிக் கோலமுத்த மொன்றுதந்தால்
நெஞ்சந்தா னென்றும் நெகிழாதோ - அஞ்சுற்ற
பற்றெல்லாந் தாம்போமே பண்ணினிறை நல்லூரா
மற்றெல்லா மென்னாகு மால். 40

## தாலப் பருவம்

கண்வளராய் கண்வளராய் காருண்ய ரூபனே
பண்வளரும் நல்லைப் பதியோனே - திண்வளரும்
வேலோ னெனப்பரவு வெற்றிமயில் வாகனனே
தாலோதா லேலோகந் தா. 41

கண்வளருங் காட்சியதைக் காண்பதற்காய்க் காசினியோர்
முண்டியடித் தேவந்தார் முன்னவனே - எண்டிக்கும்
மேலோர் தொழுநல்லை மேவிடுஞ்சீர்ச் சண்முகனே
தாலோதா லேலோகந் தா. 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்காண் வாசலிடை வானவர்கள் தானவர்கள்
பிந்தாமற் கண்வளர்க பெம்மானே - நந்தாதும்
மாலோன் மருகா மறைக்கொழுந்தே நல்லூரா
தாலோதா லேலோகந் தா. 43

சாந்தமாய்க் கண்வளராய் சண்முகா நல்லூரா
பூந்தொட்டி லேறிப் புரண்டுருண்டு - பாந்தவமாய்
நூலோர் தொகுத்துரைத்த நோன்றாள்கள் நேர்த்திபெறத்
தாலோதா லேலோகந் தா. 44

கருஞ்சாந்துப் பொட்டிட்டுக் கண்வளர்ந்து காட்டும்
பெருஞ்சேனைச் சூர்தடிந்த பெம்மான் - இருஞ்சீரான்
ஆலோலம் பாடுவள்ளி யாவேசா நல்லூரா
தாலோதா லேலோகந் தா. 45

தூயோர் தொழுநல்லைத் தூமணியே கண்வளராய்
வாயோவா தேவானோர் வாழ்த்துரைத்தார் - தாயோமாய்ப்
பாலோ பழரசமோ பாலமுதோ நாந்தருவோம்
தாலோதா லேலோகந் தா. 46

தேனே திரவியமே தித்திக்குந் தெள்ளமுதே
மானே மரகதமே மாமணியே - ஆனேறும்
மேலோன்கண் வந்துதித்த வேலவனே நல்லூரா
தாலோதா லேலோகந் தா. 47

பூவேணை கட்டிமிகு பொன்மணிகள் தூக்கியருள்
மாவேத மோதி மனங்களித்தோம் - தேவேதண்
பூலோக சுந்தரனே புண்ணியனே நல்லூரா
தாலோதா லேலோகந் தா. 48

பன்னிரண்டு கண்களுமே பக்குவமாய்க் கண்வளர்க
தன்னிரண்டு தாளளிக்குஞ் சண்முகனே - கன்னிரண்டு
காலோவா தேதொழுது காத்துநிற்கு நல்லூரா
தாலோதா லேலோகந் தா. 49



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாட் சரன்பயந்த பாலகனே கண்வளராய்
நெஞ்சாட் சரசுத்தி நீடருளுஞ் ~ செஞ்சாலி
மேலோங்கு நீணல்லை மேயாசெவ் வானோங்கத்
தாலோதா லேலோகந் தா. 50

## வருகைப் பருவம்

நெற்றிக்கண் வந்துதித்த நீள்ஞான சோதியனே
பற்றுக்க ளெல்லாந்தான் பாழ்படுத்திச் ~ சுற்றிவந்தே
தோள்கொடுக்க வல்லாய் சுடருநல் லூர்மேயாய்
தாள்நடந்து நீவருக தாம். 51

வாராய் முருகாநீ வந்துன் கழல்காட்டிச்
சீராய் நடக்கைகண்டாய் செவ்வேளே ~ ஆராய்ந்துங்
காணாதார் காணாரே காண்பாரார் நல்லூரா
நீணாகர் சேய்வருக நீ. 52

நீநடக்கை யார்கண்டார் நீள்விசும்பு மப்பாலுந்
தூநடக்கை யார்காண்பார் தூமணியே ~ பூநடக்கைப்
போதுமலர் சண்முகனே போற்றிசைக்கு நல்லூரா
தாதுகுத்த தாள்வருக தாம். 53

கண்டுகளித் தேதினமுங் காண்பார்க்கின் பார்ந்துநலத்
தண்டுவளர் தாமரையிற் றான்றோன்றும் ~ பண்டுளவாஞ்
சிந்தைமகிழ் சண்முகனே சீரோங்கு நல்லூரா
வந்துவந்து நீநடந்து வா. 54

வித்தகனாய்ச் சற்குணனாய் வேளே யெழுந்துநட
சுத்தகுண சீலனாஞ் சுடருருவே ~ மெத்தமெத்த
நாமறியா வாறருளுஞ் ஞானலய நல்லூரா
தாமறியா தார்வணங்கத் தாம். 55

பொன்மணிகள் பூண்டுலகம் பூரிக்க வேநடந்து
சின்னக்கால் வைத்துச் சிறுநகையாய் ~ மன்னும்பர்
போற்றுமயில் வாகனனே பூநல்லை வாசனே
ஏற்றமிக வேவருக வே. 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிப்பொன் னம்பலத்தின் அம்பலவா ணர்பயந்த
வேணிப்பொற் கங்கா விழைவுகண்டாய் ~ நாணிப்பெண்
தாமிருவர் தாங்கிநிற்குந் தத்துவனே நல்லூரா
மாமினுக்கங் காணநட வந்து. 57

செங்காந்தள் மேனிச் சிவகுமரா நீநடவாய்
மங்காத மாமறையின் மன்னவனே ~ சிங்காரக்
கந்தனே கற்பகமே கண்கவரு நல்லூரா
வந்தெனையா ளீசா வளர்ந்து. 58

தத்தித்தத் தீதி யேநடந்து தத்துவ மாய்ச்சிரித்து
மெத்தெனவே கால்வைத்து மேதினியில் ~ வித்தகமாய்
வீதிவரு வாய்முருகா வேண்டிப் பணிநல்லைச்
சோதியனே சொர்க்கமுறச் சூழ்ந்து. 59

நல்லைக்கந் தாநடந்து நான்குவீதி யுங்கடந்து
தொல்லைப் பிறப்பொழிக்கத் தோன்றியருள் ~ சொல்லைக்காண்
ஞானக்கண் ணாரவர்க்கு நாயகனே நீவருக
வானக்கண் ணாயமரு வாய். 60

## அம்புலிப் பருவம்

பூரணனாய்ச் செங்கமலப் பூவில்வளர் கந்தனொடு
பூரணையாய்ப் பொங்கிவரு பொன்னிலவே ~ தாரணியில்
வந்துவிளை யாடிமகிழ் வான்விட்டு நல்லூரில்
விந்தைமிக் காரவா வே. 61

பொங்கிவருஞ் சந்திரனே பொன்மேனிக் கந்தனொடு
இங்கிதமாய் நல்லூராம் இப்பதியில் ~ தங்கிநின்றே
நேசக் கரங்கோத்து நீடுவிளை யாட்டயர
வாச நிலாப்பொழிந்து வா. 62

தோன்றியதுந் தண்ணளியாய்த் தோற்றுவது மாய்விளங்கும்
வான்றிகழுஞ் சந்திரனே வந்தொருக்கால் ~ தேன்றிகழும்
பண்ணமுதக் கந்தனொடு பார்போற்ற நல்லூரில்
வெண்ணிலவே யாடவா வே. 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னொளியைப் பாய்ச்சுபுதுப் பூரணையா யெங்கெங்குந்
தன்னொளியா லெல்லாமே தானாக்கும் ~ முன்னவனாங்
கண்ணுதலோன் தந்தகந்த சாமியொடும் நல்லூரில்
வெண்ணிலவே யாடவா வே. 64

கலைகளவை பூரணமாய்க் காட்சிதருங் கண்ணாய்
மலைகளவை தூசாக்கும் மன்னன் ~ சிலைவேடர்
கண்வளர்ந்த வள்ளிகாந்தக் கந்தனொடு நல்லூரில்
வெண்ணிலவே யாடவா வே. 65

வானமுத மாய்விளங்கி வானரசந் தந்திடுவாய்
ஞானமுகக் கந்தனொடு நல்லூரில் ~ ஆனமுறை
தம்மென்று திம்மென்று தத்துவமாய்த் தண்ணொளியாய்
அம்புலீ யாடவா வே. 66

தத்தி நடந்துவருஞ் சண்முகனார் தம்மோடு
மெத்தெனவே யோடிமுகில் மேலோடி ~ வித்தகமாய்த்
தண்ணல்லை யாம்பதியில் தங்கச்சி லம்பொலிக்க
வெண்ணிலவே யாடவா வே. 67

வெண்டுகிலைப் போர்த்தமிர்த வேதாகமஞ் சுரக்குந்
தண்டுளவத் தத்துவவேல் தாம்பிடிக்கும் ~ பண்டுளவாந்
தண்ணல்லைக் கந்தனொடுந் தங்கரதம் மேலமர்ந்து
வெண்ணிலவே யாடவா வே. 68

சஞ்சலங்கள் தீர்ந்துலகஞ் சந்தோஷ மாய்விளங்க
வஞ்சமிலா வான்பரப்பில் மாய்ந்தோடும் ~ பஞ்சமிலாய்
விண்ணல்லைக் கந்தனொடு வீதிவீதி யாய்ச்சென்று
வெண்ணிலவே யாடவா வே. 69

பூவுலகம் பூத்துமகிழ் பூமலர்த்து பூரணையாய்
தேவுலகம் போற்றுதிருச் செவ்வேளாம் ~ மாவுலகங்
கண்டநீல கண்டனவன் கந்தனொடு நல்லூரில்
வெண்ணிலவே யாடவா வே. 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்றிற் பருவம்

சிற்றில் சிதையேலோ சிற்றில் சிதையேலோ
செற்றங் கடந்தவுயர் சிற்பரனே ~ மற்றெங்கள்
மாமணியே மாதவனே மாவாழு நல்லூரா
தாமணியாய் வாழ்வாய் சுடர்ந்து. 71

தேவர் துயர்தீர்த்துத் தேசம் புரந்தளிக்கும்
மூவர்க்கு மெட்டாத முழுமுதலே ~ யாவர்க்கும்
மற்றின்பந் தந்தருளும் மாமருந்தே நல்லூரா
சிற்றிலவை சிந்தேல் சிரித்து. 72

மூவாத வானமிர்தே முக்கண்ணன் பெற்றெடுத்த
தேவாதி தேவே திருக்குமரா ~ காவாய்நஞ்
சிற்றில்கள் சீர்சிதையேல் சிந்திவிளை யாடிமகிழ்
மற்றெங்கள் நல்லூரா வாழ்ந்து. 73

நாங்கட்டுஞ் சிற்றிலவை நன்றாக வேயிருக்கத்
தீங்கொன்றுஞ் செய்யேல் சிவகுமரா ~ மாங்கனிகள்
பூத்தமர மாகிநின்று போர்செய்சூர் நாடென்றே
சீத்துவிடேல் நல்லூரா தீர்த்து. 74

தேவச் சிறுமியர்நாஞ் சேர்ந்துகட்டுஞ் சிற்றிலவை
தாவக் கடிதென்றே தாஞ்சிதையேல் ~ தாவடியால்
செவ்வானம் போற்றிமகிழ் செவ்வேளே நல்லூரா
ஒவ்வாதென் றேயிவற்றை யோர்ந்து. 75

வெண்மணலில் நாங்கட்டும் வீடவற்றை நீசிதையேல்
வண்ணமயில் மீதமரும் வானவனே ~ தெண்டனிட்டே
நின்றிடுவோம் நீணிலத்தும் நீள்விசும்பும் நேயமறா
தென்றுவிடோம் நல்லூரா ஏய்ந்து. 76

பாலமுதந் தந்துமையாள் பார்த்துச்சி மோந்தனுப்ப
வேலவநீ வந்தாய் விளையாட ~ மேலவர்கள்
ஏத்துமுரு கேசனே எஞ்சிற்றிற் சீர்சிதையேல்
பார்த்துவா நல்லூரப் பா. 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்னப் பழந்தருவோந் தீஞ்சுவையின் பால்தருவோம்
வன்னப்பொற் கங்கா வளந்தருவோம் ~ சின்னப்பா
செய்யேல் சிறுகுறும்புஞ் சிற்றிலதன் சீர்சிதைக்கும்
மெய்வேல்நல் லூரா மிதித்து. 78

வண்டல் மணற்சிற்றில் வானவனே நீசிதைக்கில்
தண்டைத் திருத்தாள் தடியாதோ ~ எண்டிக்குங்
காக்குவடி வேலவனே காணல்லை வாசனே
தாக்குமடி வையேல் தகர்த்து. 79

பூவடிகள் தூக்கிப் புழுதிச்சிற் றில்சிதைக்கில்
தேவடிகள் தூக்குசிவன் சீருருவில் ~ தூவடிவாள்
மேற்றூசி யேறாதோ மேதகுநல் லூராசொல்
வேற்றார்க்கு மின்பார்க்கும் வேல். 80

## சிறுபறைப் பருவம்

எண்டிக்குங் கேட்க வெழுஞ்சீர்ச் சிறுபறையில்
விண்டிக்குங் கேட்டு விழித்தெழவே ~ அண்டியயல்
கண்டார் கழிதுலங்கக் கந்தாநல் லூர்வாசா
டுண்டுமது கொட்டாய் டுடுட்டு. 81

கோலச் சிறுபறையைக் கொட்டாய் சிவகுமரா
சாலப் பெருத்தசுரர் சாய்ந்துவிழ ~ ஓலந்தான்
சப்தமே கத்தொலியுந் தாமடங்க நல்லூரா
தப்பதிப்ப துப்பதப்ப தா. 82

அண்டபகி ரண்டத்தும் அப்பாலும் போயதிரத்
தொண்டர்கு ழாமெழுந்து தோத்தரிக்கத் ~ தண்டுளாய்
மார்பன்றன் மாமருகா மாமறையின் நல்லூரா
ஆர்த்திடுக நின்சிறுப றை. 83

கொட்டுக நீபறையைக் கோலமயில் வாகனனே
தட்டுகதத் தாத்தீத் தரிக்கிடத்தொம் ~ விட்டுவிட்டே
கேட்டுப் பெருஞ்சினங்கொள் கேளிரொடுஞ் சூர்மாய
நாட்டுநல் லூரா நகைத்து. 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கட்டுந் தாளலயச் சுத்தமுமாய்ச் சொன்னமறை
நற்கட்டுஞ் சேர்ந்து நடைதொனிக்கப் ~ பொற்கட்டில்
வேய்ந்தபறை நீகொட்டாய் வேல்முருகா நல்லூரா
தேய்ந்தவுணர் மாயத் திரிந்து. 85

வஞ்சமனச் சேறகற்ற வாழ்த்துமறை யாம்பொருளே
தஞ்சமெனத் தாள்பணிந்தோஞ் சண்முகனே ~ சஞ்சலங்கள்
தாம்விலகத் தப்பற்ற தாம்பறையைத் தட்டுகவே
நாம்பணிநல் லூரா நகைத்து. 86

வேதா கமங்களுரை வீறாப் பெழுந்துயர்ந்து
நாதா நமவென்றே நாதமெழ ~ நீதானே
சின்னஞ் சிறுபறையைச் செந்தா மரைக்கையால்
மன்னகொட்டு நல்லூரா வந்து. 87

திங்கள் குடைபிடிக்கச் செவ்வாய் சிரஞ்சிலிர்க்கப்
பொங்கிப் புதன்வந்தே பூச்சொரியக் ~ கங்கைதவழ்
கந்தா கதிர்வேலா காம்பெடுத்துக் கொட்டுபறை
நந்தாநல் லூரா நகைத்து. 88

சீறரவின் சீற்றமறு சேவற்கூடம் பூங்கொடியாய்
வீறுசூர் மேற்பொலியும் வேற்படையாய் ~ மாறறுத்தே
கொற்றமுறு வாய்கொட்டு கோதறுசின் னப்பறையைப்
பற்றறநல் லூரா பழுத்து. 89

வானதிர மண்ணதிர மாய்ந்தவுணர் கோனதிர
நானதிர நல்லூரின் நாயகனே ~ தேனதிர்ந்த
செவ்வாயாள் சேர்ந்தாட்டுஞ் செந்திணைவாய்ச் செவ்வேளே
பவ்வமறக் கொட்டாய் பறை. 90

## சிறுதேர்ப் பருவம்

சீரார் சிறுதேரைச் செவ்வேயு ருட்டியருள்
பாராரு மேனோரும் பார்த்துவக்கக் ~ காராரும்
மாவாய்க் கிடந்தநெடும் வாய்ச்சூ ருடல்பிழந்த
தேவாநல் லூர்வாசா தேர்ந்து. 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேணோங்கு செல்வச் சிறுதேரைச் சேர்ந்துருட்டு
நாணோங்கு தெய்வானை நாயகனே ~ தோணோக்கும்
வள்ளிப தஞ்சேரு வாணல்லை யூர்மேயா
புள்ளிமயி லாய்வரச்சூர் பூத்து. 92

கம்புச் சிறுதேரைக் கச்சிதமாய் நீயுருட்டு
கெம்புந் திரைக்கடலுங் கேள்வானும் ~ நம்பியவன்
நங்கை கரம்பிடித்த நாயகனே நல்லூரா
தங்கைகள் நோவச் சலித்து. 93

சிந்தை யுயர்வானச் சீர்ச்சிறுந்தேர் வந்துருட்டு
முந்தை யுலகுக்கோர் மூத்தவனாந் ~ தந்தை
திருநெற்றி வந்தகந்த! சீர்நல்லை வாசா!
செருவென்று சூர்க்கருளச் சேர்ந்து. 94

செங்கட் கிடாயதனைச் சென்றூர்ந்த நல்லூரா
தங்கமலர்ச் சீர்ச்சிறுந்தேர் தாமுருட்டாய் ~ அங்கண்மா
லிந்திரனுஞ் சந்திரனு மீங்குவந்தார் தந்தேரில்
வந்தார்க்குன் தேருருட்டி வாழ்த்து. 95

குறிஞ்சித் தினைப்புனத்திற் கோன்நம்பி வள்ளி
உறிஞ்சித் தருதினைதேன் ஓர்ந்தாய் ~ அறுஞ்சிராய்
ஆர்க்குசிறு தேருருட்டி ஆரமுதந் தாமுருகா
தேர்சிறக்கு நல்லூரா தேர்ந்து. 96

வீதிக்கு வீதிதிரள் வேல்கா வடிகரகம்
மாதிக்கி லுள்ளாரும் வந்துவந்து ~ சோதிக்குஞ்
செய்யதிரு மால்மருகா செவ்வேணல் லூர்வாசா
மெய்யசிறு தேருருட்டு மேல். 97

தேர்சப் பரக்காட்சி சேர்மஞ்சந் தங்கரதம்
தீர்த்தத் திருவிழாச்சீர்ப் பூங்காவும் ~ நேர்த்தியதாய்க்
கண்டோங்கண் டோமென்னக் கந்தாநல் லூர்வாசா
உண்டோடு சிற்றேர் உருட்டு. 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்றேர் மருமஞ்சத்தேர் மாங்காய்பூங் காவனத்தேர்
வான்றேர் வருவஞ்சத்தேர் வாகோட்டும் – மான்மருகா
பாலப் பருவத்துப் பாலகனாய்த் தேருருட்டு
**வேலப்**பா நல்லூரா மேல். 99

பூஞ்சோலை புக்குப் புதுச்சிறுதேர் நீயுருட்டு
மாஞ்சோலை யாய்க்கிடந்த மாவறுத்தாய் – சாஞ்சாடிச்
சிற்றினீங்கி யேவளர்ந்து சீர்சால நல்லூரில்
மற்றினிவாழ் சேயாய் மலர்ந்து. 100

**சுபம்.**

## நல்லூரான் திருக்கோலம் காணுவோமடா!

ஆடி முடிந்து, ஆவணி வருகின்றதென்றால்
ஆனந்தம் பொங்குதடா!
அழகு வடிவேலன், ஆறுமுகனைக் காண
உள்ளத்தில் உவகை
ஊற்றெடுத்துப் பாய்கிறதடா!
கல்லூரிக் காலத்திலேயே
அதிகாலையில் எழுந்திடாத
நாமெல்லாம்
நல்லூரின் நாலு மணி கேட்டவுடன்
பாய் விட்டெழுந்து
உடல் பதறும் பனிக்குளிரில் குளித்துவிட்டு
மடித்துக் கட்டிய நான்கு முழ வேட்டி
நாரியை விட்டு அவிழ
விழுந்தடித்துச்
சந்தியிலிருந்து வாசல்வரை
சளைக்காமல் ஓடி
நல்லையன் உறையும்
பதியினுள் புகுவோமடா!

அதிகாலைப் பூசையில்
ஆதிமூலப் பூசை பார்த்திட
அடியரவருடன் முட்டி மோதிடும்போது
'அரோகரா' ஒலி கேட்டவுடன் – தீப
ஆரத்தி கண்டிட வேண்டுமென்று
துள்ளி துள்ளிப் பார்த்திடும் வேளை
ஆனைமுகன் சோதரன், அழகுமுருகன்
புள்ளி மயிலுடன் துள்ளி விளையாடும் காட்சி
அகத்தே தெரியுமடா!
அருட்சனை முடிந்து, நீறு பூசி
உள்வீதி சுற்றி வந்துவிட்டால்
உள்ளத்தினுள் தூய்மை ஓங்குமடா!

வெளிவீதியின்
வெள்ளை மணலில்
ஒழுங்காய் ஒவ்வொருநாளும்
ஓங்கி விழுந்து
பிரதிஷ்டை செய்திடும்போது
செய்திட்ட பிழைகளெல்லாம்
பொறுத்திட வேண்டுமென்று
வெற்றிவடிவேலன் கால்களில்
பிராயச்சித்தம் தேடுகின்றோமடா!
நல்லைநகர் நல்ல முருகனிடம்
நல்லதைச் செய்திட வேண்டுமென்று
நாமெல்லாம் மனதார வேண்டுகிறோமடா

**சி. சா. சுதந்திரன்**
**(மாணவன், கொக்குவில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
**வரவு ஆய்வாளர், ஜப்பான்.**

# தமிழர் வாழ்வில் பூமாலை

தமிழர் வாழ்வு இயற்கையோடு இயைந்திருந்த போது இயற்கைப் பொருள்களின் பயன்பாடும் மிக்கிருந்தது. நாளாந்த வாழ்வில் மரம், செடி, கொடி, மலர், காய், கனி என்பன மக்களால் பல்வேறு நிலைகளிலே பயன்படுத்தப்பட்டன. உணவாக, உடையாக, தங்குமிடமாக, அழகு படுத்தும் பொருளாக அவை பயன்பட்டன. இயற்கைப் பொருள்களில் மலர்கள் சிறப்பாக மக்கள் வாழ்விலே தொடர்புற்று இருந்தன. இதனைக்காலத்துக்குக் காலம் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் ஆவணப்படுத்தியுள்ளன். இன்று பிற பண்பாட்டுத் தொடர்புகளால் மலர் களின் பயன்பாடு எவ்வாறு மாற்றம் பெற்றுள் ளது என்பதை ஒரு மீள் பார்வை செய்வது நமது பண்பாடு பற்றி அறிய விரும்புவோருக்கு அரிய தகவல்களைத் தரும் செயற்பாடாகும்.

**தமிழர் பண்பாட்டில் மலர்கள்:**

தமிழர் வாழ்வியலில் மலர்கள் வகித்த சிறப்பிடம் பற்றிய செய்திகளைச் சங்க இலக் கியப் பாடல்களே தமிழில் முதலில் பதிவு செய்துள்ளன. மலர்கள் சடங்கு நிலையிலும் வழிபாட்டு நிலையிலும் அழகுபடுத்தும் நிலை யிலும் பெரிதும் பயன்பட்டுள்ளன. ஒரு குறிப் பிட்ட மலர் கொண்டு அம்மலர் தோன்றிய பிரதேசம் அழைக்கப்பட்டது. சங்க இலக்கியங் களில் குறிஞ்சி. முல்லை, நெய்தல், என்னும் மூன்றுமலர்களும் முறையே மலைப்பிரதேசத் தையும் காட்டுப் பிரதேசத்தையும் கடற்பிர தேசத்தையும் குறித்தன. அது மட்டுமன்றி அவ்வந் நிலத்துக்குரிய அகவொழுக்கங்களும் அந்த மலர்களின் பெயராலேயே வழங்கப்பட் டன. போருக்குச் செல்லும் போது நிலத்துப் பூவைச் சூடிச் செல்லும் மரபு இருந்தது. அதனால் பூவின் பெயர் கொண்டு அந்தப் போரும் அழைக்கப்பட்டது. வெட்சி, வாகை உழிஞை, தும்பை, வஞ்சி போன்ற பூக்கள் இவ்வாறு தொடர்புபட்டனவாகும்.

சங்ககாலத்தில் மலர்கள் அணிகளாகவும் பயன்பட்டன. ஆண்களும் பெண்களும் தம்மை அழகுபடுத்த நறுமணமுள்ள மலர்களைப் பயன் படுத்தினர். தலையிலே சூடவும் கழுத்து, காது, கை என்பவற்றிலே அணிவதற்கும் மலர்கள் பல்வேறு வடிவமைப்புக்களிலே உருவாக்கப் பட்டன. இண்டை, கண்ணி, தார், அலங்கல், தொடை, மாலை, தோடு என அவை அழைக் கப்பட்டன. ஆண்களும் பெண்களும் அக் காலத்தில் நீண்ட கூந்தல் உடையவர்களாய் இருந்தமையால் அவர்களை வேறுபடுத்திக் காட்ட வேறுபட்ட மலரொழுங்குகள்தான் பயன்படுத்தப்பட்டன. தலையிலே சூடிக் கொண்ட மாலையும் கழுத்திலே அணிந்த மாலையும் அமைப்பு நிலையில் வேறுபட்டு, அவை பயன்படும் நிலைகளையும் எடுத்து விளக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகளின் ஒழுங்கமைப்பு அக்காலத்துக் கவின்கலையின் வளர்ச்சியை விளக்கிநின்றது. மனிதர்களின் அழகுபடுத்தும் நிலையில் மட்டுமன்றி வழிபாட்டு நிலையிலும் மலர்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. வெண்மலர்களைத் தூவி வழிபாடு செய்யப்பட்டது. செம்மலர்கள் சிறப்பாக முருகவழிபாட்டிற்குப் பயன்பட்டன. நிறவேறுபாட்டைக் கொண்டு வழிபாட்டு நடைமுறைகளின் வேறுபாடும் பேணப்பட்டது. மலர்களைத் தூவி வழிபடுதலே தொடக்க நிலையில் இருந்தது. பின்னர் அவற்றைக் கவின் பெறத் தொடுத்து மாலைகளாக அணியும் வழக்கம் ஏற்பட்டது.

ஒரு ஆண் தான் விரும்பும் பெண்ணின் தலையிலே மலரைச் சூடுவதே இருவரையும் இணைக்கின்ற திருமண மரபாகத் தொடக்க காலத்திலே இருந்ததைச் சங்க இலக்கிய அகப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. பின்னர் மலர்களைத் தொடுத்து மாலையாக்கிக் கழுத்திலே அணிவிக்கும் வழக்கம் ஏற்பட்டது. இதனால் திருமணத்தில் மாலை மிகவும் இன்றியமையாத ஒரு பொருளாகக் கருதப்பட்டது. 'மணமாலை' என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்பட்டது. ஆண் ஒரு பெண்ணைத் தனக்குரியவளாக ஆக்கிக் கொள்வதற்கு மாலை சூட்ட வேண்டும் என்ற மரபும் தோன்றியது.

## தமிழர் சமூகத்தில் பூமாலை:

தமிழர் வாழ்வியலில் பிற பண்பாட்டுத் தாக்கம் ஏற்பட்டபோது பூமாலையின் பயன்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டதை உணரமுடிகின்றது. திருமண நடைமுறைகளிலே ஆரியச் சடங்குமுறைகள் வந்து கலந்தபோது; 'சுயம்வரம்' என்னும் நடைமுறை வந்துசேர்ந்தது. இந்நடைமுறையில் பெண் பல ஆண்களுள் தனக்குரிய கணவனைத் தானே தெரிவுசெய்து அவனுடைய கழுத்தில் மலர் மாலையை அணிவித்து அவனுடைய துணைவியாகி வாழும் ஆரியமரபு துலக்கமாக இருந்தது. இம்மரபு தமிழர் திருமண நடைமுறைகளோடு வந்து கலந்தபோது சிறு மாற்றம் ஏற்பட்டது. பெரியோர்களால் முடிவு செய்யப்பட்ட திருமணத்திலும் மணப்பெண் மணமகனின் கழுத்திலே முதலில் பூமாலை அணிவிக்க வேண்டும். அதன் பின்னரே மணமகன் மணமகளின் கழுத்தில் பூமாலையை அணிவிக்கவேண்டும் என்னும் நடைமுறையாக மாறிவிட்டது. ஆனால் கண்ணனையே கணவனாக அடைய விரும்பி நோன்பு நோற்ற ஆண்டாள் தான் வாழ்ந்த காலத்திலே மணமாலையின் பயன்பாடு எப்படி இருந்தது என்பதை 'நாச்சியார் திருமொழி' யில் குறிப்பிட்டுள்ளார்.

**"இந்திரன் உள்ளிட்ட தேவர் குழா மெல்லாம்**
**வந்திருந்து என்னை மக்கட்பேசி மந்திரித்து**
**மந்திரக்கோடி உடுத்தி மணமாலை**
**அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி நான்"**

இங்கே இந்திரன் உட்பட தேவர்கள் கூட்டமெல்லாம் ஆண்டாளின் இல்லத்திற்கு வந்து அவளைக் கண்ணனுக்கு மணம் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்கின்றனர். இத் திருமணப்பேச்சு முற்றாகியவுடன் ஆண்டாளுக்கு மந்திரங்களாலே மந்திரிக்கப்பட்ட கோடி உடுத்து அவள் கழுத்திலே மணமாலையாக மலர்மாலையைத் துர்க்கை அணிவிக்கின்றாள். ஆண்டாள் இந்த நடைமுறையைக் கூறியிருப்பது பூமாலையின் சிறப்பான பயன்பாட்டை விளக்கிநிற்பது மட்டுமன்றி தற்காலத்து நடைமுறையை ஒப்பிட்டுப்பார்க்கவும் உதவியாக உள்ளது. எனவே கவின் செய்தலுக்காக மட்டுமன்றி ஆண் பெண் இணைப்பினை உறுதி செய்கின்ற ஒரு பொருளாகவும் பூமாலை பயன்பட்டதை உணரமுடிகின்றது.

இத்தகைய பூமாலை வழிபாட்டிலும் பயன்படுத்தப்பட்டது. நாள்தோறும் அலர்ந்த பூக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் மாலை தொடுத்து இறைவனுக்குச் சூட்டும் வழக்கம் ஏற்பட்டது. வழிபாட்டிடங்க ளின் பரப்பளவு கூடியபோது மாலை கட்டுவ தற்கெனத் தனியான இடம் அமைக்கப்பட்டது. வழிபாட்டிலே விழாக்களின் பெருக்கமும் Nrhe;j Ngh;J **'பூமாலை கட்டுதல்'** என ஒரு தொழில் தோன்றியது. மக்கள் தம்மை அழகுபடுத்த பூமாலை அணிந்தபோது மாலை கட்டும் பயிற்சி குடும்ப நிலையிலே நடை பெற்றது. எனினும் சங்க காலத்தில் 'பூவிலைப் பெண்டு' என்னும் சொற்றொடர் பெண்கள் பூமாலை கட்டி விற்கும் தொழிலை மேற் கொண்டிருந்ததை உய்த்துணரவைக்கின்றது.

இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு விழாக்கள் நடைபெறும் இடங்களைக் கவின் செய்ய முற்பட்டபோது பூவும் இலையும் கொடியும் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. வழி பாட்டிடத்தை வரையறை செய்யப் பூமரங்க ளும் பூஞ்செடிகளும் பூங்கொடிகளும் நாட்டும் பணி இறைபணியாக எண்ணிச் செய்யப்பட் டது. கோவிற் சூழலை எல்லைப்படுத்திக் காட்டவும் இவை உதவின. கோவிலுக்குப் பயன்படும் பூக்களைக் கோவிற்சூழலிலேயே பெறக்கூடியதாக இருந்தது. பல்வேறு நிறமுள்ள மணமுள்ளமலர்களைப் பயிரிடும் பண்பாடு தோன்றியது. இறைவனுக்கு உகந்த மலர்க ளாகச் சில சிறப்பான மலர்கள் பேணப்பட்டன. சிவனுக்குக் கொன்றையும் முருகனுக்குச் செவ்வரத்தையும் அம்மனுக்கு வெண்ணிற மலர்களும் சிறப்பாக மாலை தொடுக்கப் பயன் பட்டன. பெண்கள் மாலை கட்டும் தொழிலில் நுட்பமுடையவராக இருந்தனர். மலர்களோடு துளசிச் செடியும் சிறப்பானதாக வழிபாட்டு நடைமுறைகளில் பயன்படுத்தப்பட்டது. முல்லை, மல்லிகை போன்ற வெண்ணிற மலர்களோடு நொச்சி, கொன்றை போன்ற மலர்கள் துணை மலர்களாகக் கொண்டு மாலைகள் தொடுக்கப் பட்டன. கவின் நிலையிலே பல்வேறு நிறமுள்ள மலர்கள் அடுக்கித் தொடுத்து மாலைகள் அமைக்கப்பட்டன. கோவில் மண்டபங்களிலே பூக்களும் இலைகளும் சரங்களாகத் தொடுக் கப்பட்டுத் தொங்கவிடப்பட்டன. நிறச்சேர்க்கை மூலம் கவின்பெறச் செய்யும் தொழில்நுட்பம் திருவிழாக் காலங்களிலே பெரிதும் பயன்பட் டது. இந்தப்பூச்சரங்களுடன் மாவிலை, தென் னோலை என்பனவும் பயன்படுத்தப்பட்டன.

இறைவனை அழகுக் கோலத்திலே எழுந் தருளச் செய்யும் திருவிழாக் காலங்களில் மலர் மாலைகளின் பயன்பாடு பெரிதாக இருந் தது. இறைவனுக்குச் சாற்றுகின்ற மாலைகள் மணமுள்ள அழகுள்ள மாலைகளாக இருந்தன. மனிதன் தனது ஒப்பனை ஆற்றலைப் பயன் படுத்தி இறைவனின் திருவுருவங்களைக் கண் கொள்ளா அழகுடைய காட்சியாக்கினான். உடன் அலர்ந்த பூக்களால் மாலைகள் தொடுக்கப் பட்டுப் பயன்படுத்தப்பட்டன. இறைவனுடைய கழுத்திலே அணியப்படும் பூமாலைகள் அடி யாரால் பெரிதும் விரும்பப்பட்டன. ஆண்டவ னுக்குச் சூடிய மலர்மாலைகளை அடியார்கள் அணிவது பெரும்பேறாகக் கருதப்பட்டது. இவ் வாறு இறைவன் சூடிய மாலைகளை அடி யார்கள் பின்னர் எடுத்துப்பேணும் மரபு இருந் துள்ளது. இத்தகைய ஒரு மரபினைத்தொடக்கி வைத்தவராகப் பெரியாழ்வாருடைய மகளா கிய கோதை விளங்குகின்றார்.

கண்ணனுக்கு மாலைகட்டிச் சூட்டக் கொடுப் பதையே தனது தொண்டாகக் கொண்டு வாழ்ந்த பெரியாழ்வார் தனது வீட்டுப் பூந்தோட் டத்திலே துளசிச் செடியருகில் ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்துக் கோதையெனப் பெயர் சூட்டி வளர்த்தார். கோதை பெரியாழ் வார் கண்ணனுக்காகக் கட்டிவைத்த மாலைக ளைத் தான் அணிந்து அழகு பார்த்தமையால் "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" எனச்சிறப்புப் பெற்றவள். கண்ணனின் கழுத்து மாலை அணிந்து ஆண்டவன் சூடும் மாலையை அடியவரும் சூடவேண்டும் என்ற மரபு ஒன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைத் தொடக்கி வைத்தாள் ஆண்டாள். இவ்வாறு மாலை சூடிப் பார்க்கும் எண்ணம் அடியவர்களுக்கு ஏற்பட்டபோது இறைவன் சூடிய மாலையை மட்டுமன்றி மனிதரைப் பாராட்ட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டவிடத்தும் மாலை அணிவிக்கின்ற ஒரு புதிய செயற்பாடு தோன்றியது. இதனால் பூமாலை பற்றிய எண்ணமும் மாற்றமடைந்தது. மணமற்ற மலர்களாலும் மாலை கட்டிச் சூட்டலாம் எனக் கருதப்பட்டது. காலநிலைக்கேற்ற மலர்களைப் பயன்படுத்துகின்ற முறைமை அற்றுப்போனது. மணமற்ற காட்டு மலர்களும் பயன்படுத்தப்பட்டன. மாலை சூட்டிக் கௌரவித்தல் என்ற நிலை தோன்றியபோது மாலை பற்றிய தூய்மையான எண்ணம் மக்கள் நினைவில் இருந்து முற்றாக அகன்றது. மணமாலை, பிணமாலை, பாராட்டு மாலை எனப் பல்வேறு மாலைகள் பயன்படுத்தப்பட்டன. சூட்டிய மாலையையே திரும்பவும் சூட்டலாம் என்ற அமைதி காணும் நிலையும் உருவானது. அது மட்டுமன்றிச் செயற்கையாகச் செய்யப்பட்ட மாலைகளும் பயன்பாட்டுக்கு வந்தன. இறைவனுக்கும் அன்று அலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை சூட்டுதல் என்னும் பழைய இறுக்கமான மரபு மாறியது.

தமிழர் சமூகத்தில் இன்று பூமாலை தன்னுடைய பண்பாட்டு மரபான நடைமுறைகளில் இருந்து வழுவியுள்ளது. மாலைகளின் பயன்பாட்டு நிலையான விளக்கங்களும் தெளிவற்றுப்போயின. மாலையின் கவின் பற்றிய எண்ணமும் சிதைந்துவிட்டது. தொழில்நுட்ப நிலையிலே மாலை ஒரு வணிகப்பொருளாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. மாலை நமது பண்பாட்டிலே தூய்மை, அழகு என்ற வழிபாட்டு நடைமுறைகளுடன் இணைந்திருந்தபோது மலர்களும் சிறப்பாகப் பேணப்பட்டன. மலர்த் தோட்டம் நன்கு கண்காணிக்கப்பட்டது. கோவிற் சூழலில் மட்டுமன்றி வீட்டுமுன்றலிலும் மலர்கள் காணப்பட்டன. ஆனால் இப்போது அப் பண்பாடு வேகமாக மாறிவருகின்றது. பல்வகைக் குறோட்டன்களையும் பாதீனியச் செடிகளையும் நன்கு பராமரிக்கும் பண்பு நலன் பெருகிவிட்டது. மலர்ப்பண்பாடு சிதைக்கப்பட்டுவிட்டது. வழிபாட்டு நம்பிக்கைகளைச் சிதைக்கும் முயற்சியில் இது முதலிடம் வகிக்கின்றது. எமது ஆற்றலுக்கு மேலான இயற்கையின் கவின் கலைச் சிறப்பை நாம் வழிபாட்டிலே கண்ட முறைமை மாற நாம் துணை போகலாமா? ★


நீங்கள் உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரும்
ஆயுள் காப்புறுதி செய்து கொள்ளுங்கள்.
அத்துடன் '**ஆரோக்யா**' வையும் சேர்த்துக் கொண்டால்
சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் இருக்கும் காலத்துக்கு
கட்டணம் பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களுக்குச் சந்தியுங்கள்

**வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்**

**த.கனகசபை**

**"செந்தாமரை"**

**7, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சந்திரிகா நவரத்தினம்
B.A. (Hons) Dip-in-Ed.

# பெரியபுராணத்தில் சைவசித்தாந்தம்

சைவசித்தாந்த வரலாற்றில் திருமுறைகள் சிறப்பிடம் பெறுகின்றன. சைவசித்தாந்தமும் திருமுறையும் சைவசமயத்தின் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துக்காட்டுவனவாக விளங்குகின்றன. அந்த வகையில் சேக்கிழா ரால் இயற்றப்பட்ட பெரியபுராணமும் சைவ சமய உண்மைகளை எடுத்துக் கூறுவதனால், சித்தாந்த வரலாற்றில் முதன்மை பெற்று விளங்குகின்றது. சைவசித்தாந்தத்தின் அடிப் படைக் கொள்கைகள் பலவற்றைத் தன்ன கத்தே கொண்டுள்ள பெரியபுராணம் பன்னி ரண்டாம் திருமுறையாக விளங்குகின்றது. சைவத்தின் கருவூலமாகத் திகழ்கின்ற இப் புராணமும் ஏனைய திருமுறைகளுமே பின் வந்த சித்தாந்த சாஸ்திர நூல்களுக்கு அடிப் படையாக விளங்கின எனலாம். ஆனால் பெரிய புராணத்தில் காணப்படுகின்ற சித்தாந்தக் கருத் துக்களை ஏனைய திருமுறைகளோடு ஒப்பிட் டுப் பார்க்கும்போது சித்தாந்தக் கருத்துக்கள் பெரியபுராணத்தில் குறைவாகவே காணப்படு கின்றன. இருப்பினும், சம்பந்தர், அப்பர், சுந்த ரர், திருமூலர், காரைக்காலம்மையார், ஐய டிகள் காடவர்கோன், சேரமான்பெருமாள் போன்றோரது வரலாறுகளுக்கிடையே சித் தாந்தக் கருத்துக்கள் பரவலாகச் சிதறிக் காணப்படுகின்றன. எனவே சுந்தரமூர்த்தி நாயனாரைக் காப்புடைத் தலைவனாகக் கொண்டெழுந்த பெரியபுராணம் சித்திரிக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை நோக்கு வோம்.

சைவசித்தாந்தம் சிவனது திருவருளால், தமிழகத்துச் சான்றோர்கள் பலரால் அறிவா ராய்ச்சியின் மூலம் உருவாக்கி வழங்கப்பெற்ற உயர்ந்த கோட்பாடாகும். முப்பொருள்களைப் பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என்ற நான்கு நிலைகளில் பகுப்பாய்வு செய்து வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய சித்தாந்தக் கருத்துக்களை விளக்குகின்ற பெரியபுராணம் செயல்முறைச் சித்தாந்தம் எனப்படுகிறது. அதா வது, செய்கின்ற செயல்கள் யாவும் சிவச் செயலாகச் செய்யவேண்டும் எனக்கூறப்படு கின்றது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிற்கும் இறைவனின் தன்மையை உணர்ந்து ஒழுகச் செய்வது சித்தாந்தமாகும். இத்தகைய செயல் முறைச் சித்தாந்தத்தைத் தம் வாழ்வில் செய்து காட்டியவர்கள் திருத்தொண்டர்களா கிய அறுபத்துமூன்று நாயன்மார்களே. எனவே, இவர்களது வரலாற்றைக் கூறுகின்ற பெரிய புராணம் செயல்முறைச் சித்தாந்தமாகத் திகழ் கிறது எனலாம்.

இத்தகைய சிறப்புமிக்க பெரியபுராணத்தில் முப்பொருள்கள், குருலிங்க சங்கமம், திருநீறு, திருவைந்தெழுத்து, நாற்பாதங்கள், முத்தி நிலை போன்ற இன்னோரன்ன சைவசித்தாந் தத்தின் அடிப்படைக் கருத்துக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அருளாளர்களின் வரலாறு களை நடாத்திச் செல்லும் போக்கிலும், அரு ளற்புதங்களின் உட்கோள்களை விளக்க முய லும் நோக்கிலும் சித்தாந்த உண்மைகள் இப்புராணத்தில் விளக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணத்தில் முப்பொருள்கள் ஒவ்வொன்றினது இயல்புகளும், அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளும் விளக்கப்பட்டுள்ளன. இறைவன் அடியெடுத்துக் கொடுத்துப் பாடப்பட்ட முதலாவது பாடலிலேயே முப்பொருள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

"உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

இப்பாடலில் சேக்கிழார் 'உலகெலாம்' என்பதைச் சிறப்பாக உயிர்களைக் குறிக்கும் நிலையில் வைத்து, இறைவன் உயிர்களால் உணர்தற்கும் ஓதற்கும் அரியவன் என்ற பெருநிலையை விளக்கியருளியுள்ளார். மேலும், இங்கு இறைவனது சொரூபலட்சணமும் தடத்தலட்சணமும் விபரிக்கப்பட்டுள்ளது. 'அம்பலத்தாடுவான்' என்ற அடி இறைவனது ஐந்தொழிலை விளக்குகின்றது. இறைவன் வாக்கு மானதீதன்; அதாவது உயிர்களின் சொல்லையும் நினைவையுங் கடந்தவன். அதனால் 'கடவுள்' எனப்படுகிறான். நாதமுடிவான வெல்லாம் பாசஞான மாகையால் 'வாக்கு' என்பதற்கு 'பாசஞானம்' என்றும், உயிர்கள் 'உளம்' எனப்படுதலால் 'மனம்' என்பதற்கு 'பசுஞானம்' என்றும் சிவஞானபோதத்தில் பொருள் கொள்ளப்படுகின்றது. எனவே, 'உணர்தற்கு அரியவன்' என்றது, பசுஞானத்திற்கு எட்டாதவன் எனவும், "ஓதற்கரியவன்" என்பது, பாசஞானத்திற்கு அப்பாற்பட்டவன் எனவும் விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக இப்பாடல் ஒன்றை வைத்துக் கொண்டே சித்தாந்தக் கருத்துக்களை பல விதமாக விளக்கலாம். இவ்வாறாக அரும் பெரும் கருத்துக்களை உள்ளடக்கியதாக 'உலகெலாம்' என்ற தொடர் விளங்குகின்றது. இறைவன் எடுத்துக்கொடுத்த 'உலகெலாம்' என்ற வாக்கினைச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் முதல், நடு, முடிவு என்ற மூன்றிடங்களிலும் வைத்துப் பாடியுள்ளார். மேலும், உலகங்கள் பதினான்கு என்பதற்கிணங்க பதினான்கு இடங்களில் வைத்துள்ள சிறப்பும் போற்றுதற்குரியது.

சேக்கிழார் பதியின் இலக்கணத்தைப் பல பாடல்களில் பாடியுள்ளார். பதியின் உளதாம் தன்மையினையும் தோற்றக்கேடுகளில்லாத நிலைபேற்றினையும் மானக்கஞ்சாற நாயனார் வரலாற்றில் காணமுடிகிறது. அதாவது, "உள்ள நிலைப் பொருளாய உம்பர் பிரான்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவன் தான் ஒருவனே எனினும் அயனாய் நின்று படைத்தலையும், அரியாய் நின்று காத்தலையும், அரனாய் நின்று அழித்தலையும் செய்து அருளுவன் என்பது சித்தாந்தம் விளக்கும் உண்மையாகும். இதனைச் சேக்கிழார் தண்டியடிகள் வரலாற்றில் இறைவனது படைப்பாற்றலை, "அகிலலோகங்கள் முழுதும் அளித்த முதல்வனார்" என்றும் காத்தும், அழித்தும் மீளப் படைக்கும் இயல்பை ஏயர்கோன் வரலாற்றில், "தொல்லுலகம் முழுவதும் அளித்தழித்தாக்கும் முதல்வர்" என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், "தன்னையார்க்கும் அறிவறியான்"; 'இன்னதன்மையன் என்றறியாச் சிவன்" "அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கரியான" "யாவர்களும் அறிவரிய இறைவன்" 'அரியனுக்கு அரியான்' எனவரும் தொடர்கள், பாசுபத ஞானங்களால் காண்பதற்கு அரியவன் இறைவன் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்ற பதியின் இயல்புபற்றி பெரியபுராணத்தில் பல பாடல் அடிகளில் காணலாம். 'செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்' 'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரண மாய்'; 'கற்பனைக்கடந்தசோதி' ஆதியாய் நடுவுமாகி';



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்க வைக்கும் யுத்தமதை முருகா
தகர்த்தெறி முருகா! உன் திருக்கை வேல் கொண்டு
சாந்தியும் சமாதானமும் இன்றே முழங்கிட
நீ தங்க ரதமேறி காட்சி தந்திடுவாய் முருகா.



**'நல்லைக் குமரன்' மலருக்கு**
**எமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்**

- அழகு சாதனப் பொருள்கள், எவர்சில்வர், பிளாஸ்ரிக், அலுமினியப் பாத்திரங்கள்.
- நங்கையர் விரும்பும் நவநாகரிக லேஸ், தையல் நூல் வகைகள்.
- பள்ளிச் சிறார்களின் பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள்.

**இன்னும் எத்தனையோ அத்தனையும் மொத்தமாக**
**நியாய விலையில் பெற்றிட**

# கௌரி அழகு மாடம்

**316, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 3227.**

உத்தமர் சித்தர்கள் மெய்மை கண்ட நல்லூரில்
'யாமிருக்க பயமேன்' என்ற நல்லைக் குமரன் கரங்கள்
அல்லலறுக்கும்! மக்களின் துன்ப நிலை கண்டு
இன்புற்று வாழ்வாங்கு வாழ அருள் புரிந்திடுவாய்.



'நல்லைக் குமரன்' மலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்
**யாழ்.நகர் வந்ததும் பளிச்சென்று தெரிவது**

# சிறீ ராஜன் பான்சி ஹவுஸ்

அன்பளிப்புப் பொருள்கள் வாங்குவதற்கு
மக்கள் நாடுவதும் இங்கேதான்
பலவிதமான அன்பளிப்புப் பொருள்கள்,
பாடசாலை உபகரணங்கள், பலவித மாணவர் புத்தகப் பைகள்,
அழகுசாதனப் பொருள்கள்
மற்றும் வாசனைப் பொருள்களையும்
**தரமான, நிதான விலையில் பெற்றுக்கொள்ள.....**

**65, 66, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KT

ஆவணி மாதமதில் சிறப்புற்ற நல்லையம்பதியில்
தங்க முருகனின் கொடி ஏற்றம் ஊரெல்லாம் கொண்டாட்டம்
மக்கள் பால் திரும்புதையா வேலவனின் கண்ணோட்டம்
அரக்கர் மேல் வேல்வீசி காத்தருள் முருகா! எம்மக்களை



# கிருஷிகா ஆடையகம்

**69A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.**

புத்தம் புதிய ஸ்தாபனம் கண்கவர் புடவை அகம்

**நவநாகரிகத்துக்கு ஏற்ற கண்கவர் துணி வகைகள்**

சாறிகளுக்கேற்ப **பிளவுஸ் துணி வகைகள்**

சிறுவர் முதல் பெரியவர் வரை

**றெடிமேட் ஆடை வகைகளுக்கு**

# KIRUSHIKA TEX

69A, New Market (Inside), Jaffna.



முருகன் எங்கள் இறைவன் - அவன்
தமிழ் உலகை ஆளும் தலைவன்
அழகன் எழில் குமரன் - அவன் வீர
வேல் கொண்டே வினை அழித்திடுவான்

**"கர கர மொரு மொரு"**

# சன்விட்டா பிஸ்கட்டுக்களை

**தனிச்சிறப்புடன் சுவைத்து மகிழுங்கள்**

தயாரிப்பாளர்கள்:-

**வெஸ்ரோரியன்ட் பூட்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் - கொழும்பு.**

சந்தைப்படுத்துவோர்:-

# சிவா நறுமணப் பூங்கா

**288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 2567**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்' 'நன்மை பெருகருள் நெறியே' 'உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை' 'உணர்வின் நேர்பெறவருஞ் சிவ யோகத்தை' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்களில் பதியின் தன்மை விபரிக்கப்பட்டுள்ளது.

சிவனின் மேலாய கருணையே உலக சிருஷ்டிக்கு அடிப்படை என்பதை எடுத்துக் காட்ட, 'அருட்கருணைத் திருவாளன்'; 'கருணை திருவடிவான சீரணங்கு சிவபெருமான்'; 'எதிரி லின்பம் இம்மையே தருவார்'; 'அடியார் இடுக் கண் தரியார்'; 'கருணையே உருவமாகி' போன்ற சொற்றொடர்களைச் சேக்கிழார் கையாண்டுள்ளார். இவ்வாறு, பெரியபுராணத் தில் காணப்படுகின்ற பல பாடல்கள் பதி பற்றிய சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவு படுத்துகின்றன.

சைவசித்தாந்தங்களில் ஒன்றான பசுவின் இலக்கணம் பற்றிய பாடல்களும் பெரிய புராணத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"மண்ணில் பிறந்தார் பெறும் பயன்
மதிசூடும்
**அண்ணலார் அடியார் தமை அமுது
செய்வித்தல்
கண்ணிலாலவர் நல்விழாப் பொலிவு
கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன்
வருகென உரைப்பார்"**

என்ற பாடலும்

"வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்பு
**காணாதழுந்தி
உருவெனுந் துயரக் கூட்டில்
உணர்வின்றி மயங்குவார்கள்
திருமணத்துடன் சேவித்து முன்
செலும் சிறப்பினாலே
மருவிய பிறவி நீங்க மன்னு
சோதினுட் புக்கார்"**

என்ற பாடலும் பசுவின் இலக்கணம் பற்றிக் கூறுகின்றன.

ஆன்மாக்கள் என்றும் இறைவனுக்கு அடிமை என்பதை சுந்தரரைத் தடுத்தாண்ட செயல் விளக்குவதாயுள்ளது. சுந்தரரைத் தடுத்தாண்டு, பின் 'வன்றொண்டர்' என நாமம் சூட்டித் தன்னைச் சொற்றமிழால் பாடும்படி செய்த செயல் சித்தாந்தக் கருத்தைத் தருவ தாயுள்ளது. இந்நிகழ்ச்சியைக் 'குருவே சிவ னெனக் கூறினன் நந்தி' எனத் திருமந்திரமும், 'மனும் அருட்குருவாகி வந்து அவரின் மல மகற்றித் தானாக்கி மலரடிக் கீழ் வைப்பன்" என்ற சிவஞானசித்தியார் வாக்கும் கொண்டு அறிய முற்படின் மிகப் பொருத்தமுடைய தாய்ச் சித்தாந்தம் விளங்குகின்றது. அன்றி யும் 'வன்றொண்டன் என்னும் நாமம் பெற் றனை' என்பது சிவதீட்சை முறையில் தானாக் கியபின் குருதீட்சைப் பெயரளித்தலாகிய முறை யைக் குறிக்கிறது. பழைய பெயர், மலம் நீங்கப் பெறுவதற்கு முன்னிருந்தது. அது பின்பு பொருந்தாதது ஆதலின் புதுப்பெயர் புனைந்தார். இதனை, 'வன்றொண்டரும்', 'பின் 'வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தாய்' எனப் பாராட்டுகின்றார். இவையெல்லாம் செயல் முறைச் சித்தாந்தமாகக் காணப்படுகின்றன.

சைவச் சான்றோர்கள் சித்தாந்தத்தைப் பலவாகப் பகுத்துள்ளனர். அதாவது, இரு வினைகளைச் செய்கின்ற உயிர்கள்; இவ் வுயிர்களால் செய்யப்படுகின்ற நல்வினை, தீவினைகள், இவ்விருவினை காரணமாக உயிர்களைச் சேர்தற்குரிய இன்ப துன்பங் களாகிய நுகர்ச்சிகள்; உயிர்கள் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப் பயன்களைச் செய்த உயிர்களே நுகரும்படி நியமித்து, நுகரச் செய்பவனாகிய இறைவன் என்பவையே அப்பகுப்பாகும். இதனைச் சேக்கிழார் பெரியபுராணத்தில்,

"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருளெனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையாற் பொருள்சிவன் என்றருளாலே உணர்ந்தறிந்தார்."

எனச் சாக்கிய நாயனார் வரலாற்றில் விளக்கியுள்ளார். இதே கருத்தமைய உமாபதிசிவமும், "செய்வானும் செய்வினையும் சேர் பயனும் சேர்ப்பானும் உய்வானுளனென்றுணர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சைவசித்தாந்தம் கூறுகின்ற திரி பதார்த்தங்களில் ஒன்றான பாசம் பற்றிச் சித்தாந்த சாஸ்திரங்கள் அழகுற எடுத்தியம்பியுள்ளன. எனினும் அவற்றிற்கு எல்லாம் முன்னோடியாக விளங்கியது பெரியபுராணமாகும். பாசத்தின் இலக்கணம் பற்றிச் சேக்கிழார்,

"இருவினைப்பாசம் மும்மலங்கள் ஆர்த்தலின்
வருபவர்க்கடலில் வீழ்மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்தரசை இக்கடல்
ஒருகல் மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ" எனவும்,
"தன்பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றுமற
அன்பு பிழம்பாய்த் திரிவார்..." எனவும்
நுட்பமாக விளக்கியுள்ளார்.

சைவசித்தாந்தத்திலே தனித்துவம் பெறுகின்ற ஆணவம், கன்மம், மாயை என்பன செம்பிற் களிம்பு போல் உயிர்களைத் தொடக்கம் முதலே பற்றி நிற்கின்றன. இறைவன் உயிர்களைப் பிணித்துள்ள மலப் பிணிப்பு அகல உயிர்களுக்கு உலகு, உடல், கருவி, நுகர்பொருள்கள் என்பவற்றைப் படைத்துக் கொடுத்துள்ளான். அதுமட்டுமன்றி இவ்வுலகில் வாழ்வாங்கு வாழச்செய்து பாசப் பிணைப்பு நீங்க மீண்டும் பிறவா நெறியாகிய வீடுபேற்றினைத் தந்தருளுகின்றான். உயிர்கள் தம்மைப் பீடித்துள்ள பாசப்பிணிப்பகல அருளே உருவாகிய இறைவனை அன்பினால் மறவாது வணங்குதல் வேண்டும் எனச் சைவசித்தாந்தம் விளக்குகிறது. இக் கருத்துக்களைப் பெரியபுராணம், "தொல்லை வினை ஆசுடைய மலமூன்றும் அனைய வரும்பெரும் பிறவி மாசுதனை விடக் கழித்து" என்றும், "மருள்மொழி மும்மலஞ் சிதைக்கும் வடிச் சூலம்" என்றும் விளக்குகிறது.

இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி பெரியபுராணம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்விகமேயாக
இந்துவாழ்சடையான் ஆடுமானந்த
எல்லையிற் தனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்."

உலகப்பொருள்கள் அனைத்தும் இறைவனுடையனவே. எனவே, உயிர்கள் அனைத்தும் இறைவனுக்கு அடிமை எனவும், அவற்றை உணர்ந்து இறைவனது திருவருள் வழி அடங்கி நடத்தலே மெய்யுணர்வுடையோர் செயல் என்பதைப் பெரியபுராணமும் குறிப்பிட்டுள்ளது. அதாவது, "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்"; "தம்மையுள்ளவாறறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சங்கரற்கு அடிமை" எனத் தொடங்கும் பாடல்கள் மேற்கூறிய கருத்துக்குச் சான்றாகும்.

சைவசித்தாந்தம் இறைபக்திக்கு சிறப்பான இடம் கொடுத்துள்ளது. இதேபோல பக்தி வயலின் விளைநிலமாகச் சிறப்பிக்கப்படுகின்ற பெரியபுராணமும் பக்திக்கு சிறப்பிடம் கொடுத் துள்ளது. அதாவது, கண்ணப்பர், சிறுத்தொண் டர், இயற்பகைநாயனார், சண்டேஸ்வரர் போன்ற வர்களது வரலாறுகளில் சைவப் பக்திநெறி பெரிதும் விளக்கப்பட்டுள்ளன.

சித்தாந்தத்திலே பேசப்படுகின்ற சைவநாற் பாதங்கள் பற்றிய செய்திகளும் பெரியபுரா ணத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக் கது. நாயன்மார்களது வரலாற்றினூடாக நாற்பாதம் பற்றிய செய்திகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாச் சரியை நெறி பற்றிய கருத்துக்கள் பல இடங்களில் வரு கின்றன.

"புலர்வதன் முன் திருவலகு பணிமாறிப்
புனிறகன்ற
நலமலி ஆன் சாணத்தால் நன்கு
மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும்
தொடுத்தமைத்து
புலர் புகழும் பண்பினால் திருப்பணிகள்
பல செய்தார்."

இப் பாடலை நோக்கும் போது அப்பரது, "நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா.." என்ற தேவாரத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். மேலும், "நறுந்துணர் மலர் கொய்வோர்"; 'இணைய பல் திருப்பணிகளில்'; 'திருவலகுந் திரு மெழுக்கும்'; "உடன் பறித்த அலகில் மலர்கள்"; 'கோட்டு மலரும் கொடிமலரும் குளிநீர் மலரும்'; 'கோர்க்கும் கோவைகளும் இண்டைச் சுருக்கும்'; 'தெய்வநாயகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமங் கொய்து' என வரும் பெரியபுராணச் சொற்றொடர்கள் சைவ சித்தாந்தம் கூறுகின்ற சரியைத்தொண்டை விளக்குவனவாகவுள்ளன.

இவ்வாறு சரியைத் தொண்டு பற்றிக் குறிப் பிட்டது போல, கிரியைத்தொண்டு பற்றியும் பெரியபுராணம் குறிப்பிட்டுள்ளது. 'உண்மை யாவது பூசனை'; 'வாசத் திருமஞ்சனம் பள் ளித் தாமஞ்சாந்தம் மணித்தூபம்'; 'நல்ல நவ கும்பங்கள் பெற'; 'வெண் பால்சொரி மஞ் சனமாட்ட'; 'மாலயனுக் கரியானை மஞ்சன மாட்டும் பொழுது' போன்ற பெரியபுராணத் தொடர்கள் கிரியை பற்றிய கருத்துக்கு எடுத்துக் காட்டுகளாகவுள்ளன.

இவ்வாறாக சித்தாந்தம் கூறுகின்ற சரியை, கிரியை, பற்றி குறிப்பிட்ட சேக்கிழார் யோகம் பற்றிக் குறிப்பிடுகையில்,

"மறவாமையானமைத்த
மனக்கோயிலுள்ளிருத்தி
உறவாதிதனையுணருமொழி விளக்குஞ்
சுடரேந்தி
இறவாத வானந்தமெனுந்திருமஞ்சன
மாட்டி
அறவாணர்க்கன்பென்னும்
முதமைத்தர்ச்சனை செய்வார்"

என பூசலார் வரலாற்றில் விளக்கி உள் ளார். 'சுத்தயோகிகள் சூழ இருந்துழி;' 'கண் டிகை தாழக் கலந்த யோகத்தின்' என்வரும் சொற்றொடர்களும் சித்தாந்தம் குறிப்பிடும் யோகத்தையே விளக்குவனவாக உள்ளன.

பெரியபுராணம் ஞானம் பற்றியும் குறிப்பிட் டுள்ளது. அதாவது 'ஞானமே முதலா நான்கும்'; 'ஞானம் ஈசன்பால்'; 'ஞானமோனிகள் நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பரை' 'ஞானமுண்டவர்' 'ஞானவரம்பின் தலைநின்றார்' எனவரும் தொடர்கள் வாயிலாக பெரியபுராணம் சித்திரித்துள்ள ஞான நெறி பற்றி ஓரளவு அறியக்கூடியதாயுள்ளது. இத்தகைய ஞானத்தை சைவசித்தாந்தம் பர ஞானம், அபரஞானம் என இரண்டாக வகுத்துள்ளது. இக்கருத்தினைச் சேக்கிழார் சம்பந்தர் வரலாற்றில் கூறும் திறன் போற்றுதற்குரியது. அதாவது, சம்பந்தர் ஞானப்பால் உண்டு ஞானம் பெற்ற தன்மையைக் குறிப்பிடும் போது,

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு
**சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும்**
**பாங்கினிலோங்கியஞானம்**
**உவமையில்லாக் கலைஞானம்**
**உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்**
**அந்நிலையில்"**

எனப் பாடியுள்ளார். இக்கருத்து சித்தாந்த சாஸ்திர நூல்களிலும் கையாளப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்ற திருநீறு, திருவைந்தெழுத்து பற்றியும் பெரியபுராணத்தில் காணப்படுகின்றது. அதாவது, சம்பந்தர் இறைவன் அளித்த முத்துச்சிவிகையை ஏற்று, அதனை வலம் வந்து வணங்கி ஐந்தெழுத்து ஓதி அதன் மீது அமர்ந்தார் என்பதைச் சேக்கிழார் எடுத்துக்காட்டுமிடத்து திருநீறு பற்றியும், திருவைந்தெழுத்துப் பற்றியும், குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. மேலும், பல இடங்களில் இவை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவை மட்டுமல்லாது, சிவமணி, சிவனது நாமங்கள், சிவனடியார்கள், சிவபாரம்பரியம், சிவபக்தி, திருக்கோயில் வழிபாட்டுமுறை போன்ற பல்வேறு விடயங்களையும் பெரிய புராணம் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும், மலபரிபாகம், சத்திநிபாதம், இருவினையொப்பு போன்ற செய்திகளும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றன. சம்பந்தரது திருக்கரத்தால் விபூதி பூசப்பெற்ற பாண்டியன், முன்னர் செய்த வினை நீங்கி இருவினையொப்பு உடையவனாய் இறைவனை அறியும் நிலை பெற்றார் என்பதைச் சேக்கிழார்,

"தென்னவன் மாறன்தானும் திரிபுரத்
**தலைவர் தீண்டிப்**
**பொன்னவில் கொன்றையார் தம்**
**திருநீறுபூசப்பெற்று..."**

என்ற பாடலடிகள் மூலம் அழகுற விளக்கியுள்ளார். இதேபோல கண்ணப்பநாயனார் வரலாற்றில், "திங்கள்சேர் சடையார் தம்மை சென்றவர் காணமுன்னே..." என்ற பாடல்மூலம் மலபரிபாகம் பற்றி விளக்கியுள்ளார்.

அடுத்து சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்ற முத்திநிலை பற்றியும் பெரியபுராணம் கூறுவதை நோக்கலாம். ஆன்மா சிவத்தோடு கூடும் நிலையில் ஒன்றாகி, ஆன்மா என்ற பொருள் அழிவதுமில்லை; இரண்டாகிப் பிரிவதுமில்லை, இரண்டற்ற தன்மையில் அத்துவிதமாய் அனுபவிக்கும் எனச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. இதனைச் சேக்கிழார் தனது புராணத்தில், "நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி; அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர் அமர்ந்திருந்தார்" என இனிது விளக்கியுள்ளார். இந்த முத்தி பற்றி உமாபதிசிவம் தனது நூலில்,

"ஒன்றாலும் ஒன்றா இரண்டாலும்
**ஓசையெழா**
**தென்றாலொன்றன்றிரண்டும் இல்."**

எனக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. தொகுத்து நோக்குமிடத்து, சைவசித்தாந்தம் கூறுகின்ற இறை, உயிர், தளை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள் சுமக்க காவடி ஆடி வந்தோம் முருகா
வெந்தணல் கற்பூரச் சட்டி ஏந்திவந்தோம் கந்தா
மணல் மீது உருண்டோடி வந்தோம் ஆறுமுகா
தங்க ரதமேறி விரட்டிடுவாய் மக்கள் துன்பமதை.



# MENAN TRADING CO.

No.82, 4th Cross Street, Colombo - 11
No.208, Prince Street, Colombo - 11

## GENERAL MERCHANTS
## &
## COMMISSION AGENTS

DEALERS IN LOCAL FOOD PRODUCTS

யாழ்.மாநகராட்சி மன்ற
**சைவசமய விவகாரக்குழு**
வெளியிடும்



**'நல்லைக்குமரன்'** மலர்
சிறப்போடு வெளிவர வேண்டுமென
வாழ்த்துகின்றோம்

# மேனன் ரேடிங் கோ

# M. T. C.

T.P. - 324092

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் மணம் கமழும் நல்லைக் குமரன் மலர்
என்றும் மலர்க மலர்க என



**கபிலாவின் நல் வாழ்த்துக்கள்**

காத்திரமாகவே கடுத்திடும் இவ்வெயிலில் நேர்த்தியாகவே
சோர்விலாது நடந்திட, உங்கள் பாதங்களைக்
காத்திடக் காத்திருக்கின்றன **கபிலாவின்** காலணிகள்.

✪ **கபிலா** காலணி என்றால் உங்கள் வனப்பை மேலும் மிளிர வைக்கும்
பிரத்தியேக பாதணி

✪ நீங்கள் தேடிடும் பாதணி வகைகள் இம்மேதினியிலேயே பெற்றிட
நாடிட வேண்டியது **கபிலா**

**உங்களுக்காகவே, விதவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு
காலணிகளைக் கொழும்பிலிருந்து
நேரடியாகத் தருவித்து விநியோகிப்பவர்கள்:**

யாழ்.நகரில்!

# கபிலா காலணி அகம்

இல.4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்றென்றும் மக்கள் அருந்தும்
சுவைமிகு பானங்களான
நெல்லிரசம், பழரச **Grapes** கோடியல், ஒரேஞ் கோடியல்,
பைனப்பிள் கோடியல் மற்றும் ஜாம் வகைகள்
ஊறுகாய் வகைகள் அனைத்திற்கும்



**என்றும் மக்களின் மனதைக் கவர்ந்த இடம்**

# CORAL TASTY FOOD
## INDUSTRIES




**ஆடியபாதம் வீதி
(கேணியடி வைரவர் கோயில் அருகாமை),
திருநெல்வேலி.**

எம்மால் கோடியல் (கறுப்பு வெள்ளை) 750 ml
போத்தல்கள் நியாயமான விலைக்கு
கொள்வனவு செய்யப்படும் என்பதை
வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பொருள்கள் பற்றியும் அவற்றோடு தொடர் புடைய ஆணவம், கன்மம், மாயை பற்றியும் பெரியபுராணத்தில் ஆங்காங்கே சிதறல்களா கக் காணப்படுகின்றன. இவை மட்டுமல்லாது, ஏனைய சைவசித்தாந்தக் கருத்துக்களான ஆன்ம ஈடேற்றம், நாற்பாத விளக்கம், குரு லிங்கசங்கமம், திருநீறு, திருவைந்தெழுத்து, முத்தி போன்ற இன்னோரன்ன அம்சங்களைப் பெரியபுராணம் மிக அழகுற அடியார்களது வரலாற்றினூடாக எடுத்துக்காட்டியுள்ளது.

இவ்வாறாக சைவசித்தாந்தம் கூறுகின்ற அடிப்படைக் கருத்துக்களை பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குகின்ற சைவப்பேரிலக்கியமான பெரியபுராணம் தன்னகத்தே கொண்டுள்ளது என்றால் மிகையில்லை. ✦

## உசாத்துணை நூல்கள்


1. பெரியபுராணம் ஓர் ஆய்வு:
   திரு.அ.ச.ஞானசம்பந்தன்

2. பத்துச் சொற்பொழிவுகள்:
   செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி

3. சிவநெறிச் செய்யுட்டிரட்டு:
   திரு.ப.இராமநாதபிள்ளை

4. பெரியபுராண ஆராய்ச்சி:
   திரு.மா.இராசமாணிக்கனார்

5. செந்தமிழ்ப் பூம்பொழில்:
   ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிகஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள்

6. திருநெல்வேலித் தென்னிந்திய
   சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொன்விழா மலர் (20-12-1979)

7. காரைநகர் மணிவாசகர்சபை
   பொன்விழா மலர் (1940-1990)


என் உடல் நோய் நீங்கிய பிறகு பகவானை நினைப்பேன் என்பவன் ஒருநாளும் நினைக்க மாட்டான்.

- ஸ்ரீராம கிருஷ்ணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா (ஆசிரியர்)

# "மஹோற்சவங்களில் நவசந்திகளின் முக்கியத்துவம்"

பிரமசந்தி, இந்திரசந்தி, அக்கினி சந்தி, இயம சந்தி, நிருதி சந்தி, வருண சந்தி, வாயு சந்தி, குபேரசந்தி, ஈசான சந்தி ஆகிய ஒன்பது சந்திகளின் மகத்துவத்தினை மஹோற்சவக் காலங்களில் உணர்ந்து வணங்க முடிகிறது.

சந்தியாவாஹனம் எனும் சொல், சந்தியா + ஆவாஹனம் எனப் பிரிந்து "திசைகள் தோறும் நின்று பரிபாலிக்கும் திசாநாதர்களை ஆலயத்தின் அவ்வத்திசைகளில் சாந்நித்தியமாக்குதல்" எனப்பொருள் தரும்.

மூலமூர்த்தியின் அபிமுகமான கோபுரவாசலில் பிரமாவையும் கிழக்கு முதல் ஈசானம் ஈறாகிய எட்டுத்திசைகளிலும் இந்திரன் முதல் எட்டுத்திக்குப் பாலகர்களையும் திருவிழாத் தொடங்கி முடிகின்ற காலம் வரையும் அவ்வத் திசைகளில் சமுகமாகிக்காவல் புரியும் படி பூசித்துப் பலியிட்டு வேண்டிக்கொள்ளும் ஒரு வழிபாடாகும். திக்குப் பாலகர்களை எழுந்தருளியிருக்கும் வண்ணம் அருளுவிக்கும் முதல் தினத்திலும், மீட்டருளுவிக்கும் வண்ண மாக இறுதித்தினத்திலும் அவரவர்க்குரிய சிறப்பியல்புகள் தாளம், வேதம், பண், வாத்தியம், இராகம் என்பன சொல்லப்பட வேண்டும். இந் நியதியானது ஆலயங்களில் தற்பொழுதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

சகல வாத்தியக் கோசத்துடன் உற்சவ மூர்த்தியை வீதிவலம் செய்விக்கும் பொருட்டு அஸ்திர தேவருடன் வெளி வீதிக்கு எழுந்தருளுகின்ற வேளையில் கோபுர வாசலில், பிரமசந்தி செய்யப்படும்.

உலக நாயகனே போற்றி
உலகருள் முதல்வா போற்றி
அலகிலா வேத போற்றி
பலமருள் பிரம போற்றி.

அன்னத்தைக் கொடியாக உயர்த்தியவரே. வாணியை மெய்யன்பினால் நாவிடங் கொண்டவரே, சிவபிரான் அருளுக்குரியவரே, உலக நீதியை உரைப்பவரே, உலகினைப் படைக்கும் பிரமதேவரே, அடியவர்களாகிய நாம் செய்யும் வணக்கத்தை ஏற்றருள்வீராக - எனப்பணிந்து போற்றுதலாகும்.

| | | |
|---|---|---|
| வேதம் | - | பிரமம் ஜஜ்ஞானம் |
| பண் | - | மேகராகம் - நீலாம்பரி (மேகராகக் குறிஞ்சி) |
| தேவாரம் | - | புலனைந்தும் பொறிகலங்கி |
| தாளம் | - | பிரமதாளம் |
| நிருத்தம் | - | கமலவர்த்தனம் |

மிருதங்கம், வீணை, குழல், சங்கு, படகம். தாளம், எக்காளம் முதலான வாத்தியங்களுடன் மங்கல பேரிகை முழங்க, பிரமசாந்தி வணக்கம் சிறப்படையும். பிரமன் தாளமதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்குமி கப்பொலி கீதமி சைப்பது
ஏத்திடு பிரமனின் தாளமதே"
இப்பாடலின் ஓசையால் உணரமுடிகின்றது.

**இந்திர சந்தி:** கிழக்குக் கோபுர வாயிலுக்கு எதிரே செய்யப்பட வேண்டும். உலகினர்க்கு உண்மையை அறிவுறுத்தும் தேவனே வணக்கம் என்பதாய் வழிபாடற்றுவதாகும்.

**வேதம் - திறாதாரமித்திரம்**
**பண் - காந்தாரம்**
**தாளம் - சமதாளம்**

**"முன்னுறு தேவர்தம் மன்னிய வரசாம்**
**இந்திர தாளம் எனப்படுமே"**
எனும் நடையினால் வாசிக்கப்படும்.

**அக்கினி சந்தி:** ஆலயத்தின் வீதியில், தென்கீழ் திசையில் செய்யப்பட வேண்டும். சகல சராசரங்களும் எவனது உதவியால் உயிர்தரித்து உள்ளனவோ அத்தகைய அக்கினித் தேவனே உமக்கு வணக்கம் என்பதாய் இது அமையும்.

**வேதம் - துவன்னோ அக்னே**
**பண் - கொல்லி**
**தேவாரம் - மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**
**தாளம் - அர்த்தாவரணம்**

**"அங்கொலி தாளம் அரகர ஜயவென**
**அமைவுறு பத்தியை அருளுகவே"**

**யம சந்தி:** ஆலய வீதியில் தெற்கு வாயிலுக்கு எதிரே செய்யப்பட வேண்டும்.

**வணக்கம் தரும ராசனுக்கே**
**வணக்கம் வைவச்சுதனுக்கே**
**வணக்கம் யமனாந் தேவனுக்கே**
**வணக்கம் உலக சாட்சிக்கே.**

**வேதம் - சுகன்னப்பந்தா**
**பண் - கௌசிகம்**
**இராகம் - பைரவி**
**தாளம் - பிருங்கிணீ**

**"வீர கர்வமொடு தீர னச்சமலி**
**வீர தாளமிது யமனுக்கே"**

**நிருதி சந்தி:** ஆலய வீதியின் தென்மேற்கு மூலையில் செய்யப்பட வேண்டும்.

**போற்றி சங்கர பக்தனுக்கே**
**போற்றி தைத்திய ஈசனுக்கே**
**போற்றி ராக்கதர் தலைவனுக்கே**
**போற்றி மாபெரும் நிருதிக்கே**

**வேதம் - அசுந்வந்தமயஜமான**
**பண் - நட்டபாடை**
**இராகம் - கம்பீரநாட்டை**
**தேவாரம் - நத்தார்படை**
**தாளம் - மல்வதாளம்**

**"துட்டர டக்கிச் சிட்டரைப் போற்றும்**
**தோன்றல ரக்கற் போற்றுவமே"** எனும் தாள நடையில் வாசிக்கப்படும்.

**வருண சந்தி:** ஆலயத்தின் மேற்குத் திசையில் நடைபெற வேண்டும்.

**மகர வாகனனே போற்றி**
**இகலிலா விதய போற்றி**
**மாண்புறு பாசா போற்றி**
**எண்பெறு வருணா போற்றி.**

முதலையை வாகனமாக உடையவனும், சிவபிரானது ஆணையைத் தாங்குபவனும், நீர்களுக்கெல்லாம் அதிதேவதையும் ஆகிய வருணதேவனை வணங்குவதாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண் - சீகாமரம்**
**இராகம் - நாதநாமக்கிரியை**
**வேதம் - தத்துவாயாமி**
**தாளம் - நவதாளம்**

**"தங்கு பாசங்கொள் மகர வாகன வருணதேவனை வணங்குவாம்"** எனும் தாளநடைக்கேற்ப வாசித்தலாகும்.

**வாயு சந்தி:** ஆலயத்தின் வடமேற்குத் திசையில் செய்யப்பட வேண்டும். பிராணிகளுக்கு எல்லாம் உயிராக இருப்பவனாகிய வாயுதேவன் நல்வரவாகும்படி வணங்குதலாகும்.

**"அரிணமா ஹூர்வாய் போற்றி"** எனப்பரவுகின்ற வாழ்த்தும்,
**"ஆனோ நியுத்பி"** எனும் வேதமும், தக்கேசிப் பண்ணும், காம்போதி இராகமும்

**"அவிபெறு மங்கியின் நண்புகொள் அநில அன்புடன் எம்மைக்காத்தருள்வாய்"** எனும் தாளநடையும் **'வாயு'** பகவானை மகிழ்வுறச் செய்யும்.

**குபேர சந்தி:** ஆலய வீதியில் வடதிசையிலே செய்யப்பட வேண்டும். புஷ்பக விமானத்தை ஊர்தியாகக் கொண்டு மகிழ்ச்சியோடு விஜயம் செய்பவரும், அழகிய சித்திர விசித்திரமான மாளிகையில் வாழ்பவருமான குபேரனை வணங்கும் நிகழ்வாகும்.

**வேதம் - சோமோவா ஏதஸ்ய என்பதாகும்**
**பண் - தக்கராகம்.**

**"தேவ தானவ சித்தர் வாழ்வட திக்கு மேவு குபேரனே"** எனும் தாள நடைக்கு வாசித்தலாகும்.

**ஈசான சந்தி:** ஆலய வீதியின் வடகீழ்த் திசையிலே நடைபெற வேண்டும்.

**"திரிசூலம் பரிப்பாய் போற்றி**
**திருநீலகண்டா போற்றி**
**திருத்தேவ தேவா போற்றி**
**திருமேவும் ஈசா போற்றி."**

எனப் போற்றி மதிப்பளிக்கும் ஈசானரை வணங்குவதாய் அமையும்,

**வேதம் - "தமீசானம் ஜகத"** என்பதாகும்
**பண் - சாதாரி (சாலரபாணி)**
**இராகம் - பந்துவராளி**
**தேவாரம் -**

**தலையே நீ வணங்காய் - தலை**
**மாலை தலைக்கணிந்து**
**தலையாலே பலி தேருந்தலைவனைத்**
**தலையே நீ வணங்காய்.**

**"சத்யோ ஜாதம் வாமம கோரம்**
**தத்புரு ஷேசானம்"**

எனும் தாளநடை மிளிரும் வண்ணம் வாசிப்பதாகும். அட்டதிக்குப் பாலகர்களில் ஈசானர் சிவாம்சம் உடையவர். அதனால் ஈசானத்தில் விசேட வழிபாடுசெய்யப்பட வேண்டும். அதனோடு பூதநாட்டியம் சிறப்பாகச் செய்யப்பட வேண்டும். பங்கு பற்றிய கலைஞர்களனைவரையும் ஆசாரியர் கௌரவித்து, நாட்டு மக்களனைவருக்கும் மங்கல வாழ்வுண்டாகும் வண்ணம் ஆசீர்வதிப்பார். இந்த ஆசீர்வாதம் மஹோற்சவ காலங்களில் யாவர்க்கும் கிடைப்பதாக. ✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை நகர் குமரன் கார்த்திகை தீபம் அவன்
மாவிளக்கு ஏற்றிடும் மங்கையர் கண்ணீர் போக்க
அழகே முருகனாய் வேலெடுத்து வந்திடுவீர்
வந்தெமை காத்திடுவீர் நாம் வாழ்வு பெற்றிட

**கோபிகா ஆடையகம்**

**இல. 5/4(3A) நவீனசந்தை, யாழ்ப்பாணம்.**

பட்டுப்புடவைகளின் சிகரம் நவநாகரிகத்துக்கேற்ற கண்கவர்
✳ ஆடைத்தினிசுகள் ✳ சிறுவர்களுக்கான எழில் கொஞ்சும் அழகான ஆடைமுதல்
✳ ஆடவர், நங்கையர்களுக்கான அறிமுகமாகும் புதிய ஆடைகளை

**உடனுக்குடன் பெற்றுக்கொள்ள தனிச்சிறப்புப் பெற்ற ஸ்தாபனம்**

**GOPIGA ADAIYAGHAM**

No. 5/4(3A), New Market (Inside), Jaffna. T.P. 021-2377.

பாரிலே! நல்லைக் கந்தன் பரவசம் பாடி வந்து
சீரிய செல்வமெல்லாம் சிறியோர் எமக்களிக்க
கந்தனின் கருணை எல்லாம் அடியவர் பால் கிடைக்குமென்று
பற்றுவோம் பற்றுடனே பரம்பொருளின் பாதமதை

**'யாழ்.நகரில்'**

**"சைவ உணவகம்" என்றாலே நினைவுக்கு வருவது**
**அன்றும்! இன்றும்! என்றென்றும்!**
**மக்கள் மனம் நிறைந்த**

**'மலாயன் கபே'**

**MALAYAN CAFE**

**36, 38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021-2373.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும்
நெஞ்சமரில் ஒருக்கால் நினைக்கின்
நல்லூர் முருகா - உன் ஆறுமுகம் தோன்றும்
ஈழமக்கள் அமைதி வேண்டி பிரார்த்திக்கின்றோம்

காலத்துக்குக் காலம் நாகரிகம் முன்னேறுகிறது
நங்கையரை அழகுபடுத்தி மினுங்க வைப்பது தங்க நகைகள்
அந்த ஆபரணங்களை மெருகூட்டுவதில்
பெயர்பெற்று விளங்குபவர்

**சாருணி ஜுவல் கட்டிங் ஸ்தாபனத்தார்**

யாழ்.மாநகரில் தங்க நகைகளுக்கு பற்பல டிசைன்களில் கட்டிங் வேலை
செய்து கொடுப்பதில் முன்னணி வகிப்பது

**சாருணி ஜுவல் கட்டிங் வேலை**

**SHARUNI Jewel Cutting Work**

**70, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். தொ.பே. 3502.**

நல்லைக் குமரனே! அர்ச்சனை கந்தா
நின்பதம் பணிந்திட அருமருந்தாம் 'நல்லருள்' செய்யுமையா
வேல் எடுத்து விளையாடும் நல்லூரானே
பக்தர்களின் கண்ணீர் மறைந்திட தங்கரதமேறி வாருமையா.

ஆறுமுகப் பெருமான் தங்க நகைகள் அணிந்து ரதபவனி வருகின்றார்
நவநாகரிக மங்கையரே!
நீங்களும் ஒளி வீசும் 22 கரட் தங்க நகைகளை அணிந்து
முருகனைத் தரிசிக்கக் கூடாதா?

**இதோ!**

விதம் விதமான டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளைச் செய்துகொள்ள
வசதியாக நல்லூரான் முன்னாலேயே

**பாலகிருஷ்ணா ஆபரண மாளிகை**

**BALAKRISHNA JEWEL HOUSE**

616, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகஜோதி கா. கணேசதாசன் ஜே. பி.
(ஓய்வுபெற்ற அதிபர்)

# தெய்வம் இருப்பது எங்கே?

ஆம்! தெய்வம் இருப்பது எங்கே? இந்த வினாவுக்கு பின்வருமாறு யாவரும் விடை கூறுவார்கள்.

தெய்வம் எங்கும் இருக்கின்றார். அவர் ஆலயம் தோறும் எழுந்தருளியுள்ளார். தூணிலும் இருக்கின்றார். துரும்பிலும் இருக்கின்றார். தெய்வம் மலைச் சிகரங்களிலும் ஆகாயத்திலும் இருக்கின்றார். அவர் விறகில் தீபோல் பாலில் நெய்போல் மறைந்து இருக்கின்றார். இவ்வாறு பலவிதமான பதில்களைக் கூறிக் கொண்டே செல்வார்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக "உள்ளத்தில் காண்பாயெனில் கோயில் உள்ளேயும் காண்பாயடி"என்ற கவிமணியின் பதிலை நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும். அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற பரிபூரணனாக விளங்கி அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கும் தெய்வம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நிறைந்துள்ளான் என்பதே அறிவுடமை.

எமது அரிய மானிடப் பிறப்பில் உள்ளத்திலே நீங்காது தெய்வம் உறைவான் என்பதை "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்றார் மாணிக்கவாசகர். "என் உள்ளம் கவர் கள்வன்" என்றார் சம்பந்த சுவாமிகள். தங்கத்தின் மேல் இரத்தினக்கல் இருக்கின்றது. அந்தத் தங்கம் உருகினால் மணி தங்கத்தில் நன்கு அழுந்திப்பதிந்து கொள்ளும். அது போல் நமது உள்ளமாகிய தங்கத்தின்மீது தெய்வமாகிய இரத்தினமணி விளங்குகிறது. உள்ளம் அன்பு மயமாகி உருகியவுடன் தெய்வம் எமது உள்ளத்துடன் ஒன்றுபட்டுவிடும்.

கோவிலில் புறக்கண் கொண்டு கண்ட இறைவனை உள்ளமாகிய கோயிலில் அகக் கண்ணால் காண முயற்சி செய்யவேண்டும். இறைவனுடைய சொரூபம் எமது உள்ளக் கமலத்தில் விளங்குவதாக உணர வேண்டும். அந்தக் காட்சிதான் சிறந்த காட்சி. அந்தக் காட்சியால் பெறும் இன்பத்தை வேறு எதனாலும் பெறவே முடியாது.

தெய்வம் நமது உள்ளத்திலிருந்து நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார். எம்மை யாராவது வணங்கினால் அந்த வணக்கம் எமக்கு உரியதன்று. எமக்குள் உயிர்க்கு உயிராக உள்ளத்திலுள்ள இறைவனுக்கே உரியதென்று கருதுதல் வேண்டும். தன்னைத் தான் வணங்குகிறார்கள் என்று ஆணவத்தால் செருக்குற்றவன் தாழ்ந்து போவான். அன்பின் மேலீட்டால் யாராவது வணங்கினால் அந்த வணக்கத்தை எமது உள்ளத்திலிருக்கும் இறைவனிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

எம்மையெல்லாம் வழிநடத்துகின்றவர் கடவுள். ஒரு வண்டியைச் செலுத்துகின்றவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிக்குள் இருந்து செலுத்துவது போல் தெய்வம் உயிருக்குயிராக எமது உள்ளத்தி லிருந்து எம்மைச் செலுத்துகின்றார். இதனை நாம் உணர்ந்து எமது உள்ளத்தை தூய்மை யாக வைத்திருக்கவேண்டும். குப்பை நிறைந்த இடத்தில் நாம் இருக்க அருவருப்பு கொள்வோ மல்லவா? அதுபோல் அழுக்காறு, அவா, வெகுளி, பொய், இன்னாச்சொல், களவு, காமம், முத லிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான். ஆகவே எமது உள்ளத்தை சமாதானமாகிய பசுவின் சாணத் தால் மெழுகி, அன்பு என்னும் சந்தனம் தெளித்து, அறிவு என்னும் தீபத்தை ஏற்றி உண்மை என்ற தூபம் கமழ வைத்தால் இறைவன் அங்கே எழுந்தருளி வாழ்வாங்கு வாழச் செய்வான்.

"காயமே கோயிலாக"
**"சிந்திப்பாரவர் சிந்தையுளானை"**
**"உள்ளம் பெருங் கோயில்"**
**"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்"**
**"ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நினைந்து கொள்"**
**"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன் என்றுரைத்தான் கண்ணபெருமான்"**

இத்தகைய அருளாளர்களின் அருள்மொழி கள் யாவும் இறைவன் எல்லோர் உள்ளங்க ளிலும் இருப்பதை நன்கு உணர்த்துகின்றது. இதனை நாம் உணர்ந்தால் எல்லா உயிர் களையும் சிவமயமாக நாம் மதிப்போம். எவ் வுயிர்க்கும் இன்னலின்றி இரக்கங் கொண்டு வாழ்வோம். கொலை, பகை, சண்டை போன்ற தீயவை எம்மைவிட்டு அகன்று உலகில் நில வும்.

எமது உடல், உயிர், உணர்ச்சி, யாவற் றையும் வளர்க்க வேண்டுமெனில் எமது உள் ளத்தில் இறைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையை நாம் வளர்க்க வேண்டும். பூச லார் நாயனார், வாயிலார் நாயனார் போன்றோ ரின் வரலாறு எமக்கு வழிகாட்டும்.

## நல்லை நகர் வீதியிலே நல்லதொரு தேரோட்டம்

நல்லை நகர் வீதியிலே நல்லதொரு தேரோட்டம்
ஆறுமுக வேலனுக்கு அழகான தேரோட்டம்
கண் குளரப் பார்ப்பவர்க்கு காட்சி தரும் தேரோட்டம்
வானூர்தி பூச்சொரிய வலம் வரும் தேரோட்டம்

வடம் பிடித்தோர் வாழ்க்கை எல்லாம் வாழவைக்கும் தேரோட்டம்
ஆணவமாம் மலங்களை அழித்திடவே ஆறுமுகன் வருகின்ற தேரோட்டம்
கன்ம வினை கழிந்திடவே கந்தனவன் எழிற்கோலத் தேரோட்டம்
பக்தர்களாம் அலைகளின் மேலாக பன்னி நகரத்தோன் மிதந்து வரும் தேரோட்டம்

ர. சாருஜா -
(மாணவி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை மேற்கு

# திருவண்ணாமலை

திருச்சிற்றம்பலம்

பண்:- நட்டபாடை

**உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்**
**பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ**
**மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்**
**அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே.**

திருச்சிற்றம்பலம்.

- சம்பந்தர் தேவாரம்

### புராணவரலாறு:

**(அடிமுடி தேடிய படலம்)**

திருவண்ணாமலையின் புராண வரலாறு களை ஆராயும் போது அவை பக்திச்சுவை மிக்கதாகும். மனிதர்களிடம் மாத்திரம் அல்ல தேவர்களிடமும் நான், எனது என்ற ஆணவம், அகந்தை, அகங்காரம், மமகாரம் இருக்கத் தான் செய்தது. நான்முகன் சரஸ்வதியின் கணவன் ஆகையால், கல்விச் செருக்கும், திருமால் இலக்குமியின் கணவன் ஆகையால் செல்வச் செருக்கும் மிகுந்திருந்தது. நான் முகன் திருமால் இடையே இருந்த போட்டி, பொறாமை போராக மாறி, யார் பெரியவர் என்ற சச்சரவுகூட ஏற்பட்டு, இதைத் தீர்க்க முழு முதற் கடவுளாகிய சிவபெருமானிடம் நான் முகனும் திருமாலும் சென்றனர். பரம்பொருளா கிய சிவபெருமான் நடுவராக நின்று எனது அடியையும், முடியையும் எவர் காண்கிறீர் களோ அவரே பெரியவர் என அருளினார். இவ்வண்ணம் அருளியதும் எம்பெருமான் இரு வருக்கும் இடையே ஒளி உருவாய், எரிமலை யாக எட்டாத பொருளாய் திருப்பெருவடிவம் கொண்டார் திருவண்ணாமலையில்.

திருமால் பன்றி உருக்கொண்டு பாதாளம் ஏழினுங்கீழ் குடைந்து, குடைந்து சென்றும் பரம்பொருளின் பாதமலரைக் காணமுடிய வில்லை. இதேபோல் நான்முகனும் அன்னப் பறவை உருக்கொண்டு உயர உயர எட்டி, எட்டிச் சென்றும் சிவபெருமானின் திருமுடியை காணமுடியவில்லை. திருமால் தனது தோல் வியை ஒப்புக்கொண்டார். ஆனால் நான் முகனோ அண்டவெளியில் பறந்து வரும் போது தாழம்பூ ஒன்று கீழ் நோக்கி வீழ்வதை அவதானித்த நான்முகன் அந்தத் தாழம்பூவை பார்த்து நீ எங்கிருந்து வருகிறாய்? என்று வினவ அதற்குத் தாழம்பூ ஆனது நான் சிவபெருமானின் திருமுடியில் இருந்து வரு கின்றேன் என்று கூறவும், நான்முகன் மனமிக மகிழ்ந்து, ஏ! தாழம்பூவே நீ எனக்காக சான்று பகர வேண்டும் என்று வேண்டிநிற்க, தாழம்பூ அதற்குச் சம்மதித்தது. நான்முகன் சிவபெரு மானின் திருமுடியைக் கண்டதாக, தாழம்பூ பொய்ச்சாட்சி கூறியது. உடனே சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினந்து நான்முகனே! உலகில் உனக்குக் கோயில் இல்லாது இருக்கக் கடவது என்று சபித்தார். ஆதலால் எவரும் நான்முகனை கோவில் கட்டி வணங்குவது இல்லை. மன்று ஓரம் (பொய்ச்சாட்சி) கூறியதற்காக தாழம் பூவே! நீ என் மேனியைத் தீண்டக்கூடாது என்று விலக்கினார். இதனால் தாழம்பூ மிக்க நறுமணம் உடையதாக இருந்தாலும்கூட எவரும் சிவபூசைக்கு தாழம்பூவை எடுப்பதில்லை, புஷ்ப விதியிலும் இல்லை. சிவபெருமான் சிவலிங்கத் திருமேனியராய், ஒளி உருவாய் நெடிது உயர்ந்து எவருக்கும் எட்டாத நிலையில் தோன்றியதால் அண்ணாமலை என்னும் திருப்பெயர் திருவண்ணாமலைக்கு வழக்கில் வந்தது. அண்ணாத - எட்டாத - அண்ண முடியாதமலை திருவண்ணாமலை.

**உமை இடப்பாகம் பெற்றமை:**

அம்பிகை சுவாமியிடம் தனக்கு வாமபாகம் தந்தருள வேண்டும் என்றதும், சுவாமி, அம்பிகையை திருவண்ணாமலைக்கு எழுந்தருளும் வண்ணம் ஆஞ்ஞாபிக்க, அம்பிகையும் அவ்வாறே எழுந்தருளி கௌதமருடைய ஆச்சிரமத்தில் தரித்து இருந்து ஊசியில் ஒரு காற் பெருவிரலை ஊன்றி, பரம்பொருளை நினைத்து நின்று கடுந்தவம் செய்து, மகிடாசூரனை வதம் செய்து, அண்ணாமலை அண்ணலை நினைந்து நினைந்து உருகி, கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலையை வலம் வந்து இடப்பாகம் பெற்றாள்.

**திருவண்ணாமலைத் திருத்தலம்:**

திருவண்ணாமலையை சிறப்பாக ஸ்ரீ அருணாசலம் என்றும் பொதுவாக அருணகிரி, சோணகிரி, சோணாசலம், தென்கைலாயம், தலேச்சுரம், சுத்தநகரம், கௌரிநகரம், தேசுநகரம், சிவலோகநகரம், வாயுநகரம், முத்தி நகரம், ஞானநகரம் என்றும் வழங்குவர். தமிழ்நாடு தெய்வப் பொலிவு மிக்க நாடு. கிராமம்தோறும் கோவில்கள் திங்கள்தோறும் திருவிழாக்கள், வானத்தை எட்டும் ராஜ கோபுரங்கள், தேரோடும் வீதிகள், புனிதம் மிக்க தீர்த்தங்கள், அழகான ஆறுகள் பாயும் ஞானப் பூமியாகும். இந்தச் செந்தமிழ் நாட்டிலேதான் திருவண்ணாமலை என்னும் தெய்வீகத் திருத் தலம் உண்டு.

சென்னையில் இருந்து திருவண்ணாமலை 141 மைல் ஆகும். காட்பாடி விழுப்புரம் ரெயில் பாதையில் 8ஆம் மைலில் உள்ள ரெயில் நிலையம் திருவண்ணாமலை. வட ஆர்க்காடு மாவட்ட தலைநகர் திருவண்ணாமலை ஆகும். இந்த மலையின் உயரம் 2,665 அடி, திருவண்ணா மலையில் நாற்புறமும் குன்றுகள் உள. இந்த அழகிய மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது இப் பெரிய ஊர். பல சதுரத் தெருக்களைக் கொண்டது திருவண்ணாமலை. இந்த நகரை நிர்வகிப்பது நகராண்மைக்கழகம். அண்ணாமலையார் கோயில் நகரின் நடுவில் உள்ளது. இந்தக் கோவில் 7ம் நூற்றாண்டில் சிறிய அளவில் செங்கற் சுதை மாடமாக இருந்திருக்கலாம். விஜயபாலன் வழிவந்த சோழமன்னர்கள் கருங்கல் திருப்பணியை தொடங்கி வைத்தனர். இறைவனை அண்ணாமலையார் என்றும், அருணாசலேசர் என்றும் இறைவியை உண்ணாமுலை அம்மை என்றும் அழைப்பர். தலவிருட்சம் மகிழமரம். இதனை 3ம் பிரகாரத்தில் காணலாம். நினைக்க முத்தி தரும் திருவண்ணாமலை. பஞ்சபூத தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. இது தேயுத்தலமும் ஆகும்.

44 ஏக்கர் பரப்புடைய ஸ்ரீ அருணாசலம் மிகப் பெரியது. வெகு தூரத்தில் ஒருவர் வரும்போதே அழகான திருவண்ணாமலையும், 217அடி உயர இராஜகோபுரமும் வானளாவி செம்மாந்து காட்சி தரும். இந்தக் கோபுரம் விஜயநகர மன்னர்களின் பண்பாட்டுக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறி வருகின்ற நல்லூர் ஆறுமுகா!
தேடுகின்றோம் நிம்மதியை அருள் தந்திடுவாய்
போரேறி புரட்டிவிட்ட எம் நித்திலத்தை
பொது நெறியில் அரசாள உன் கருணைதாருமையா

**'நல்லைக் குமரன் மலர்'**
வளர்க வளர்க என உளமார வாழ்த்துகிறோம்.



☞ புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
☞ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
☞ ஜெனரேற்றர் வகைகள் ☞ சோலர் வகைகள்
☞ தரமான அசிட் வகைகள்
என்பவற்றிற்கு நாடவேண்டிய இடம்

# அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

# ARUL VINAYAKAR MOTORS

**இல. 103,106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**கிளை: அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
**262, கண்டி வீதி, சாவகச்சேரி.**

நாதமணி கேட்கையிலே நல்லூர் முருகா
உன் நாதம் ஒலித்திடும் ஞால மெலாம்
ஈழ நலம் காக்க மண்ணில் நீ இருக்கிறாய் - எங்கள்
இதயத்தின் ஓசையெலாம் எம் முருக நாமமே.

**'நல்லைக் குமரன்' வெளியீட்டுக்கு எமது பாராட்டுக்கள்**
எம்மிடம் எல்லாவிதமான கண்கவர் பாதணிகளையும்



# 'BATA' 'பாட்டா'

விரும்பிய தெரிவுடன்
பெற்றுக்கொள்ள விரைந்து நாடுங்கள்

# யாழ் ரேட் சென்ரர்

# யாழ் காலணியகம்

## Bata ஏஜென்சி

**ஆஸ்பத்திரி வீதி, இல.11, நவீன சந்தை (வெளிப்புறம்), யாழ்ப்பாணம். T.P-3152**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கார வேலவனே சிவசங்கரன் மைந்தனே
மங்காமல் எம் மக்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்திடவே
வாயார வாழ்த்தினோம் போற்றாத நாவில்லை
ஓங்கார ரூபனே! தேரேறி வந்து காத்திடும் முருகா! எம்மக்களை

ஞான ஒளி பரப்பும்

நல்லைக் குமரன் மலர் சிறப்புடன் மலர, மலர [illegible] வாழ்த்துகின்றோம்

✦ பல வர்ண பெயின்ட் வகைகள் ✦ பலவித கட்டடப் பொருள்கள்
✦ S.Lon பைப் வகைகள் ✦ இரும்புக் கம்பிகள்

தாராளமாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

மிற்சுயி சீமெந்தின் பிரதான விநியோகஸ்தர்கள்

# ஜெசீபா ஏஜென்சி

# JEISHEBA AGENCY

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல. 2407



சிந்தையில் எந்நாளும் முருக நாமம் கூறி
முந்தை வினையறுக்க முருகா! நீ வருவாயென்று
முட்டி மோதுதப்பா எம் அடியார் கூட்டம்
கந்தா, கார்த்திகேயா தங்கரதமேறி வா - இன்னல் தீரட்டும்

இன்றைய அதிமுகம் – நாளைய நாகரிகம்

கல்யாண முகூர்த்தப் பட்டாடைகள், கூறைச் சேலைகள்,
இன்னும் பல வர்ண ஆடைகள், ரெடிமேட் அலங்கார உடைகள்
சங்கமித்த இடம்

## ராசி சில்க்ஸ்

ஜவுளி உலகிலே தெரிவுக்கு ஒரு புதுமையான இடம்

# ராசி சில்க்ஸ்

**70, 71A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கங்கட்கு ஓர் எடுத்துக்காட்டு. நாற்புறமும் உயரிய மதில் வாயில்கள், நான்கு பெரிய கோபுரங்கள், ஐந்து நடுத்தரக் கோபுரங்கள், எல்லாமாக ஒன்பது கோபுரங்கள், நீரோடைகள், ஆயிரங்கால், நூற்றுக்கால் மண்டபங்கள், கணக்கற்ற சிற்பங்கள், நந்தவனங்கள் எனக் கண்டு இன்புறமுடியும். தேவார திருவாசக, திருப்புகழ்பெற்ற தலம் என்றுங் கூறுவர். மலையே இறைவன் உருவமாக சோதி வடிவமாக புகழ் பெற்றது.

அண்ணாமலையில் மலைக்கோலமாக இருந்த இறைவனை நான்முகனும், திருமாலும் தரிசித்து பரம்பொருளே! தாங்கள் இவ்வண்ணம் மலைக்கோலமாக இருந்தால் நாங்கள் தங்களை எவ்வாறு பூசிக்க முடியும்? ஆகையால் தாங்கள் இம்மலையின் கீழ் சிவலிங்கத்திருவுருவாக எழுந்தருள வேண்டும் என்று கூற அவ்வாறே இறைவன் சிவலிங்க மூர்த்தமாக எழுந்தருளினார். உடனே நான்முகனும் திருமாலும் மயன் என்ற தேவதச்சனைக்கொண்டு ஓர் ஆலயத்தை அழகுற அமைத்தனர். அண்ணாமலையாருக்கு ஆலயம் அவ்விடத்தில் அமைந்ததும் அவ்விடம் செழிப்பான நகரமாகமாறின. தீர்த்தங்களும், கிணறுகளும் தோன்றின. கற்பகதருக்கள் தழைத்தன. தேவர்களும், முனிவர்களும், மனிதராக மாறியதாக தல புராணம் கூறுகிறது.

**திருவாசகம்**

**(திருவம்மானை)**

**விண்ணாளுந் தேவர்க்கு மேலாய**
**வேதியனை**
**மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி**
**நின்றானைத்**
**தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி**
**நாட்டானைப்**
**பெண்ணாளும் பாகனைப் பேணு**
**பெருந்துறையிற்**
**கண்ணார் கழல்காட்டி நாயேனை**
**ஆட்கொண்ட**
**அண்ணாமலையானைப் பாடுதுங்காண்**
**அம்மானாய்"**

**- மாணிக்கவாசகர்.**

கங்கைகொண்ட சோழன் இராசேந்திரன் காலத்திற்கு கி.பி.1028 முன்னரே இக்கோயில் கற்றளியாக இருந்ததென்பதை கல்வெட்டு மூலம் தெரியவருகிறது. பரம்பொருளே மலை வடிவமாக அமர்ந்து உயிர்கட்கு முத்தி தரக் கூடிய 'அருணாசலம்' என்னும் சிவசொரூபமே இந்தத் திருவண்ணாமலை ஆகும். கருவறையில் அண்ணாமலை அண்ணல் சாந்தமே உருவாக, சிவலிங்கத் திருமேனியாக எழுந்தருளி உள்ளார். ஆவுடையார் வட்டமாக அமைந்து, உருத்திரபாகம் சொர்ண பந்தத்துடன் காட்சி தருகின்றது. தீட்சை பெற்ற சிவாச்சார்யர்களைத் தவிர வேறு எவரும் அண்ணாமலைப் பெருமானை தீண்டவியலாது. அருகே மேரு சக்கரம் எனப்படும் பள்ளியறைச் சுவாமியும், போக சக்தி அம்மனின் செப்புத் திருமேனியும் உள்ளன. கருவறையை அடுத்து அந்தராலம், முகமண்டபம், பலதிருச் சுற்றுக்கள், பல மதில்கள், புதிய பரிவாலயங்கள் உண்டு.

கோபுரங்கள் மிகுந்த கோயில் அண்ணாமலை, 9 கோபுரங்கள், 9 விமானங்கள் உண்டு. திருவண்ணாமலையில் ஞானப்பால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், திருவருள் விலாச மண்டபம், மாதப்பிறப்பு மண்டபம், உருத்திராக்க மண்டபம், நந்தி மண்டபம், அமாவாசை மண்டபம், பன்னீர் மண்டபம், காட்சி மண்டபம், திருக்கல்யாண மண்டபம் என்பன உண்டு. கல்யாண மண்டபம் ஒரு கவினுறு மண்டபம், மர விதானத்தின் மீது செப்பு ஓடு வேயப்பெற்று, அற்புத வேலைப்பாடு உள்ள அழகிய தூண்கள் அமைந்த மண்டபம். 1903ம் ஆண்டு நாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை நகரத்தார் அமைத்தது. இது ஒரு கலைக்கூடமாகும்.

திருக்கோவிலின் 3ம் பிரகாரத்தில் சோகாள தீஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர், சிதம்பரேஸ்வரர், ஜம்புகேஸ்வரர், ஆயதிருச்சந்நிதிகள் உண்டு. சுவாமி சந்நிதியில் ஒரு யாளியின் வாயிலிருந்து வளையங்கள் பல சங்கிலி கோத்தாற்ப் போல பிணைந்து தொங்கும். கோவில் நீண்ட பிரகாரங்களை கொண்டது. வானளாவிய கோபுரங்கள், புனிதமான தீர்த்தங்கள், பெரிய தத்துவம், பாரிய வாகனங்கள், நெடிது உயர்ந்த மதில்கள் யாவும் பிரமிக்கத் தக்க வகையில் உளது. எட்டுத் திசைகளிலும் உள்ள அட்ட லிங்கங்கள் ஆவன: இந்திரலிங்கம், அக்கினி லிங்கம், யமலிங்கம், நிருதிலிங்கம், வாயு லிங்கம், வருணலிங்கம், குபேரலிங்கம் ஆகும். இந்த லிங்கங்கள் அருகே தீர்த்தங்களும் உண்டு. தல விநாயகர் - கண்டராதித்த சோழனின் மனைவியான செம்பியன் மாதேவியின் திருப்பணி. துவாரபாலகர் இருவர், 10 அடி உயரம் சடாமகுடம், மழு, தண்டம், தர்ஜினி, முத்திரை கொண்டு தண்டத்தின் மீது காலை ஊன்றிய நிலை. திருவண்ணாமலையின் உற்சவங்கள் புகழ் பெற்றவை. ஞானநகரம் என்ற சிறப்பு பெற்றது, இத்திருத்தலம்.

**உண்ணாமுலை அம்மை:**

உண்ணாமுலை அம்மைக்கு தனிக்கோயில் உண்டு. கருவறையில் உண்ணாமுலை அம்மை மூன்று அடி உயரங் கொண்டு கருணையே வடிவமாக காட்சி தருகிறாள். அம்மன் கருவறை முழுதும் சென்ற நூற்றாண்டில் நகரத்தார்களால் புதுப்பிக்கப்பெற்று பிற்கால அமைப்போடு அழகுற்று விளங்குகிறது. கோவிலின் முற்பகுதியில் பாரியமண்டபம், கொடிமரம், நந்தி, நவக்கிரகங்கள் உள. இரண்டு கரங்களுடன் தர்ஜினி, கதைகொண்டு மகுடத்துடன் துவாரபாலகர்கள் காணப்படுகின்றனர். இக் கருவறையைச் சுற்றி உள்ள பிரகாரத்தின் மேற்கே உற்சவமூர்த்திகள் உளர். இலிங்கோற்பவர், உற்சவப் பிள்ளையார், சோழலிங்கம், பிராமி, துர்க்கை ஆகிய திருவுருவங்கள் கல்லில் காணப்படுகின்றன. திருச்சந்நிதிக்கு வெளியே உள்ள மண்டபத்தில் ஒவ்வொரு தூணிலும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அட்ட இலட்சுமிகள் உளதால் அட்டஇலட்சுமி மண்டபம் என விளங்குகிறது. அம்பிகை கோவிலின் மகா மண்டபத்தில் 16 கற்றூண்களும் மிகவும் கலை அழகுடையவை. சிற்ப சாஸ்திர நுணுக்கங்கொண்டவை. அம்பிகை சந்நிதி ஒரு சிற்ப கலைக்கூடம், அழகான தேவதைகள் நடமிடும் இடம் போல் காட்சி தருகிறது. இவற்றை பார்த்து மகிழ இப்பிறவி போதாதே!

**அணி அண்ணாமலைக் கோவில்:**

அழகிய கோபுரத்தை உடையது அணி அண்ணாமலைக் கோயில். இது ஓர் வைப்புத் தலம் ஆகும். இக்கோயில் அண்ணாமலைக் கோவிலுக்கு முந்தியது. ஆதி அருணாசலம் என்னும் பெயரை உடையது. அடி அண்ணா மலை என்றும் இக் கோயிலை அழைப்பர். திருவண்ணாமலையை வலம் வரும்போது 6வது மைலில் மலையின் மேற்கு பகுதியில் உளது. ஆதி அருணாசலம். பிரம தேவரால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிக்கப் பெற்ற சிறப்புடையது. திருவண்ணாமலையில் தங்கி இருந்து திருவெம்பாவை, திருவம்மானை பாடி அருளிய மணிவாசகருக்கு இங்கே தனிக் கோயில் உண்டு. திருக்கார்த்திகை நாளில் அணி அண்ணாமலையாரை நாட்டுப்புற மக்கள் தேன் தினைமா கொண்டு மாவிளக்கு பசு நெய்யில் தீபம் ஏற்றி வழிபடுவர். மலையைச் சுற்றி 360 தீர்த்தங்கள் அகத்திலும் புறத்திலுமாக மலைப் பகுதியிலுள்ளது. அட்டதிக்குகளில் அட்டலிங்கங்களும், நந்திகளும் உண்டு. அப்பரும் சம்பந்தரும் நாவார தேவாரம் பாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தலம். குன்றக் குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனம் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. மலை அடிவாரத்தை சுற்றி சிறு கோவில்களும்,மண்டபங்களும் உண்டு. திருவண்ணாமலை போல இங்கேயும் இறைவன் பெயர் அண்ணாமலை அண்ணல், இறைவி பெயர் உண்ணாமுலை அம்மை.

### செப்புத் திருமேனிகள்:

அருணாசலத்தில் உள்ள செப்பினாலான திருமேனிகள் பல நூற்றாண்டுகளாக வார்க்கப் பெற்றவை. பெரும்பாலானவை திருவாசிகளோடு கூடியவை. இரத்தின நியாசம் செய்யப்பெற்றுள்ளது. பஞ்சலோகங்களில் தாமிரம் அதிகம் சேர்க்கப் பெற்றுள்ளதால் எல்லாத் திருமேனிகளும் சிவந்த நிறத்திலேயே உளது. பெரும்பாலான திரு உருவங்கள் பத்மபீடத்தையும் அதன்மேல் பத்திரபீடத்தையும் கொண்டு உள்ளன. இவை யாவும் அலங்காரமாக திருவிழாக் காலங்களில் திருவீதி உலாவரும். அருணாசலத்தில் உள்ள மூலமூர்த்திகட்கு எழுந்தருளியாக செப்புத் திருமேனிகள் சிலவற்றிற்கு தங்கக் கவசங்கள் உண்டு.

### நடராசர் திருவுருவம்:

நடராசப் பெருமான் ஐந்தடி உயரம் உள்ள புன்முறுவல் பூர்த்த திருமுகம், பத்மபீடத்தில் பொலிவு மிகுந்து காணப்பெறுகிறது. நடராசப்பெருமானுக்கு வருடத்தில் ஆறு அபிடேகங்கள் சிறப்பாக நடைபெறும். இவற்றுள் ஆனித் திருமஞ்சனமும், ஆருத்திரா தரிசனமும் மிகவும் சிறப்புவாய்ந்தவை. ஆயிரங்கால் மண்டபத்தில் இவை நிகழும் - அன்றைய தினம் சுவாமி வீதி வலம் வருவவர்.

### சிற்பங்கள்:

அருணாசலம் கலையின் கருவூலமாகும். பிடாரி கோவிலில் உள்ள சப்த மாதர் உயிருள்ள திரு உருவங்களாக அமைக்கப்பெற்றுள்ளது. இத் தூண்களில் காணப்படும் அட்ட இலக்குமிகள், உருத்திரதுக்கை, மகாசக்தி, மகா சரஸ்வதி, சித்திவிநாயகர், கார்த்திகேயர், கலாந்தகர், வீணாதரர், வீரபத்திரர் ஆகியன தமிழரின் கலைச் செல்வங்களாகும். மேலும் கோபுரங்களிலும் விமானங்களிலும் நிறைந்து விளங்கும் சுதைச் சிற்பங்கள் கண்களை ஈர்த்து இழுக்கக் கூடியவை.

### ஓவியங்கள்:

திருவண்ணாமலைத் திருத்தலத்தின் மண்டபங்களின் விதானங்களில் உள்ள வண்ண ஓவியங்களை கண்டு இன்புற முடியும். இரண்டாம் சுற்று மாளிகை விமானத்தில் ஒரு வீரன் வேங்கையுடன் போர் புரிகின்றான். புலி வாயைப் பிளந்து காலை மேலே தூக்கிப் பாய்வது, வீரன் புலியை கத்தியால் குத்துவது, யானை வேட்டை, கோலாட்டம் ஆடும் பெண்கள், பாற்கடல் கடைந்த காட்சி, பரம்பொருளின் திருமணம், நடராசர் காளி திருமணம், துச்சாதனன் துகிலுரியும் காட்சி, வள்ளி திருமணம் ஆகியன ஓவிய வடிவில் காணமுடியும்.

### மணிவாசகர்:

மணிவாசகர் காலம் கி.பி. 9ம் நூற்றாண்டு எனலாம். மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவை இருபது பாடல்களையும், திருவம்மானை இருபது பாடல்களையும் திருவண்ணாமலையில் தங்கி இருந்தே அருளினார். மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு முந்திய நாட்களில் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து வீட்டை கூட்டி, பெருக்கி, கோலமிட்டு நீராடச் செல்வர். நீர்நிலைக்கு செல்லும் வழியில் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி ஒன்று சேர்ந்து **"மாதே வளருதியோ வன் செவியோ நின் செவி"** என்றும் **"ஒண்ணித் தில நகையாய் இன்னம் புலந்தின்றோ"** என்றும் **"மானே நீநென்னலை நாளைவந் துங்களை நானே எழுப்புவன் என்றலும் நாணாமே"** என்றும் திருவெம்பாவை பாடி செல்வதைக் கண்டு மகிழ்ந்தே மணிவாசகர் திருவெம்பாவை பாடினார். மேலும் 'மாலறியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்முகனும் காணாமலையினை'** என்றும் பிறிதோரிடத்தில் **'அண்ணாமலையான் அடிக் கமலம் சென்றிறைஞ்சும்'** என்றும் திருவண்ணா மலை அண்ணலை தொழுது பாடியதை காண முடிகின்றது. மணிவாசகர் தனது திருவம்மா னையில் **'நாயேனை ஆட்கொண்ட அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்'** என்று அண்ணாமலையானின் அடி தொழுகிறார். அம்மானை ஆவது உலகியலில் தங்கட்கு நல்ல கணவன் வாய்க்க கணவனின் சிறப்பு இயல்பு களை வரிப்பாட்டாக பாடுவர், ஆடுவர். இங்கே மங்கையர் பிரபந்தத் தலைவனின் தன்மையை உரையாடுதலைக் காண்கின்றோம்.

## திருவண்ணாமலைத் தீபம்:

கார்த்திகை மாதம் இருள் சூழ்ந்து அடை மழை பெய்யுங் காலம். இந்த மாதத்தில் திருக்கார்த்திகை நாளில் முருகனை விரத மிருந்து வழிபடுவர். திருக்கார்த்திகை விர தத்தை முறையாக அனுஷ்டித்து அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான் முதலானோர் நன்மை அடைந்தனர். இத்திருநாளில் உலகில் பரந்து வாழும் சைவ மக்கள் அனைவரும் மிகவும் பக்தி பூர்வமாக தீபம் ஏற்றுவர். இறைவனுக்கு பசு நெய்யில் தீபம் ஏற்றுதல் சாலச்சிறந்தது. கார்த்திகை தீபத்தன்று சைவ மக்கள் திரு வண்ணாமலை நோக்கி கை தொழுவர். அடி முடி தேடிய ஐதீகத்தை பின்பற்றியது கார்த் திகைத் தீபம். கார்த்திகைத் தீபத்தின் போது கணக்கற்ற யாத்திரிகர்கள் திருவண்ணா மலையை வலம் வருவர். அண்ணாமலையார் கோவில் வாசலில் இருந்து கிரிபிரதட்சணம் ஆரம்பமாகி அருணாசலத்தை வலம்வர $8^1/_4$ மைல் தூரமாகும். காலை 7 மணிக்கு அருணா சலத்தை வலம்வர ஆரம்பித்தால் 11 மணிக்கு (மதியத்திற்கு முன்) நிறைவு பெறும்.

அருணாசலத்தை எப்படி வலம் வரவேண் டும்? நீராடிப் புனிதராய், தோய்த்து உலர்ந்த வஸ்திரம் தரித்து, திருவெண்ணீறணிந்து, விரத மிருந்து , தானம் செய்து, தானம் வாங்காமல், சிரசின் மேல கை குவித்து அடி மேல் அடி வைத்து அமைதியாக, பாதணி இன்றி நடந்தும், திருவைந்தெழுத்தை ஓதியும், அண்ணாமலை யானை நினைந்து, அருணாசலா உனக்கு வந்தனம்! புண்ணியா, மகாதேவா, வாமதேவா, காலாந்தக, நீலகண்ட, சந்திரசேகர, சம்போ சிவா, மகேஸ்வரா, பசுபதி, நீலநேத்திர, ஐய ருத்திர, கங்காதர, பரமேஸ்வரா, கிருபாநிதி, நந்திகேஸ்வரா, தயாநிதி, தேவதேவா, காலகால, கருணைப் பெருக்கே என்றும், உபசரித்த வண் ணம் வலம் வருதல் வேண்டும். அதே நேரத் தில் எம்மோடு எமக்குத் தெரியாமல் எமது அருகிலே தேவர்களும், மகான்களும், ரிஷிக ளும் உருமாறி வலம் வருவர். ஆகவே குடை பிடியாது, தாம்பூலம் தரியாது, சிவசிந்தனை யோடு அடிமேல் அடி வைக்க வேண்டும். சூரியன்கூட இம்மலையை வலம் வருவதாக ஐதீகம்.

கார்த்திகை விளக்கை சோபதீப தரிசனம், அக்கினி தரிசனம், அழல் என்றும் எரி என்றும் கூறுவர். 'அழல் சேர் குட்டம்' எனச் சிலப்பதி காரத்தில் கூறப்பட்டுள்ளது. இவ் விளக்கை மலை மேல் இடுவது வழக்கம். அடைமழை ஒருபுறம், இருட்டு மறுபுறம், கூதல் குளிர் இன்னொருபுறம், ஆக வீட்டினுள் ஒதுங்கி இருந்த மக்கள் ஒளியைக்காண விரும்பி மலை மீது விளக்கிட்டு மகிழ்வதையே கார்த்திகை விளக்கு குறிக்கும். இந்த நல்ல நாளில் வீடெங்கும் விளக்கேற்றி திருக்கோவில்கட்கு சென்று வழிபடுவது தமிழ் நாட்டடின் வழக்கம். அன்று சொக்கப்பனை கொழுத்துவர். அந்த குன்றின் மேலிட்ட தீபத்தை கண்டு தொழுத பின்பே உண்பர். ஒளிப்பிளம்பான சிவபிரான் அருணகிரியாக நின்று அம்மலைமீது தோன்றும் தீபத்தை வழிபடுவோருக்கு அருள் பாலிப்பர்.

இந்த நாளில் சிவபிரான் திரிபுர அசுரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தணல் கற்பூரச் சட்டி ஏந்திவர அம்மா
பாற்குடம் தலை சுமக்க தங்கையர்
முருகா! முருகா!! என்று கூவியழைக்க தம்பிமார்
தூக்கில் ஏறி காவடி ஆடிவந்தார் அண்ணா
போர் ஒழிந்து மக்கள் நலம் மலர்ந்திட
தங்கரதம் பவனி வா ஆறுமுகா

# கடந்த 34 ஆண்டுகளாக உங்கள்

## நன்மதிப்பைப் பெற்ற



# 'காவடி' மார்க் கற்பூரம்

என்றும் நின்று நிலைக்கும் ஜோதிமயம்
'காவடி கற்பூரம்' என்றும் தரும்




கற்பூரம் என்று கேட்காதீர்

**'காவடி'** என்று கேட்டு வாங்குங்கள்

தயாரிப்பாளர்கள்:
**Mc Sons Group of Companies**
672/3, Galle Road,
Off Mayura M W Ratmalana.
Phone - 636818

ஏக விநியோகஸ்தர்கள்:
**பிரபா டிரேடிங் கம்பனி**
**31, கபேஸ் லேன்,**
**கொழும்பு - 11.**
**தொலைபேசி - 329426**
**422750.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதடி விநாயகர் துணை

வருடம் ஒரு திருவிழா கோலம் நல்லூர் கந்தனுக்கு
அடியார்கள் விரதமிருந்து வேலவனை நாடி வந்து
நித்தியமாய் அமைதி வேண்டி கைகூப்பி வேண்டு வரம்
போர்கள் ஒழிந்து போகட்டும் மக்கள் துன்பம் நீங்கட்டும்



**நல்லைக் குமரன் மலர் 2001**

நல்லைக் குமரன் புகழ் பரப்பும் மலர்
மென்மேலும் வளர்ச்சியுற வாழ்த்துபவர்கள்!

# சுந்தர்சன் ஸ்தாபனத்தினர்

**மத்திய சந்தை முன்பாக,**
**மானிப்பாய்.**

மின்சார உபகரணங்கள், மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
மின் அலங்காரப் பொருள்கள், மின்சார அழுத்திகள்,
றைஸ் குக்கர்கள், பலரக மின்குமிழ்கள்,
மின் விசிறிகள், வீட்டு வயறிங் பொருள்கள்,
சமயலறை மின் உபகரணங்கள், பரிசுப் பொருள்கள்,
சுவர் மணிக்கூடுகள், **P.V.C.** பைப் வகைகள்,
**PVC** இணைப்புகள், இன்னும்
பல பொருள்களை
ஒரே இடத்தில் நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்

# சுந்தர்சன்

**மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி, மானிப்பாய்.**

**தொலைபேசி இல. 021-2751 (f)பக்ஸ் - 2751**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எரித்த விழா, கோவில்களில் நடை பெறுகின்றது. கீற்று முதலியவற்றால் சொக் கப்பனை (சுட்டகப்பனை) ஒன்று பெரிதாக கட்டி அருகிலே சிவபிரானின் உற்சவ விக்கிர கத்தை எழுந்தருளச் செய்து சொக்கப்பனை கொழுத்துவர். அந்த தீக்கு குங்கிலியத்தை தூவித்தூவி தீயை வளர்ப்பர். திருவண்ணா மலையில் கார்த்திகைத்தீபப் பெருவிழா 13 நாட்கள் நடைபெறும். கார்த்திகை மாதம் பிரமோற்சவம் இறுதி நாள் கார்த்திகைத்தீபம் மலைமேல் ஏற்றப்படும் இந்த மகா தீபத்தை:

**"மழைக்கால் நீங்கிய மகா விசும்பில்**
**குறு முயல் மறுநிறம் கிளர்மதி நிறைந்து**
**அறுமீன் சேரும் அகவிருள் நடுநாள்**
**மறுகு விளக் குறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவு உடன் அயர வருகதில் அம்ம!"**

**- அகநானூற (141)**

திருவண்ணாமலை தேயுத்தலம், ஒரு காலத் தில் எரிமலையாக இருந்தது, பின் குளிர்ந்த மலையாக மாறியது. இம்மலையை வலம் வருவது பிறவி எடுத்ததன் பெரும்பயன். கார்த் திகைத் தீபத்தின் போது வீடுகள் தோறும் விருந்தினர் தங்கி இருப்பர். நகரமே விழாக் கோலம் பூணும். 6 அடி உயரமுள்ள காய்ந்த கொப்பராவில் பசுநெய், கோடித்துணி, கற்பூரம் இட்டு தீபம் ஏற்றுவர். இந்த தீபம் 3 நாள்வரை நின்று எரியும். இந்த அழலை 20 மைல் சுற் றளவுவரை தரிசிக்க முடியும். பெருங்கார்த் திகை, முழுமதி நாளில் கார்த்திகை நட்சத் திரங்கள் சூழ்ந்து நிற்க உமா மகேஸ்வரர் பஞ்சமூர்த்திகளாய் தரிசனம் கொடுக்க, திரு வண்ணாமலை உச்சியில் அகண்ட தீபங்கள் சோதியாய் விளங்கும். 16 கால் மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுவர். அர்த்தநாரீஸ் வரர் எழுந்தருளி பலிபீடத்தின் முன் தீபம் ஏற்றிய உடன் கார்த்திகைத் தீபம் திருவண் ணாமலையில் எரியும். திருக்கார்த்திகை விழா 10ம் நாள் காலை 5 மணிக்கு பரணி தீபமும், மாலை 6 மணிக்கு மலையில் சோபதீப தரிசனமும் பெருவிசேடமாக இடம்பெறும். 3ம் குலோத்துங்க சோழன் காலத்தில் கார்த்தி கைத் திருவிழாவின் போது பெருந்திருவமுது, ஆடல் அரசின் திருமேனிக்கு சாத்தவும், அவர் எழுந்தருளும்போது தூவச் சாந்து வழங்கவும் கட்டளைகள் இருந்ததை கல்வெட்டுக்களில் காணலாம்.

**வல்லாள மகாராஜன்:**

தமிழ் நாட்டில் மிக அழகாக திட்டம் இட்டு அமைக்கப்பெற்ற சிவாலயம் திருவண்ணா மலை. இத் திருப்பதியை பன்நெடுங் கால மாக நீதி வழுவாது செங்கோலோச்சியவன் வல்லாளன். இவனது காலம் கி.பி.1340 என கல்வெட்டு கூறுகின்றது. வல்லாளன் குபேர செல்வத்துடன் ஆட்சிபுரிந்தவன். இவனது காலத்தில் திருவண்ணாமலைக் கோபுரம் திருச் சுற்று மதில்கள், 6 அடி நீளமான நந்தி குறிப்பிடத்தக்க திருப்பணிகள் ஆகும். இவ னது வாழ்வில் பெருங்குறைமகப் பேற்றின்மை. இருந்த போதும் இவனது தான தருமங்கள் பெருகியதே அன்றி குறையவில்லை.

புத்திரப்பேறு இன்மையால் மனம் வருந்திய வல்லாளனின் நிலையை நாரதர் பரம்பொரு ளின் திருநோக்கிற்கு சமர்ப்பித்தபோது, இறை வன் அரசனின் தான தருமச் செயல்களை சோதிக்கும் திருநோக்குடன் ஸ்ரீஅருணையம் பதிக்கு சிவனடியார் திருக்கூட்டம் சூழ எழுந் தருளி, வல்லாளனின் அரண்மனைக்கும் சென்று அவனது தான தருமங்களில் திருப்தி உற்று வல்லாளனுக்கு மகவாகி மறைந்தருளும் போது, வல்லாளனின் வேண்டுதலுக்கு இயைந்த இறைவன் அரசனே! உனக்கு நாமே மகவாக தோன்றியமையால், உனது புத்திரன் செய்ய வேண்டிய அபரக் கிரியைகளை உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமே செய்து வருவோம் என்று திருவருள் புரிந்த வண்ணம் வருடா வருடம் வல்லாள னின் விழாவின்போது மாசி மகத்தன்று கோவி லின் கிழக்கு கோபுர வாசல் வழியாக ஒருநாள் மட்டும் சுவாமி கொண்ட பட்டிற்குச் சென்று வல்லாள மகாராசாவினது அபரக்கிரியைகளை செய்துவிட்டு திரும்புவதாக ஐதீகம். மற்றைய திருவிழாக் காலங்களில் அண்ணா மலையார் பெரிய கோபுரத்தின் வடபாலுள்ள திட்டி வாசல் வழியாக எழுந்தருளுவது வழக்கம்.

**சோழர் காலத்திருப்பணி:**

இராசேந்திர சோழனுடைய பணி, மகன் அண்ணாமலையார் கோவில் பிட்சாடனர் திரு வுருவம் செய்து அதற்கு நித்தியபூசை ஏற்பாடு செய்து, நைவேத்தியத்திற்கு கறி அமுது, பொரிக்கறி போன்றவை படைக்க ஆவன செய்தான். ஆண்டுக்கு 160 கலம் நெல் அளக்க ஏற்பாடு செய்தான். நெல் அளக்கும் மரக்காலுக்கு திருவண்ணாமலை மரக்கால் என்று பெயர். 4 பட்டி நிலம் இதற்காக உப கரித்தான். அடி யார்கட்கு கார்த்திகை திரு வேட்டைத் திருவிழாவின்போது அமுது படைக் கவும், இரண்டு நந்தா விளக்கு எரியவும் ஆவன செய்தான்.

**கிருஷ்ண தேவராயன்:**

கிருஷ்ணதேவராயன் தான் அடைந்த வெற்றிக ளின் நினைவாக அண்ணாமலையார் கோவிலில் மேற்கொண்ட திருப்பணிகள் :- ஆயிரங்கால் மண் டபம், வசந்த உற்சவ திருக்குளம், 11 நிலை கொண்ட கோபுர மண்டபம், விநாயகர் தேர், வாயிற் கதவுகள், வாயிலுக்கு பொன், உத்தம சோழன் வாயில், பத்தரை மாற்றுக்கொடி, கொடுங்கை, மடப்பள்ளி முன் கிணறு, பதக்கம், நாகாபரணம், வெள்ளியால் இந்திர விமானம், பொன்னால் சேகண்டி, வெள்ளிக்குடம், சந்திப் பூசை, ஓதுவார்கள், தேவரடியார்கள், அத்திய னம் பண்ணுவோர், பல்லக்கு சேவை ஆகியன.

**கல்வெட்டுக்கள்:**

கல்வெட்டை கல் எழுத்துச் சாதனம், சிலா லேகை என்றுங்கூறுபர். கடந்தகால நிகழ்வை எதிர்கால மக்கள் அறியும் வண்ணம் கல்லில் பொறிக்கப்பட்டவையே கல்வெட்டுக்கள் ஆகும். திருவண்ணாமலையில் சேகரிக்கப்பட்டவற்றில் 119 கல்வெட்டுகள் திருவண்ணாமலை சம்பந் தமானவை. பெரும்பாலானவை சோழருடைய கல்வெட்டுக்கள். இவை இனிமையான வர லாற்று வடிவங்கள். மிகப் பழமையான கல் வெட்டு திருவண்ணாமலைக் கோவிலின் கரு வறைச் சுவரில் உள. இராசாதித்த சோழன் (கி.பி.955) இவனின் கல் திருப்பணி கருவறை மட்டுமே. நகரத்தார் பயிர் செய்து, வரியாவற் றையும் அண்ணாமலையாருக்கே ஈந்ததாக இராசராசன் காலத்து (ARE 479, 1902) கல்வெட்டு ஒன்று கூறுகிறது. 10ம் நூற்றாண் டில் 1ம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் கல் வெட்டுக்கள் பெருகின. மங்களம் உண்டாகட் டும் என்று தொடங்கும் கல்வெட்டுக்கள் வட மொழி தென்மொழி கலந்த மணிப்பிரவாள நடையில் செய்யுள் போல அமைந்திருக்கும். திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணா மலை மகாதேவர், திருவண்ணாமலை உடை யார் என்ற திருப்பெயர்களை கல்வெட்டுக்க ளில் காணலாம். கோப்பெருஞ்சிங்கன் என்ப வன் அண்ணாமலை அண்ணலுக்கு திருவாசி, நடராசர் பாதம், பொன் சிம்மாசனம், பொன் அணிகலன்கள் செய்தான். கல்வெட்டுக்களைப் பிரதிபண்ணி, நூல்களை தொகுதி தொகுதி யாக வெளியிட்டு வருகின்றனர். தமிழகத்தில் சிவாலயங்கட்குச் சொந்தமான காணிகட்கு சூலம் பொறிந்த கற்களை எல்லைகளில் புதைப்பர். சாலைக் கற்களை திருவண்ணாமலையை வலம் வரும்போது காணலாம். இவைகள் 700 ஆண்டு கள் பழமை வாய்ந்தவை. இரு மீன் ஒரு செண்டு உள்ள கற்கள் பாண்டியர்களின் முத் திரையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செட்டியார்கள்: (நகரத்தார்)**

நகரத்தார் தொழில் வியாபாரம். இவர்களை தன வணிகர் என்றும் அழைப்பர். தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் இவர்களைக் காணலாம். இவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும் செய்த தொண்டு, திருப்பணிகள் ஏராளம், மன்னர் ஆட்சிக்குப் பின் திருவண்ணா மலையில் இவர்களின் திருப்பணி எண்ணில் அடங்கா. இராமநாதபுரம், தேவகோட்டை, காரைக்குடி போன்ற நகரங்களில் இவர்கள் வாழ்கின்றனர். குன்றக்குடியிலும் பரந்து வாழ்கின்றனர், இது அருணைநாடாயிற்று. திருவண்ணா மலையில் சத்திரங்கள், சாதுக்களுக்கு அமுது வழங்குவது வழக்கம். அமுது வழங்கும் ஓயாமாரிமடம், சிவகாசிமடம், மதுரையார்மடம், விருதுநகர் மடம், நூல்காரர்மடம், குறுமேறியார்மடம், காரைக் குடியார்மடம், ஞானதீ பக்குடைமடம் என பல மடங்கள் உண்டு. ஓயாமாரிமடம் நகரத்தாருடையது, இங்கே ஓயாமல் மாரிமழை போல் அமுது படைப்பர். செட்டியார்கள் அண்ணாமலையாருக்கு அபிடேகம் செய்ய பால், தயிர், இளநீர், நெய் குறைவற வழங்குவர். நகரத்தார் தேவாரப் பாடசாலை, துவக்கப் பள்ளி, வேத பாடசாலை நடத்தி வருகின்றனர். மேலும் இவர்கள் திருநந்தவனம், தண்ணீர்ப் பந்தல், தேர், தங்க ஆபரணங்கள், வாகனங்கள், இரத்தின கிரீடம், நாகாபரணம், வைர நெற்றிப்பட்டம், தங்கக் கவசம், வைரமுடிகள், முத்துவடங்கள், தங்க முடிகள், உருத்திராக்க மாலை, கமலை மணிகள், செய்து மனமுவந்து வழங்கியவர்கள் இந்த நகரத்தார்.

**ரமண மகாரிஷி:**

காலம் காலமாக தமிழ் நாட்டில் ஞானிகள், யோகிகள், ரிஷிகள் தோன்றினர். திருவெம்பாவை இறுதி நாள் ஆருத்திரா தரிசனம். தமிழ் மக்கள் செய்த மாதவத்தால் ரமணமகா ரிஷி 1873 மார்கழி 30 இரவு 1 மணி ஆருத்திரா தரிசன நாளில் திரு அவதாரம் செய்தார். சிறுவனாக இருக்கும் போதே வைகை ஆறு வழிந்தோடும் மணலில் வீழ்ந்து புரண்டு விளையாடினார். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நிஷ்டை கூடுவார். இந்த சின்ன வயதில் அருணாசலம் என்ற திருப்பெயர் அவர் காதில் விழும் போதே அந்தத் திருப்பெயர் கற்கண்டு போல் தித்தித்தது. நாட்கள் செல்லச் செல்ல ரமணரை திருவண்ணாமலை தன்பால் ஈர்க்க தொடங்கியது.

கல்வியில் கவனம் செல்லவில்லை. அருணாசலத்தை சென்று அடைய வேண்டும் என்ற பேரவாவால் தனது ஊரான திருச்சுழியைவிட்டு, தனது பிறந்தகத்தை விட்டு, உற்றார் உறவினரை துறந்து ஞானமார்க்கத்தை நாடி, தேடி திருவண்ணாமலைக்கு ரயில் ஏறினார். இந்த ஞானயாத்திரையின் போது அவரது வழிச் செலவிற்கு போதிய பணம் இருக்கவில்லை. இதன் காரணமாக காதில் இருந்த கடுக்கன்களை கொடுத்து காசாக்கினார். சிறிது சிறிதாக சொந்த பந்தங்கள் குறைந்தன. வழிப் பயணத்தின் போது திருக்கோவலூர் சிவாலய பட்டைச் சாதம் பசியை போக்கியது. ஈற்றில் 1886 செப்டம்பர் 1ம் நாள் திருவண்ணாமலையில் பாதம் பதித்தார். பல கோடி வருடம் தவம் இருந்து கிடைத்த பலன்போல் திருவண்ணாமலை இந்த ஞானதேசிகருக்குத் தோன்றியது.

திருவண்ணாமலையில் பாதம் பதிந்ததும் அவருடைய நோய், நொடி, துன்பம், மனக் கவலை யாவும் அகன்றது. தாய்ப்பசுவைத் தேடிய கன்று போல் தாமதமின்றி சிவபெருமான் சந்நிதிக்கு சென்று பந்த பாசமற பணிந்தார். முடியை இறக்கினார். பூணுலும் அகன்றது, உடைகளை உதறினார். கௌபீனமே ஆடையாயிற்று. சிலர் இந்த இளம் துறவியை ஏளனம் செய்தனர். சிறுவர்கள் கல்லை எடுத்து வீசினர், பலஞானிகளும் துறவிகளும், ரிஷிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும், சித்தர்களும் தவம் செய்த இடமல்லவா திருவண்ணாமலை. சாந்தம், அமைதி, தியானம் மேற்கொள்ள இந்த முற்றும் துறந்த முனிவருக்கு ஒதுக்குப்புறம் தேவைப்பட்டது. அருணாசலத்தில் பல குகைகள் உண்டு. ஆகவே முதலில் பாதாள லிங்ககுகையில் இருள் மண்டிய இடத்தில் பல காலம் அமர்ந்து கடுந் தவம் மேற்கொண்டார். பல நாட்களுக்கு இந்த தவம் நீடித்தது. அமுது இல்லாது இருந்த நாட்கள் பல. பகவானின் சடை வளர்ந்தது, நகங்கள் நீண்டது, மேனியில் புழுதி படிந்தது, வெளியாரின் தொல்லை குறைந்தது. இருட்டுக் குகை அல்லவா? எறும் புக்கடி அதிகரித்தது, தேள் கொட்டியது, உடம்பு எலும்புக்கூடாகியது, வலி அதிகரித்தது. மகா ஞானியினு டைய உடம்பு பூச்சி புழுக்களால் உண்ணப் பட்டு, இரத்தமும், சிதலும் வடிந் தது. இவை அனைத்தையும் தாங்கினார், பொறுத்தார், யோக நிலை தடைப்படவில்லை. நச்சு பாம்புகள் பகவானை தீண்டவில்லை. அணில்பிள்ளைகள் அவர் மீது தாவிப் பாய்ந் தன. குரங்குகள் அங்கே சூழ்ந்து இருந்தன. பறவைக்கூட்டம் அவரைச்சுற்றி வட்டம் இட் டன, காகங்கள் கரைந்தன. மகாகவி பாரதி பாடியது போல் **"காக்கை குருவி எங்கள் சாதி"** என்பது நினைவுக்கு வருகிறது. இந்த மகாஞானி எந்த உயிரினத்தையும் சுதந்திரமாக திரிய வைத் தார்.

ரமண மா முனிவர் திருவண்ணாமலை யின் ஞானச் சுடராகியதும் இந்த ஞானபிரானை தரிசிக்க அவரின் ஆசியை பெற உலகமே அவரது காலடிக்கு வரத்தொடங்கியது. நாட்கள் புரண்டோட பசுப்பால் மட்டுமே பகவான் ஏற்றார். ஞானப்பழமாகிவிட்ட மகாஞானி பேசா மௌனி யாகி இருந்தார். பசித்த போது புசித்தார், சில நாட்கள் செல்ல ஒரு சில வார்த்தைகள் பேசினார். மகரிஷியின் சீடன் இந்த மகாஞானி யின் மணி வாக்குகளை தொகுத்தார். இந்த ஞானபிரான் அப்போது விருபாட்சி குகையில் இருந்தார்.

இந்த நிலையில் உலகமே கைகூப்பிய மகரிஷியின் மாதா 1916ல் திருவண்ணா மலைக்கு வந்து மகனோடு துறவு பூண்டு, தன் அருமை மைந்தனோடு உடனிருந்து உதவி வரலானார். 1922 மே மாதம் 22ம் திகதி அன்னையின் நோய் மிகுந்ததால் அவரைச் சூழ இருந்த எவரும் உணவு உட்கொள்ளவில்லை. மகரிஷி தனது ஒரு கையை தன் தலையிலும், மறு கையை தன் தாயின் நெஞ்சிலும் வைத்த தும் அன்னை அமைதி பெற்றார். மகாஞானியை பெற்ற அன்னை மகா சமாதி அடைந்தார். பாலி தீர்த்தக் கரையில் அன்னையின் திரு வுடலை சமாதி வைத்து சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தனர்.

இதன் பின் மகரிஷி அங்கேயே தங்கி விட்டார். இந்தப் புனித இடம் தான் இப்போது உலகம் புகழும் ரமணாசிரமம். மகா ஞானியார் உபதேசங்கள் தமிழ் ஆங்கில நூல்களாக வெளிவந்துள்ளது. ரமணமகாரிஷி பல பாடல் களையும் பாடி உள்ளார். இந்த மகாஞானி தனது வாதக்காலை மடக்கிப் பத்மாசனத்தில் வீற்று இருப்பதே ஒரு தனி அழகு. இந்த ரமணாசிரமத்தில் மலர் எடுக்க நந்தவனம், கோசாலையில் பசுக்கள், விருந்தினர் விடுதி, உணவு விடுதி, பழத்தோட்டம் யாவும் உள.

1950 ஏப்பிரல் 14 இரவு மணி 8.47 மகா ஞானி பரிபூரணமானார். இந்திய பெருநாட்டின் ஞானச்சுடர் அணைந்தது. மகரிஷியை யோக நிலையில் இருத்தி சுற்றிலும் வீபூதி, கர்ப்பூரம், உப்பு ஆகியவற்றால் நிரப்பி, அதன் மேல் சலவைக்கல்லால் சமாதியும் உருவச் சிலை யும் அமைத்தனர். "புணர்ந்த பாவம் எல்லாம், பரிபூரணம் உணர்ந்த மகா ஞானியை வழிபட ஓடுமே" என்பது கற்றுணர்ந்த பெரியோர் திருவாக்கு.

**அன்னியர் வருகை:**

மைசூரை ஆட்சி செய்தவர்கள் ஐதர் அலியும் அவன் மகன் திப்பு சுல்த்தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவர். ஐதர் அலியை துரத்திக்கொண்டு செங்கம் கணவாய் வழியாக 1767ல் திரு வண்ணாமலையை ஆங்கிலேயர் வந்து அடைந் தனர். திருவண்ணாமலையில் இந்தப் போர் 1782வரை நடைபெற்றது. திருவண்ணாமலைத் திருத்தலம் ஆங்கிலேயரின் இராணுவத் தள மாகியது. மராத்தியர், மகமதியர், ஆங்கிலேய ரின், தொடர் படையெடுப்பால் திருவண்ணா மலை நகரும் திருக்கோயிலும் பல இன்னல் கட்கு உள்ளாகியது. போரினால் பலர் இறந்த னர், வீடுகள் தீக்கிரையாகின, சொத்துக்கள் அபகரிக்கப்பட்டன, மக்கள் திருவண்ணாமலை யிலிருந்து இடம் பெயர்ந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியின்போது போர்த்தளபாடங்கள், வெடி மருந்துகள், பீரங்கிகளை களஞ்சியப்படுத்த திருவண்ணாமலைத் திருத்தலம் பெரிதும் பயன்பட்டது. வெடிமருந்துக் கிடங்கும் கோவி லுக்குள் இருந்தது, ஆங்கிலேயரின் படை வீடாகவும், பாசறையாகவும் பலகாலம் இருந் தது. இந்தத் திருத்தலம் குதிரைலயமாகக்கூட இருந்தது. அருணாசலத்தின் தங்க கவசங்கள் களவாடப்பட்டன. இந்த இன்னல்களின் பின்பும் இந்த திருத்தலம் பழைய உன்னத நிலைக்கு உயர்ந்து நிற்கின்றது.

**தல நூல்கள்:**

தேவாரம், திருவாசகம் (திருவெம்பாவை திருவம்மானை) திருப்புகழ், திருமந்திரம், புரா ணங்கள், கலம்பகம், அந்தாதி, வெண்பாமாலை, வண்ணம், கோவை, பிரபந்தம், சதகம், பதிகம், விருத்தம், அட்சரமாலை, பஞ்சரத்தினம், பிள் ளைத்தமிழ், நாமவளி, பஞ்சகம், அற்புதமாலை, கீர்த்தனம், இரட்டை மணிமாலை, வசனம், அட்டகம், கும்மி, நாடகம், வடமொழி நூல்கள் ஆக 68 நூல்கட்கு மேல் வெளிவந்துள்ளது. இவை தவிர திருவண்ணாமலையில் வாழ்ந்த தவசிரேஷ்டர்கள், ஞானிகள், யோகிகள், சித் தர்கள், மகரிஷிகள் சம்பந்தமான வரலாறுகள் வேறு, காலம் காலமாக வெளிவந்த வண்ணமே உளது. அச்சு வாகனம் ஏறாத ஏட்டுப் பிரதி களும் உண்டு. திருத்தல நிர்வாகமும் தமிழ் நாடு அரசும் கூட்டாகக் கையெழுத்துப் பிரதி களாக இருக்கும் எழுத்தோவியங்களை அச்சு வாகனம் ஏற்ற முன் வருதல் வேண்டும்.

**திருவெம்பாவை:**

**திருவண்ணாமலையில் அருளியது**

**அண்ணா மலையான் அடிக்கமலஞ்**
**சென்றிறைஞ்சும்**
**விண்ணோர் முடியின் மணித்தொகைவீ**
**றற்றாற்போல்**
**கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்**
**தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள்**
**தாம் அகலப்**
**பெண்ணாகி ஆணாய் அலியாய்ப்**
**பிறங்கொளிசேர்**
**விண்ணாகி மண்ணாகி இத்தனையும்**
**வேறாகிக்**
**கண்ணார் அமுதமுமாய் நின்றான்**
**கழல் பாடிப்**
**பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்**
**தாடேலோர் எம்பாவாய்.**

**- மணிவாசகர்**

திருவண்ணாமலையின் புராண வரலாறு, உமை இடப்பாகம் பெற்றமை, திருவண்ணா மலைத் திருத்தலம், உண்ணாமுலை அம்மை, அணி அண்ணாமலைக் கோவில், செப்புத் திருமேனிகள், நடராசர் திருவுருவம், சிற்பங் கள், ஓவியங்கள், மணிவாசகர், திருவண்ணா மலைத்தீபம், வல்லாள மகாராஜன், சோழர்காலத் திருப்பணி, கிருஷ்ண தேவாரயன், கல்வெட்டு கள், நகரத்தார், ரமணமகாரிஷி, அன்னியர் வருகை, திருத்தல நூல்கள் சம்பந்தமாக ஓரளவு விரித்துரைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுத்து எழுத உதவிய நூல்கள்

1. திருவண்ணாமலை ~ புலவர் செந்துறைமுத்து

2. கலைக்களஞ்சியம் ~ 06

3. ஸ்ரீ அருணாசல மாகாத்மியம் (மொழிபெயர்ப்பு)

4. தேவாரம், திருவாசகம்

5. அருணாசல புராணம் ~ ஆதிரையார்

6. அகநாநூறு

7. அருணாசல புராணம் ~ மூலம் ~ சைவ எல்லப்ப நாவலர்

8. திருவருணைக் கலம்பகம் ~ சைவ எல்லப்ப நாவலர்

9. அருணாசல மகிமை ~ பரணீதரன் ~ பாகம் 1

10. கல்வெட்டில் வாழ்வியல் ~ டாக்டர் அ. கிருட்டினன் எம். ஏ. எமஎட். பிஎச்.டி

11. ரமணமகாரிஷி ~ எம். வி. வெங்கடராமன்

12. ரமணமகா முனிவர். கி. வா. ஜகநாதன்

அகிம்சையே மேலான தர்மம். அதுவே மேலான அடக்கம், மேலான தானம், மேலான தவம், மேலான யோகம், மேலான பயனை அளிப்பது, மேலான நண்பன், மிகவும் மேலான சுகம்.

**- மகாபாரதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் சைவப்புலவர் நடேசபிள்ளை ஞானவேல்
B.A. Dip-in Tech, Dip.in.Edu

# ஈழத்து முருக வழிபாட்டு மரபில் வன்னிப் பிரதேசம்

ஈழத்து முருக வழிபாட்டு மரபு தனித்துவமான பாங்கு உடையது. அதாவது தமிழகத்தில் எவ்வாறு சங்ககாலம் தொடக்கம் முருக வழிபாடு சிறப்புப் பெற்றதோ அதனைப் போன்று ஈழத்திலும் புராதன காலம் தொடக்கம் முருக வழிபாடு சிறப்பு பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஈழத்தின் பழம் பெரும் தலமாக கதிர்காமம் விளங்குகின்றது. அத்தோடு மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி, கந்தவனக்கடவை, மண்டூர், சித்தாண்டி சித்திர வேலாயுதர் முதலிய ஆலயங்களும் புராதன ஈழத்து முருக வழிபாட்டு மரபினை பேணிவரும் ஆலயங்களாகக் காணப்படுகின்றன. மேலும் கந்தசஷ்டி முதலான முருக விரதங்களை அனுஷ்டித்தல், கந்தபுராண படலம் முருக நாம பஜனை, சூரன்போர் முதலான மரபுகளும் ஈழத்து முருக வழிபாட்டு மரபுகளை ஏனைய மரபுகளில் இருந்து இனம் காட்டத்தக்க தனித்துவம் மிகு மரபுகளாகக் காணப்படுகின்றன.

அந்த வகையில் வன்னிப் பிரதேச முருக வழிபாட்டு மரபுகளையும் அவற்றின் சிறப்பு மிகு அம்சங்களையும் இனங்காண்பதே இவ் ஆய்வின் இலக்காகும். தொல்பொருட்சான்றுகள், வையா பாடல், திருப்புகழ் முதலான இலக்கியச் சான்றுகள், இன்றைய ஆலயங்கள் மூலம் பேணப்பட்டு வரும் வழிபாட்டு மரபுகள் என்பனவற்றை மையமாகக் கொண்டு வன்னிப் பிரதேச முருக வழிபாட்டு மரபுகளை இனங் காணக் கூடியதாக உள்ளது.

## தொல்லியல் சான்றுகள் பகரும் முருக வழிபாட்டு மரபுகள்

கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற் பண்பாட்டு காலத்தை சார்ந்ததாக கருதப்படும் ஆதிச்சநல்லூர் புதைமேடுகளில் கண்டு எடுக்கப்பட்டதை போன்ற வேல்களும் செடில்களும் ஈழத்து வன்னி பெருநிலப்பரப்பிலும் கண்டெடுக்கப்பட்டு இருப்பது அவதானிக்கத்தக்கது.

மன்னார் பெருநிலப் பரப்புக்கு அண்மையில் உள்ள பொம்பரிப்பு என்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதை பொருள் ஆய்வின் பயனாக பல ஈமத்தாளிகளும் வேல்களும் செடில்களும் பெறப்பட்டன. இவ் ஈமத்தாளிகளுக்கு அண்மையில் காணப்பட்ட வேல், செடில்கள் ஆதிச்சநல்லூர் புதை மேட்டில் கண்டெடுக்கப்பட்ட வேலை ஒத்ததாகக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வேல் ஈமத்தாளிகளுக்கு அண்மையில் காணப்பட்டமையால் இறந்தவரால் அவரது வழிபாட்டின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட வேலா அல்லது அவரால் பாதுகாப்பின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட வேலா என்ற ஐயப்பாடுகள் ஆய்வாளர்கள் மத்தியில் உண்டு. எனினும் இறந்தவரது ஆயுதமாக பயன்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டு இருக்குமாயின் ஏன் வேல் மாத்திரம் இருக்க வேண்டும் ஏனைய ஈட்டி, வாள், போன்றனவும் இருந்திருக்க வேண்டுமே என குறிப்பிடுகின்றனர். அத்தோடு இன்றைய முருக வழிபாட்டு மரபிலும் முருகப் பெருமானை நினைந்து காவடி எடுக்கையில் செடில்கள் குத்துவது வழக்கம். அந்த வகையில் குத்தப் படுகின்ற செடில்களே இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளன. எனவே அத்தகைய புராதன காலத் திலேயே காவடி எடுக்கின்ற மரபு ஈழத்தில் இருந்திருக்கின்றது என்பதற்கு அச்சின்னம் உரைகல்லாக அமைகின்றது.

அடுத்து வன்னிப் பிரதேசத்தில் கண்டெடுக் கப்பட்ட கல்வெட்டுச் சான்றுகளை மையமா கக் கொண்டு வன்னியில் முருக வழிபாட்டு மரபினை நோக்குகையில் ஈழத்தில் கண்டெ டுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் பெரும் பாலான கல்வெட்டுக்கள் வன்னிப் பகுதியி லேயே கண்டெடுக்கப்பட்டதாக, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் குறிப்பிடுகின்றார். அந்த வகையில் மகாகச்சற்கொடி, எருப்பொத் தானை, பெரியபுளியங்குளம், வெடிக்கனாரி மலை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் முருகனது வட மொழி நாம வடிவங்கள் காணப்படுகின்றன. அதாவது குமார, ஸ்கந்த, விசாக, குகன், மகாசேன என்னும் நாமங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதே போன்று வவுனியா எருப்பொத்தானையில் கண்டெடுக்கப்பட்ட பிரா மிக் கல்வெட்டு ஒன்றில் சிவனது மகன் பற்றியும் அவனது உருவம் பற்றியும் பல செய்திகள் காணப்படுகின்றன.

எனவே மேற்படி கல்வெட்டுச் சான்றுகள் முருக வழிபாட்டு மரபு பற்றி குறிப்பிடினும் அக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் பௌத்த மக்கள் கூடுதலாக இன்று வாழும் பகுதியி லேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் கொறவப்பொத்தானை வீதியில் உள்ள குறுலுவெவ குளத்துக்கு அண்மையில் சிதைந்து கிடக்கும் ஓர் இந்து ஆலயம் காணப்படுகின்றது. அது முருகனது ஆலய மாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## இலக்கியங்கள் கூறும் முருக வழிபாட்டு மரபுகள்:

வன்னிப் பிரதேசத்தின் வளத்தினையும் வரலாற்றையும் கூறும் வையாபுரி ஐயரது வையா பாடல் என்ற இலக்கிய நூல் கூறும் செய்திகள் வாயிலாகவும் வன்னிப் பிரதேச முருக வழிபாட்டு மரபுகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

**ஆலமெனக் கரியமுகத் தைங்கரனை**
**யிளவல்கும ரேசன்றன்னைச்**
**சீலமுட னவர்க்குதவித் திருநாம மூத்த**
**நயினார் சித்திர**
**வேலென்றோ திடுவீரென் றருளியவர்**
**பாதநிதம் பூசை செய்ய**
**நால்வருண மதற்குறவாங் கங்கைமகார்**
**தமையழைத்து நாடியோதி**

என்ற 92வது வையா பாடல் செய்யுளின்படி ஆறாம் பரராசசேகரனது காலத்தில் ஐங்கரன், குமரேசன், மூத்தநயினார், சித்திரவேலாயுதர், ஐயனார் ஆகிய தெய்வங்கள் வன்னியில் வழிபடப்பட்டதாக அறிய முடிகின்றது. இங்கு வழிபடப்பட்ட தெய்வங்களுள் குமரேசர், சித் திரவேலாயுதர் ஆகிய தெய்வங்கள் முருக வழிபாட்டு மரபில் வந்தவையே.

சந்தத் தமிழில் கவிபாடும் வல்லமை பொருந்திய அருணகிரிநாதரால் பாடப்பட்ட முருக இலக்கியமாகிய திருப்புகழிலும் ஈழத்து முருகன் தலங்களையும் அவற்றின் வழிபாட்டு மரபுகளையும் முதன்மைப் படுத்திப் பாடியுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக் கந்தனையும் யாழ்ப்பாணப் பட்டினமேவிய பெருமாளே என யாழ்ப்பாண முருகன் ஆல யம் ஒன்றினையும் விழித்துப் பாடியுள்ளார். அதனைப் போன்று வன்னியின் கிழக்கு எல் லையாகிய திருகோணமலையின் கண் பொலி வுடன் விளங்கிய குமரன் ஆலயத்தை நினைந்து பாடி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**"....நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்**
**திருக் கோணாமலை தலத்தாரு கோபுர**
**நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்**
**வருவோனே...."**

என்ற திருகோணமலை திருப்புகழ் பாடல் அடியின் மூலம் ஆறு கோபுரங்களை உடைய மிகப் பெரிய முருகன் ஆலயம் அன்று திரு கோணமலையின் கண் இருந்ததாக அறிய முடிகின்றது.

மேலும் இன்றைய முருகன் ஆலயங்கள் மீது பாடப்பட்ட இலக்கியங்களாகிய குமாரபுர அந்தாதி, வெருக்கலம்பதி முருகன் மாண்மி யம், முத்துக்குமாரசுவாமி எச்சரிக்கை - பராக்கு - லாலி - மங்களம், வில்லூன்றிக் கந்தன் பக்திப் பாமாலை, குமாரபுர வெண்பா, வில்லூன் றிக் கந்தன்உலா ஆகிய இலக்கியங்கள் வாயிலாகவும் முருக வழிபாட்டு மரபுகள் பேணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

## ஆலய வரலாறுகள் கூறும் முருக வழிபாட்டு மரபுகள்:

### குமாரபுரம் சித்திர வேலாயுத சுவாமி கோவில்

வன்னியின் புராதன முருகன் ஆலயங்க ளுள் ஒன்றாகக் கருதப்படும் இவ்வாலயம் வன்னியின் முருக வழிபாட்டு மரபில் தனித்து வம் பேணி நிற்கும் தலமாக அமைவதை அவதானிக்கலாம். திருகோணமலையில் கோணே சர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்த குளக் கோட்ட மன்னன் அவ்வாலயத்தை புனருத் தாரணம் செய்வதற்காக வரவழைக்கப்பட்ட மக்கள் தாம் தென் இந்தியாவில் கையாண்ட வழிபாட்டு மரபுகளை இங்கும் பின்பற்றலாயி னர். அந்த வகையில் குமாரபுரத்தில் முருக வழிபாடு தளைக்க ஏதுவாக அமைந்தது.

குமாரபுரத்தில் சித்திர வேலாயுதர் ஆலயத் தின் தோற்றக் காலம் எது என நிச்சயமாகக் கூறமுடியாத போதிலும், ஆலய அமைப்பினை யும் ஆலய சூழலில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியற் சின்னங்கள் வாயிலாகவும், ஆலய *மரபுக்கதைகள் வாயிலாகவும்* நோக்குகையில் இது பொலநறுவையில் சோழ மன்னர்கள் தமது ஆட்சியை நிலை நாட்டிய காலப்பகுதி களில் கட்டப்பட்ட ஆலயங்களுள் ஒன்றாக இருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

பாக்கர் தனது இலங்கை நீர்ப்பாசனவியல் பற்றிய குறிப்பு ஒன்றில் குமாரபுரத்தில் மிகப் பழமையான கட்டடச் சிதைவுகள் காணப்படு வதாகவும் அவை 428 ஆண்டுகளுக்குமுன் பழமைவாய்ந்தவையாக அமையலாம் எனக் குறிப்பிட்டுள்ளதாக திரு.சி.எஸ்.நவரெட்ணம் அவர்கள் தனது இலங்கையில் இந்துசமயம் என்ற நூலில் குறிப்பிட்டு இருப்பதை அவதா னிக்க முடிகின்றது.

குமாரபுரத்திலும் யாழ்ப்பாணம் கந்தவனக் கடவையிலும் நிலவிவரும் செவிவழிச் செய்தி களின்படி போர்த்துக்கேயரது காலத்தில் பல ஆலயங்கள் சிதைக்கப்பட்ட வேளையில் இவ் முருகன் ஆலயமும் சிதைக்கப்படலாம் என்ற அச்சத்தில் அங்கிருந்த புராதன ஆறுமுகசுவா மியினதும், வள்ளி தெய்வானையரதும் திரு வுருவங்களை ஆலயச் சிவாச்சாரியார் பாது காப்பின் பொருட்டு கந்தவனக்கடவைக்கு எடுத் துச் சென்று வழிபட்டதாக அறிய முடிகின்றது. அவ் விக்கிரகம் ஊனமடைய அதை வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் வைத்து இன்றும் "பழையவர்" என்னும் பெயரால் அழைத்து வழிபட்டு வருகின்றனர்.

இதே போன்று இவ்வாலயம் பற்றி இவ்வூர் மக்கள் மத்தியில் நிலவி வரும் மற்றுமொரு செவி வழிச் செய்தியும் இங்கு நினைவு கூறத்தக்கது. அதாவது இக் குமாரபுர சித்திர வேலாயுதர் ஆலயத்தைக் கட்டுவித்த வன்னி அரசன் ஆலயத்தின் கோபுரத்தில் அமைந்த சிற்பங்களின் அழகிலேயே சொக்கிப்போனான். இப்படியான அழகு வாய்ந்த சிற்பங்கள் இனி எந்த ஆலயத்திலும் இடம்பெறக்கூடாது என்று எண்ணினான். ஆலயத்தைக் கட்டிய சிற்பியின் வலக்கரத்தை வெட்டிவிட்டான் அதனால் சிற்பியின் சாபக்கேட்டால் இக் குமாரபுர இராசதானி சிதைவடையலாயிற்று என்று கூறப்படுகின்றது. இதனை அ.பாலமனோகரன் எழுதிய "குமாரபுரம்" என்ற நாவலிலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு சிதைவடைந்து காடு மண்டிக் கிடந்த குமாரபுரம் சித்திரவேலாயுதர் ஆலயம் அமைந்த பிரதேசத்தில் சுமார் ஐம்பது ஏக்கர் காணியை 1904ஆம் ஆண்டு நா. குமாரசாமிக் குருக்கள் இலங்கை அரசிடம் இருந்து விலைக்கு வாங்கினார். காட்டை வெட்டி அழிந்த நிலையில் கிடந்த ஆலய நிலத்தில் புதிதாக சிறு ஆலயம் அமைத்து பூசை செய்து வந்தார். அவரது மகனான சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் தற்போதைய ஆலயத்தைக் கட்டுவித்து 1955 ஆம் ஆண்டு ஆறாம் மாதம் மூன்றாம் திகதி கும்பாபிஷேகம் செய்வித்தார். எனினும் இவ்வாலய திருப்பணிகள் இன்னும் நிறைவேறாமல் குறையாகவே உள்ளது.

## வெருக்கல் சித்திர வேலாயுத சுவாமி கோவில்:

குன்று தோறும் குடியிருக்கும் குமரனுக்கு கோணமாமலையின் கிழக்கு எல்லையில் வெருக்கல் கங்கையின் ஓரத்தில், வெருக்கல் மலையின் கண் அமைக்கப்பட்டு இருக்கும் ஆலயமாக சித்திர வேலாயுதசுவாமி கோவில் திகழ்கின்றது.

இவ்வாலயத்தின் வரலாற்றுச் சிறப்புக்கள் கந்தபுராண காப்பிய நிகழ்வு காலத்துடனே ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. குவேனியின் மரபில் வந்த வேடர்கள் மரப் பொந்து ஒன்றில் முருகனது வேல் ஒன்றினை வைத்து வழிபட்டு அதற்கு கொத்துப் பந்தல் அமைத்து பெருவிழா எடுத்து வந்தார்கள். நீண்டகாலத் திற்குபின் அவ்வழியால் சென்ற செட்டியார் ஒருவர் அம்மரத்தின் கீழ் இளைப்பாறி உறங்கி விட்டார் எனவும் அவரது கனவில் தோன்றிய முருகன் தனக்கு ஒரு ஆலயம் அமைக்குமாறு வேண்டியதும் கல்மலை என்ற இடத்தில் முருகனால் கூறப்பட்டதைப் போன்று காணப்பட்ட திரவியத்தை எடுத்து முருகனுக்கு ஆலயம் அமைத்ததாகவும் கூறப்படுகின்றது.

குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்ததுபோன்று இவ்வாலயத்தையும் புனருத்தாரணம் செய்வதாக அறியமுடிகின்றது. மேலும் அவனால் வரவளைக்கப்பட்ட சிந்து நாட்டு மக்கள் சிறப்பாக இவ்வாலயத்தினை பரிபாலனம் செய்தனர்.

போர்த்துக்கேயர் பல சைவ ஆலயங்களை அழித்தது போன்று இவ் ஆலயத்தினையும் அழிக்கச் சென்றதாகவும் பின்னர் இயலாமையால் கைவிட்டதாகவும் முதலியார் எஸ்.ஓ.கனகரெத்தினம் அவர்களது குறிப்பில் இருந்து அறியமுடிகின்றது. அதாவது போர்த்துக்கேய தளபதியாகிய "றிபைறோ ஹல்பபி ஹிஹறீட் சேப்" என்பவன் 1642இல் 2150 படைகளுடன் சென்றதாகவும் வழிமாறிச் சென்றமையால் பின்னர் ஆலயத்தை அழிக்கமுடியாது போய் விட்டதாகவும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த சித்திர வேலாயுதர் ஆலயம் இன்று வெருக்கல் ஆற்றின் கண் பொலிவோடு விளங்குகின்றது. ஆவணி உத்திரத்தில் கொடியேறி தொடர்ந்து பதினெட்டு நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது. இவ் விழாக்களுள் திருச் சூரவேட்டைத் திருவிழா சிறப்பானதாகும். வேட்டை முடிந்து சுவாமி ஆலயம் வந்ததும் தெய்வயானை அம்மனுக்கும் முருகனுக்கும் இடம் பெறும் ஊடல் கலந்த உரையாடல் சிறப்பானது.

## ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பேசாலை:

மன்னார் மாவட்டத்தின் பேசாலை பிரதான வீதியோரத்தில் காணப்படுகின்ற இவ் ஆலயம் இம் மாவட்டத்தில் புகழ்பூத்த ஓர் முருகன் ஆலயமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. வள்ளி தெய்வயானை சமேதராய் முருகப் பெருமான் விளங்குகின்றார். ஆவணி மாதத்தில் வரும் மூலநட்சத்திரத்தில் ஆரம்பித்து பத்துத்தினங்கள் தொடர்ந்து அலங்கார உற்சவம் இடம்பெறும். மூன்று நேரப் பூசையும் இங்கு நாளாந்தம் இடம் பெறுகின்றது.

## முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயம்:

வன்னி அரசர்களது காலத்தில் வெள்ளை கனக நாச்சியாரால் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. 1938, 1992 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆடி அமாவாசையைத் தொடர்ந்துவரும் ஆறாம் நாளில் கொடியேறி பன்னிரண்டு நாட்கள் இங்கு திருவிழா நடைபெறுகின்றது. அழகிய சித்திரத்தேர் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் முருகனை கல்யாண வேலவர் என அழைப்பதற்கு பின்வரும் சம்பவம் காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகின்றது. கதிர்காம யாத்திரிகர் ஒருவர் வாதநோயினால் கதிர்காமம் செல்லமுடியாது முள்ளியவளையில் தங்கினார். தனது நோயினால் கதிர்காமம் செல்லமுடியவில்லையே என வருந்தினார். முருகன் கனவில் தோன்றி "முள்ளியவளையிலேயே என்னை வழிபடுக. நான் தரிசனம் தருவேன்" எனக் கூறியதும் ஒரு கல்லை வைத்து முதியவர் வழிபட முருகன் கல்யாண வேலவராக அவருக்கு காட்சி கொடுத்ததாகவும். அன்று தொடக்கம் முள்ளியவளைப்பதியின்கண் வாழும் முருகப்பெருமானை கல்யாண வேலவர் என்றே அழைக்கலாயினர்.

இதே போன்று அபிஷேகத்துக்கு நீர் இன்றி அர்ச்சகர் கவலைப்பட்டு மிக ஆழமாகக் கிணறு வெட்டியபோதிலும் அதில் நீர் ஊறவில்லை அதனால் வருத்தமுற்ற அர்ச்சகரது கனவில் தோன்றிய கல்யாணவேலவன், "நாளை மேலும் வெட்டுக அதில் மோர் ஊறும் அதை எடுத்து அபிஷேகம் செய்க" எனக் கூறி மறைந்தார். கனவில் கூறப்பட்டதைப் போன்று அர்ச்சகர் கிணற்றை வெட்டியதும் மோர் ஊறியது. அதனை அபிஷேகம் செய்தார். இன்றும் ஆலய திருமஞ்சனக் கிணற்றின் நீர் மோரைப் போன்று பால்நிறமாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

## கிளிநொச்சி கந்தசுவாமி கோவில்:

கிளிநொச்சி நகரின்கண் அமைந்து இருக்கும் கந்தசுவாமி ஆலயமும் வன்னிப்பிரதேச முருக வழிபாட்டு மரபில் முக்கியத்துவம் பெறும் ஆலயமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்விப் பாரம்பரியத்துக்கு வழிகாட்டிய முன்னோடிகளில் ஒருவராகிய சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியையும் நிர்வகிப்பதற்காக இரணைமடுக் குளத்துக்கு அண்மையில் பல ஏக்கர்களில் நெற் செய்கையை மேற்

கொண்டார். நெற்செய்கையை செய்வதற்காக அங்கு குடியேறிய மக்கள் தமது வழிபாட்டின் பொருட்டு 1940ஆம் ஆண்டு ஓர் சிறிய ஆல யத்தினை அமைத்து வழிபட்டனர். அவ்வால யத்தில் மேலும் பல புனருத்தாரணங்களை மேற்கொண்டு 1973, 1988 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு செய்தனர். இக் கந்தன் ஆலய மும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தி னைப் போன்று மேற்குப் பார்த்த ஆலயமாக அமைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில்:

திருகோணமலையின் துறைமுகத்துக்கு அண்மையில் உள்ள சுங்க வீதியில் இவ்வா லயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் தோற்றம் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தாகக் கூறப்படுகின்றது. தென் இந்தியாவில் உள்ள திருவேரகம் என்ற இடத்தில் வாழ்ந்த சுப்பிரமணியசர்மா என்பவர் தனது ஆத்மார்த்த வழிபாட்டுக்காக அழகிய தேவியருடன் கூடிய ஆறுமுக சுவாமியினது பஞ்சலோக சிலையி னைச் செய்து தருமாறு குமாரநாத சிற்பிக்குப் பணித்ததாகவும், பின்னர் சுப்பிரமண்யசர்மா திடீரென இறைபதம் அடைந்தமையால் சிற்பி மனவேதனை அடைந்து முருகனது அருள் ஆணைப்படி இலங்கைக்கு செல்லும் கப்பலில் சிலைகளை வைத்து அனுப்பினார். அக்கப்பல் திருகோணமலையை அண்டியதும் அசையாது நின்றுவிட அதில் இருந்த ஊழியர்கள் திரு வுருவம் இருந்த பெட்டியை கடலில் வீசினர். அப்பெட்டி கடலில் மிதந்து கரையை அடைந் தது. இவ்வாறு கரையில் காணப்பட்ட பெட் டியை ஆவலோடு அன்பர்கள் திறந்து பார்க் கையில் அழகிய ஆறுமுகசுவாமியினது திரு வுருவம் இருக்கக் கண்டு ஆனந்தமடைந்து கந்த மலைச் சாரலில் சிறிய ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர். ஒல்லாந்த மாலுமிகளுக் கும் பிரான்சிய மாலுமிகளுக்கும் இடையே நடைபெற்ற அசம்பாவிதங்களால் அச்சம் கொண்டு இங்கிருந்த ஆறுமுகசுவாமியாரது திருவுருவத்தை தம்பலகாமம் கோணேசர் கோயிலில் சில காலம் வைத்து வழிபட்டனர். பின்னர் மீண்டும் பழைய இடத்தில் ஆல யத்தை பெருப்பித்து ஆறுமுகசுவாமியினது சிலையை வைத்து வழிபடலாயினர். 1763, 1768, 1782, 1813, 1830, 1885, 1891, 1935, 1990ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்குகள் இடம் பெற்று இன்று பிரமாண்டமான ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது. ஆனி அமாவா சையை தீர்த்தமாகக் கொண்டு முன்வரும் பௌர்ணமி தினத்தில் கொடியேறி வருடாந்த மகோற்சவம் இடம்பெறுகின்றது. ஈழத்தின் எந்த ஆலயத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு இவ் ஆலயத்திற்கு உண்டு. அது யாது எனில் இங்கு மூலமூர்த்தியாக கருவறையில் விளங் கும் ஆறுமுகசுவாமியாரே தேர்த்திருவிழா அன்றும், சூரன்போர் அன்றும் உற்சவ மூர்த்தி யாக எழுந்தருள்வார்.

## முல்லைத்தீவு கொக்கிளாய் வீதி திருமுருகன் கோவில்:

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமாரபுரம் முருகன் கோவிலை அடுத்து சிறப்பு வாய்ந்த தும் பழமை புகழ் வாய்க்கப்பெற்றதுமாகிய ஆலயமாக இவ் ஆலயம் விளங்குகின்றது. ஆலயத்தில் பேணப்பட்டுவரும் ஐதீகங்களை யும் மரபுகளையும் கொண்டு நோக்குகையில் பண்டாரவன்னியன் காலத்தில் இருந்தே வழி படப்பட்டுவரும் ஆலயமாக இது விளங்குகின் றது. நீண்டகாலமாக புனருத்தாரணம் செய்யப் படாது இருந்த இவ் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப் பொலிவு பெறுகின்றது. மூலவராக வேலாயுதப்பெருமான் விளங்க ஆண்டுதோறும் வரும் பங்குனி உத்திரத்தை இறுதியாகக் கொண்டு வருடாந்த மகோற்சவம் சிறப்பாக இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவில்:

திருகோணமலை பட்டினத்தின் திருஞான சம்பந்தர் வீதியில் இருக்கும் இவ் ஆலயம் 1800ஆம் ஆண்டளவில் சாது ஒருவரினால் நிறுவப்பட்டதாக அறியமுடிகின்றது. அவரால் வழிபடப்பட்ட வேலை திரு.மு.சண்முகம்பிள்ளை அவர்கள் தொடர்ந்து வழிபட்டதாகவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம் அவர்கள் குடும்பத்தினராலும் இவ் ஆலயம் நிர்வகிக்கப் பெற்று இன்று பெரிய ஆலயமாகக் காணப்படுகின்றது. இங்கு வைகாசி விசாகத்தினை இறுதி நாளாகக் கொண்டு வருடாந்த மகோற்சவம் சிறப்பாக இடம்பெறுகின்றது.

## வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில்:

இன்று வவுனியா நகரின்கண் பொலிவுடன் வானளாவிய இராஜகோபுரத்துடன் மிளிரும் வவுனியா கந்தசுவாமி ஆலயமும் வன்னிப் பிரதேச முருக வழிபாட்டு மரபில் தனித்துவம் பேணிநிற்கும் ஆலயமாகக் காணப்படுகின்றது. இதன் தோற்றம் நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

தும்பளையில் இருந்து வவுனியாவில் கமம் செய்வதற்காக வருகைதந்த திரு.ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு கதிர்காமக் கந்தனை தரிசித்த பின்னர் அன்று இரவு இவரது கனவில் முருகன் தோன்றி "நீ திருச்செந்தூருக்கு செல். அங்கு குருக்கள் உனக்கு வேல் ஒன்றைத் தருவார். அதை எடுத்து வந்து பூசைசெய்" எனக்கூறி மறைந்தார். அதன்படி திரு.ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள் திருச்செந்தூர் சென்று சொர்ப்பனத்தின்படி வேல் ஒன்றினைப் பெற்றுவந்து கலட்டிக்காடு எனக் கூறப்படும் இடத்தில் காடுவெட்டி அங்கு சிறிதாக ஆலயம் அமைத்து வழிபட்டார். இவருக்கு பின் வந்தவர்கள் காலத்துக்குக் காலம்மேலும் பல புனருத்தாரண வேலைகள் செய்து ஆலயத்தினைப் பெருப்பித்து 1949, 1982, 1999 ஆகிய ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகம் நடாத்தினர்.

வவுனியா பிரதேசத்தைப் பொறுத்தவரை எந்த ஆலயத்துக்கு காவடி எடுப்பதாயினும் அதற்குரிய காவடிகள் இவ் ஆலயத்தில் இருந்தே எடுக்கப்படுவது நீண்டகால மரபாகப் பேணப்பட்டு வருகின்றது. இவ் ஆலய உற்சவங்களில் சூரன்போருக்கு மறுநாள் இடம்பெறும் திருக்கல்யாண உற்சவம் சிறப்பானதாகும். வன்னி வள நாட்டின் எல்லையில் இக் கந்தன் ஆலயம் அமைந்துள்ளதால் இக் கந்தனை "எல்லைக் கந்தன்" என சிறப்பாக அழைத்து வழிபடுவதும் ஓர் மரபாகக் காணப்படுகின்றது.

## ஏனைய ஆலயங்கள்:

மேற்குறித்த ஆலயங்களைவிட சிறிதும் பெரிதுமான முருகனாலயங்கள் வன்னிப் பிரதேசத்தில் காணப்படுகின்றன.

அந்த வகையில் திருக்கேதீஸ்வரம் சேவலைப்பிட்டி கந்தசுவாமி கோவில், இராமநாதபுரம் மாவடி முருகன்கோவில், பூவரசன்குளம் முருகன்கோவில், சாஸ்திரி கூளாங்குளம் கந்தசுவாமி கோவில், முள்ளியவளை குமுளமுனை குன்றின்மேல் குமரன்கோவில், நெடுங்கேணி பழைய கந்தசுவாமி கோவில், உயிலங்குளம் புங்கன்தாழ்வு முருகன் கோவில், புளியங்குளம் ஊஞ்சல் கட்டி கந்தசுவாமி கோவில், கொக்குத்தொடுவாய் பனிச்சையடி முருகன்கோவில், நெளுக்குளம் முருகன் கோவில், முருங்கன் முருகன் கோவில், நெடுங்கேணி ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில், நானாட்டான் வெள்ளாளகட்டு முருகன் கோவில், திருகோணமலை பத்தாம் குறிச்சி முருகன் கோவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார். கதிர்காமப் பெருமாளே எனக் கதிர்கா முதலியார்குளம் முருகன் கோவில், முரசு மோட்டை முருகன் கோவில், மருதோடை முருகன் கோவில் ஆகிய ஆலயங்கள் குறிப் பிடத்தக்கனவாகும்.

## கந்தபுராணமும் புராணபடன மரபும்:

ஈழத்து முருக வழிபாட்டு மரபுகளை இந் திய முருகவழிபாட்டு மரபில் நின்றும் தனித்து வேறுபடுத்திக் காட்டும் சிறப்புமிகு மரபாக புராணபடன மரபு காணப்படுகின்றது. அதிலும் கந்தபுராணத்தை ஆலயங்களிலே பக்திபூர்வ மாக படிப்பதும் பயன் கூறுவதும் அவற்றை பக்தி உணர்வுடன் உள்வாங்கலும் அதன்படி வாழ்வாங்கு வாழ்வதும் ஈழத்து முருகனடியார் மத்தியில் இனங்காணத்தகும் சிறப்பம்சங்களா கும். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கண பதிப்பிள்ளை அவர்கள் தனது கந்தபுராணக் கலாசாரம் என்ற நூலில் "யாழ்ப்பாணக் கலா சாரம் கந்தபுராணக் கலாசாரம் எனக் குறிப் பிட்டு உள்ளார்.

இத்தகைய கந்தபுராண கலாசார மரபுகள் வன்னிப் பிரதேசத்திலும் நீண்ட காலமாக பேணப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின் றது. அந்த வகையில் குமாரபுரம் சித்திர வேலா யுதர் ஆலயத்தில் கந்தசஷ்டி காலத்தில் கந்த புராணப் படிப்பு மேற்கொள்வதும் அடியார்கள் பக்திபூர்வமாக அவற்றை கேட்டு பயன்பெறு வதும் இங்கு நீண்ட காலமாக நிலவிவரும் மரபாக காணப்படுகின்றது.

குறிப்பாக வவுனியாவைப் பொறுத்தவரை அங்கு புராணபடன மரபு நீண்டகாலமாக பேணப்பட்டு வந்திருப்பதை அவதானிக்க முடி கின்றது. யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து நாவலர் வழிவந்த புராணபடனத்தைப் படிப்பதில் பாண்டித்தியம் பெற்றவர்களை வரவழைத்து, அவர்களிடம் இவ்வூர் மக்கள் கந்தபுராணத்தை புராணபடனமாகக் கற்பர். இவ்வாறு வருகை தருபவர்களை "புராண வாத்தியார்" என அழைத்து அவர்கள் கூறித்தந்த முறைக்கேற்ப புராணபடன மரபை தொடர்வர் அந்த வகையில் வவுனியாவில் புகழ் பூத்த புராணபடன முன் னோடிகளில் செ.நாகலிங்கம், செ.பத்மநாதன், இராசையா, சேனாதிராஜா ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்களாவர். அவர்களது வழியைப் பின்பற்றி இன்றும் புராணபடன மரபை பேணுப வர்களுள் திரு.நா.தர்மராஜா (தமிழ்மணி அகளங்கன்), சே.ரங்கநாதன், ச.விஜயகுமார், த.ஐயம்பிள்ளை, ந.சுந்தரம்பிள்ளை, ஆ.நவரெத் தினராஜா, மா.மார்க்கண்டு போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

வவுனியாவில் உள்ள இந்து நிறுவனங்கள் சிலவும் புராணபடன மரபை மேற்கொள்பவர் களை கௌரவித்து வருகின்றது. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் "புராண படன புகழ்நகை" என்ற பட்டத்தையும், வவு னியா கச்சியப்பர் கழகம் "புராணபடன வித்த கர்" என்ற பட்டத்தையும் புராணபடனத்தை மேற்கொள்ளும் அறிஞர்களுக்கு வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வன்னியின் பெரும்பாலான முருகன் ஆல யங்கள் ஆகம மரபுக்கு அப்பாற்பட்ட ஆகமம் சாராத வழிபாட்டு ஆலயங்களாகவே அமைந் துள்ளன. எனவே இவ்வாலயங்களில் ஆகமம் சார்பான கிரியைகளுக்கு அளிக்கப்படும் முக் கியத்துவத்தினைவிட புராணபடனத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. நெளுக் குளம் முருகன் கோவில், முதலியார்குளம் முருகன்கோவில், சாஸ்திரி கூளாங் குளம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் போன்ற ஆல யங்களில் இன்றும் இம்மரபு காணப்படுவதை அவதானிக் கலாம்.

வன்னிப் பகுதியானது விவசாயத்தினை மையமாகக் கொண்டு தனது பாரம்பரிய மரபு களை கட்டி எழுப்பிய பிரதேசமாகும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் என்றவகையில் இப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் ஓரளவே கல்வி அறிவுடையவர்களாகக் காணப்பட்டனர். எனினும் கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம், தெய்வயானை அம்மன் திருமணப்படலம் போன்ற பகுதிகளில் பயன் கூறுவதில் கல்விகற்ற அறிஞர்களைவிட தலைசிறந்தவர்களாக அவர்கள் விளங்கியதை அறிய முடிகின்றது. எனவே வன்னி விவசாயச் சூழலில் அவர்களது கல்வி மரபை கட்டி எழுப்புவதற்கு பெரும் துணை யாக நின்றது புராணபடன மரபே என்றால் அது தவறாகாது.

முடிவாக, ஈழத்து முருக வழிபாட்டு மரபில் எவ்வாறு யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் தனித்துவம் மிகு வழிபாட்டு மரபுகளாகக் காணப்படுகின்றனவோ அதனைப் போன்று வன்னிப் பிரதேசமும் சிறப்பான முருக வழிபாட்டு மரபுகளை தன்னகத்தே உள்ளடக்கி உள்ளது. அத்தகைய முருக வழிபாட்டு மரபுகளை முழுமையாக இனங்காண்பதற்கு இப் பிராந்தியத்தில் யுத்த மேகங்கள் சூழ்ந்திருப்பது தடையாக அமைகின்றது. இத்தகைய தடைகள் நீங்கும் சந்தர்ப்பத்தில் இப் பிரதேச முருக வழிபாட்டு மரபுகளை மேலும் விரிவாக ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் அதன் உண்மைத் தரிசனங்களை மேலும் அறிந்து கொள்ளக்கூடியதாக அமையும்.

## உசாத்துணைகள்


1. பேராசிரியர் சிற்றம்பலம் சி. க. ஈழத்தில் இந்துசமயம் ~ யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வெளியீடு ~ 1997
2. Navaratnam C.S.A Short History of Hinduism in Ceylon - 1964
3. நடராசா க.செ.வையாபாடல் கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு ~ 1980
4. சுப்பிரமணியம்.வே குமாரபுரம் சித்திரவேலாயுதர் ஆலயம், வற்றாப்பளை கண்ணகை அம்மன் கருணைமலர் ~ 1978
5. சைவப்புலவர் வடிவேல் சி. திருகோணமலை மாவட்டத்திருத்தலங்கள் பிரதேச அபிவிருத்தி இந்துசமய கலாசாரத் திணைக்களம் ~ 1984
6. சிவஸ்ரீ பாலச்சந்திரக்குருக்கள் இ. தலவரலாறும் இதன் வளர்ச்சியும் வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக மலர் ~ 1982
7. இலங்கைத் திருநாட்டின் இந்து ஆலயங்கள் பிரதேச அபிவிருத்தி இந்துசமய கலாசாரத்திணைக்களம் ~ 1982
8. பண்டிதர் கந்தையா. மு, மேற்குப்பார்த்த வேற்கை அண்ணல் விழைந்தருள்க, "கந்தன் கருணை" கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக மலர் ~ 1988
9. கலாநிதி சிற்றம்பலம்.சி.க, ஈழத்தில் இந்து சமயம் அனுராதபுரக்காலம் சிந்தனை, கார்த்திகை, III 1983, யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வி.சிவசாமி

# முருகவழிபாடு - ஒருநோக்கு

மனித வரலாற்றிலே சமயம் ஆதிகாலம் தொட்டு ஒரு முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளது. அவ்வந்நாடுகளின் தட்பவெப்ப நிலைகளுக்கேற்பவும், அவ்விடங்களில் வாழும் மக்களின் சமூகநிலைக்கேற்பவும் சமயங்கள் தோன்றி நிலவி வந்துள்ளன. மக்களின் உலகியல் வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் சமயங்களின் தாக்கம் பல்வேறு பரிமாணங்களிலேற்பட்டு வந்துள்ளது. தென் ஆசியாவிலும் சிந்துசமவெளி நாகரிகம் தோன்றுமுன்பே (கி.மு. 2500க்கு முன்பே) இந்து சமயத்தின் சில முன்னோடிக்கருத்துக்கள் அம்மன் வழிபாடு, லிங்கவழிபாடு, எருது வழிபாடு, மரவழிபாடு போன்றன நிலவியதை அறியக்கிடக்கின்றது. இந்து சமயத்தின் உட்பிரிவுகளிலொன்றான கௌமாரம் - முருக வழிபாடு சிந்துசமவெளி நாகரிகத்தில் நிலவியிருந்திருக்கலாம். ஆனால் வேதங்களிலும் அவற்றை அடுத்துத் தோன்றிய இதிஹாஸங்கள், புராணங்கள் எழுந்த காலகட்டங்களில் குறிப்பாகப் பின்னைய இரண்டுவகை நூல்கள் எழுந்த காலம் தொடக்கம் முருகவழிபாடு சிறப்பாக நிலவி வந்துள்ளது. வடஇந்தியாவிலே தோன்றிய இந்நூல்களில் முருகப்பெருமான் ஸ்கந்த(ன்), குமார(ன்), சுப்ரஹ்மண்ய(ன்) முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளார். வழிபடப்பட்டுவந்தார்.

தென்னிந்தியாவிலே குறிப்பாகத் தமிழ்நாடு முருகவழிபாட்டின் முக்கியமான ஒரு பிரதேசமாகும். சங்ககாலத்திற்கு முன்பே முருக வழிபாடு தமிழகத்திலே நிலவிவந்துள்ளது. தென் தமிழ்நாட்டிலுள்ள ஆதிச்சநல்லூரிலே கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்களிலே அவருடைய ஆயுதமாகிய வேலும், கொடியிலுள்ள சேவலும் கிடைத்துள்ளன. எனவே இக் காலகட்டத்திலும் (சுமார் கி.மு.1200வரையில்), இதற்கு முன்பும் அங்கு முருகவழிபாடு நிலவியதை அறியலாம். யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்து ஆண்டுக்கு முன்பே முருக வழிபாடு நிலவியதற்குக் கந்தரோடையிலே சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சில தொல்லியலாளர் நடத்திய அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த வேல் சான்றுபகரும்.

சங்ககாலத் தமிழகத்திலே நிலவிய மிகப் பிரபல்யமான வழிபாடுகளில் ஒன்று முருக வழிபாடாகும். இதற்குச் சங்க நூல்கள் (கி.மு. 3ம் நூ - கி.பி.3ம் நூ - வரை) நன்கு சான்று பகருவன. அரசர் தொடக்கம் அடிமட்டத்திலுள்ள மக்கள் வரையில் பலர் இவ்வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர். தமிழில் எழுந்த முதலாவது சமய நூலாகிய திருமுருகாற்றுப் படை முருகப்பெருமானைப் பற்றியதே. இது சங்ககால முடிவில் அல்லது சற்றுப் பின்னர் எழுதப்பட்டதெனக்கருதப்படுகிறது. தமிழகத்தில் அவருக்குச் சிறப்பாக உள்ள ஆறுபடை வீடுகள் பற்றி இந்நூல் கூறியிருப்பது கவனித்தற்பாலது. தமிழரின் தனிச்சிறப்பு வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையிலே எந்நாளும் முருகநாமம் கூறி
முந்தை வினையறுக்க முருகா - நீ வாருவாயென்று
அலை மோதுதப்பா எம் அடியார் கூட்டம்
கந்தா கார்த்திகேயா தங்கரதமேறிவா ஆறுமுகா! போர் ஒழியட்டும்

# பெஷன் ஹவுஸ்

**65, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**



## எம்மிடம்

- அலுமினியம் ~ எவர்சில்வர் பாத்திரங்கள்
- சிறுவர் சயிக்கிள்கள்
- நவநாகரிகமான விளையாட்டுப் பொருள்கள்
- பலவித அன்பளிப்புப் பொருள்கள்

**நிதான விலையில் கிடைக்கும் ஒரு ஸ்தாபனம்**
விஜயம் செய்யுங்கள்

# FASHION HOUSE

65, K.K.S. Road, Jaffna. T.P - 2197

நல்லூர் முருகா! நாளும் பொழுதும் உனை வேண்டி
எல்லோரும் தொழுதேத்த வைத்தாய் - நானோ
சொல்லேர் பூட்டி உழுது பக்தி விதைத்தேன்
சொல்வாய் அருளாம் தேரேறி விளைவு தந்திடுவாய் ஆறுமுகா!



# RUPA VERSATILE TRADERS

Distributors for : *Smithkline Beecham Mackwoods Ltd.*
*Gamma Pharmaceuticals (Pvt) Ltd.*
*Delmage Forsyth & Co. Ltd.*
*Hemas Marketing Ltd.*
*Ceylon Biscuits Ltd.*

No. 104A, Stanley Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடந்தோறும் மலர்கின்ற மலர் 'நல்லைக் குமரன் மலர்'
அது அருள் சுரக்கும் வாடா மலர்
தமிழ் உலகம் வாழ்த்தும் மலர்
அது என்றும் மலர்க என வாழ்த்துகிறோம்



**கண் வைத்திய நிபுணர்களால்**
**சிபார்சு செய்யும் கண்ணாடிகளை**
சரிவர பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

**எஸ்.எம்.பெர்ணாண்டோ**

# S.M.FERNANDO

580, Hospital Road, Jaffna.
கிளை 520, Hospital Road, Jaffna.
T.P. - 3254

மருத்துவ மகோன்னதத்தில் உதித்த
ஆத்ம சாந்தி 'நல்லைக் குமரன்'
மலர் ஈழத்து தலைசிறந்த சமய
சஞ்சிகையாக மேலோங்க வாழ்த்துகிறோம்



**யாழ்.நகரில் தலை சிறந்து விளங்கும் ஒரு ஸ்தாபனம்**
**மக்கள் சேவை மகேசன் சேவை**
**அது ஓர் மகோன்னத சேவை**
**அதற்கு நல்லூரான் துணை வேண்டி நிற்கிறோம்**

**'நல்லைக் குமரன்' மலர்**
**தொடர்ந்து வர வாழ்த்துகிறோம்**

# S.V.MURUGESU

**154, Hospital Road, Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமாகவும் முருகன் போற்றப்படுகிறான். சங்க காலத்தின் பின்னரும் முருக வழிபாடு தொடர்ந்து நிலவியதற்குச் சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற நூல்களும், பல்லவர் - பாண்டியர் காலத்திய சில பக்திப்பாடல்களும் சான்றுபகருவன. பின்னர் சோழப்பெருமன்னர் காலமுடிவில் முருகனின் சிறப்பினை விரிவா கக்கூறும் கந்தபுராணமும், தொடர்ந்து வேறு சில புராணங்கள் குறிப்பாகத் தலபுராணங் களும், சிற்றிலக்கியங்களும், இசைப்பாடல் களும், இசை நாடகங்களும் பிறவும் தோன்றின. தொடர்ந்து இன்றுவரையும் முருகன் புகழ் கூறும் பல ஆக்கங்கள் எழுதப்பட்டு வருகின் றன. தமிழிலக்கியம் மட்டுமன்றிச் சமஸ்கிருத இலக்கியம் போன்றவற்றிலும், தமிழகக் கட்ட டக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நடன, நாடக மரபுகளிலும் முருக வழிபாட்டின் சிறப் புக்களையும், தன்மைகளையும் காணலாம். சாஸ்திரீயக் கலை மரபுகளிலும் இப்போக் கினைக் காணலாம். சுருங்கக்கூறின் பழைய காலந்தொட்டு தமிழரின் சமய, பண்பாட்டு மரபுகளுடன் ஒன்றிணைந்த தெய்வமாகவே முருகப்பெருமான் விளங்குகின்றார்.

சைவசமய முழுமுதற் கடவுளாகிய சிவ பிரானதும், அவரின் சக்தியாகிய உமாதேவி யின் இளைய மகனாகவும், விநாயகரின் இளைய சகோதரனாகவும், திருமாலின் மரு மகனாகவும் (சகோதரியின் மகன், மக்கள், வள்ளி, தெய்வானையின் கணவன்), இச்சா சக்தியாகிய வள்ளியினதும், கிரியா சக்தியா கிய தெய்வானையினதும் நாயகனாகவும், சூரிய னாகவும் விளங்கும் முருகப்பெருமான் இந்து சமயத்தின் உட்பிரிவுகளாகிய காணாபத்தி யம், (கணபதி வழிபாடு), சைவம், சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம் (முருக வழிபாடு), சௌரம் (சூரிய வழிபாடு) ஆகியனவற்றை ஒன்றிணைத்து விளங்கும் அற்புதத் தெய்வ மாகவும் இலங்குகிறார். அதேவேளையில் சிவ பிரானே வெவ்வேறு பெயர்களில் இவ் அறு வகைச் சமயத் தெய்வங்களாகவும் விளங்கு கின்றார்.

இதிஹாஸ, புராணக்கதைகளின்படி தீமை அல்லது அறியாமை அல்லது மும்மலங்களின் வடிவமாக விளங்கும் அசுரர்களை குறிப்பாகச் சூரனையும் அவனது சகோதரரான சிங்க முகன், தாரகன் ஆகியோரையும் அழித்துத் தேவர்களைப் பாதுகாக்கவே சிவபிரானின் நெற்றிக்கண்ணிலிருந்து முருகன் தோன்றி னான் எனக் கூறப்படுகின்றது. எனினும் சிவனே முருகனாக வடிவும் தாங்கினார் என்பதைக் கந்தபுராணம்

**"ஆதலின் நமது சக்தி ஆறுமுகனவனும் யாமும்**
**பேதகமன்றானம் போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்**
**ஏதமில் குழலிபோல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்**
**போதமுமழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"**

எனச் சிவபிரானே கூறியிருப்பதாகக் குறிப் பிட்டிருப்பது மனங்கொளற்பாலது.

மேலும் முழு உலகினையும் தீமைகளி லிருந்து (அசுரர்களிலிருந்து) காப்பாற்றுதற்கா கவே அருவும், உருவமுமாக விளங்கும் அநா தியான பரம்பொருளே சோதிவடிவிலே முருக னாகக் கருணை பொழியும் ஆறுதிருமுகங் களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட வராகத் தோன்றினார் என்பதைக் கந்தபுராணம்

**"அருவமுருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய்நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடு கிறது.

பழைய காலத்திலே தமிழர் இயற்கையோ டியைந்த வாழ்க்கையை நடத்தினர். இயற்கை யிலேயே இறைவனைக்கண்டுகளித்தனர். சூரியன் எழுகின்றபோது அதிலே காணப்பட்ட ஒளிவிளக்கம் அவர்களுக்குச் செவ்வொளியா கத் தென்பட்டது. இவ்வாறு காலையில் தோன் றும் சூரியன் சிவந்த ஒளியுடன் காணப்படும் செவ்வொளி விளக்கம் இறைவனது உண்மை உரு எனவும், அதனால் ஏற்படும் செயல்களே இறைவனின் அருட்செயல்கள் என மக்கள் நம்பினர். சூரியனின் சிவந்த ஒளியை இறைவனா கக் கண்டு வணங்கத் தொடங்கினர். இறைவனை (முருகனை) 'சேயோன்', 'செவ்வேள்' என அழைத்தனர். "ஞாயிறு கடற் கண்டாங்கு" என்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலது. முருகப் பெருமானின் தந்தையாகிய சிவனும் அக்கினி வடிவினராகவும், சிவந்த திருமேனியர் (சிவனெ னும் செம்மேனியன்) ஆகவும் வர்ணிக்கப்படு கின்றமை ஒப்பிடற்பாலது.

விடியற்காலையிலே கிழக்குத் திசையிலே பொன்நிறமான செஞ்சுடர்வீசி ஒளிவிடும் பகல வனைக் காணும் போது சில உண்மைகள் புலப்படும். ஆதவனின் ஒளி நான்கு திசைக ளிலும் மேலும், கீழுமாக ஆறுபக்கங்களில் ஒளிகாட்டுவதால் அதற்கு ஆற்றல் அளிக்கும் இறைவனின் ஆறுமுகங்களின் உண்மை புலப் படுகின்றது.

ஆதவன் எழுந்தவுடன் அவனின் ஒளி பட்டுக்கடல் நீர் தனது நீலநிறத்தினைச் செவ்வையாக விளங்கிக்காட்டுவதால் அது மயில் எனக் கருதப்பட்டது. அலையின் அசை வுகளால் நீரில் தோன்றும் ஒளி மயிலின் தோகையிலுள்ள கண்களைப்போலத் தென் பட்டது. சூரியன் செங்கதிர்வேலெனக் கருதப் பட்டது. அது "கதிர்வேல்" எனப் பெயர்பெற் றது. எனவே கடலில் எழும் ஆதவனின் காலைக்காட்சி நீலமயில் மேல் ஏறிவரும் முருகப்பெருமானின் அருட்காட்சியாக இலங்கு கின்றது.

உலகம் அனைத்திலும் கலந்து அதனை இயக்கும் தலைவனுக்கு ஞாலத்தையே திரு மேனியாகவும், அதற்கு அடிப்படையாக உள்ள ஐம்பூதங்களும், உயிருமாகிய ஆறினையும் திருமுகங்களாக உருவகித்துக் கூறும் வழக் கம் உள்ளது. எங்கும் இறைவனின் இயல்பை மக்களுக்கு நினைவூட்டக்கருதிய ஞானிகள் இறைவனை சண்முகப்பெருமான் அல்லது ஆறுமுகப் பெருமான் என்றனர். இறைவனின் ஆறுதிருமுகங்களுள் ஐந்து திருவைந்தெழுத் தாகும். ஆறாவது திருமுகம் ஓங்காரமாகிய பிரணவத்தைக் குறிக்கும். இதனையே கந்த புராணம் "ஓமெனப்படுங் குடிலையே ஒப்பிலா முருகன் மாமுகத்துள்ளொன்றாம்" எனக் குறிப் பிடுகின்றது.

கடவுள் என்றும் நிலைத்த பரம்பொருள் என்பவர்கள் அவரைச் சத்தென்றும், முற்றறி வினன் என்பவர்கள் சித்தென்றும், பேரின்ப வடிவினன் என்பவர்கள் ஆனந்தன் என்றும் கூறுவர். இம் மூன்றும் சேர்த்து "சச்சிதானந் தம்" என அழைக்கப்படும். இதற்கேற்றவாறு முழுமுதற் கடவுளைத் தந்தையென்றும், தாயென்றும் வழிபடுதல் மரபு. மேலும் இறை வன் - ஆன்மா தொடர்புகளை தந்தை - சேய், தாய் - சேய், நாயகன் - நாயகி, ஆண்டான் - அடிமை, நண்பன் - நண்பன், குரு - சிஷ்யன் முறைகளிலே பாவனைசெய்து விளக்கும் மர பும் உண்டு. முருகப்பெருமானுக்கும், ஆன்மா வுக்குமுள்ள பக்திப்பாவனைகள் இவ்வாறும் விளக்கப்படும்.

முருகப்பெருமான் பஞ்சபூதங்களுக்கு காரண மானவன். சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து தோற்றம் பெற்று, வாயுவினாலும் அக்கினியாலும் சுமந்து செல்லப்பட்டு, சரவணப் பொய்கையிலே அல்லது கங்கையிலே விடப்பட்டு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டுப் பூமியிலே பல திருவிளையாடல்களை இவர் செய்துள்ளார். இவருடைய ஆறு திருமுகங்கள் பற்றிய விளக்கங்கள் இரண்டு ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. ஆறு என்ற எண் முக்கியமான ஒன்றாகும். முருகனை ஆறு கார்த்திகைப் பெண்கள் வளர்த்தனர். அவருடைய திருமுகங்கள் ஆறு. அவருக்குச் சிறப்பான படைவீடுகள் ஆறு. சுவாமி சிவானந்தர் ஞானம், வைராக்கியம், பலம், கீர்த்தி, செல்வம், ஐஸ்வரியம் ஆகியனவற்றை ஆறுதிருமுகங்கள் குறிப்பாக உணர்த்துவன எனக் குறிப்பிட்டுள்ளார். முருகன் முத்திக்கு வழி காட்டி. சைவசித்தாந்தம் கூறும் மந்திரம், பதம் (சொல்),வர்ணம்(எழுத்து), புவனம்(உலகம்), தத்துவம், கலா(பகுதிகள்) எனும் ஆறு அத்துவாக்கள் இதில் உள்ளடங்கியுள்ளன எனக் கூறப்படுகின்றது. மேலும் இந்துசமய மரபிலுள்ள ஆறு தரிசனங்களையும் ஆறு திருமுகங்களும் குறிப்பன என ஒருசாரார் கருதுவர். இந்துக் கோவிலுக்கு அடிப்படையாக அமைந்துள்ள ஆறு சக்கரங்களையும் இவை சுட்டுவன எனவும் கூறப்படுகின்றது. சிவபெருமானுக்குரிய ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்களுடன் கீழ்நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகமாக முருகப்பெருமான் உயிர்களுக்குத் தனிப்பெரும் கருணைபுரிகின்றார். இதனை

**"ஐந்து முகத்தோடதோமுகந் தந்து**
**திருமுகங்கள் ஆறாகி"**

என கந்தர் கலிவெண்பா கூறும்.

இப்பெயர்ப்பட்ட சிறப்புவாய்ந்த முருகப் பெருமானின் பல்வேறு சிறப்பியல்புகளையும், அவரைப்பற்றிய நிகழ்வுகளையும் குறிப்பிடும் பல நாமாவளிகள் (பெயர் வரிசைகள்) உள்ளன. வடமொழியிலே ஸஹஸ்ர நாமாவளி (1000), திரிசதி (300) நாமாவளி, அஷ்டோத்தரசத நாமாவளி (108), துவாதச நாமாவளி(12) எனப்பல நாமாவளிகள் உள்ளன. இவற்றுள் 'குமார' என்பது இவர் இளமையானவர் என்பதைச் சுட்டும். காங்கேய(ன்) என்பது கங்கையில் வளர்ந்தவர் என்பதைக் குறிக்கும். சரவணபவ என்பது சரவணப்பொய்கையிலே வளர்ந்தவர் என்பதைச் சுட்டும்.

ஸ்கந்த (கந்தன்) என்பது

1. "பகைவரின் ஆற்றலை வற்றச் செய்பவன் (ஸ்கந்நயதி சத்ருன் சோஷயதீதி ஸ்கந்தஹ)

2. ஆறுதிருமேனிகளும் ஒன்றாகப்பொருந்தியவன் (அந்தமில்லதோர் மூவிரு வடிவம் ஒன்றாகி, கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன் - கந்த புராணம்)

3. கந்து அன்-கந்தன், கந்து எனில் பற்றுக்கோடு, ஆனைகட்டுந்தறி, அதாவது ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாகத் திகழ்பவன் என மூன்று பொருள்படும்."

எனத் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் விளக்கியுள்ளார். சுப்ரஹ்மண்ய(ன்) என்பது மிகமேலான பரம்பொருள் எனப் பொருள்படும். இப்படிப் பெருந்தொகையான பெயர்கள் வடமொழியிலிருப்பினும் "சரவணபவ" என்பதே முருகப்பெருமானின் பிரதான ஆறெழுத்து (சடாக்ஷர) மந்திரமாகும் (சரவணபவாய நமஹ- சரவணபவனுக்கு வணக்கம்).

முருகனைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்களிலே 'முருகன்' எனில் 'அழகன்' எனப் பொருள்படும். சேயோன் (செந்நிறமுடையவன்) பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. வேலவன் - வேலன் (வேலாயுதத்தை உடையவன்), ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகன் (ஆறு திருமுகங்களை உடையவன் - இது வடமொழியில் "ஷண்முக" எனப்படும்) முதலியன குறிப்பிடத்தக்கவை. "ஒருநாமம் ஒருருவ மில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி" என மாணிக்கவாசகர் கூறியவாறு உருவம், பெயர் இல்லாத இறைவனுக்கு உருவமும், பெயரும் அளித்து அன்பர்கள் வழிபட்டு உலகியல் வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் நற்பலன்கள் பெறுகின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவனை - முருகனை எவரும் - பெரியபாவம் செய்தோர் கூட மனமார வழிபட்டு உய்தி பெறலாம். அவரை எதிர்த்துப் போர் செய்த சூரனே இறவாப் பேரின்ப வாழ்வு பெற்றான். இதனைக் கச்சியப்பர் தமது கந்தபுராணத்திலே

**"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்**
**தூயவராகிமேலைத் தொல்கதியடைவ ரென்கை**
**ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் முன்னாட்செய்த**
**மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்"**

எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நாம்வாழும் தொல்லைகள் மிகுந்த கலியுகத்திலே பல்வேறு வரங்களைத் தந்து காக்க வல்ல தெய்வமாக "கலியுகவரதனாக" முருகப்பெருமான் விளங்குகின்றார். அவரை வழிபட்டு அனைவரும் உலகியல், ஆன்மீக நற்பேறுகளைப் பெறுவார்களாக.

## காத்திடுவாய் நல்லைக் குமரா!

நல்லூரெனும் பதியினிலே குடிகொண்ட வேலவா...
நம்பிக்கை கொண்டுன்னை தொழுகின்றோம் சண்முகா...
நற்கருணை புரிந்து வரும் மால் மருகா...
நல்லதொரு தீர்வை ஈந்திடு திருக்குமரா...

அழுகின்ற குரலுக்கு அபயமளிக்கும் கந்தா...
அல்லல்களை அறவே களைந்திடு கடம்பா...
அண்டிவந்தோரை அரவணைக்கும் முருகையா...
அல்லும் பகலும் நினைக்கின்றோம் காத்திடு கார்த்திகேயா...

சேவல் கொடியை துணையாய்க் கொண்ட அழகா...
சேமங்கள் பல செய்து காத்த ஆறுமுகா...
சேனாதிபதியாய் தேவர்க்குதவிய கதிரேசா...
சேவகம் செய்வோரை காத்திடு குருபரா...

அலங்காரக் கந்தனென பேரெடுத்த சரவணபவா...
அபயம் அளித்திட வேண்டும் வள்ளி மணவாளா...
காக்க கதிகொண்டெழுந்திடு குமரேசா..
காலடியை வணங்குகின்றோம் காத்திடு நல்லைக் குமரா!

**நாகமணி மகேந்திரலிங்கம் (கோப்பாய்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

## யாழ்ப்பாணம்.

### ரண்சுரெக்கும் கடன்சேவை (தங்கநகை கடன் சேவை)

**அவசரத் தேவைகளின்போது உதவ, சிநேகபூர்வமான சேவை தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.**

- தேவைகளை இனங்கண்டு துரிதசேவை!
- கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரகசியம் பேணல்!
- உங்கள் தங்கநகைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு!
- 22 கரட் தரமுடைய தங்கநகையின் பவுண் ஒன்றுக்கு 4000/- வரை கடன் பெறும் வசதி!
- இவ்விடயத்திற்கென ஒதுக்கப்பட்ட விஷேட அறையினுள் கொடுக்கல் வாங்கல்கள்!
- இலங்கையில் காணப்படும் ஆகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களைப் பெறுவதற்கு எங்களது வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு!

### வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவில் மாற்றும் சேவையும் நடைபெறுகின்றது.



மேலதிக விபரங்களுக்கு

பிரதான முகாமையாளரைச் சந்தியுங்கள்

# இலங்கை வங்கி

மேற்றரக்கிளை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் விளைந்தெம்மை ஆட்கொண்டு
அறிவினால் விளைந்தெமக்கு அருள் தந்து
வேலினால் காத்தெம்மை களிப்பூட்டி
பகைவர் தனை விரட்டிட தேரேறி வா முருகா!

என்ன! அக்கா

நல்லூருக்கு மினுமினுப்பாக நல்ல டிசைன்களில்
அழகான நகைகள் அணிந்திருக்கிறாயே!
உண்மையில் கலைவாணி மாதிரியே அழகாய் இருக்கிறாய்!!



**'ஆமாம் கலைவாணியே தான்'**

நான்
22 கரட் தங்க நகைகளை
அழகான டிசைன்களில் செய்த இடம் தெரியுமா!

இதோ!

# கலைவாணி நகை மாளிகை

**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

**111B (235), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

தீராத வினை தீர்க்கும் நல்லூர் முருகா!
நல்லை நகர் நாடி மக்கள் கூட்டம்
கலையாடி வருகுதப்பா, ஏனென்று கேளாயோ
வஞ்சகர் கூட்டத்தினால் தமிழினம் அழியலாமோ சொல், வேல் வீசி

தற்கால நவநாகரீக கட்டடங்களுக்கு ஏற்ப
சகலவிதமான வர்ண பெயின்ட் வகைகளும்
சுண்ணாம்பு, கட்டடப் பொருள்களும்
விற்பனையாளர்



# VEL MURUGAN TRADERS

**நீங்கள் நாடவேண்டிய இடம்**

# வேல் முருகன் வணிக நிலையம்

**56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீபதிசர்மா கிருஸ்ணானந்தசர்மா**
**விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**

# அன்பு நெறி

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் எமது சைவசமயம் பல்வேறு வழிபாட்டு முறைகளைத் தன்னகத்தே கொண்டமைந்த பெருஞ்சமயமாகும். இவ் வழிபாட்டு அம்சங்கள் மக்கள் வாழுகின்ற சூழல், மக்களின் வழிவந்த பாரம்பரிய நடைமுறைகள், நம்பிக்கைகள், சமயம் சார்ந்த அறிவியல் போன்ற பல்வேறு காரணிகளினால் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டதாக விளங்குகின்றது. சைவசமயத்தவரின் வழிபாட்டு முறைகளைக் கூறுகின்ற சமய நூலாக வேத சிவாகமங்கள், புராணங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் என்பன விளங்குகின்றன. வேதசம்பந்தமுடையதாதலால் வைதீக சமயம் என சிறப்பாகவும் அழைக்கப்படும். வைதீகம் அறிவுநெறி சிவம் - அன்பு நெறி, அறிவு நெறி அன்பு நெறியில் முற்ற வேண்டும். அன்பு நெறியில் முற்றுப்பெறும் போது ஒருவன் உண்மையான இந்துவாகின்றான். ஒரு உயிரையும் இம்சிக்காது தர்ம வழியைப் பின்பற்றி எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துபவனே இந்து ஆவான்.

இறைவன் பால் உண்டாகும் மேலான அன்பு, பக்தி என சிறப்பாகக் கூறப்படும். நாரத பக்தி சூத்திரம் “ஸாது அஸ்மின் பரம ப்ரேம ரூபா” எனக் குறிப்பிடுகின்றது.

விசிட்டாத்துவைத ஆச்சாரியரான ஸ்ரீ ராமனுஜர் பக்திக்கு அடிப்படையாக ஏழு வகையான பயிற்சிகளைப் பற்றிக் கூறுகிறார். அவையாவன உண்ணும் உணவைத் தூய்மையாகத் தேர்ந்தெடுத்தல், ஆசைகளிலிருந்து விடுபடுதல், கடவுள் நினைவாக இருத்தல், நல்லதை எப்பொழுதும் செய்தல், தூய்மையான எண்ணம், பேச்சு, செயல் ஆகியவற்றைப் பின்பற்றி அஹிம்சை, தர்மம் என்பவற்றின் வழி வாழ்தல், எளிமையாக இன்முகத்துடன் சாந்தமாக இருத்தல், மகிழ்ச்சியான நிலையிலும் அடக்கமாக இருத்தல் என்பனவாம். இவ்விதமான வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகும் ஒருவனே இறைவன்பால் பேரன்புகொள்ளும் பக்தி வழிபாட்டிற்குத் தகுதியுடையவனாகின்றான். அவனே இறைவனின் பேரன்புக்கும் உரியவனாகின்றான். மனிதனுடைய குணஇயல்புகளும் நடத்தைகளும் சாத்வீகம், தாமதம், ராஜஸம் ஆகிய முக்குணங்களின் வெளிப்பாடேயாகும். இவை அவனது உணவு வகை மற்றும் வாழ்க்கை முறைமைகளின் தன்மையினாலேயே ஏற்படுகின்றது. ஒருவன் உண்மைச் சமயியாக வாழ்வதற்கு சமய நூலறிவும் சமய வாழ்வும் இன்றியமையாதது.

இன்றைய மனிதகுல வரலாற்றை நோக்கும் போது நாகரிகம், பண்பாடு என்பன வளர்ச்சி பெற்று மனிதனுடைய வாழ்க்கை முறைகளிலும் பல்வேறு முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. தாய்நாட்டிலும் இங்கும் காலந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோறும் பல சமயப் பெரியார்களும் நிறுவனங் களும் எமது சமய வாழ்க்கையைப் போதித்து மனித குலத்தை வழிநடத்தி வருகின்றனர். எனினும் இத்தகைய நிலைமைகளிலும் முழு மையான சமயவாழ்வைப் பின்பற்றி வாழ்வது அருகிவருகின்றது. சைவசமயத்தின் பெயரால் பல்வேறு காரியங்கள் இன்று நடைபெற்று வருகின்றன. இவைகளில் சில பாரம்பரிய நடைமுறைகளிலிருந்து மாறுபட்டதாகவும் காணப்படுகின்றன.

இறைவன் அன்பு வடிவினன்; அன்பே சிவம் என்பார் திருமூலர்; சமய இலக்கியங் களான திருக்குறள், கீதை, திருமந்திரம் என்பன மக்களின் வாழ்வியல் ஒழுக்கத்தை வலியுறுத் திக் கூறுகின்றன. எமது சமயஞ் சார்ந்த ஒவ்வொருவராலும் அன்பு, உயிர்கள் மேல் பற்று, (ஜீவகாருண்யம்) ஒழுக்கம் என்பன பின்பற்ற வேண்டிய முக்கிய தர்மங்களாகும். சமயங்கள் அற வாழ்வையே போதிக்கின்றன. சமய நூல்களில் கூறப்பட்ட அடிப்படைச் சமய நெறியைப் பின்பற்றி சமயவாழ்க்கை வாழாத சமயி ஒருவன் சமயத்திலிருந்து பிறழ்ந்தவனா கவே கருதப்படுகின்றான். ஒவ்வொரு சமயியும் தம்மைச் சுயபரிசோதனை செய்து உண்மைச் சமய நெறியில் தாம் வாழ்வதற்கு திடசங்கற் பம் செய்தல் வேண்டும். சமய அறிவு நூல் களைக் கற்க வேண்டும். மூட நம்பிக்கைக ளையும் சமயத்தின் பெயரால் நடைபெறும் அநீதிச் செயல்களையும் களைதல் வேண்டும். அறிஞர்களையும் - வழிநடத்துகின்ற உயர் சமய நிறுவனங்களையும் கலந்து ஆலோசித்து மக்களினுடைய பண்பாடு - மனிதநேயம், உயிர்களின் மேல் பற்று தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிக்கும் பண்பு - அறம் - ஒழுக்கம் - தானம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளக்கூடியதாக சடங்குகளைப் பின்பற்ற வேண்டும். காமம், அறியாமை, பேராசை எனும் தீய குணங்களால் உந்தப்பட்ட கயவர் களே ஊன், மது, மீன் என்பவற்றைப் படைத் திடும் வழக்கத்தைப் பின்னர் புகுத்தினார்கள் என மகாபாரதம் கூறுகின்றது.

சங்கத்தமிழ் இலக்கியங்களும் உயிர்வதை யைக் கண்டிக்கின்றன. போரின்போது கூட ஆவினத்தைக் காக்கும் பண்பு பற்றியும், பாவம் செய்வோரின் முதல் வரிசையில் ஆவின் முலையை அறுத்த அறனில்லாதோரை வைத்து அவர்களைக் கழுவாய் செய்யும் மரபினையும் புறநானூறு கூறுகின்றது. 'ஆவுரித்துத் தின்றுழ லும் புலையர்' என நாவுக்கரசரும் பசுக்களைக் கொன்று தின்பவர்களைப் பாவிகள் என சுந்த ரரும் இயம்புகின்றனர்.

வேதங்களிலே 'அக்னயா' கொல்லப்படத் தகாதது என பசு போற்றிக் கூறப்படுகின்றது. திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள் - நல்லைநகர் நாவலர் போன்ற பெரியார்களும் உயிர் வதையைக் கண்டித்துள்ளனர்.

அநித்தியமான புகழ், செல்வம் போன்ற சுகங்களை அடைவதற்காகப் பிராணிகளைத் துன்புறுத்தி தமது பிறவிப் பயனைப் பலனற்ற தாகச் செய்து பின் நரக துன்பத்தை அனுப விப்பதற்குக் காரணமான வைதிக தர்மத்திற் குப் புறம்பான தள்ளத்தகுந்த வாமாசார வழி பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுதல் கூடாது என ஷண்மதங்களை ஸ்தாபித்த சங்கரரும் கூறுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

நல்லாறு - (நல்லொழுக்கம்) எனப்படுவது யாதெனின் யாதொன்றும் கொல்லாமை ஆகும் நெறி என வள்ளுவன் கூறுகின்றான்! மேலும் "நன்றாகும் ஆக்கம் யாதெனினும் சான் றோர்க்கு கொன்றாகும் ஆக்கம் கடை" என நன்மையைக் கருதியதாக செய்கின்ற செயல் களுக்குக் கொல்லுதல் செய்யப்படின் அது சான்றோர்க்கு உரிய இழிவான செயல் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார். ஆறறிவு படைத்த மனித குலம் இறையின் பெயரால் தம் நன்மை கருதிச் செய்கின்ற பலியிடுதல் முதலியன அருவருக் கத்தக்க செயல் என இடித்துரைக்கின்றார். மேலும் அவ்விதம் பலியிடுதல் முதலியன செய்தோர் தாம் விரும்பிய பலன்களை எய்த மாட்டார்கள். நோயுற்ற உடம்புடன் வறுமையோடு தீய வாழ்க்கையையே வாழ்வர் என்பதை

**"உயிருடம்பு நீக்கிய என்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கையாவர்"** எனக் கூறு கிறார்.

மேலும் கீதையும்

**"சர்வபூதானாம் அத் வேஷ்டாமைத்ரக**
**கருணா ஏவ ச"**

என நண்பனாய் கருணை உடையவனாய் எல்லா உயிர்களுக்கும் துவேஷமில்லாதவ னாய் கடவுளுக்கு உகந்த பக்தன் இருத்தல் வேண்டும் என அடியவர்களின் தன்மையை எடுத்துக்கூறுகின்றது. "ஈரமுடையர் காண்பர் இணையடி" என திருமூலரும் அன்புநெறி ஒழுகுபவரே இறைவனின் திருவடி நிழலை அடைவர் எனக் கூறுகின்றார்.

மேலும்

**"பற்றாய நற்குரு பூசைக்கும் பண்மலர்**
**மற்றோ ரணுக்களை கொல்லாமையொண்**
**மலர்"**

என திருமூலர் கொல்லாமை பற்றிச் சிறப் பாகக் கூறி கொல்லுதலைச் செய்யும் ஈனர் அடையும் நிலை பற்றி

**"கொல்லிடுகுத் தென்று கூறியமாக்களை**
**வல்லிடிக்காரர் வலிக்கயிற்றால் கட்டிச்**
**செல்லிடுதில்லென்று தீவாய் நரகிடை**
**நில்லிடுவென்று நிறுத்துவர் தாமே"**

என கொலைத்தொழிலைச் செய்த பாதகர்கள் நரகத்தில் நெருப்பினிடை வெந்து துன்பம் அனுபவிப்பார்கள் என சிறப்பாகக் கூறுகிறார்.

எமது சமயம் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு படிமுறைகளைக் கொண்டது. கிரியை முறைகளில் பக்தியே சாதனமாக அமைகிறது. (இறைவன் மீது மூட பக்தி செலுத்துவதைவிட்டு மதுரபக்தியாக) காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு இட்டுச்செல்லும் வழிகள் பல இருக்கும்போது அவற்றை உணர்ந்து அதன்வழி நடப்போம் எனவும், கண்ணீர் மல்க கதறியழ பலியிடும் வழக்கத்தையும் கைவிட்டு கொல்லாமை, புலாலுண்ணாமை போன்ற நெறி களைக் கடைப்பிடித்து உண்மைச் சமயியாக வாழ மக்கள் திடசங்கற்பம் செய்துகொள்ள வேண்டும்.

இத்தகைய நெறிகளைக் கடைப்பிடிப்பத னால் எமது சமயமும் பண்பாடும் மேலோங்கி வாழ்வு சிறந்ததாக அமையும் என்பது திண் ணம். ✦

## தூய பக்தி

தீர்த்தங்களில் சென்று நீராடுவதால் வாழ்க்கை புனிதமாகிவிடாது. மனம் தான் சிறந்த தீர்த்தம் ஆடம்பரமானவாழ்க்கை நமக்குச் செல்வம் ஆகாது. ஞானம் ஒன்றுதான் சிறந்தசெல்வம். எளிமையான உண்மை அன்புதான் – தூய பக்திதான் இறைவனுக்கு செய்யும் உயர்ந்த பூஜை.

**கபீர்தாசர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் B.A.(Hons)
விரிவுரையாளர் சம்ஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

# குமாரதந்திரம் கூறும் சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்கள்

குமாரதந்திரம் மூலசிவாகமங்கள் இருபத்தெட்டினுள் இருபத்திரெண்டாவதும், ஈசான முகத்திலிருந்து தோன்றிய லலிதாகமத்தின் உபாகமங்களுள் ஒன்றும் ஆகும். சிவாகமங்களின் உபாகமங்களுள் ஒன்றாக விளங்கும் இந்நூல் தந்திரம் எனும் பெயர் தாங்கியதாக சுப்ரம்மண்யாலயத்தின் ஆலய அமைப்பு விதி i aAk; கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம், நித்யபூஜை முதலானவற்றைக் கூறும் தனித்துவம் மிக்கது. இத்தகைய சிறப்பு மிக்க இந்நூலில் கூறப்படும் சுப்ரம்மண்யரின் பதினாறு வகையான மூர்த்தி பேதங்களே இங்கு நோக்கப்படுகின்றன.

சிவாகமங்களின் உற்பத்தியினை ஒவ்வோராகமத்தின் தந்திராவதாரபடலம் கூறுகின்றது. குமார தந்திரம் எனும் இவ்வுபாகமம் - குமாரக் கடவுளின் அருளைப் பெறும் பொருட்டு செய்யப்படும் கிரியைகளின் விதியைக் கூறும் நூல் - எனும் பொருள்படும். ஆகமம் தந்திரம் என்றும் அழைக்கப்படும். குமாரதந்திரம் எனும் இவ்வாகமம் சதாசிவனது ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றிய முனிவர்களுள் ஒருவரான கௌசிக முனிவருக்கு சிவனால் உபதேசிக்கப்பட்ட சிறப்புடையது. இந்நூலில் ஐம்பத்தொரு படலங்களும் 3523 சுலோகங்களும் உள்ளன. மேலும், இந்நூலோடு சயன விதிப்படலமும் உண்டெனக் கூறப்படுகின்றது.

இறைவனின் திருவுருவச் சிறப்புக்களை சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. உரிய விதிப்படி அமையவேண்டிய ஒரு மூர்த்தியின் லக்ஷணங்களை பிரதிமா லக்ஷணவிதி சிறப்பாகக் கூறுகின்றது. ஏனைய இடங்களில் தியான சுலோகங்கள் கூறப்படுவதும் உண்டு. அந்நிலையிலேயே சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்கள் பதினாறின் அமைதிகளை குமார தந்திரம் மந்திரோத்தார விதி படலம் (2) 'ஞானசக்தி தரன், ஸ்கந்தன், தேவ சேனாபதி, சுப்ரம்மண்யன், கஜாரூடன், சரகானனசம்பவன் (சரவணபவன்), கார்த்திகேயன், குமாரன், ஷண்முகன், தாரகாந்தகன், சேனானீ, ப்ரம்ம சாஸ்தா, வல்லீகல்யாணசுந்தரன், பாலன், க்ரௌஞ்ச பேத்தா, சிகிவாகனன்" எனக் (48-50) கூறுகின்றது. இப்பெயர்களோடு சுவாமி எனும் பெயர்களை இணைத்து அழைப்பது மரபாக உள்ளது.

பொதுவாக சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்களை நோக்கும்போது வேறுபல பெயர்களில் நோக்கப்படும் தன்மைகள் பல காணப்படுகின்றன. சிறப்பாக அம்சுமத்பேதாகமம், காரணாகமம், காமிகாகமம், சுப்ரபேதாகமம், சில்பரத்தினம், விஷ்ணு தர்மோத்தர புராணம், ஸ்ரீதத்துவ நிதி ஆகியன தனித்துவமான தன்மையில் சுப்ரம்மண்யருக்குரிய வேறுவிதமான மூர்த்தி பேதங்களைக் கூறுகின்றன. பல்வேறு ஆகமங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கெட்டும் பிரிந்தவரை சேர்த்து வைத்து
திருவருள் தந்திடவே எழுந்து வா முருகா
நீள் துயரை நிறுத்தி வைக்க - நல்லூர் கந்தா
நீ தங்கரதம் ஏறிவந்து தரிசனம் தாருமையா

# இதோ! யாழ்.நகரில்

**புதுமையும், எழிலும், பொலிவும்**
**நிறைந்து விளங்கும் புடவை ஸ்தாபனம்**
உங்கள் மன நிறைவுக்கு ஏற்ப விரும்பிய பட்டு, பருத்தி ஜவுளி ரகங்கள்
மணமக்கள் முகூர்த்த பட்டுப் புடவைகள்
தயார் செய்த ஆடைகள்
வாங்குவதற்கு நாடிவாருங்கள்

# சிவ கணேசன் ஸ்ரோர்ஸ்

**41, பெரியகடை, யாழ்ப்பாணம். தொ.பே. 2063.**

**யாழ்.நகரில்...**

★ பாடசாலை உபகரணங்கள் சகலதும்
★ மாணவ, மாணவிகளுக்குத் தேவையான விதத்தில் பைகள்
★ காரியாலயத்திற்கேற்ப சகல உபகரணங்கள்,
★ காகிதாதிகள் உட்பட அச்சுக்கூடங்களுக்குத் தேவையான பலவர்ண காகிதாதிகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய கவர்ச்சியான ஸ்தாபனம்.
★ மாணவ, மாணவியருக்கு கவர்ச்சி தரும்
அப்பியாசக் கொப்பி உற்பத்தியாளர்

# பேப்பர் ஹவுஸ்

**300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 2783.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக வரதனாம் அந்த நல்லைக் குமரன்
கண்கண்ட தெய்வம் நீ சரவணபவா
பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவோமோ நாங்கள் ஆறுமுகன் தஞ்சமல்லோ!

**கட்டிடப் பிரியர்களே!**

"றோபியலாக்" எமல்சன் பெயின்ற்
மற்றும்
எனாமில் பெயின்ற் வகைகளை
எம்மிடம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**விவசாயிகளே!**

உங்கள் தோட்டப் பயிர்களை
நன்கு வளர்த்தெடுத்து பாதுகாப்பதற்கு
இதோ பூச்சி கொல்லிகளை
நாம் விநியோகிக்கின்றோம்.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

*மேற் கூறிய இரண்டிற்கும் வடமாகாண ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளோம்.*

**நாடுங்கள்**

# சிவா பிரதர்ஸ்

**24, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**கிளை: 246, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.**

அதிகாலை நாலரைக்கு நாதமணி கேட்கையிலே
நான் துயில் எழுந்து கை கூப்பி தொழுதிடுவேன்
உன்னை வந்து, பணிந்து வணங்கையிலே - முருகா!
நின் அருளை தந்திடுவாய் - ஓம் சரவணபவா!!

*யாழ். மத்தியில் பளிச்சென விளங்கும் ஸ்தாபனம்*

## 'இரத்தினம் பாமசி'

**ஓஹோ.** *அதுமட்டுமா அங்கே*

*சகலவிதமான குறோசறிஸ் பொருள்கள் நிறைந்து கிடக்கின்றன.*
*உங்கள் தேவைக்கேற்ப சகல பொருள்களையும்*
*ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்*

# RATNAM PHARMACY & GROCERIES

**388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 2667.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலிருந்தும், இதிஹாச புராணங்களிலிருந்தும் நூல்கள் பலவற்றிலிருந்தும் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களால் கொடுக்கப்பெற்றிருக்கும் சுப்ரம்மண்ய பராக்கிரமத்தில் 88 வகையான மூர்த்தி பேதங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுப்ரம்மண்யரின் உற்பத்தி பற்றி பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றினை இதிஹாசங்களும் புராணங்களும் கதைகளாகச் சித்திரிக்கின்றன. அவற்றினூடாகவே சுப்ரம் மண்யரின் தெய்வீகவியல் வரலாறு நோக்கப் படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் சுட்டப்படும் முருகன், செவ்வேள் முதலான தெய்வங்களோடு தொடர்புபடுத்தப்படும் சுப்ரம் மண்யரை வடமொழியில் பல ஸ்தோத்திரங்கள் போற்றுகின்றன. குமாரனின் பிறப்புப் பற்றிக் கூறும் மஹாகாவியமான மஹாகவி காளிதாஸரின் குமாரசம்பவ மஹாகாவியம் விளங்குகின்றது. தமிழிலும் பல தோத்திரங்கள், துதிகள் காணப்படுகின்றன.

சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்களுள் ஷண்முகமூர்த்தியை உத்தம தசதால அளவில் அமைக்கவேண்டும் என்று அம்சுமத்பேதாகமம் (11.1) கூறுகின்றது. பொதுவாக சுப்ரம்மண்யரின் திருவுருவத்தை கன்யதசதால அளவு முறையில் அமைப்பது மரபும் பொதுவிதியுமாகும். சுப்ரம்மண்யருக்குரிய லக்ஷணங்களை குமார தந்திரத்தின் 24ஆவது படலமான ப்ரதிமாலக்ஷண விதி படலம் ஒவ்வொரு மூர்த்திக்குமுரிய அளவுப் பிரமாணங்களை நன்கு தெளிவுபடுத்துவதோடு ஆயுதங்களையும் அணிகலன்களையும் தெளிவாகக் கூறி விளக்குகின்றது. குமாரதந்திரம் மந்திரோத்தாரவிதி படலம் (2) கூறும் சுப்ரம்மண்ய சோடச மூர்த்தி தியான பேதங்களில் குறிப்பிட்டபடி முறையே நோக்குவோம்.

**1. (ஞான) சக்திதரஸ்வாமி**

'ஒரு முகமும் இரு கைகளும் உடையவரும்; இடது கையில் வஜ்ரத்தையும் வலது கையில் சக்தியையும் ஆயுதமாகக் கொண்ட இச்சா, ஞானக்ரியா சக்திரூபமாக விளங்கும் சக்திதரனை வழிபடுகின்றேன்.' (II.52(1))

**2. ஸ்கந்தஸ்வாமி**

'வழிபடுவோர்க்கு கல்ப்பவ்ருக்ஷம் போல் விளங்குபவரும் தாமரையின் சிவப்பு நிறத்தையுடையவருமாகிய ஸ்கந்தனை; இரு கைகளுடையவரும் அனாதியானவரும் ஒரு முகமுடையவரும் இடது கையை தொடையில் தரித்தும் வலதுகையில் தண்டத்தைத் தரித்தும் கௌபீனத்தை அணிந்தவருமாக காத்யாயணியின் மகனை நான் வழிபடுகின்றேன், (II.52(2))

**3. ஸேனாபதி**

'சூரியனைப் போல் பிரகாசம் உடையவரும் பன்னிரண்டு கண்களும் ஆறு முகங்களும் புன்சிரிப்பும் உடையவரும், இடது தொடையில் தேவசேனை ஸ்வாமியை இணைத்தவாறாக விளங்க தேவியின் மார்புக்கு மேலே கையை யுடையராக வலது கையில் (மேலிருந்து கீழாக முறையே) சக்தி, பாணம், கட்கம், கொடி, கதை, அபயம் இவைகளையும் இடதுகையில் (மேலிருந்து கீழாக முறையே) வஜ்ரம், வில், கேடயம், தாமரை, சூலம், வரதம் ஆகியவற்றைத் தாங்கியவராக விளங்கும் சேனாபதியை வணங்குகின்றேன்.' (II).52(3))

**4. சுப்ரம்மண்யஸ்வாமி**

'குங்குமச் சிவப்பு நிறமும் சந்திரனின் ஒளியுடைய முகமும் கேயூரம் முதலிய சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும் சுவர்க்கம் முதலிய சௌக்கியத்தை அளிக்கக் கூடியவரும் வலது இருகைகளிலும் மேலே தாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையும் கீழே அபயமும் வலது இரு கைக ளில் மேலே சக்தியும் கீழே சேவலும் தாங்கி சிவப்பு ஒளியின் சிறப்போடு (காஞ்சி யோடு) பிரகாசிப்பவருமாகிய பயத்தைப் போக்கும் சுப்ரம்மண்யரை வணங்கி உபாசிக்கின்றேன்.' (II.52(4))

**(இன்னொரு விதம்)**

'ஒரு முகமும் இருகைகளும் உடைய வரும் இடது கையினைத் தொடையில் தரித் தும் வலது கையில் அபயம் தரித்தும் இருக் கின்ற சிவப்பு சூரிய ஒளி பொருந்திய (பிரகாச முடைய) சுப்ரம்மண்யரை உபாசிக்கின்றேன்.'

### 5. கஜவாஹனஸ்வாமி

'ஒரு முகமும் இரு கண்களும் இடது இரு கைகளில் வரதம், சேவல் ஆகியவற்றைத் தரித்தவரும் வலது இரு கைகளில் அபயமும் சக்தியும் தரித்தவரும் தவத்தோடு கூடியவரும் சிவனின் மகனும் யானையை வாகனமாக உடையவரும் இஷ்ட சித்தியை அளிப்பவரு மாகிய கஜவாஹன ஸ்வாமியை தினமும் வணங்குகின்றேன்.' (II.52(6))

### 6. சரவணபவஸ்வாமி

'இடது கைகளில் சக்தி, கொடி, சேவல், தண்டம், அம்பு, வரதம் என்பவற்றையும் வலது கைகளில் மணி, தாமரை, பாசம், டங்கம், வில், அபயம் ஆகியவைகளை உடையவரா வும் மஞ்சள் நிறமும் அழகும் நிறைந்தவ ராகவும் பன்னிரண்டு கைகளையுடையவராக வும் தேவர் சமூகத்தால் உபாசிக்கப்படுபவரும் நல்லோரால் பூஜிக்கப்படுபவருமாகிய சரவ ணோத்பவரை ஆறு முகங்கள் உடையவராக பாவனை செய்கிறேன்.' (II.52(7))

### 7. கார்த்திகேய ஸ்வாமி

'இடது (மூன்று) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குலிசம், கேடம் என்பனவற் றையும் வலது (மூன்று) கைகளில் (கீழ் இருந்து மேலாக) அபயம், சக்தி, கட்கம் என்பவற்றைத் தாங்கிய சிவந்த சூரியப்பிர காசத்தோடு கூடியவரும் நல்லோரால் பூஜிக் கப்படுகின்றவரும் தாமரையை ஒத்த ஆறு முகங்களையுடையவருமாகிய கார்த்திகேயனை வணங்குகின்றேன்.' (II.52(7))

### 8. குமாரஸ்வாமி

'வலது (இரு) கைகளில் கூரான கத்தி, வாள், ஆகியனவற்றையும் இடது (இரு) கைகளில் முகத்தை நோக்கிய சேவல், கேடயம் ஆகியன வற்றையும் தரித்தவராகிய வள்ளியின் கண வரை; அறிவாளிகளின் கண்களில் பூரண நிலவு போன்று விளங்குபவரும் மங்களத் தையே வழங்குகின்றவருமாகிய குமாரனை சரணடைகின்றேன்.' (II.52(8))

### 9. ஷண்முகஸ்வாமி

'சிவந்த காந்தியையுடையவரும் அம்பு களை எய்வதால் அபயமளிப்பவரும்; சிறந்த மயிலின் மேல் விளங்குபவரும் தேர்வர்களான போர்ப்படைகளையுடையவரும்; இனிமையான வண்டுகளின் நாயகனும் தாமரை போன்றவ னும் ஆறுமுகங்களையும் பன்னிரு கண்களை யும் உடையவரும் வலது (ஆறு) கைகளில் (மேலிருந்து கீழாக) சக்தி, பாணம், கிருபாணம், கொடி, கதை, அபயம் என்பவைகளையும், இடது (ஆறு) கைகளில் (மேலிருந்து கீழாக) வஜ்ரம், அம்பு, தாமரை, கேடயம், சூலம், வரதம் என்பவற்றைத் தரித்தவருமாக வணங்கு கின்றேன்.' (II.52(9))

### 10. தாரகாரிஸ்வாமி

'இடது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், அங்குசம், கொடி, கேடயம், அம்பு, வஜ்ரம் என்பவைகளையும்; வலது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) அப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம், பாசம், சக்ரம், வாள், முசலம், சக்தி என்பவைகளையும் பன்னிரு கைகளில் தாங்கிய கோடி சூரிய (சிவந்த) கிரணங்களை யொத்த தேவர்களின் அழிவுக்குக் காரணமாகிய தாரகனை அழித்த தாரகாரியை வழிபடுகின்றேன்.' (II.52 (10))

### 11. ஸேனாபதிஸ்வாமி

'வலது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், வாள், பாசம், அங்குசம், சக்தி, சூலம் ஆகியவைகளையும்; இடது (ஆறு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குலிசம், பாசம், பத்மம், தண்டம், கதை என்பவைகளையும் இருமருங்கிலுமுள்ள பன்னிரு கைகளில் தாங்கியவரும்; பன்னிரு தாமரை போன்ற கைகளையுடைய தேவசேனாபதியை வணங்குகின்றேன்.' (II.52 (11))

### 12. ப்ரம்மசாஸ்தாஸ்வாமி

'இடது இரு கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குண்டிகை என்பவைகளையும்; வலது (இரு) கைகளில் (மேலிருந்து கீழாக) அக்ஷமாலை, அபயம் என்பவற்றை தாங்கியவரும்; விசாக நக்ஷத்திரத்தில் தோன்றியவரும்; காட்டில் பிறந்த, கண் போன்ற வள்ளியோடு கூடியவரும்; ஒரு முகத்தையுடையவரும்; காட்டில் பிறந்த வள்ளியின் கட்டளைக்குக் கீழ்ப்படிபவருமாகியவரை வணங்குகின்றேன்.' (II.52 (12))

### 13. வள்ளீகல்யாணசுந்தரஸ்வாமி

'வலது (இரு) கைகளில் (மேலிருந்து கீழே) கெண்டி, அபயம் என்பவைகளையும் இடது (இரு) கைகளில் (மேலிருந்து கீழாக) அக்ஷமாலை, ஊருஹஸ்தம் உடையவருமாக வலது புறம் வள்ளியும் முன்னே அக்னி வேதிகைக்கு இரு புறத்திலும் அக்னி வளர்ப்பவர்களும்; மந்திரம் சொல்பவரும் இருக்க வள்ளிக்கு வலதுபுறத்தில் ஜல பாத்திரத்துடன் சங்கு, சக்கரம் தாங்கிய விஷ்ணு எல்லா லக்ஷணங்களோடு விளங்க எல்லா தேவகணங்களும் வணங்கும் வள்ளி கல்யாண மூர்த்தியை வணங்குகிறேன்.'

### 14. பாலஸ்வாமி

'வலது கையில் (அங்கையில்) தாமரையும்: இடது கையினை கடிஹஸ்தமாகக் கொண்டவரும் தாமரையின் காந்தியை நிகர்த்த ஒரு முகத்தினை உடையவரும் இளமையினை வளரச் செய்யும் சிவனது மகனும் மிகுந்த பலம் பொருந்திய தோள்களையுடைய பாலஸ்வாமியை வணங்குகின்றேன்.' (II.52 (14))

**(இன்னொரு விதம்)**

'ஒரு முகமும் இரு கண்களும் இரு கைகளிலும் தாமரைகளையேந்தியவரும் அந்தணருக்கு விருப்பமானவரும் சூரியனை ஒத்த ஒளியுடைய பாலரூபம் உடையவரை வணங்குகிறேன்.'

### 15. க்ரௌஞ்சபேத ஸ்வாமி

'வலது (நான்கு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், க்ருபாணம், சக்தி, பாணம் என்பவைகளையும் இடது (நான்கு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், குலிசம், அம்பு, கேடயம் என்பவைகளைத் தரித்தவரும், எட்டுக் கைகளிலும் ஆயுதங்களைத் தாங்கிய தேவர்களின் சேனைத் தலைவரும், தாமரை போன்ற ஆறுமுகங்களை உடைய க்ரௌஞ்சத்தைப் பிழந்தவரை வழிபடுகின்றேன்.' (II.52 (15))

### 16. சிகிவாஹனஸ்வாமி

'வலது (இரு) கைகளில் (கீழிருந்து மேலாக) அபயம், வஜ்ரம் என்பவைகளையும்; இடது (இரு) கைகளில் (கீழிருந்து மேலாக) வரதம், சக்தியை உடையவரும் ஒரு முகமுடையவரும் தேவலோகப் பகைவர்களை அழித்து இடையூறு களைந்தவரும், ருத்ரபவனான மயிலை வாகனமாக உடையவரை வணங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றேன்.' (II.52 (16))

சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்கள் இரண்டு கைகள் முதல் பன்னிரண்டு கைகள் உடைய வராகவும், ஒரு முகம் அன்றில் ஆறுமுகங் களையுடையவராகவும் இருக்கும் அதேவேளை ஓருடல் இருபாதங்கள் அடிப்படையாக அமை கின்றன. சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்களுள் ஒருமுகமுடைய மூர்த்திகளாக ஞானசக்தி தரன், ஸ்கந்தன், சுப்ரம்மண்யன், சிகிவாஹனன், பாலஸ்வாமி, வள்ளிகல்யாண சுந்தரர், ப்ரம்ம சாஸ்தா, குமாரசுவாமி, கஜாரூட ஸ்வாமி ஆகி யோரும் ஆறுமுகமுடையவர்களாக ஏனைய மூர்த்திகளான (தேவ) சேனாபதி, சரவணபவ ஸ்வாமி, கார்த்திகேயன், ஷண்முகன், தார காரி, சேனானீ, க்ரௌஞ்சபேத்தா ஆகியோர் விளங்கும் அதேவேளை கார்த்திகேயன் ஆறு கைகளையும், க்ரௌஞ்சபேத்தா எட்டுக் கைகளையுமுடையவராகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. ஷண்முக ஸ்வாமியின் ஆயுதங்களின் வரிசையிலும் ஒழுங்குகளிலும் குறிப்பாக பன்னிருகையோன் என (த்விஷட் புஜ) ஆறுவகைப் பேதங்கள் சுட்டப்படுகின்றன. (குமாரதந்திரம் 24.123-130) இத்தோடு ஷண் முகரின் ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் இருப்பதாகச் சுட்டப்படுகின்றமை (குமாரதந்திரம் 24.130) குறிப்பிடத்தக்கது.

சுப்ரம்மண்யரின் மூர்த்திபேதங்களுள் சக்தி யுடன் கூடிய மூர்த்தி பேதங்களாக வள்ளி தேவசேனாவுடன் கூடியவராக ஷண்முகரும், தேவசேனாவுடன் மட்டும் கூடியவராக சேனா பதி, பிரம்ம சாஸ்தா ஆகிய மூர்த்திகளும் வள்ளி யோடு மட்டும் கூடியவராக வள்ளி கல்யாண சுந்தரஸ்வாமி, குமாரஸ்வாமி ஆகி யோரும் சுட்டப்படுகின்றனர். மேலும்; சக்தி யற்று விளங்கும் மூர்த்திகள் யோக மூர்த்தி கள் (24.146) என்றும் குமாரதந்திரம் கூறுவ தோடு சுப்ரம்மண்ய சுவாமிக்குரிய சக்திகள் இருக்க வேண்டிய லக்ஷணங்களையும் சுட்டு கின்றது.

சுப்ரம்மண்யர் இளமை வடிவமும் அழகிய அங்கமும், மங்களகரமான பார்வையும், கரண்ட மகுடமும், உபவீதம், சன்னவீரம், உஷ்ணீஷம், கடிசூத்திரம், பத்ரகர்ணம், பல்வேறு வகையான குண்டலங்கள், பாதத்தில் நூபுரம் என்பவற்றுட னும் எல்லா லக்ஷணங்களும் எல்லா ஆபரணங் களும் அணிந்தவராகச் சுட்டப்படுகின்றார். இதனை குமாரதந்திரம் பிரதிமா லக்ஷணவிதி படலம் சிறப்பாகக் கூறுகின்றது.

சுப்ரம்மண்யரின் மூர்த்தியின் நிலையினைக் கொண்டு யோகமூர்த்தி, போக மூர்த்தி, ஞான மூர்த்தி என மூன்றாக வகுக்கப்படுகின்றது. இவர்கள் முறையே இருந்தவராகவும் நிற்பவ ராகவும் வாகனத்துடன் கூடியவராகவும் விளங் குவர். இவர்களே முறையே சாத்விகம், ராஜ சம், தாமதம் எனும் முக்குணத் தன்மைக ளோடு இரு கைகளையும், நான்கு கைகளை யும் பன்னிரு கைகளையும் உடையவராக விளங்குவர் எனக் குமாரதந்திரம் (24. 139,140) சுட்டுகின்றது.

குமாரதந்திரம் இவ்விதம் சுட்டிநிற்க ஸ்ரீ தத்துவநிதி சுப்ரம்மண்யரை ஆறு பெயர் கொண் டவராக அக்னிஜாத சுப்ரம்மண்யர், சௌரபேய சுப்ரம்மண்யர், காங்கேய சுப்ரம்மண்யர், குஹ சுப்ரம்மண்யர், பிரம்மசாரி சுப்ரம்மண்யர், தேசிக சுப்ரம்மண்யர் எனச் சுட்டிநிற்கின்றது.

இவ்வாறாக சக்தியின் அம்சமாகவும் சிவ சக்திகளின் தோற்றமாகவும் மக்களுக்கு அருள் பாலிப்பவராகவும் விளங்கும் சுப்ரம்மண்யரின் மூர்த்தி பேதங்களை விதி நூலான குமார தந்திரம் கூறும் சிறப்பினையும், ஏனைய நூல் களான சிவாகமங்கள், சிற்ப சாஸ்திரங்கள் சுட்டும் தன்மைகளையும் நோக்கினோம். ஆன் மாக்களின் துயர்களைந்து அருள் சுரக்கும் மூர்த்தியாகிய சுப்ரம்மணியரை வழிபட்டு இஹ பர சுகங்களைப் பெற்றுய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனை செய்து நாளும் வாழ்த்தி வணங்கிடுவோம்;
சிந்தனையில் இருத்தியே சிங்கார வேலவனை
உந்தனை எண்ணியே உன்தாள் பணிந்தோம்;
கந்தன் கருணையால் ஈழமக்கள் அமைதி பெறட்டும்.



நல்லூரானின் மகிமையையும் அருளையும் தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் மணம் கமழச் செய்யும் '**நல்லைக் குமரன்**' மலர் போற்றுதற்குரியது.

வளர்க நல்லைக் குமரன் மலர்.

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

**73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ஐஸ்கிறீம் வகைகள்   குளிர்பான வகைகள்   சிற்றுண்டி வகைகள்

அனைத்தையும் சுவைத்து மகிழ்ந்திட

**யாழ்.நகரில் சிறந்த ஸ்தாபனம்**

# KALYANI CREAM HOUSE

73, Kasthuriar Road, Jaffna.

---

ஆளும் உரிமை தமிழர் பெறவே முருகா
ஆண்டாண்டாய் அனுபவிக்கும் துன்பம் பாராயோ
வேண்டும் அமைதி வேண்டி நிற்க, முருகா
நீ சுதந்திர வாழ்வு மலருமென்று தேரேறி வா முருகா!



**வண்ண வண்ண சோலை என்று
புடவைக் கடையை மட்டும் நாடாதீர்கள்
இதோ!**

# உமா வண்ணச் சோலையை நாடுங்கள்

உங்களுக்கு வேண்டிய

* கண்கவர் அழகு சாதனப் பொருள்கள்
* பரிசுப் பொருள்கள்
* சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்
* எவர்சில்வர் பாத்திரங்கள்

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஒரு முறை விஜயம் செய்தால் மீண்டும் மீண்டும்
கவரும் ஸ்தாபனம்
வாருங்கள்! பெற்றுக்கொள்ளுங்கள்**

# உமா வண்ணச் சோலை

**இல. 30, 25, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலரைக்கு நாதமணி கேட்கையிலே - முருகா
யாழ்.நகர் முருக பக்தி ஓங்கிடும் - அருள் நோக்கி
ஈழ மண்ணை காக்க நீ குடிகொண்டாய் - நல்லூரில்
நீ இருக்க பயமேன்! என பக்தர் கூட்டம் அலை மோதுதப்பா.



**மனதை கவரும் சக்தி விநாயகருக்குண்டு**
**கண்ணை பறிக்கும் சக்தி விநாயகர் புடவையகத்துக்கு.**

**இதோ!** திருமண வைபவங்களுக்கு ஏற்ற
☆ பலவர்ண கூறைச் சேலைகள் ☆ பட்டு வேட்டிகள்
☆ பாவாடைகள் ☆ பிளவுஸ் ☆ பஞ்சாபி உடைகள்
மற்றும் ☆ பலவிதமான இந்திய சாறி வகைகள்
☆ சாறி பிளவுஸ் துணி வகைகள்
ஆண்களுக்குரிய ☆ சேட்டிங் சூட்டிங் வகைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

# விநாயகர் புடவை அகம்

## VINAYAKAR PUDAVAI AKAM

63A, 62A, 61, **நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.**

---

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்டவேல்
ஈழத்தில் ஊன்றிய வேல் தமிழினத்தைக் காக்கும் வேல்
அது ஈழசெங் கோலுக்கு வழி வகுக்கும் வேல்



**தங்க நகை என்று நினைப்பவர்க்கு**
**சிறந்த ஸ்தாபனம்**
**உறுதியும் உத்தரவாதமும் உள்ள**
**22 கரட் தங்க நகைகளை ஓடருக்கு**
குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கும் ஸ்தாபனம்

# சாரங்கா நகை மாடம்

177/4, **கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

தலைமை ஸ்தாபனம்:

# அருள் முருகன் நகை அகம்

96/1, **கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

கிளை ஸ்தாபனம்:

# சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்

**45, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

**குமாரதந்திரம்** (1974, E.M.கந்தசாமி சர்மா (பதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

**ஸ்ரீதத்துவநிதி,** சகம் (1823) மும்பாய்.

கதிரைவேற்பிள்ளை மகாவித்துவான் நா. (1960) **சுப்பிரமணிய பராக்கிரமம்** சென்னை.

கணபதிஸ்தபதி.வை (1978) **சிற்பச் செந்நூல்** தொழில்நுட்பக் கல்வி இயக்கம், சென்னை.

Gopinatha Rao T.A. (1993) **Elements of Hindu Iconography** Vol II. Part II.

Kailasanatha Kurukkae.K. **A Study of the Karthikeya -** cult as reflected in the Epics and Puranas University of Ceylon Review Vol XIX, No2, Oct-1961.

01. சிவத்தைப் பேணிற் தவத்திற்கழகு.
02. செய்தவ மற்ந்தாற் கைதவமாளும்.
03. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
04. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை.
05. தெய்வம் சீறிற் கைதவமாளும்.
06. நேரா நோன்பு சிராகாது.
07. நோன்பென்பதுவே கொன்று தின்னாமை.
08. புலையுங் கொலையும் களவுந்தவிர்.
09. முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்.
10. மோன மென்பது ஞான வரம்பு.
11. வையந்தோறுந் தெய்வம் தொழு

**- கொள்றைவேந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மங்கையர்க்கரசி - திருச்சிற்றம்பலம்

# தீயவை புரிந்தாரேனும்.....

கந்தபுராணத்திலே ஒரு காட்சி. சமயம் தொடர்பான உபதேசம் காசிபமுனிவரால் நடத்தப்படுகிறது. அவருடைய புத்திரர்களாகிய சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகிய மூன்று புதல்வர்களும் பெற்றோர்களுடைய பாதங்களில் விழுந்து வணங்கி தந்தை முன் அமைதியாக இருந்தார்கள். இந்த உபதேசமானது காசிபமுனிவர்களுடைய புதல்வர்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் எல்லோருக்கும் அதிக நன்மை பயக்கும். தருமத்தின் சிறப்பையும் அதனை செய்வதனால் ஏற்படும் நன்மைகளையும், எடுத்து விளக்கினார். தருமஞ் செய்வதனால் அன்பும் அருளும் உண்டாகும், அன்பும் அருளும் தவத்திற்கு வழிவகுக்கும், ஐம்புலன்களையும் அடக்கி இறைவனை இடையறாது நினைத்துத் தவஞ் செய்தால் பேரின்பப் பேறு கிடைக்கும். தவஞ் செய்பவர்கள் உலகம் வியக்கத்தக்க வண்ணம் பெருவெற்றி பெற்று வாழ்வார்கள் எனக் காசிப முனிவர் கூறினார். தருமத்தின் சிறப்பைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறுகிறது.

"தருமமென் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
அருமையில் வரும்பொருளாகும் அன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ.

தனது பிள்ளைகளுக்கு மேலும் மார்க்கண்டேயருடைய வரலாற்றைக்கூறி தவத்தின் மகிமை பற்றிக் கூறினார். இவ்வுபதேசத்தைக் கேட்ட பிள்ளைகள் தவஞ்செய்வதென முடிவு செய்தார்கள். இதனைச் செவிமடுத்த காசிப முனிவருடைய மனைவி மாயை என்பவள் தன் குழந்தைகளுக்கு முனிவருடைய உபதேசம் ஏற்றதல்ல எனக்கூறி அவர்கள் உலக வாழ்க்கையில் பல சிறப்புக்களையும் பெற்று வாழ வேண்டும் எனக் கருதி யாகஞ் செய்வதே சிறந்ததெனத் தெரிவித்தார். உலகிலே தன் மக்கள் பெருஞ்செல்வம், வெற்றி, இன்பம், நீண்ட ஆயுள், உலகளாவிய புகழ் என்பவற்றைப் பெறவேண்டும் என்றாள். மேலும் கல்வியிலும் செல்வமே சிறந்தது. செல்வம் உள்ளவர்களை உலக மக்கள் மட்டுமல்ல பகைவர்களும் பணிந்து நிற்பர். ஒருவருக்கு குறையாத செல்வம் இருக்குமாயின், கல்வியறிவு உள்ளவர்களிலும் பார்க்க உலகம் அவர்களைப் போற்றும். எனவே செல்வமே சிறந்தது. அது பலவகைப்படும். உலகிலே செல்வத்திற் சிறந்தது வேறு எதுவுமல்ல என்று கூறி பிள்ளைகளுக்கு யாகம் செய்து எல்லாவிதமான சிறப்புக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கினார். தேவர்கள் யாவரும் தங்கள் முயற்சியினாலே தலைமைப் பதவி பெற்றனர். நீங்கள் அவர்களிலும் பார்க்க உயர்நிலை அடைய வேண்டும் புதல்வர்கள் மூவரும் உயர்நிலை அடையும் வழியை மாயை எடுத்துக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சூரபன்மன் அசுரப் படைகளோடு வடதிசை சென்று ஓர் ஆலவனத்தை அடைந்து யாகம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டான். யாகசாலையின் நடுவே ஒரு ஓமகுண்டமும், அதனைச் சுற்றி 108 குண்டங்களும், அதனைச் சூழ 1008 குண்டங்களும் நிறுவி யாகத்துக்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித்து ஓமகுண்டத்தின் மத்தியில் ஒரு வச்சிரகம்பத்தை நிறுவி சிவபெருமானை நினைத்து யாகஞ்செய்யத் தொடங்கினான். இவ்வாறு பல வருடங்களாக, யாகஞ்செய்தும் சிவபெருமான் அவன்முன் தோன்றிலர். சூரபன்மனுடைய வீர யாகத்தை பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் கேள்வியுற்று நடுங்கிப் பதைபதைத்தனர். சிவபெருமான் காட்சியளிக்காமையினால் சூரபன்மன் கவலையுற்று யாககுண்டத்தில் தன்னைத் தானே தியாகம் செய்து சாம்பரானான்.

சூரபன்மன் சாம்பரானவுடன் சிவபெருமான் ஒருவிருத்தப் பிராமணவடிவந்தாங்கி யாக சாலைக்கு அருகே சென்று சிங்கமுகாசுரனிடம் நடந்தவற்றை கூறுமாறு வினவ அவனும் சகலவற்றையும் மொழிந்தான். சிவனருளால் தேவகங்கை பாய்ந்தோடி யாக குண்டத்தை அடைதலும் சூரபன்மன் உயிர் பெற்று எழுந்தான். அப்பொழுது விருத்தப் பிராமண வடிவம் மறைய இறைவன் இடபாரூடராகக் காட்சியளித்து சூரனுடைய தவத்தை மெச்சி பல வரங்களைக் கொடுத்தருளினார். நூற்றெட்டு யுககாலம் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆளும் பேறும், மிக வலிமையுடைய இந்திர ஞாலம் என்னும் தேரும், சிங்கவாகனமும் தேவர்களுக்கு முதன்மையாகும் தன்மையும், பாசுபதப்படை முதலிய தெய்வப்படைக் கலங்களும், வச்சிரயாக்கையும், கச, ரத, துரகபதாதிகள் என்ற நால்வகைப் படைக்கலங்களும் ஆகிய வரங்களைப் பெற்ற சூரபன்மன் தன்னிகரில்லாத தலைவன் என்ற முறையில் அரசியலியற்றத் தொடங்கினான். இத்தனை சிறப்புக்களையும் பெற்ற சூரபன்மன் அரசு செய்யும் பொழுது தேவர்களை மிகத் துன்புறுத்தி அவர்கள் ஒருகாலமும் செய்யாத செயல்களை எல்லாம் செய்யும்படி பணித்தான்.தேவர்கள் செய்வதறியாது நடுங்கிப் பதைபதைத்து மனம்நொந்து, கண்ணீர்விட்டு இது நமது விதிப்பயன் என்று நினைத்து வெவ்வேறு இடங்களுக்குச் சென்றனர். இந்திரன் தன் மனைவி இந்திராணியுடன் தேவ உலக இன்பங்களை வெறுத்து சீர்காழிப்பதி சென்று சிவபெருமானின் திருவடிகளை அர்ச்சித்து வாழ்ந்து வந்தான். தேவர்கள் அனுபவித்த துன்பத்தை

**"தேனுலவுந்தாருத் திருநிழற்**
**கீழின்பமுறும்**
**வானவர்களென்றே மதிக்குந்**
**தகைமையினோ**
**மீனமொடு மீன் சுமந்தேயெல்லோர்களு**
**நகைக்கத்**
**தானவர் முன் செல்வதினுஞ் சாதல்**
**மிகநன்று நன்றே."**

எனக் கச்சியப்பர் காட்டுவது உள்ளத்தை உருக்குவதாக அமைகிறது. சூரபன்மன் ஆணவமே உருவானவன். பிரமவிட்டுணு என்போர் அடிமுடி தேடி ஆற்றாத நிலையில் பணிந்து வணங்கிய நிலையில் அருள் பெற்றனர். இராவணனும் ஆணவம் காரணமாக கைலைநாதனின் அருள் கிடைக்காது துன்பப்பட்டு பின் சாமகானம் பாடி அருளும், வாளும், நீண்ட ஆயுளும் பெற்றான். இறைவனை அடைவதற்கு ஆணவம் தடையாக உள்ளது என்பதை சித்தாந்த சாஸ்திரங்கள் விளக்குகின்றன. இதற்குச் சூரனும் விதிவிலக்கல்ல. சூரபன்மனுடைய கொடிய ஆட்சியில் தேவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் சொல்லுந்தரமன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்நாளதனி லவுணர்க் கிறையேவ
நன்னான் மிகவுந் தளர்ந்து சிலதேவ
ரென்நாளிப் புன்மை யெமை நீங்கு
மென்றிரங்கிப்
பொன்னாடு விட்டுப் புவிதன்னிற்
போந்தனரே"

என்ற பாடல் தேவர்களுக்கு ஏற்பட்ட கவலையை மிக அழகாக விளக்குகிறது. தேவர்கள் துயர் நீக்க சிவனின் நின்றும் வேறாகாத ஆறுமுகக் கடவுள் திருவவதாரஞ் செய்தார். குமரக் கடவுள் சூரபன்மனுடன் போர் செய்வதற்குத் தயாராக பூதகணங்களோடு எழுந்தருளி வந்துள்ளார் என்பதை அறிந்த அவுணப் படையினர் சூரபன்மனுக்குத் தெரிவிக்க சூர்பன்மன் தன் தம்பியர், மந்திரிமார்கள், சேனாதிபதிகள், எல்லோரையும் அழைத்து ஆலோசனை செய்தான். குமாரக் கடவுளுடைய பரம்பொருட் தன்மையை சிங்கமுகாசுரன் எடுத்து கூறித் தனது தமையனாரை நல்வழிப்படுத்த எண்ணினான். குமரக் கடவுள் பரம்பொருளாகிய சிவ பெருமானின் நெற்றிக்கண்ணில் உதித்தவர். வேதங்களாலும் அறியப்படாதவர். அவர் அருவமாய், உருவமாய், அருவுருவாய்க் காட்சியளிப்பவர், என்று கூறினான் முருகப்பெருமானது தெய்வத்தன்மையை

"வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியில்
விரித்த
போதக் காட்சிக்குங் காணவன்
புதியரிற் புதியன்
மூதகக் கார்க்குமு தக்கவன் முடிவிற்கு
முடிவா
யாதிக் காதியா யுயிர்க்குயி
ராய்நின்ற வமலன்"

எனக் கச்சியப்பர் கூறுவது ஈண்டு நோக்கற்பாலது. சிங்கமுகாசுரன் சூரபன்மனைப் பார்த்து உனக்கு மிகக் கசப்பாக இருந்தாலும் உள்ளதை உறுதியாகக் கூறுபவனே உனக்கு நல்லவனாவான். நீ விரும்புவதைக் கூறுபவர்களால் கெடுதியுண்டாகும். எனத் தனது கருத்தைத் தெரிவித்து தொடர்ந்து நல் உரைகளைத் தெரிவித்தான். "சிவபெருமான் பெரிய செல்வங்களுடன் 108 யுகங்கள் வாழும் வரத்தைத் தந்தருளினார். அதனையும் உணராமல் இருந்தாய், மேலும் குரவர்களையும் பாலகர்களையும் பெண்களையும் தவஞ்செய்பவர்களையும் பிராமணர்களையும் பெரியோர்களையும் தண்டித்தவர்கள் நரக உலகில் துன்புறுவர். தேவர்களை சிறையினின்றும் விடத்தவறினால் குமரக் கடவுளால் அசுரப்படை அழிவது திண்ணம். முருகப்பெருமானை சிறு பிள்ளை என எண்ணுவது தவறு. முருகப்பெருமானுடைய தன்மையை

"ஞானந் தானுரு வாகிய நாயக
னியல்பை
யானு நீயுமா யிசைத்மென் றால.'.
தெளிதோ
மோனந் தீர்கவா முனிவருந் தேற்றிலர்
முழுதுந்
தானுங் காண்கில லின்னமுந்
தன்பெருந் தலைமை."

என்று கச்சியப்பசிவாசாரியார் காட்டியுள்ளார். குமரக் கடவுள் அவுணர் கிளை முழுவதையும் சங்கரித்து உன்னையும் கொல்வார், உனது வரபலத்தை எண்ணிப் பெருமிதம் கொள்ளாதே" என சிங்கமுகாசுரன் கூறியதைப் பொருட்படுத்தாது சூரன் ஆணவ முனைப்புடன் செயற்பட்டான்.

சுப்பிரமணியக் கடவுள் ஏமகூடம் என்னும் பாசறையில் எழுந்தருளியிருக்கும் பொழுது உத்தர கைலாயத்தில் வாழ்பவரும், நாள் தோறும் தவம் செய்பவரும், எவருக்கும் துன்பஞ் செய்யாதவரும் ஆகிய நாரதர் சூரன்முன் தோன்றி அங்கு நடந்தவற்றை எல்லாம் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி யோடி யலைகின்றோம் முருகா!
நாடி வந்த எம் வினையை களைந்திடுவாய்
வாடி வதங்கும் மக்கள் துயரம் நீங்க
தேரேறி வடம் பிடிக்க வந்தருள் முருகா?



நகை உலகில் ஓர் அற்புதம்!

காலத்தால் அழியாத, கற்பனைக்கு எட்டாத அற்புத படைப்புகள்
நவீன உலகிற்கேற்ப இணையற்ற புத்தம் புதிய டிசைன்களில்
தங்கப் படைப்புகள்
தங்கத்தின் தரம் என்றும் நிரந்தரம்
தங்கம் என்றால் தரம் தவறாமல் நாடுமிடம்

நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.T.P.-3473

தேரிலே நல்லூர் கந்தன் திரு கொலு ஆடி வந்து
சீரிய செல்வமெல்லாம் பாரினில் எமக்களிக்க
கந்தனின் கருணை யெல்லாம் பக்தர் பால் கிடைக்குமென்று
பற்றுவோம் தேர் வடத்தை பாதகரின் பகமையொழிய.

புடவை ரெடிமேற் ஆடைகள்

* பேபி சூட்
* சாறிக்கேற்ற பிளவுஸ் பீஸ்
* தையல் வேலைகளுக்கு ஏற்ப பொருள்கள்
* எல்லா சைஸ்களிலும் பொலித்தீன்
* மேசை விரிப்பு
* குறோசறி பாக் சைஸ்கள்



அனைத்தையும் ஒரே இடத்தில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

அங்கலின் ரெக்ஸ்ரைல்

43, 48, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

கிளை: 55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதமதில் சிறப்பெல்லாம் சேருமென்று
இத்தரையிலுள்ளோர் தாம் மெத்தக்களி கூர்ந்திருப்பர்
தித்திக்குமோர் சேதிமட்டும் இத்தீவில் எம் தேவை
யுத்தக் கிலிநீங்கி எங்கள் சித்தம் களி கூர வைத்தால்
வித்தகனே! முருகா!! என்றும் உனை நாம்
வாழ்த்தி வணங்கிடுவோம்!



# இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்

**50, 52, 54, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**Telephone - 2988,**
**(f)பக்ஸ் - 2386.**

மிதிவண்டி, உதிரிப்பாக இறக்குமதியாளர்கள்
லோட்டஸ் மிதிவண்டி ரயர், ரியூப்புகளிற்கான ஏக விநியோகஸ்தர்கள்,
மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
கலர் பிலிம் றோல், வீடியோ ஓடியோ கசற்கள்
மற்றும்
பல்பொருள் விற்பனையாளர்கள்.

**உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்**

# இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க சூரபன்மன் கடுஞ் சீற்றமடைந்து ஒரு பாலகனாக போர் செய்ய வருகிறான். சிங்கக் கூட்டத்தின் முன் ஒரு சிறு யானைக் கன்று கலைமான் போலப் போர் செய்ய முடியுமா எனக்கூறிப் பெருமிதமடைந்தான். போர் செய்து வெல்லுவது நிச்சயம் எனக் கூறி மகிழ்ந்தான்.

திருச்செந்தூரிலே முருகப்பெருமான் எழுந்தருளியிருந்தபொழுது வீரமகேந்திரபுரியிலே ஆட்சி செய்யும் சூரனிடம் தூதுசெல்ல வல்லவர் வீரவாகுதேவரே என முடிவு செய்து, பெருங்கருணைகாரணமாக சூரனுக்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தை முருகக்கடவுள் கொடுத்தருள விரும்பினார். பல துன்பங்களையும் இன்னல்களையும் கடந்து சென்ற வீரவாகு தேவர். சூரபன்மனுடைய வளமிகு நகரைக் கண்டு வியந்து உள்ளே புகுந்த சமயம் சூரபன்மன் அவரை வரவேற்று ஆசனம் கொடாது அவமதித்தான். குமரக்கடவுளுடைய திருவடிகளைத் தியானிக்க ஆயிரங்கோடி சூரியப்பிரகாசமுடைய ஒரு இரத்தின சிங்காசனம் வந்து சேர்ந்தது. வீரவாகுதேவர் குமரக்கடவுளுடைய பெருமைகளையும் சூரபன்மன் இதுவரை செய்த தவறுகளையும் எடுத்துக்கூற, சூரபன்மன் தான் எதற்கும் உடன்பட முடியாது எனவும் போர் செய்து வெல்வதே தனது முடிவு என்றும் கூறினான்.

போர்க்களத்திலே முருகப்பெருமானும் பூதப்படைகளும் ஒருபுறம், அவுணப்படைகளும் சூரபன்மனும் மறுபுறம் நின்று கடும் போர் செய்ய சூரபன்மன்மீது கொண்ட கருணையாலும், அவன் பெற்ற வரங்களை அழிக்க விரும்பாமலும் தனது திருப்பெருவடிவத்தைக் காட்டியருளினார் முருகப்பெருமான். சூரபன்மனுக்கு சிறிது நல் உணர்ச்சி நல்க முருகக் கடவுளுடை பரம்பொருட் தன்மையை சூரன் உணர முற்பட்டான். இந் நிகழ்ச்சியைக் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகளால் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"எண்ணிலா அவுணர் தானை
யாவையும் இமைப்பிற் செற்று
விண்ணுலா அண்டந் தோறும் வியன்
சமர் ஆற்றி என்பால்
நண்ணினார் தம்மை எல்லாம் நாமறத்
தடிந்து வீட்டி
வண்ணமான் தேரும் மீண்டு வராநெறி
தடுத்தான் மன்னோ"

சூரபன்மன் ஆணவம் சிறிது அடங்க கோலமாமஞ்சையில் குலவிய குமரனை மூலகாரணமான மூர்த்தியென்றும் ஆயிரங்கோடி காமர் அழகெலாம் திரண்டாலும் முருகக் கடவுளுடைய அழகுக்கு நிகராகமாட்டாது எனவும் அவ்வழகுக்கு உவமை கூற இயலாதெனவும், கண்ணில் அடங்கா அழகும் உடையவர் முருகப்பெருமான் எனவும் திருப்பெருவடிவத்தைப் பார்த்து வியந்து நின்றான். மேலும் திருப்பெரு வடிவத்தில் உள்ள ஒளி, சீர், இளமை, எழில் எல்லாம் உலகிலே யார்க்கு உளது என எண்ணி தெவிட்டாத அழகிது எனக் கூறினான். இந்நிலையின் சூரபன்மனுடைய இயல்பை

"போயின அகந்தை போதம் புகுந்தன
வலத்ததான
தூய்தோர் தோளுங் கண்ணுந் துடித்தன
புவன மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்
படுகின்ற விண்ணோர்
நாயன் வடிவங் கண்டேன் நற்றவம் பயனீ
தன்றோ"

எனக் கச்சியப்பசுவாமிகள் விளக்கிக் காட்டியுள்ளார். தன்னுடைய தவறுகளை எல்லாம் எண்ணி எண்ணி மனமுருகி முருகப்பெருமானை வணங்கவேண்டும் என விரும்பிய போதிலும் மானம் தடுத்துவிட்டது. இறுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் செய்து கடல் நடுவில் மாமரமாக நிற்க வேலாயுதம் அதனைப் பிளந்து இரு கூறாக் கியது. அவை சேவலும் மயிலுமாகி முருகப் பெருமானுடைய வாகனமாகவும் கொடியாக வும் விளங்குகின்றன. அதேசமயம் சூரபன்மன் தான் சாதாரணமான ஒருவருடன் போர் செய்ய வில்லை சுப்பிரமணியக் கடவுளுடன் போர் செய்ததாக பெருமிதம் அடைந்தான் என்ப தைக் கச்சியப்பசிவாசாரியார்,

"ஏடவிழ் அலங்கல் மார்பன் என்னுடன்
இந்நாள் காணும்
நீடிய இகற்போர் ஆற்றி நீங்கலான்
நின்ற தெல்லாம்
ஆடலின் இயற்கை யென்றே அறிந்தனன்
அஃ.தான் நன்னான்
சாடிய வேண்டு மென்னின் யாரது
தாங்கள் பாலார்"

என விளங்கியுள்ளார்.

சூரபன்மன் தீயவை பல புரிந்த போதிலும் பக்தியோடு தன்னைத் தியாகம் செய்து தவம் செய்தகாரணத்தால் முருகப்பெருமானின் ஊர்தியாகவும், கொடியாகவும் விளங்கும் பேறு பெற்றான் என்பதிலிருந்து தவத்தின் மகி மையை நாம் உணர்ந்துகொள்ளலாம். அத் தோடு ஆணவம் அடங்க, அடங்க சூரனிடம் காணப்பெற்ற மாறுதல்களை நாம் என்றும் சிந்திக்க வேண்டும்.

"திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன
செருவின் ஊக்கம்
துருகிய துரோமம் புள்ளி ஆயின
விழியில் நூநீர்
பெருகிய திவன்பால் அன்பு பிறந்தன
தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானும் உலைமெழு
காகு அன்றே"

என்ற பாடல் மூலம் சூரபன்மனுக்கு அகந்தை அடங்க ஞான உணர்வு ஏற்பட, நாயகன் வடிவத்தைக் கண்டு வணங்கினான் எனக் கூறி தவத்தின் பயன் இதுவன்றோ என்றார் கச்சியப்பசிவாச்சாரியார். ★

ஒரு தனி மனிதன் தவறான வழியில் பொருள் சேர்க்க எண்ணக் கூடாது. அழ, அழக் கொண்ட அது அழஅழப் போய்விடும். அவ்வாறே ஒரு அமைப்பு பொதுமக்களைத் துன்புறுத்திப் பொருள் சேர்க்க எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளாக மாறிவிடும். பின் அது எவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தாலும் அழிந்து ஒழிந்துபோய்விடும்.

கொடுப்பது, பிறருக்கு உதவி செய்வது என்பது – தானம் எனப்படும். தானங்களிலே மிகவும் சிறந்தது ஆன்மீக ஞானத்தைத் தருவதாகும். அதற்கு அடுத்தது பௌதீக அறிவைத் தருவது. அதற்கடுத்தது துன்பத்தில் காப்பது. கடைசியாக வருவது உணவும், நீரும் தருவதாகும்.

**- சுவாமி விவேகானந்தர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சுமதி கனகரெட்னம்
பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.

# தமிழர் திருமண முறைகள் ஓர் நோக்கு

தமிழர்கள் மிகப்பழங்காலந் தொட்டு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினைப் போற்றி வாழ்ந்து வந்தனர். அன்பின் அடிப் படையில் விளைந்த அறமே தமிழர்களுக்கு உயிர் நாடியாக விளங்கியது. இல்லறமாகிய நல்லறத்தைப் போற்றி வாழ்ந்த ஆடவரும் பெண்டிரும் உடல், உயிர், உணர்வு மூன்றா லும் இரண்டறக் கலந்துவாழும் அன்பு வாழ்க் கைக்கு உரிமை அளிக்கும் நிகழ்ச்சியே திருமணம் என்பதாகும். "திருமணம் என்பது ஆண் பெண் இருவரும் ஒரு மனப்பட்டுப் பயிலும் கல்விக்கூடமாகும். திருமண வாழ்க் கையை விட உயர்ந்த கல்வி மானிட குலத் திற்கு வேறு இல்லை" என அறிஞர் பர்னாட்ஸா கூறியுள்ளார். "ஈதலறம் தீவினை விட்டீட்டல் பொருள் எஞ்ஞான்றும், காதலிருவர் கருத் தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம். பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என ஔவையார் மனித வாழ்க் கையின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார். இந்த உலகில் வாழும் ஆண் பெண் உறவில் எய்தும் மலர்ச்சியே இன்பமாய்ப் பேரின்பமாய்ச் சிறப்பது. என்பதைக் காட்ட நச்சினார்க்கினியர் 'ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடு கின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்' என்று கூறியிருக்கின்றார்.

திருவள்ளுவர் "அறன் வலியுறுத்தல்" அதி காரத்தை அடுத்து "இல்வாழ்க்கை" என்னும் அதிகாரத்தை அமைத்துள்ளதைக் கருதுவோர் மக்களிடையே அறம் வளர்வதற்கான வாழ்க்கை முறையே இல்லறம் என்று கருதியே வள்ளு வர் அவ்வாறு அமைத்துள்ளார் என்று தெளிவர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் குறளில் இல்வாழ்க்கை அன்பு என்னும் பண்புடையதாகத் திகழ்ந்தால் அற னாகிய பயனையும் இயல்பாகவே கொண்டு விளங்கும் என்ற கருத்து தெளிவாக விளக் கப்பட்டுள்ளது.

தமிழர் திருமணம் தனித்தன்மை வாய்ந்தது தமிழ்ப்பண்பாட்டையும், சமயக் கோட்பாடுக ளையும் தழுவித் திருமணம் நடைபெறுகின் றது. தமிழ்ச்சான்றோர் குடும்ப வாழ்வை இல் லற வாழ்வென்று போற்றி வாழ்ந்தனர், மொழிந் தனர். "இன்பமும் பொருளும் அறனும் என் றாங்கு" என்ற தொல்காப்பியனார் மொழியும் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் பாடிய குறளும் குறிப்பிடத்தக்கனவாகும். அதைப்போற்றி வாழ்ந்த இனத்தவர்மரபில் தோன்றிய நம் முன்னோர்கள் காட்டிய வழி நின்ற ஆயிரங் காலத்துப்பயிரான திருமணத்தை மிகவும் புனி தமான சடங்கென மதித்துச் செயலாற்றி வரு கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்திற்கு முதற்கடமை ஒரு பெண்ணை ஒரு ஆணுக்கு வாழ்க்கைத்துணைவி ஆக்க ஏற்பாடுகளைச் செய்தலாகும். எங்கோ இருந்த வர்களை ஒன்று சேர்ப்பதற்கு அடிப்படையாக, ஜாதகப் பொருத்தம், குடும்ப உறவுமுறை என் பவற்றை இருபகுதியினரும் சிந்தித்துப் பார்த்து முடிவு செய்தல் வேண்டும். இதுவே திருமணத் திற்கு முதற்கட்டமாகும். அத்துடன் இருவரது மனச்சம்மதமும் இருத்தல் வேண்டும்.

### பெண்பார்த்தல்:

பெண்பார்க்கச் செல்லும் மணமகனின் பெற் றோர் பூக்கொண்டு செல்வது மரபாகும். பெண் அலங்காரக் கோலத்தில் முன்வந்து வருகை தந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தி சில விநாடிகட்கு நின்று திரும்பிப் போவாள்.

பண்டைய காலத்திலே ஆண் பெண் இரு வரையும் நேரில் பார்த்து திருமணப் பொருத் தங்கள் கணிக்கப்பட்டன. அறிவியல் ரீதியான அப்பத்துப் பொருத்தங்களும் வருமாறு:

குடிமை: பிறந்த குடும்பத்தின் நிலை.

பிறப்பு: பிறந்த குடிக்குத் தகுந்தாற் போல் ஒழுகும் ஒழுக்கம்.

ஆண்மை: மேற்கொண்ட செயலை நிறை வேற்றும் ஆற்றல்.

ஆண்டு: பொருத்தமான வயது, (பெண்ணை விட ஆணுக்கு வயது அதிகமாக இருக்க வேண்டும் என்பது ஒரு வழக்கமாகும்.

உருவம்: ஒருவருக்கொருவர் பொருத்த மான உருவம்.

நிறுத்த காம வாயில்: நிலையான காதல்.

நிறை: மனஅடக்கம்.

அருள்: அனைத்து உயிர்களிடத்திலும் பரிவுணர்வு.

உணர்வு: எதைப்பற்றியும் உணரும் அறிவு.

திரு: செல்வவளம்.

பிற்காலத்தில் தான் ஏட்டில் எழுதியவற் றைப் பொருத்தம் பார்க்கும் நிலை வழக்கத் திற்கு வந்தது. இம்முறையில் ஆண் பெண் இருவரையும் நேரில் பார்க்காமலே அவர்களு டைய ஜாதகங்களை வைத்துக்கொண்டு ஜோதிடர் பொருத்தங்களைக் கணித்தறிவார். இம்முறையே இப்போது வழக்கத்திலிருக்கிறது.

தினப்பொருத்தம்
**மாகேந்திரப் பொருத்தம்**
**கணப் பொருத்தம்**
**ஸ்திரி தீர்க்கப்பொருத்தம்**
**இராசிப் பொருத்தம்**
**இராசி அதிபதிப் பொருத்தம்**
**வசியப் பொருத்தம்**
**இரச்சுப் பொருத்தம்**
**வேதைப் பொருத்தம்**

இப்பத்துப் பொருத்தங்களில் ஐந்துக்கு மேல் பொருத்தங்கள் காணப்படின் திருமணம் செய் யலாம் என்பது தற்போதைய நடைமுறையாக உள்ளது.

### திருமண சம்பிரதாயங்களின் உள்ளார்ந்த விளக்கங்கள்:

இன்றைய கணனி யுகத்திலே மனிதனது அன்றாட வாழ்க்கையே இயந்திரமயமாக மாறிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக பொரு ளாதார ரீதியில் நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரி யும் மேலைத்தேய கலாசார மாற்றங்களை உள்வாங்கிக்கொள்ளும் ஆர்வம் தற்போதைய இளைஞர்களிடையே அதிகரித்து வருகிறது. இதனால் காலங்காலமாகத் தம் வாழ்வுக்கு வளம் சேர்த்துவரும் சடங்குகள் சம்பிரதாயங்கள் பற் றிய உண்மைகளை அறிய வேண்டும் என்ற தூண்டுதல் அவர்களிடத்திலே இயல்பாகவே மழுங்கிவிட்டது எனலாம்.

இதனால் சடங்குகள், சம்பிரதாயங்கள் என் பன அவற்றின் அர்த்தங்கள் புரியாமல் புறக் கணிக்கப்பட்டு வருகிறது. திருமணச்சடங்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக் குமரனே! அர்ச்சனைக் கந்தா!!
நின் பதம் பணிந்திட அருமருந்தும் 'நல்லருள்' தாருமையா
வேலெடுத்து விளையாடும் நல்லூரானே
பக்தரின் கண்ணீர் மறைந்திட தங்கரதம் ஏறி வாருமையா

* தரமான போட்டஸ்ரட் பிரதிகள்
* அடையாள அட்டை கவரிடுதல் * 60 வருட றைக்கிளீனர்ஸ்

இம் மூன்றும் இணைந்த சேவைகளை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சன்லைற் றைக்கிளீனர்ஸ்

**பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.**

**கிளைகள்:**

## சன்லைற் மல்ரி சேவிஸ்
## சன்லைற் தொலைத்தொடர்பு சேவை

**கச்சேரியடி, யாழ்ப்பாணம்.**



நெஞ்சிலே நித்தம் முருக நாமம்
நித்தமும் வணங்கிடும் தெய்வம் அவனல்லோ
பணிந்திடும் ,எந்நாளும் அவன் திருப்பாதம்
பண்ணிடும் செயலெல்லாம் முருகன் துணையன்றோ!

# சீமாட்டி
# SEEMATI

தரமான கூறைச் சட்டைகள் பட்டுப்புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் – மொத்த சில்லறை வியாபாரிகள்
**122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

Specialist in Wedding Saree Wholesale & Retail
Dealers in Textiles
122, Power House Road, Jaffna.

15, நவீன சந்தை, மங்கை சில்க் யாழ்ப்பாணம்.

**MANGAI SILKS**

8, நவீன சந்தை, மங்கை சில்க் சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுமேடு கடந்து வந்து முருகா
தேரில் உன்னைத் தொழுது நிற்கின்றோம்
இன்பம் தந்தெம்மை காத்திடுவாய்
நல்லூர் முருகனை அவன் தாழ் வணங்கி போற்றிடுவோம் எந்நாளும்



**யாழ்.நகரில்**

தரம் மிக்க பேப்பர் வகைகளையும், எசன்ஸ் வகைகளையும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

ரோணியோ பேப்பர் — ரைப்பிங் சீற் — போஸ்டர் பேப்பர் — நியூஸ் பிறின்ட் — பாங் பேப்பர் — ரீசுப் பேப்பர்
மற்றும்
பொக்ஸ் போர்ட் — சிப் போர்ட் — பிறிஸ்ரல் போர்ட்
ஆகிய சகலவிதமான பேப்பர் வகைகளுக்கும், அச்சகத்துக்குத் தேவையான
மை வகைகளையும் — ரோணியோ மை வகைகளையும்
வேண்டிய அளவிலும்
ஐஸ்கிறீம், — குளிர்பானம், — கேக் வகை — பிஸ்கற் — இனிப்பு — பீடா
ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல மூலப்பொருட்களையும்
ஊதுபத்தி — சாம்பிராணி, விளைவு கூடம் — வாசனைத் திரவியங்கள்
ஆயுர்வேத மருந்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள் — குங்குமம் — குங்குமப்பூ — எண்ணெய் — நெய்
மற்றும்
சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள் — பிஸ்கட் — சொக்கிலேட் — ரொபி
வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம் தான்

**பெட்டா எசன்ஸ் சப்ளையேர்ஸ் அன் பேப்பர் மேர்ச்சன்ட்**

# பெட்டா எசன்ஸ் சப்ளையேர்ஸ்

**104 (298), ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.**

**சேவலும் மயிலும் துணை**



நல்லைக் குமரன் பணி வாழ்க! தொடர்க!! வளர்க!!
என வாழ்த்தி வணங்குகின்றோம்.

# வேணி களஞ்சியம்

**165, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

மொத்த சில்லறை வாணிபம். உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருள்களை
கொழும்பு கொண்டு சென்று சந்தைப்படுத்தித் தருபவர்கள்
வேணி ரான்ஸ்போட் ஸ்தாபனத்தார் என்பதை
நினைவில் வைத்திருங்கள்
தொலைபேசி இல. - 021.2046, 021.2661.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை விளக்கங்களை அறிந்து கொண் டால் அவை ஒவ்வொன்றும் நம் முன்னோர்க ளால் காரண காரியத்துடனேயே விதிக்கப்பட் டுள்ளன என்பது புரியும்.

## திருமணத்தில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள்

## சடங்குகளுக்கான விளக்கங்கள்.

அரசாணி: திருமண மண்டபத்தில் சிவ சக்தியின் பாவனையில் அரசும் முருக்கும் நடப்படும். இதுவே அரசாணி மரம் எனப்படும்.

விநாயகர் பூசை: எந்தக் கிரியையும் இனிது நடைபெறுவதற்கு விநாயகக்கடவுளது திருவருள் வேண்டப்படும் இதுவே விநாயகர் பூசை எனப்படும்.

நிறைகுடம் வைத்தல்: மணவாழ்க்கை நிறைவுடன் திகழவேண்டும் என்பதைக் குறிக்க நிறைகுடம் வைக்கப்படுகிறது.

கைவிளக்கேற்றல்: இல்லறம் ஒளிமயமா கத் திகழ வேண்டும் என்பதைக் குறிக்கும்.

இரட்சாபந்தனம்: (காப்புக்கட்டுதல்) இரட் சை - காப்பு, பந்தனம் - கட்டல் மணமக்கள் பாவங்களிலிருந்தும் நீங்கித் தொடங்கிய கரு மத்தை இடையூறின்றி முடிக்கவும் இடையில் (ஆசௌசம்) குற்றங்கள் முதலியன தீண்டா திருக்கவும் கையிற் காப்புக்கட்டப்படும். திரு மணம் இனிதாக நிறைவடைந்த பின்னர் காப் புக் களைதல் இடம்பெறும்.

கும்பபூசை: மணமகனுக்கு இரட்சாபந்தன மான பின்னர் ஆசாரியர் முறைப்படி சிவனதும் சக்தியினதும் அருளைப் பெறுதற்காகச் செய் யப்படும் கிரியையே கும்பபூசையாகும்.

நவக்கிரக பூசை: வாழ்க்கைக்கும் நவக் கிரகங்களுக்கும் தொடர்புண்டு. எனவே அவற் றால் வரும் குற்றங்களைப் போக்கியருளும் படி செய்யும் பூசை இதுவாகும். வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் மணமக்களுக்கு நவக்கிரக தோசங்களின் பலனை குறைக்கச் செய்தல்.

ஓமம் வளர்த்தல்: கும்பத்திலே பூசித்த யாகேசுவரியின் (சிவன் சக்தி) அருளை நிலைபெறச்செய்வதற்காக ஓமகுண்டத்தில் அக்கினி காரியம் செய்யப்படும். இங்கு வளர்க் கும் அக்கினி சிவாக்கினி எனப்படும். சிவாக் கினி வாழ்க்கைக்கு வேண்டிய தூய அருளை நல்கும்.

பிதுரர் ஆசீர்வாதம்: குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்ப தற்கு அக்குடும்பத்தின் முன்னோரது ஆசீர் வாதம் வேண்டும். அதற்காக முன்னோராகிய பிதுரர்களைத் திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசியைப் பெறும் கிரியை. மண மக்கள் இருவரினதும் தந்தையர்களினால் செய்யப்படும். (மணமக்களின் பேரன், பூட்டன் பெயர்கள் கூறி ஆசிவேண்டப்படும்)

மணமகனுக்கு உபசாரம்: மணவறையில், மணமகனின் வலப்பக்கத்தில் மணமகளை இருத்தி இரட்சாபந்தனம் செய்தபின்பு, அவளு டைய தகப்பனார் கன்னியாதானம் செய்வதற் காகச் சங்கற்பம் செய்துகொள்வார். பின்பு பட்டுவேட்டி சால்வையுடன் உபசாரப் பொருட் களை உபகாரமாக மணமகனுக்குக் கொடுப்பார்.

கன்னியாதானம்: மணமகளைத் தானமாக வழங்குதல். மணமகளின் தந்தை தம் மடி யிலே மகளை இருத்தி அவளைத் தானமாகத் தாரை வார்த்து மணமகனின் கையில் அளிப் பார். தண்ணீரைத் தாரையோடு கொடுப்பதால் இது தாராதத்தம் எனப்படும். கையில் நீரிடல் ஒரு பொருளை இறுதியாகக் கொடுத்தலுக்கு அறிகுறி.

கூறை கொடுத்தல்: பெண்ணின் திருமணச் சேலை, தாலி மற்றும் உபசாரப் பொருட்களை வைத்துச் சுத்தி செய்து பூசித்தபின் பெரியோரி னால் அவை ஆசீர்வதிக்கப்படும். பின்னர் மணமகன் மணமகளுக்கு உபசாரமாக கூறை யைக் கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலிகட்டடல்: இந்து சமயத் திருமணங்களிலே விரிவான சமயக்கிரியைகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் எல்லாம் முதன்மையானதும் பவித்திரமானதும் மாங்கல்யதாரணம் ஆகும். தாலிகட்டு என்பது உண்மையில் மணமகன் மணமகள் ஆகிய இருவரதும் உள்ளங்களின் மானசீகமான பிணைப்பு ஆகும். தாலி திருமணத்தின் ஒரு குறியீடு. வெளிப்படையான சின்னம் ஆகவே தாலி புனிதமானது. தாலியிற் பலவிதமான சின்னங்கள் பொறிக்கப்படுகின்றன. தாலியிற் சிவலிங்கம், விநாயகர் அல்லது இலட்சுமியின் திருவுருவம் பொறிக்கப்படடல் வேண்டும். மணமகனால் தாலிக்குத் தீபம் காட்டப்படும். தாலிகட்டுவதற்கு முன்னர் முகூர்த்தக் குற்றங்களைத் தீர்ப்பதற்காகத் தானம் செய்யப்படும். பின்னர் மணமகன், மணமகளை ஏற்று, தன்குல தெய்வத்தின் பெயரை உச்சரித்துக் கொண்டு மணமகளின் கழுத்தில் தாலியைக் கட்டுவார். மணமகளின் சகோதரியார் முடிச்சினைப் போட மணமகனின் தாயார் தீபத்தைக் காட்டுவார். மணமகன், மணமகளின் நெற்றி மீது விபூதியும், குங்குமமும் இடுவார். பின்னர் மணமகள் மணமகனின் இடதுபுறத்தில் இருத்தப்படுவார். இதனையடுத்து அக்கினி வளர்த்துப் பூசை நடைபெறும்.

மாலை மாற்றுதல்: மணமகன், மணமகள் இருவரதும் உள்ளம் ஒன்றாகக்கலத்தலைக் குறிக்கும் நிகழ்வாக மாலை மாற்றுதல் இடம் பெறும்.

பால்பழம் கொடுத்தல்: தயிர், தேன், சர்க்கரை, நெய், பழம் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதார்த்தத்தை மணப்பெண் முதலில் மணமகனுக்கு கொடுப்பார். பின்னர் மணமகன் பெண்ணுக்குக் கொடுப்பார். உயர்ந்த பதார்த்தங்களின் சுவை போன்று மணமக்கள் வாழ்வு முழுவதும் நிலவவேண்டும் என்பதற்காக இது வழங்கப்படுகிறது.

கோ **தரிசனம்:** பசு புண்ணியத்தின் வடிவம், அப்புண்ணிய வடிவத்தைப் பார்த்தல் நல்லசகுனம். (வாழ்க்கையில் யாவும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை ஏற்படும்.)

ஏழடி **வைத்தல்:** மணமகளுடைய கையை மணமகன் பிடித்துக் கொண்டு அக்கினிக்குப் பக்கத்தில் ஏழு அடி நடப்பான். இந்த ஏழு அடியையும் உணவுப் பொருள், சரீரபலம், கடவுள் வழிபாடு, மனஅமைவு, அறிவு, காலத்திற்குக் காலம் வரும் பொருட்களும் அவற்றினால் வரும் சுகங்களும், யாகத்திற்கு வேண்டியவை ஆகிய ஏழுவிதமான செல்வங்களையும் மணமக்கள் இருவரும் பெற்றுக்கொள்ள மனமொப்பி முயற்சி செய்வதற்கு வேண்டிய அருளைக் கடவுளிடம் பெறுவதைக் குறிக்கும். மணமக்கள் ஏழடி நடத்தல் மூன்று முறை இடம்பெறும். அவர்கள் ஒவ்வொரு முறை வலம் வரும் பொழுதும் மணமகளின் சகோதரன் பொரியினைக் கையில் கொடுப்பார். அவர்கள் அதனை அக்கினியில் இடுவார்கள். நெல் பொரியாக மலர்வது போன்று அவர்களுடைய வாழ்வும் வளம்பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

அம்மி மிதித்தல்: மணமகளது வலது காலை மணமகன் தூக்கி அம்மி மீது வைப்பார். இதன் கருத்து பெண்ணானவள் அம்மிக் கல்லைப் போன்று தன்னுடைய நிலையில் நின்றும் பிரியாமலும், இளகாமலுமிருந்து, தனது கணவனிலேயுள்ள பற்று நீங்காமலும், கற்பு நெறியினின்று விலகாமலும் இருப்பதை நிலைப் படுத்துவதாகக் கொள்ளப்படும்.

அருந்ததி காட்டல்: இது ஒழுக்கம், கற்பு, பிறரை விழையாமை, உறுதிப்பாடு ஆகியவற்றின் உயர்வு குறித்துக் காட்டப்படும். இது பெண்ணுக்கு மாத்திரமன்றி ஆணுக்கும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீயில்லாமல் தெய்வம் இல்லை - முருகா!
நாம் மனதார வணங்கும் தெய்வம் நீயல்லவோ!!
முருகா தேரேறி அருள் சுரந்து வரம் தருவாய் முருகா!!!

**சகலவிதமான பொருள்களும்**
**கொழும்பில் இருந்து வரவழைத்து பெற்றுக்கொள்ளலாம்**

- பலசரக்குப் பொருள்கள்
- அரிசி வகைகள்
- தும்புத் தயாரிப்புகள்
- நைலோன் கயிறுகள்

**இன்னும் பலவகையான பொருள்களுக்கும் நாடுங்கள்**

# யாழ்பாண வணிக நிலையம்

**302 (108), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களும் பெற்றுக்கொள்ளலாம்.

## கிருஷ்ணா தொலைபேசிச் சேவை

**87, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**Telephone - 021.2509, 021.2806, 021.2981,.Fax - 021.2509**

சகலவிதமான கட்டடப் பொருள்களுக்கும்

## JAFFNA HARDWARES

General Merchants & Commission Agents
168, K.K.S. Road, Jaffna.

## JAFFNA TRADERS

Hospital Road, Jaffna.

---

தங்க வேலவனே! ஐங்கரன் தம்பியே
சிறந்த நல் வாழ்வு தந்து எமை ரட்சிப்பாய்!



கண் வைத்தியர்களின் சிபார்சுக்கேற்ப சிறந்த தொழில்நுட்பவியலாளரினால்
குறித்த நேரத்தில் சிறந்த முறையில்
**மூக்குக் கண்ணாடி** வழங்குபவர்கள்.
**பல்கட்டுதலும் மருந்தகமும்**
உங்களின் பேரபிமானம் பெற்ற
**எரிக்கணேஷ் மூக்குக் கண்ணாடியகத்தினரின்**
மற்றுமோர் இணைந்த சேவை தான்
**'பல் கட்டுதலும் மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதலும்'**
எங்களை நாடி வருவோரின் தேவைகள் வசதிகள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

# எரிக்கணேஷ்

**இல.566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

கிளைகள்:
**80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.** **91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லைக் குமரன்" மலர் உலகெலாம் அருள் சுரக்க
**எமது வாழ்த்துக்கள்**

# SAMUEL SONS & CO.LTD.

*Multi - Disciplinary Engineers, Contractors, Project Managers*

**268, Nawala Road, Nawala.**
*Branch*: **206, 208, Hospital Road, Jaffna. T.P. - 021 - 2665**



எம்மிடம் சேவிஸ் ஸ்ரேசனுக்குத் தேவையான

- *Air Compressor*
- *Hydraulic Hoist*
- *Vehicle Washer*
- *Lubricating Equipment*
- *Tyre Inflators*

**சிலவற்றுடன்** Dewalt, Electric Drill, Angle Grinder, Generators,
Concretemixer, Vibrator
Wood Working Machine & Electric Water Pumps
**சகலவிதமான தராசுகள்** Engineering Tools **பெற்றுக்கொள்ளலாம்.**
**யாழ்.நகரில் தலைசிறந்த பொறியியல் ஸ்தாபனம்.**

---



நாத மணி கேட்கையில்! முருகா என விழித்தெழுந்து
கை கூப்பி, நம் நாட்டு நலமுயர தனியமுதாம்
'நல்லருள்' நிறைந்தருளெம் ஆறுமுகப் பெருமானே

**யாழ்.நகரில்....**

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் தயாரிப்புக்கள்,
இனிப்பு வகை உற்பத்தி மூலப்பொருள்கள்,
சகலவித வாசனைத் திரவியங்கள்,
சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள்,
றொபி மற்றும் பிஸ்கட் வகைகளுக்கும்
**நாடவேண்டிய ஒரே இடம்**

# ஸ்ரீகாந்

## எசன்ஸ் & குறோசறீஸ்

**161, கே.கே.எஸ். வீதி, (சத்திரத்து சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி - 021.2219.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாதம்: இறுதியாக ஆசாரியார் பூர ணாகுதி செய்து மணமக்களை ஆசீர்வதிப்பார். அதன் பிற்பாடு நிறைவான பெரியோர்கள் அறுகரிசி போட்டு ஆசீர்வதிப்பர். அறுகரிசி என்பது முளைக்கும் தன்மை வாய்ந்த உமி மட்டும் நீக்கப்பட்ட அரிசியாகும். இப்பச்சை அரிசியை மஞ்சள் கலந்து மலர்களுடன் சொரிந்து வாழ்த்துவதே அறுகரிசி போடுதல் என அழைக்கப்படும்.

இத்திருமண முறையே பண்டைக்காலந் தொட்டு இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. தமிழர்களின் வாழ்க்கையில் நிக ழும் முக்கிய சடங்காகிய திருமணத்தில் மொழி, சமயம், கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவை இன்றும் பேணப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. மணமக்களாகிய இருவ ரும் சிறந்த அறிவுரைகளைப் பெற்று நன்மக்க ளைப் பெற்று கற்றும் கற்பித்தும் சமுதாயத் தில் நற்பெயர் எடுத்து அகிலமதில் நோயின்மை, கல்வி, தனம், தானியம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், வலிமை, துணிவு, வாழ்நாள் வெற்றி, நல்லூழ், நுகர்ச்சி எனப்ப டும் பதினாறு செல்வங்களும் பெற்று பெரு வாழ்வு வாழ இறைவனை வணங்குவோமாக.

**"திருமணத்தை நிலைக்கச் செய்வது உடல் அல்ல : உள்ளம் தான்"**

★

## நல்லைப் பதியுறையும் நாயகரே

நல்லைப் பதியுறையும் நாயகரே
நானிலம் போற்றிடும் தூயவரே
தொல்லை வினை போக்குகின்ற
ஸ்ரீ சுப்பிரமண்யப் பெருமானே
கல்லை யொத்த மனமும் கசிந்து
உருகச் செய்யும் உத்தமரே
இல்லையெனாது வரமீந்தருளும்
எங்கள் வள்ளிமணாளரே சரணம்

வந்தனை செய்தே துதிக்கின்றோம்
வழிபடும் அடியார்கள் வினை
நிந்தனை செய்திடும் நின்மலனே
நின்தாள் சரணம் ஐயா!
உந்தனைப் பணிந்தோம் முருகா!
சுகமான வாழ்வு அருளாய்!
கந்தனைக் கரங்குவித்தோர்க்கு
காசினியில் துன்பமே இல்லை!

வள்ளி மணாளனே நல்லூருறை பவனே
வடிவேலவனே வரமருள வேண்டும்
புள்ளி மயிலேறி அழைத்தவுடனே வருவாய்
புதுவாழ்வருளும் சரவணபவனே
துள்ளி ஓடிவந்தே துயர் களைவாயையா
தூயவனே மாயோன் மருகனே
வெள்ளி யங்கிரியுறை சிவனார் மகனே
வேண்டுவார் வினை தீர்க்கும் வேலவனே சரணம்!

**'கவிமணி' சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிவாணர் செ. மதுசூதனன்

# சைவமும் தமிழும் இரு கண்கள் திருமுறைகளை ஓதி உய்யுங்கள்

காலதேச வர்த்தமானங்களுக்கமைவாக வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொண்டு சமயம் என்று பெரிட்டுள்ளனர். பண்டைய தமிழர்கள் தமக்கெனக் கொண்ட சமயம் சைவம் என்றாயிற்று. தூய நெறியாகிய சைவத்தின் வழிபடு தெய்வமாகச் சிவனைக் கொண்டனர் பண்டைத் தமிழர்கள். காலப் போக்கில் வந்த கொள்கைகளெல்லாம் கலந்து இணைந்து ஒன்றாகியதனால் இன்றைய சைவம் இந்துவென்றாய்விட்டது. உண்மைச் சைவர்களைக் கனவிலும், நினைவிலும் காணலாமன்றி நிலவுலகில் காண முடியாத தான தன்மையே இன்று காணப்படுகிறது.

## சிவனே முழுமுதற் கடவுள்

மூல மூர்த்தியாகச் சிவலிங்கத்தையும், ஐந்தொழில் புரியும் ஆடல் தலைவனாகிய கூத்தப்பெருமானை கும்பிடும் உருவ மூர்த்தி யாகவும், கல்லால் நீழலமர்ந்த ஆலமர் செல் வனைக் குருமூர்த்தமாகவும் கொண்டு வழி படும் சைவம் அன்பு மார்க்கமாகவும், அருள் மார்க்கமாகவும் அன்றிருந்தது ஐயுறும் அமண ரும் அறுவகைத் தேரரும் வந்ததனால் அது சங்கமம் ஆனது. ஆரியர் வாழ்முறையும் அன்று கலந்தது. நிலத்துக்குரிய தெய்வங்களும், சிறு தெய்வங்களும் முக்கிய இடத்தைப் பிடித் துக் கொண்டன. இதனால் குழம்பிப் போயி ருந்த தமிழகத்தில் மூலைக்கொரு மதம் முகிழ்ந்தெழுந்தது. மிண்டிய மாயாவாதமென் னும் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்தது. உலகா யதமெனும் ஒண்டிறற் பாம்பின் கலா பேதத்த கடுவிடம் செறிந்தது. மணிவாசகர் இப்படிச் சொல்கிறார்.

'இந்நிலையிற்றான் வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல் என்ற கொள்கை யினடிப்படையில் சைவம் புத்துயிர் பெற முனைந்தது. இருப்பினும் ஒவ்வொரு பகுதியி னரும் தத்தம் மதங்களே அமைவதாகச் சாற்றி மலைந்தனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் தோன்றி நம்மதம் காத்தனர். "ஓருருவாயினை மானாங் காரத்து, ஈரியல்பாய் ஒரு விண்முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் படைத் தளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை" என்று சம்பந்தர் இறைவனைக் காண்கிறார்.

## சித்தாந்த சிவநெறி

"வேதம் பசு அதன் பால் மெய்யாகமம், நால்வர் ஓதும் தமிழ் அதனின் உள்ளூறு, நெய் - போதமிகு நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான் செய்த தமிழ் நூலின் திறம்" என்ற சான்றோர் திரு வாக்கினை நோக்குதல் நன்று. தொன்மைச் சைவத்திறத்தினை தேடிப்பிடித்து தொகுத்த தென்றாய் விட்ட சைவசித்தாந்த சாத்தி ரங்கள் கூறும் நெறியே நமது சைவமெனலாம். இங்கு நாத்திகமும் இல்லை. மாற்று வழியு மில்லை.

நல்லைக் குமரன் 9வது மலருக்கு எமது உளங் கனிந்த வாழ்த்துக்கள்

**SRI LANKA INSURANCE CORPORATION LTD.**

**DIVITHILINA** — Provides a higher return to your Investment, whilst providing protection

**YASA ISURA** — Life Cover Plus periodical advance payments to fulfill your aspirations in life.

**MINIMUTHU** — Provides assistance for education. A wise investmant.

வ.ப.இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்

**SRI LANKA INSURANCE CORPORATION LTD.**

No.12, Veerasingam Hall, Jaffna.

Tel : 021.2023,Fax : 021.2023.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை முருகன் அவன் திருவடி பணிந்தால்
அகலுமப்பா சகல துன்பங்களும்
என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
அண்ணா தயாரிப்புக்களே!

- அண்ணா கோப்பி
- அண்ணா பற்பொடி
- அண்ணா பத்தி
- அண்ணா ரொபி வகை
- பச்சை அரிசி மா
- குரக்கன் மா
- ஆட்டா மா
- வறுத்த அரிசி மா
- உழுந்து மா

மற்றும்
கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும்
ஏற்ற போசாக்கு நிறைந்த சத்து மா

ஜீவாகாரம்

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா கோப்பிக் கடை

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தலைமையகம்: தொ.பே. 3565, 2380.

முருகா! வேண்டும் தினம் வேண்டும் நின் அருள்
நாளும் பொழுதும் முருகா உனை நெஞ்சிருத்தி
கந்தா, கார்த்திகேயா, ஓம் சரவண பவா - என்று
வணங்கிடுவோம் தங்கரதமேறி அமைதி தந்திடுவாய்.

சுப்பலோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்

சேவையில் ஒரு திருப்தி காண்பதே மகிழ்ச்சி என
யாழ்.நகரில் தமக்கென ஒரு தனி இடம் பிடித்தவர்கள்

- ☆ சிறந்த முறையில் CDயில் இருந்து பாடல் பதிவு செய்திடவும்
- ☆ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை வீடியோ படம் பிடித்திடவும்
- ☆ வர்ண புகைப்படம் பிடித்திடவும்
- ☆ கடவுச்சீட்டு, அடையாள அட்டை படங்கள் உடனுக்குடன் பெற்றிடவும்
- ☆ படச்சுருள்களை வேண்டிய அளவில் பிரதியாக்கம் செய்ய

நாடவேண்டிய இடம்.

தலைமையகம்:
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No. : 2082.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்திகம் பேசும் பெரியாரின் பாசறையில் வளர்ந்த அறிஞர் அண்ணா ஒருசமயம் ஆச்சாரிய வினோபாவுடன் பேசும்போது, திருமூலரின் திருமந்திரத்திலுள்ள சிறந்த கொள்கைகள் தனக்குப் பிடித்தமானவை என்று கூறினார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை ஒப்புக் கொண்டிருந்தார். இன்னொரு சமயம் பதிலளிக்கையில் "கடவுள் இல்லவே இல்லை" என்ற பெரியாரின் கொள்கையில் எனக்கு உடன்பாடு இல்லை என்றார். மத மாற்றம் செய்யும் கிறிஸ்தவர்கள் பற்றிய கேள்வி எழுந்தபோது, கிறிஸ்தவர்கள் செய்யும் சேவை களைப்பற்றிக் குறிப்பிட்டதோடு அவர்கள் ஏழைகள், ஏதிலிகளையெல்லாம் அணுகி இறைபோதனை செய்வதோடு, தேவையறிந்து அவர் களுக்குச் சேவையும் செய்கிறார்கள். நோயா ளிகளை வைத்தியசாலைகளமைத்துப் பராமரிக்கிறார்கள். நோய் குணமாகிச் செல்லும்போது பைபிள் நூலைக் கையில் கொடுத்து வழியனுப்பி வருகிறார்கள். இந்துக்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஏன் அப்படிச் சேவைகளைச் செய்யக்கூடாது. ஏன் பகவத்கீதையைக் கையில் கொடுத்து வழியனுப்பக் கூடாது? என்று சொல்லியிருக்கிறார். வள்ளலார் இராமலிங்கரைப் பற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிறார். வள்ளலாரோவெனில் "நாஸ்திகம் பேசுபவர்தம் நாக்குமுடைநாக்கு, நாக்கு ருசி கொள்ளுவது நாறிய பிண்ணாக்கு" என்று பாடியிருக்கிறார்.

## தேவாரம் தித்திக்கும்

வைத்தீஸ்வரன் கோயில் என்ற இடத்தில் அறிஞர் அண்ணா பிரச்சாரம் செய்துவிட்டுத் திரும்பும்போது கோயிற் தெருவைத் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. அப்போது எதிரே சுவாமி தேரில் ஆரோகணித்து வந்து கொண்டிருந்ததால் அவ்விடத்தைத் தாண்டிச் செல்ல அவருக்கு வெகு நேரமாயிற்று. தேர்க் காட்சிபற்றி அங்கு அவதானித்ததை அவர் குறிப்பிடுகின்றார். "தேருக்கு முன்னால் வாண வேடிக்கை காட்டுகின்றார்கள். பாண்ட் வாத்தியம், மேளம் எல்லாம் ஒலிக்கின்றன. தேருக்குப் பின்னால் வைதிகர்கள் வேதம் ஓதிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் தேவாரம் ஓதுகிறார்கள். மக்கள் ஆவலோடு தீந்தமிழ்த் தேவாரத்தைக் கேட்க வாசலில் வந்து நிற்கிறார்கள். அவர்களின் காதுகளில் தெளிவாகத் தேவார ஓசை விழாமல் மற்றவை தடுத்துவிடுகின்றன. ஆனாலும் தேவாரத்தை எப்படியாவது செவிமடுத்து விடவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு இருக்கிறது. வாசலில் நின்றோர் நின்று கொண்டேயிருக்கிறார்கள். வாண வேடிக்கை, மேளச் சத்தம், வேதபாராயண ஒலியெல்லாம் ஒருவிதமாக நகர்ந்து போன பிறகு, தேவாரம் பாடுவது மக்களின் செவிகளில் நன்றாகக் கேட்கிறது. இங்குதான் அண்ணாவின் தமிழார்வம் வெளியாகிறது. கோயில்களை எதிர்ப்பது, கோயில் கூடாதென்பதற்காகவல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதற்காகவே" என்பது அவர்கள் கொள்கை.

## தெய்வம் எங்கே

சிவாக்கியர் ஒரு பெரிய சித்தர். அவர் கண்ணில் தேர்க்காட்சி தெரிகிறது. "ஊரிலுள்ள மனிதர்காள் ஒருமனதாய்க் கூடியே தேரிலே வடத்தை விட்டுச் செம்பைவைத்து இழுக்கிறீர். ஆருமே அறியொணாத ஆதிசித்த நாதரைப் பேதையான மனிதர் செய்யும் பிரளி பாரும் பாருமே" என்று அவர் பாடுகிறார். உண்மையான இறை பக்தி உள்ளத்திலேயே உருவாக வேண்டுமென்பது அவர் எண்ணம். "மாந்தருக்குள் நாஸ்திகர்கள் என்னும் தனி வகுப்பு ஒன்று இல்லை. ஆனால் இறைவனை உணராதவர்களும் அவனுடைய மகிமையின் அனுபவத்தைப் பெறும் வாய்ப்புப் பெறாதவர்களும் ஆகிய சிலரே இருக்கிறார்கள்" என்று சத்தியசாயிபாபா சொல்கிறார். அவர் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகையில் "அழகே ஆனந்தம். பாலில் வெண்ணெய் மறைந்திருப்பதைப் போல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தெய்வீக அம்சம் இரண்டறக் கலந்து மறைவாக இருக்கிறது. வெண்ணெயை எடுப்பதற்கு எப்படிக் கடைகின்றோமோ அப்படி நம் மனத்தை சத்கருமம், சத்சங்கம் என்னும் மத்தைக் கொண்டு கடைந்து தெய்வீக வாழ்வு என்னும் வெண்ணெய்யைப் பெறவேண்டும்" என்கிறார்.

### தெய்வீக ஆற்றல்

மானசீக விஞ்ஞான ஆராய்ச்சிகள் தற்காலத்திய அறிவியக்கத்தின் அடிப்படையே பொய்யானதென்று புதிய சான்றுகள் அளித்து வருகின்றன. தொலை நிகழ்வறிதலும், வருவனவுணர்தலும் சென்றதை அறிதலும் என்ற ஆற்றல்கள் ஒவ்வொருவர் மூளையிலும் அமைந்து கிடக்கின்றன என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. பிற்காலத்தில் நடக்கவேண்டிய நிகழ்ச்சிகளைத் தற்காலத்திலேயே கண்முன்னால் தோன்றுவதுபோல அறியலாம். இதேபோலவே இறந்த காலத்தையும் நிகழ்காலமாகக் காணலாம். காலம் இடம் இவற்றைப் பற்றிக்கொண்டுள்ள நம் அறிவு அர்த்தமற்றதென்றும் இதுவரை நாம் கடைப்பிடித்து நம்பிவந்த காலம் என்பன இல்லையென்பதையும் உணர ஆரம்பித்திருக்கின்றோம். முன்னுணர்தல், இறப்புணர்தல், தொலை மனோத்தொடர்பு முதலாயின வளர வளர அதற்கேற்பத் தற்கால அறிவு நிலை மாறவேண்டியிருக்கும்" என்று ஓலப் ஸ்டேபிள்டன் என்ற அறிஞர் கூறுகிறார்.

"யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன். பார்த்தா! மனிதர் யாங்கணும் என் வழியையே பின்பற்றுகிறார்கள். தொழில்களில் வெற்றியை விரும்புவோர் இங்கு தேவதைகளைப் பூசை செய்கிறார்கள். மனிதவுலகத்தில் தொழில்களினின்றும் வெற்றி விரைவில் விளைவதன்றோ! என்று கிருஷ்ணர் கீதையிலே சொல்கிறார். சைவ உணவின் மூலம் நிறையுணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கலாம் என்று பேரறிஞர் பேர்ணாட்ஷா கூறியுள்ளார்.

### தெய்வத்தை உணர்தல்

கடவுள் எங்கேயிருக்கிறார்? அவரைக் காட்டு பார்க்கலாம். அப்போதுதான் நான் நம்புவேன் என்று சொன்ன ஒருவருக்கு திருமுருக கிருபானந்தவாரியார் "இப்போது மிதிவண்டியிலுள்ள சக்கரத்திலே ரயர் இருக்கிறது. அதற்குள்ளே ரியூப் இருக்கிறது. ரியூப்புக்குள்ளே காற்று இருக்கிறது. அந்தக் காற்று நமது கண்களுக்குத் தெரிவதில்லை. அந்தக் காற்றைப் பார்த்தால்தான் மிதிவண்டியில் செல்வேன் என்று யாராவது சொல்வார்களா? அதுபோலத்தான் கடவுளும் என்று கூறித் தலைகுனிய வைத்தார். ஆன்ம சக்தியின் வளர்ச்சிதான் தெய்வசக்தி. தெய்வம் அருள் வடிவமானது. திருவருளாற்றலே தெய்வம். முந்திய முதல் நடு இறுதியுமானாய், மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்" என்று மாணிக்கவாசகரும், மைப்படித்த கண்ணாளும் தானும் கச்சிமயானத்தான் வார்சடையான் என்னினல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று காட்டவொண்ணாது என்று நாவுக்கரசரும் கூறியுள்ளார்.

ஆகவே சைவம் தந்த திருமுறைகளை ஓதியுணர்ந்து உய்யும் வழிகாணவேண்டியதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். நமது மனச்சாட்சியை உறுத்தக்கூடிய மொழியிலேயே வழிபாடு செய்யவேண்டும். புரியாத மொழியில் வழிபடுபவர்களுக்கு பூச்சியமான பலனே கிட்டும் என்பதால் தமிழர்களாகிய நாம் தெய்வத் திருமுறைகளினால் இறைவனை வழிபடுதலே சாலச்சிறந்ததாகும்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை கி.கிருபானந்தா

# "அடியேன் உன் அடைக்கலமே"

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்று நம் அருந்தமிழ் அன்னை ஔவைப் பிராட்டி செப்பியதற் கொப்ப பெறுதற்கரியதாகிய அரிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்தல் இன்றியமையாததாகும்.

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்ற நாவுக்கரசரின் அருள் வாக்கு இம்மாநிலத்தில் கிடைத்தற்கரிய பெரும் பேறு ஒன்று உண்டெனில் அதுவே மனிதப்பிறவி. "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்று ஏங்குகின்றனர். கிடைத்தற்கரிதான இப்பிறவி ஒன்றினால்தான் முத்தியாகிய இறைவனின் திருவடிகளைப் பெறமுடியும். "பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேராதார் எனும் திருக் குறளுக்கொப்ப பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்தியெனும் கரையை அடைய மனிதப் பிறவியெனும் படைக்கலம் நமக்கு உறு துணையாக அமைந்துள்ளது. இவ்வாறு கிடைத்தற்கரிதான இப்பிறவி வாய்ப்பினை நாம் இழந்துவிட்டு மீண்டும் இப்பிறவி எடுப்பதற்கு எத்துணை இடர்களை நாம் சந்திக்க வேண்டிவரும் என்பதை நன்கு சிந் திக்க வேண்டும்.

"புல்லாகிப், பூடாய்ப், புழுவாய், மரமாகிப் பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்......... எல்லாப் பிறப்பும் பிறந்து இழைத்தேன் எம்பெருமான்" என மணிவாசகர் இயம்புவதிலி ருந்து பிறவியின் பெரும் துன்பங்களை நன்கு உணரமுடியும்.

நேற்று இருந்தவன் இன்று இல்லை. இதுவே இந்த உலகின் பெருமை. மண்ணில் தோன்றிய மனிதர்கள் எல்லோருமே ஒருநாள் மறைய வேண்டியவர்களே. எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதில் அன்றி எப்படி வாழ்ந் தான் என்பதிலேதான் மனித வாழ்வின் பெருமை இருக்கிறது. புசிப்பதுவும் உறங்குவதுமல்ல மனித வாழ்க்கை. பிறவிப் பெருங்கடல் நீந்தும் பெருவாய்ப்புள்ள வாழ்க்கை மனிதனுடைய வாழ்க்கை என்பதை உணர வேண்டும்.

**"இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்**
**காணப்பெற்றால் மனித்தப் பிறவியும்**
**வேண்டுவதே இந்த மானிலத்தே"**

மானிடப் பிறவியின் மகத்துவமெல்லாம் மனம் - மொழி - மெய்யால் தனக்குவமை இல்லா தான் தாளை நினைந்து உருகி மனக்கவலை மாற்றி மகிழ்வதிலே தான் இருக்கிறது. மணி வாசகரின் எச்சரிக்கையை நோக்கும் பொழுது வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வாழ் **வினைப்பட்டு ஆழ்கின்றாய் ஆழாமல் காப் பானை ஏத்தாதே சூழ்கின்றாய் கேடு உனக் குச் சொல்கின்றேன் பல்காலும் வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே"** என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைந்து காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது நாதன் நாமம் நமச்சிவாயவே என சிந்திக்க வேண்டும்.

ஆன்றோர் வகுத்த நன்னெறிகளிலிருந்து நாம் படிப்படியாக விலகி வருகிறோம். செய்யத்தகாத கருமங்களில் ஈடுபடுவது சகஜமாய் விட்டது. தனக்குத் துன்பஞ் செய்யும் எச்செய்கையும் மற்றவர்களுக்கும் துன்பஞ் செய்யும் என்பதை உணர்ந்தால் நாம் எவ்வளவோ நல்லவர்களாக மாறிவிடலாம். தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் இவ்விடயத்தில் பேருதவி புரியும்.

தெய்வ நம்பிக்கை என்பது எக் காலத்திலும் எல்லாரிடத்திலும் இருந்ததாக நாம் எண்ணுவதற்கில்லை. ஒரு காலத்தில் தெய்வ நம்பிக்கை அதிகமாகவும் இன்னொரு காலத்தில் தெய்வ நம்பிக்கை குறைந்தும் இருந்ததாகப் புராண இதிகாசங்கள் மூலம் நாம் அறிய முடிகிறது. தெய்வ நம்பிக்கைகுறையும் காலத்தில் பாவச்செயல்கள் மலிந்து நல்லோர்கள் துன்புற்றமையையும் இறைவனுடைய பெரும் சக்தி தோன்றி தீயோரை அழித்து நல்லோரைக் காப்பாற்றியமையையும் முன்னோர்கள் கண்டனுபவித்துள்ளார்கள்.

இப்போது உலகெங்கும் தெய்வ நம்பிக்கை குறைந்துள்ளதென்றும் அதனால் பாபச்செயல்கள் அதிகரித்து வருகின்றதெனவும் பெரியோர்கள் கூறுகிறார்கள். ஆதலில் இறைவனுடைய திருவருளினாலே ஆங்காங்கே சமயாசாரியர்கள் தோன்றி நீதியையும் அன்பு நெறியையும் தெய்வசிந்தனையையும் நிலை பெறச் செய்வார்கள் என்பது திண்ணம்.

மெய்யடியார்கள் வாழ்க்கைவரலாற்றினை நாம் துருவிப்பார்ப்போமாயின் அவர்கள் தமக்குத் துன்பம் வந்துற்ற காலத்து அவற்றைத் துடைக்குமாறு இறைவனிடம் முறையிடுவதைக் காண்கின்றோம். பின்னர் இறைவனை அடைய வேண்டும் என்ற வேட்கை மீதூரப் பெற்றவர்களாக அவனை நினைந்து நினைந்து நெக்கு நெக்குருகி அழுகின்றனர். இறைவனையன்றிப் பிற பொருள்களில் நாட்டமின்றி இருக்கின்றனர். இதன்பின்னர் மனித முயற்சியாற் பயன் ஒன்றுமில்லை என உணர்ந்து அவன் அருளாலே அவன் தாள் வணங்கி "அடியேன் உன் அடைக்கலமே" எனப் பூரண சரணாகதி அடைகின்றனர். அவ்வாறு பூரண சரணாகதி அடைந்த பின்னர் தாம் இறைவனை கைப்பாவையென உணர்ந்து "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமோ" என உணருகின்றனர்.

ஈற்றிலே மண்மேல் யாக்கையை விடுதல் பற்றியோ இறைவன் கழல் புகுதல் பற்றியோ எண்ணுவது கூட அடைக்கலம் புகுந்த அடிமைக்கு அழகன்று என்று கருதும் உயர் நிலை ஏற்படுகின்றது. இறைவனை மாத்திரமே வேண்டி இறுதியில் எவ்வித வேண்டுதலையும் ஒழித்து அவனிடமே அடைக்கலம் புகுந்து அவன் வயமாயிருப்பர். இதுவே மெய்யடியார் சிறப்பியல்பாகும்.

"இன்றோர் இடையூறு எனக்குண்டோ
**எண்தோள்**
**முக்கண் எம்மானே நன்றே செய்வாய்**
**பிழை செய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே"**

நீயே நல்லனவற்றைச்செய்யினும் செய்க, அன்றி அல்லனவற்றைச் செய்யினும் செய்வாயாக தலைமைப்பாடுடையேன் நான் அல்லன். நீயேயானாளை, ஆதலின் பயனும் உன்பாலானதே. எம்பெருமானே! நாயிற்கடைப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நீயாகவே விரும்பி ஆட்கொண்டாய், அங்ஙனம் ஆட்கொண்ட உன்தலைமையிலே இது காறும் என் தலைமையில் இருந்தன வாகப்பிறழ உணர்ந்தமையால் உந்த மயக் கத்தினைத் தரும் பிறவிக்குரியன எல்லாவற் றையும் வைத்துவிட்டு விடுதலை பெற்றிருக் கும் அவ்வின்ப நிலையில் இருப்பதன்றி ஆராய்தற்குரியவன்யான் ஆவேனா? ஒருகா லும் ஆகமாட்டேன். **என்னை உன்னுடன்** கூடச்செய்து துன்புறுத்துவாய் அல்லது உன் னுடைய திருவடியின் கண்வைத்து இன் புறுத்துவாய் எதனை எங்ஙனம் இயற்றினும் இதனை இவ்வாறு இயற்றியதேன்? என்று ஆராயப்புகுதலும் இல்லை. எல்லாம் உன் அதிகாரத்தின்படியே நடைபெறுபவை.

'அருள் **செய்வது உன்கடன் பணி செய்து கிடத்தல் என்கடன்"**
என்று முடிவு செய்கிறார்.

உண்மையாகவே "அடியேன் உன் அடைக்கலமே" என்ற உள்ளுணர்ச்சியுடன் சரணாகதியடைந்தால் எல்லாப் பொறுப்பை யும் அவனேபார்த்துக் கொள்வான். படைத்த வன் ஒருவன் இருக்கும் பொழுது நாம் வீணாகக் கவலைப்படுகின்றோம். எங்களால் என்ன செய்யமுடியும்? விதியைவகுத்தவன் ஆண்டவன். அவன் அழைத்துச் செல்லும் வழியில் மௌனமாகச் செல்வதே எங்கள் கடமை.

★

## ஊழ்வினையினை ஒழித்து நம் வாழ்வில் ஒளியேற்று

நல்லூர்ப் பதியின் நாயகனே வேலவா
வருந்தி அழைத்திருந்தும் வாராதது ஏனோ!
வருடம் ஒன்றாகிறது வாதையோ தீரவில்லை
தங்கமயில் ஒன்றும் தங்களுக்கு கிடைக்கலையா?

வரமிருந்தோம் தவமிருந்தோம் தங்கமயில் வாகனனே
கரகமெடுத்தோம் காவடியெடுத்தோம் கணபதியின் சகோதரனே
குன்றில் குடியமர்ந்தோய் எம் குரல் உமக்கு கேட்கலையா?
குடிமக்கள் படும்துயரம் குமரனுக்கு தெரியலையா?

வாழ்விழந்தோம் வளமிழந்தோம் வல்லவர்கள் பலரை இழந்தோம்
நாடிழந்தோம் நலமிழந்தோம் நல்லவர்கள் பலரையும் இழந்தோம்
உற்றார் உறவினரையும் இழந்தோம் உதவி தந்தவர்களையும் இழந்தோம்
இது ஊழ்வினையின் பலன் என்றால் உலகில் நாம் உயர்வதெப்போ?

பிரணவத்தின் பொருளை பிதாவுக்கு உபதேசித்தவா
தேவர்கள் குறை தீர்க்க சூரனை அழித்தவனே
மயிலேறி வந்து உலகினை அளந்தவனே
ஊழ்வினையினை ஒழித்து நம் வாழ்வில் ஒளியேற்று.

**காரை. சி.சிவபாதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் சோ.ந.கந்தசாமி
தலைவர், மொழிப்புலம் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# சைவசித்தாந்தம்

## முன்னுரை

சைவசித்தாந்தம் தமிழர்கள் கண்ட தத்துவம். சிவபிரானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபட்டுவரும் தமிழ்ப் பெருமக்கள் உலகு, உயிர், இறை என்ற முப்பெரும் பொருள் குறித்து முழுமையாக எண்ணி முற்ற முடிந்த முடிபாக வரையறுத்துக் கொண்ட மெய்ப் பொருள் நெறியே சைவசித்தாந்தம் என்ற பெயரில் வழங்கி வருகிறது. இத்தத்து வத்தின் அடிச்சுவடு பன்னெடுங் காலத்திற்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் காணப் பெறுகிறது. திராவிடச் சிந்தனைகள் அடங்கிய உபநிடதங்களில் சிவபிரான் முழுமுதற் கடவுள் என்ற கோட்பாடு நிலை பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் நிரம்பக் காணப்படுகின் றன. சான்றாக ஒருசிலவற்றை இங்கு குறிப் பிடுதல் பொருந்தும்.

## பழைய பனுவல்களில் பரம்பொருள்

சங்கப் பாக்களில் பழமை மிக்கதாகக் கருதப்பெறும் புறநானூற்றுப் பாடலில்,

"பணியியர் அத்தைநின் குடையே
**முனிவர் முக்கட் செல்வர் நகர்வலம்
செயற்கே"** (புறம் 6.)

என வரும் பகுதி எண்ணத்தக்கது. இப் பாடலினால் முக்கட் செல்வராகிய சிவபெரு மானுக்குரிய கோயில் பாண்டிய வேந்தனின் தலைநகரில் திகழ்ந்த உண்மையும், ஒரு வருக்கும் வணங்காத அவன் குடை இறை வன் திருமுன்னர்த் தாழ்ந்து விளங்கும் என்ற வாய்மையும் சுட்டப்பெற்றன. வள்ளல் ஆய் அண்டிரன் சிறந்த சிவநேசச் செல்வன் தனக்கு அரிதாகக் கிடைத்த கலிங்க ஆடை யினை ஆலமர் செல்வனுக்கு வழங்கிய அருமையினைச் சிறு பாணாற்றுப் படையில் காணலாம் (96-99)

மதுரை மருதனிள நாகனார்.

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புநாண்
**கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற"**
(புறம். 55:1-6)

என்று சிவபிரானைச் சுட்டியிருத்தல் இங்கு கருதத்தக்கது. முப்புரம் எரிந்த சிவபிரானின் முக்கண்களுக்கு ஒப்பாக மூவேந்தரும் திகழ்ந்தனர். நடுநாயகமாகத் திகழும் இறை வனின் ஞானக் கண்ணைப் போலச் சங்கம் வைத்துத் தமிழை வளர்க்கும் பாண்டியன் நன்மாறன் ஒளிவீசுகிறான் என்று கவிஞர் இயம்புகிறார். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் சிவபிரான் பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாகப் போற்றப்பெறுகிறார். மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறம்கேட்ட காதை என்ற பகுதியில் சைவ வாதம் இடம்பெற்றுள்ளது. (27:86-95). இப் பகுதியில் இறைவனின் அட்டமூர்த்தமும் கலை உருவமும் பேசப்பெறுதல் காணலாம். மேலும் உயிர்களின்பால் கொண்ட எல்லையற்ற அருளினால் இறைவன் நிகழ்த்தும் முத்தொழில்களும் சுட்டப்பெற்றன. எனினும், சைவசித்தாந்தம் என்ற சொல் முதன் முதல் திருமந்திரத்தில் தான் காணப்படுகிறது. (5-1-3). கி.பி.685-705இல் தென்னாட்டின் நிகரற்ற வேந்தனாக அரசோச்சிய இராசசிம்ம பல்லவனைச் "சைவ சித்தாந்தத்தில் பேரறிவுடையவன்" என்று அவனால் கட்டப்பெற்ற கைலாசநாதர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. பன்னிரு திருமுறைகளிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பரவியும் விரவியும் காணப்பெறுகின்றன. திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருவெழுக் கூற்றிருக்கை சித்தாந்தச் சாரமாகத் திகழ்வது. அப்பர் பெருமானின் பாடல்களில் சைவசித்தாந்தத்திற்குரிய 36 தத்துவங்களும் சுட்டப்பெற்றுள்ளன. 96 தத்துவங்கள் பற்றிய குறிப்பும் இவர் தேவாரத்தில் ஆகமக் குறிப்புக்கள் பல வந்துள்ளன. சைவசித்தாந்தத்தை ஆகம சாரமாகக் கூறும் மரபும் உண்டு. இதனால் ஆகமாந்தம் என்ற பெயரும் இதற்கு உரியதாயிற்று. மாணிக்கவாசகர், "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்" என்று சிவபெருமானைப் போற்றுகின்றார். திருவாசகத்தில் மலபரிபாகம், இருவினை ஒப்பு, மும்மலம், ஐந்துமலம், ஆகிய சித்தாந்தக் குறிப்புக்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. திருமந்திரம் (கி.பி. 500) முதல் தமிழ் ஆகம நூல். சித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளை இந்நூல் விரித்துக் கூறும். எனினும் கி.பி.12 ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கிலும் சைவசித்தாந்தம் தெளிவாகவும் விளக்கமாகவும் நிலைநாட்டப் பெற்றுள்ளது. சந்தான குரவர்களாகிய மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர் உமாபதிசிவம் ஆகியோர் சைவசித்தாந்தத்தின் தலைமை மிக்க ஆசிரியர்கள் ஆவர். சிவஞானபோதம் சிவஞான சித்தியார் சிவப்பிரகாசம், திருவருட்பயன் எனபன குறிப்பிடத்தக்க மெய்கண்ட நூல்கள் ஆகும். மெய்கண்டார்க்கு முற்பட்டவராகக் கருதப்பெறும் திருவியலூர் உய்யவந்ததேவர் அருளிச்செய்த திருவுந்தியாரும் திருக்கடவூர் உய்யவந்த தேவர் அருளிச்செய்த திருக்களிற்றுப் படியாரும் அனுபவ அடிப்படையில் மெய்ப்பொருளை விளக்குவன. இவ்விரு நூல்களின் காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு ஆகும். இதே காலப்பகுதிக்குரிய ஞானாமிருதம் என்ற சித்தாந்த நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் ஆகம சாரமாகத் திகழ்வது இதனை எழுதிய வர் வாகீசமுனிவர். இந்நூல் சங்கத் தமிழ் நடையில் எழுதப்பெற்றிருப்பதால் இதன் காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டு என்று கூறுவாரும் உளர். மெய்கண்ட நூல்களைத் தவிரப் பண்டார சாத்திரங்களும், கட்டளை நூல்களும் சைவசித்தாந்தக் கருத்துக்களை எளிமையாகவும் இனிமையாகவும் மக்களுக்குப் புகட்டும் நோக்கில் எழுதப்பெற்றன. குமரகுருபரர் அருளிச் செய்த கந்தர் கலிவெண்பா என்னும் ஞானப்பனுவல் சைவசித்தாந்தத்தின் சாரமாகத்திகழ்வது.

## சைவசித்தாந்தம் தமிழர் கண்ட மெய்யியல்

சைவசித்தாந்தம் பற்றிய நூல்கள் தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சித்தாந்தத்தை விளக்கும் வகையில் ஆகம முறைப்படி எழுப்பப்பெற்ற கோயில்கள் தமிழகத்தில் மிகப் பலவாக விளங்குகின்றன. பாரத நாட்டில் சித்தாந்த நெறியைப் பின்பற்றுவோர் தமிழகத்தில் மட்டுமே காணப்படுவதால் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறி தமிழர்க்குச் சிறப்பாக உரியது என்று கருதலாம்.

தென்னாட்டிற்குச் சிறப்புரிமையுடைய தத்துவநெறி சைவசித்தாந்தம் என்னும் கருத்தினை அறிஞர் பலரும் நிலைநாட்டியுள்ளனர். சிலர் கருத்துக்களை மட்டும் இவண் காண்போம்.

எஸ்டிலின் கார்பெண்டர், "மிகவும் குறிப்பிடத்தக்க சைவசமயத்தின் ஆக்கம் தென்னாட்டுத் தமிழர்களிடம் காணப்படுகின்றது" என்றார்.

ஜி.யூ போப்பய்யா, "தமிழ் மக்களின் நுண்ணறிவின் மிகத் தேர்ந்த படைப்பு சைவ சித்தாந்தம்.[2] என்று தம் திருவாசக மொழி பெயர்ப்பின் முன்னுரையில் புகழ்ந்து போற்றினார்.

டாக்டர்.சர்.சி.பி. இராமசுவாமி ஐயர், "தென்னாட்டிற்குச் சிறப்புரிமையுடைய சைவசித்தாந்தக்கொள்கை, தமிழ் மேதைமையின் குறிப்பிடத்தக்க மிகவும் சிறந்த படைப்புக்களில் ஒன்று"[3] என்று உணர்த்துதல் காண்க.

இவர்கள் கருத்தினை டாக்டர். ஜான். எச்.பீட். என்னும் அறிஞரும் எதிரொலித்துள்ளார்.[4]

பெர்னட்டு என்னும் பேரறிஞர், "இயல்பில் ஊறிய கற்பனை ஒளியுடனும் உணர்ச்சிப் பெருக்குடனும் வெளிப்பாட்டழகுடனும் கூடிய பக்தி இலக்கியச் செல்வத்தினை உலகில் தமிழர்தம் சைவத்தினைத் தவிர எச்சமயமும் எய்தவில்லை"[5] என்று பாராட்டக்காணலாம்.

ஆங்கிலத்திலுள்ள சமயக் கலைக்களஞ்சியம், "உலகிலேயே மிகவும் மேம்பட்ட கோயிற்கலை வல்லுநர்கள் தமிழினத்தவர்களே. இந்தியாவில் உள்ள கோயில்களுள் நனி சிறந்தது தஞ்சைப் பெருவுடையார் கோயிலே" என்று சைவக்கோயில்களின் மாட்சியைப் புலப்படுத்தும் பாங்கில் தென்னாட்டுச் சிவநெறியைப் பாராட்டக் காண்கிறோம்.

## சித்தாந்தம் - சொல்லின் பொருள்

சித்தம் + அந்தம் - சித்தாந்தம் என்றாகும். சித்தம் என்ற சொல் நிலைநிறுத்தப்பெற்ற உண்மை என்றும் அந்தம் என்பது முடிவு என்றும் பொருள் தரும். இவ்விரண்டு சொற்களும் இணைந்து நின்று முற்ற முடிந்த மெய்ப் பொருட்கொள்கை என்னும் கருத்தினைக் குறிக்கும். இம் முடிபிற்கு மேல் ஒரு முடிபில்லை. இதுவே ஏனைய தத்துவவாதிகளின் முடிவுகளுக்கெல்லாம் மேம்பட்ட இறுதி முடிவு (end of ends or conclusion of conclusions), தத்துவச் சிந்தனையின் இறுதி முடிவிடம் (the last terminus of philosophical thought) என்பர். சித்தாந்தம் என்ற சொல் பொதுவாகச் சிந்தனையின் முடிபு என்ற பொருளில் ஏனைய எல்லாத் தத்துவங்களையும் சுட்டும் எனினும், காரண இடுகுறியாகச் சைவசித்தாந்தம் ஒன்றையே சிறப்பாகச் சுட்டுதல் வழக்கில் காணலாம்.

ஏனைய தத்துவங்களின் முடிபுகளையெல்லாம் ஆராய்ந்து அவற்றின் மேலான முடிபாக மெய்ப்பொருட்கொள்கை உருவாகிய திறத்தினை, இந்த நெறியினர் சுட்டும் சமயப்பாகுபாட்டினால் (classification of religions and their philosophy) தெளிவாக உணரலாம். ஆன்மீகப் படிநிலைகளில் அடித்தளத்தில் இருப்பன புறப்புறச்சமயம். அடுத்து உயர்வன புறச்சமயம், தொடர்ந்து அகப்புறச் சமயமும் அகச் சமயமும் அமைந்துள்ளன. இந்நான்கு வகைச் சமய தத்துவங்களுக்கும் மேலாக முடிந்த நிலையில் உள்ள தமிழர் தம் மெய்ப் பொருட் கொள்கைகளைச் சைவசித்தாந்தம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினர். ஏனைய சமய, தத்துவங்களைப் படிநிலைகளாக ஏற்றுக்கொண்டு அவற்றி னின்றும் மேம்பட்ட விழுமிய சிந்தனைச் சிகரமாகச் சைவசித்தாந்தம் திகழ்கிறது.

### முப்பொருட் கொள்கை

சைவசித்தாந்தம் சமயமாகவும் தத்துவ மாகவும் ஒருங்கே விளங்குவது. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் உண்மைகளை இந்நெறி சாதிப்பதால் இதற்குப் பன்மை உண்மை newp (Pluralistic Realism) என்ற பெயரும் உண்டு. காணப்பெறுவனவும் கருதப் பெறு வனவுமாகிய அனைத்துப் பொருள்களையும் பதி, பசு, பாசம் என்ற மூவகை மெய்மைக் கோட்பாட்டிற்குள் வகைப்படுத்திக் கூறும் நிலையினை இத்தத்துவ நெறியில் காண் கிறோம். பதி என்பது எல்லாப் பொருள்களி லும் கலந்தும் கடந்தும் திகழும் முழுமுதற் கடவுள். பசு என்பது எண்ணற்ற உயிர் வகைகள். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்று மூவகைப்படும். இம் மூன்று பொருள்களையும் யாரும் தோற்றுவிக்க வில்லை, எக்காலத்தும் இருந்துவருவன. திருமூலர், பதியினைப்போல் பசுபாசம் அநாதி'' என்று குறிப்பிடுகிறார். இம்முப் பொருள்களும் என்றும் உள பொருள்கள் என்றாலும் இவற்றிடையே வேறுபாடு உண்டு. பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுமே சத்துப் பொருள்கள். இவற்றுள் பதி, பசு என்பன இரண்டும் சத்துச்சித்துப் பொருள்கள். எனின், பதி ஒன்றுதான் சத்தாகவும், சித்தாகவும் ஆனந்தமாகவும் இருக்கும் பரம்பொருள். முடிந்த நிலையில் உயிர்கள் துய்த்தற்குரிய ஆனந்தப் பொருள் இறையே. பதியும் பசுவும் அறிவுடைய பொருள்கள் தாம். என்றாலும் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. பசு என்பது பாசங்களால் கட்டுண்டு இருப்பதால் அதன் அறிவு வரம்புக்கு உட்பட்டது. அறிந்ததை மறத்தலும் பாசப்பிணிப்பினால் தான் இறைவன் அருளினால் தனு கரண புவன போகங்களைப் பெறுகிற போதுதான் அதன் அறிவு ஓரளவு விளக்கத்திற்கு வரும். அதனை அனாதி காலமாக ஒட்டியிருக்கும் ஆணவம் என்னும் அழுக்கினைப் போக்கவே இறைவன் வினைக்கு ஈடாக மாயையினின்றும் உடல், உறுப்பு, உலகு, துய்ப்புக்கள் ஆகியவற்றை வழங்கி அருள்கிறான். உலகை இறைவன் மாயையாகிய முதற்பொருளிலிருந்து தன் சக்தி யைத் துணைக்காரணமாகக் கொண்டு தானே நிமித்த காரணமாக நின்று உயிர்களின் உய்திக்காகத் தோற்றுவிக்கிறான். எனவே, உயிர்களுக்கு மல பரிபாகம் வரும் பொருட் டுத்தான் உலக நிகழ்ச்சிகள் யாவும் அமை கின்றன என்பது சைவசித்தாந்தத்தின் அடிப் படை உண்மை ஆகும்.

சைவசித்தாந்தி தான் கண்டறிந்த உண்மை களை அறிவு அனுபவம் என்ற இரண்டின் அடிப்படையில் விளக்கிக்கொண்ட முறையில் பிறர்க்கு விளக்குகின்றான். அவ்வகையில் அனைத்திற்கும் அடிப்படையாய் விளங்கும் இறை உண்மை குறித்துச் சைவசித்தாந்தம் குறிப்பிடும் சிந்தனைகள் சிலவற்றை மட்டும் இக்காலத்து இளைஞர்களுக்கு ஏற்கும் வகை யில் இங்குக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

### இறை நம்பிக்கை

கோயில் கட்டுகிறோம். குடமுழுக்கு செய் கிறோம். கும்பிடுகிறோம், ஆண்டவன் பெயரில் பாரத்தைப் போட்டுவிட்டு நம் வேலைகளைக் கவனிக்கிறோம். இவ்வளவுக்கும் காரணம் இறைவன் என்னும் ஒரு பெரும் ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கைதான்.

நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாம் கடவுள் வழிபாட்டினை வளர்த்து வந்திருக் கிறோம். இந்த நம்பிக்கை உணர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டது அன்று. மனிதன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினானோ அன்றே அவன் உடன் தோன்றிய உள் உணர்ச்சி இன்னும் சொல்லப்போனால், உலகத்தின் பல்வேறு நாடுகளில் சமயங்களும் தத்துவங்களும் முளைப்பதற்கு முன்னாலிருந்தே மனிதன் தனக்கு மேலே ஒரு பெரும் சக்தி இருப்பதாக உணர்ந்து வழிபட்டு வந்துள்ளான். அதாவது மெய்ஞ்ஞானிகளும் மேதைகளும் தோன்று வதற்கு முன்பே பாமர மனிதன் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தான். அதே பாமர மனிதன்தான் இன்றைக்கும் அசைக்க முடி யாத நம்பிக்கையோடு கடவுளைக் கும்பிடு கிறான். பண்டிதத் திறமையினால் ஆண்ட வனைக் காணமுடியாது. பாமரத்தன்மை பெற்றதால்தான் கற்றவன்கூட கடவுளை உணர முடியும். அதனால்தான்.

**"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்ல வர்கள்"** என்று பரமஞானியாகிய தாயுமான வரும் அந்தப் பாமரமனிதனைப் போற்றுகிறார்.

**ஆராய்ச்சி**

ஆனாலும், மனிதர்கள் எதையும் துருவித் துருவி ஆராயும் சிந்தனை படைத்தவர்கள். இறைவன் இருக்கிறானா? எப்படி இருக்கிறான்? எங்கே எல்லாம் இருக்கிறான்? ஏன் இருக் கிறான்? எப்படி அவனைச் சந்திப்பது? என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு சிந்தனை யைப் பயன்படுத்திப் பல விளக்கங்களைக் கண்டனர். இவர்களைத் தான் தத்துவ ஞானிகள் என்கிறோம். இவர்கள் எல்லா நாட்டிலும் தோன்றியுள்ளனர்: எல்லா மதங் களிலும் உள்ளனர். எல்லா மொழிகளிலும் எழுதியுள்ளனர். ஆராய்ச்சி அறிவினால் இவர் கள் இறைவனைக் கண்டவர்கள்.

**அனுபவம்**

அனுபவம் என்பது பட்டறிவு. இதனை அழுந்தி அறிதல் என்றும் சொல்லுவர். இறை வனைத் தங்கள் அனுபவப் பொருளாகக்கண்ட வர்கள் அருட்செல்வர்கள். இறைவனுக்கும் இவர்களுக்கும் ஏற்பட்ட தொடர்பினையும் உறவினையும் இவர்கள் பாடிய கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. இவர்கள் இறைவ னைப் பற்றிப் பேசுவதற்கும் மற்ற மனிதர்கள் பேசுவதற்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. புத்தகங்களைப் படித்துவிட்டு நாம் ஆண்டவ னைப் பற்றி மணிக்கணக்கில் பேசுகிறோம். ஆனால், இம்மகான்கள் ஆண்டவனிடம் பெற்ற அனுபவங்களைப் புத்தகங்களாக எழுதியுள் ளனர். அப்பர் பெருமான், "என்புந்திவட்டத் திடைப்புக்கு நின்றானையும் பொய் என் பனோ?" என்று கேட்கிறார். அவருடைய உணர்வு மையத்தில் காட்சி வழங்கும் கடவுளை எப்படி இல்லை என்று சொல்லுவது என்று கேட்பது அனைவரும் சிந்திக்கத்தக்கது. மாணிக்க வாசகப்பெருமான், **"கண்ணால் யானும் கண்டேன் காண்க"** என்று திடமாகக் கூறுகிறார். சம்பந்தரோ **"பெம்மான் இவன்"** என்று சுட்டப்படாத பரம்பொருளை ஞானப் பால் பருகிய தெளிவினால் சுட்டுகிறார். சுந்தரர், **"இத்தனையாம் ஆற்றை அறிந் திலேன்"** என்கிறார். அனுபவமொழிகளும் நம்பிக்கை உள்ளவர்க்கு மட்டுமே பயன் தரும்.

**இறைவன் உண்மை**

இங்கு, இறைவன் இருக்கிறானா? என்ற ஒரு கேள்விக்கு மட்டும் ஆராய்ச்சியாளர் ஆகிய தத்துவஞானிகள் கண்ட விளக்கங் களில் சிலவற்றைக் கூற விரும்புகின்றேன்.

இறைவன் இருக்கிறானா? இருக்கிறான் என்று இவர்கள் விடை கூறவில்லை. இறை வன் இருக்கத்தான் வேண்டும் என்று விடை கண்டனர். இறைவன் இருக்கிறான் என்பதற்கும் இருக்கத்தான் வேண்டும் என்பதற்கும் பெரிய வேறுபாடு உண்டு. இறைவன் இருக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஒரு நம்பிக்கை. அதற்குச் சான்றுகள், எடுத்துக்காட்டுகள் தேவை இல்லை. ஆனால் இறைவன் இருக்கத்தான் வேண்டும் என்பது ஆராய்ச்சியின் முடிபு. இந்த முடிபுக்கு வருவதற்குப் பல சான்றுகள் கூற வேண்டும். அப்போதுதான் அந்த முடிபு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும். இறைவன் இருக்கத்தான் வேண்டும் என்பதற்குத் தருக்க முறையிலும் அண்ட அமைப்பியல் முறையிலும், அறவியல், தத்துவ இயல்முறையிலும் பல விளக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஏழினை மட்டும் இங்கு காண்போம்.

## ஆதாரம்

உலகில் காணப்படும் ஒவ்வொரு பொருளும் ஓர் ஆதாரத்தின் மேல்தான் நிற்கின்றது. ஆதாரத்தை அகற்றினால் அந்தப் பொருள் விழுந்துவிடும். தளிர், இலை, பூ, காய், கனி ஆகியவற்றுக்கு ஆதாரம் கிளை, கிளைகளுக்கு ஆதாரம் மரம், மரத்திற்கு ஆதாரம் மண் மண்ணிற்கு ஓர் ஆதாரசக்தி இருக்கத்தான் வேண்டும். இவ்வாறே உலகத்தில் காணப்படும் நிலம், நீர், தீ, காற்று, வானம், செடி, கொடி முதலிய தாவரங்கள்: பறவை, விலங்கு, மனிதன் முதலிய உயிர்வகைகள், செயற்கைப் பொருள்கள் ஆகிய அனைத்திற்கும் ஓர் ஆதார சக்தி இருந்தே ஆக வேண்டும். இந்த மூல ஆதாரம்,தனக்கு ஓர் ஆதாரம் இன்றித் தான் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருத்தல் வேண்டும். அந்த ஆதார ஆற்றலைத்தான் இறைவன் என்று நம் ஞானிகள் அழைத்தனர். சைவ ஆகம நூலாகிய திருமந்திரம் நாலாந்தந்திரத்தில் "ஆதார ஆதேயம்" என்னும் பகுதியில் இக் கருத்து விரிவாக இடம்பெறுதல் காணத்தக்கது. இறைவன் ஆதாரம், அந்த ஆதாரத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அண்டங்கள் முதலியன ஆதேயம் ஆகும்.

## முதல்வன்

குழந்தைகள் கூடப் புரிந்துகொள்ளக்கூடிய முறையில், இறைவன் இருக்கத்தான் வேண்டும் என்ற கல்வியை நம் ஞானி ஒருவர் சொல்லிக் கொடுக்கிறார். குழந்தைகள் அரிச்சுவடி படிக்கின்றனர். எல்லா அறிவுக்கும் அடிப்படை எழுத்து அறிவு அல்லவா? எழுத்தறிவினைப் போதிக்கும் பொழுதே இறை உண்மையினைத் திருவள்ளுவர் குழந்தை உளவியல் தெரிந்து போதிப்பது எண்ணத்தக்கது. எழுத்துக்களின் வரிசையில் உயிர் எழுத்து, மெய்எழுத்து, உயிர்மெய் எழுத்து என்ற வகைகள் காணப்படுகின்றன. இவை அனைத்திற்கும் மூல ஒலியாக, முதல் எழுத்தாக நிற்பது "அ" எழுத்துக்களுக்கு எல்லாம் 'அது' முதலில் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. வாயைத் திறந்த மாத்திரத்தில் பிரயாசையின்றிப் பிறக்கும் முதல் ஓசை "அ" தான். ஏனைய ஒலிகளை ஒலிப்பதற்கு வாயைத் திறந்தவுடன் அந்தப் பிற ஒலிகளிலும் ஒட்டிக்கொண்டு அவை அறியாமலே வெளிப்படுத்துவது 'அ', க், ச், ட், த், ப், ற் என்று ஒலிக்க முடியாது. 'அ'வைச் சேர்த்துத்தான் க,ச,ட,த,ப,ற, என்று ஒலிக்கிறோம். ஏதோ ஒருவகையில் 'அ'வின் செல்வாக்கு உயிர், மெய் ஆகிய எல்லா ஒலிகளிலும் கலந்துள்ளது. எனவே தான் எழுத்துக்களுக்கு எல்லாம் ஆதியாக 'அ' உள்ளது.

உலகத்திற்கும் (இதுமெய் எழுத்துப்போல) அதில் காணப்படும் உயிர் வகைகளுக்கும் (இவை ஏனைய உயிர் எழுத்துக்கள் போல) ஆதியாக ஒரு முதல்வன் (அகரத்தைப்போல) இருக்கத்தான் வேண்டும். அகரம் ஏனைய உயிர்களை இயக்குதல் போல் இம் முதல்வன் உலகில் உள்ள உயிர்களை இயக்குகிறான். அகரம் மெய்களை ஊர்ந்து வருதல் போல, இம்முதல்வன் உலகப்பொருள்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுருவி உள்ளான். அகரம் தனித்தியங்குதல்போல இம் முதல்வன் தனித்தியங்குகிறான். மேலும், எழுத்துகளுக்கு ஒரு முதல் எழுத்து இருப்பதுபோல, கல்லூரிக்கு ஒரு முதல்வர் இருப்பதுபோல் நாட்டுக்கு ஒரு முதல்வன் (-தலைவன்) உள்ளதுபோல் உலகம் முழுமைக்கும் ஒரு முழுமுதற் பொருள், தலைவனாக இருக்கத்தான் வேண்டும் என்பது புலப்படுகிறது. திருவள்ளுவர்.

"அகர முதல எழுத்தெல்லாம் - ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று இறை உண்மையினைச் சிறுவர்கூட உணரும் வகையில் நிலைநாட்டித் தெய்வத் திருமறை ஆகிய திருக்குறளைத் தொடங்கியிருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

## இயங்குவோன்

இவ்வுலகில் உள்ள பொருள்கள் யாவும் பிறபொருள்களால் இயக்கப்படுகின்றன. உயிருள்ள பொருள்கள் மட்டும்தான் இயங்குகின்றன என்று கூற முடியாது. உயிரில்லாத கல், கட்டை, துணி மணி, கருவிகள், பாத்திரம் யாவும் ஏதோ ஒருவகையில் யாரோ சிலரால் இயங்கிக்கொண்டுதான் உள்ளன. ஒருபொருள் இயங்குகிறது எனின், அதனை இயக்கும் பொருள் ஒன்று உண்டு என்பது தெளிவு. ஒவ்வொரு பொருளும் இயங்குகிறது. இயக்குகிறது, இயக்கும் ஆற்றலை முதன்மை, துணைமை என்று இருவகையாகப் பிரிக்கலாம். புத்தகம் நகர்கிறது என்றால் அது தானாக நகராது: கை நகர்த்துவதால்தான் நகர்கிறது. கையினை இயக்குவது உயிர். ஆகவே புத்தகம் இயக்குவதற்குக் கையும் உயிரும் இயக்கும் பொருள்களாக உள்ளன. இவ்விரண்டில் கை துணைமையும் (இரண்டாம் நிலையில் உள்ளது), உயிர் முதன்மையும் (-முதல்நிலையில் உள்ளது) பொருந்திய இயக்கும் ஆற்றல்கள் ஆகும். இது போலவே ஒவ்வொரு பொருளையும் இருவகையான இயக்கும் ஆற்றல்கள் அசைத்துக்கொண்டிருக்கும் உண்மை புலப்படும். இவ்வாறே இந்த உலகம்-அண்டம் அனைத்தையும் இயக்கும் துணைமைச் சக்தியை ஈர்ப்பாற்றல் என்றும், அந்த ஈர்ப்பாற்றலை இயக்கும் முதன்மைச் சக்தியை இறைவன் என்றும் அறிந்துகொள்ளுதல் வேண்டும். இந்த மூலசக்தி, முதன்மை ஆற்றல் தன்னை இயக்கும் பொருள் ஒன்றும் இன்றித்தானே இயங்குவதாகவும், ஏனைய எல்லாப் பொருள்களையும் இயக்கிக் கொண்டிருப்பதாகவும் உணர்தல் வேண்டும். தாயுமானவர்,

"அவன் அன்றி ஓர் அணுவும் அசை
யாது''

என்று பாடுகின்றார். இது கேனோ உபநிடதச் செய்தியாயினும், ஒரு பழமொழியாகவே தமிழ் மக்களிடம் வழங்கிவருதலின் இக்கருத்தின் அருமை பெருமை நன்கு அறியப்படும். திரிகூடராசப்பக் கவிராயர்.

''சாட்டிநின்ற அண்டமெல்லாம் சாட்
டையிலாப் பம்பரம்போல்
ஆட்டிநிற்கும் குற்றாலத்து அண்ண
லார்''

என்று அற்புதமாகப் பாடியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

## நிமித்தகாரணன்

உலகில் காணக்கூடிய ஒவ்வொரு பொருளும் ஏதோ ஒரு காரணத்தில் இருந்து உற்பத்தி ஆகிறது. ஆடை, பஞ்சு அல்லது பட்டினின்றும் தோன்றியுள்ளது. குடம், மண் என்னும் காரணத்தினின்றும் செய்யப்படுகிறது. நாற்காலி மரத்திலிருந்து உருவாக்கப்படுகிறது. பருத்திச் செடி தானே ஆடையாகக் காய்ப்பது இல்லை. மண்ணும் குடமாக முளைப்பது இல்லை. மரமும் நாற்காலியாகக் காய்ப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாமிருக்க பயமேன்" என்ற
நல்லைக் குமரன் கரங்கள் கண்டேன்
சரணம்! சரணம்!! சரவணபவா
காப்பாய்! காப்பாய்!! அனைவரையும் காப்பாய் பரம்பொருளே

பரிமளா ஸ்ரோர்ஸ் 30 வருட சேவையில்

- மகப் பேற்றுத் தாய்மாருக்கும்
- மழலைகளின் வளர்ச்சிக்கும்
- பூப்பெய்திய மங்கையருக்கும்
- கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும்
- விளையாட்டில் வெற்றிபெற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும்
- குடும்பத்தில் அங்கத்தவர்கள் அனைவருக்கும் அருமருந்தாகத் திகழ்வது

**V.S.P. ஸ்பெஷல் லஞ் ஒயில்**

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. - 2785.

ஆறுமுகமாகி நீ அத்தனையும் வென்றெடுத்த முருகா
துன்புறும் மக்கள் வெம்பி அழும் கண்ணீர் பாராயே
வேல்தாங்கி, காவடி ஆடி, கற்பூர சட்டி ஏந்தி வந்தோம் நல்லூரானே
யுத்த கிலி நீங்க ஈழமக்கள் வாழ்வு பெற தேரில் பவனி வந்து வெற்றி தா முருகா!

**நல்லைக் குமரன் மலருக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்**

எம்மிடம் சகலவிதமான
**காகிதாதி வகைகள், அச்சக பேப்பர் வகைகள், அச்சக மை வகைகள்**
மற்றும்
**பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், அலுவலக உபகரணங்கள்**
மலிவாகவும் தரமானதாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்
**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்**

**அற்புதா ரேடிங் கொம்பனி**

**198, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.**
**தொ.பே. இல. 2057, 2505.**

*அத்தோடு எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்புச் சேவைகளையும்*
*உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயஸ்ரீ

Jaya Sri

## உங்கள் கணக்கே உங்கள் அதிர்ஷ்டம்.....

மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ 2 இன் தினசரி, மாத, வலய மற்றும் மாபெரும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு நம்பவே முடியாத இந்த அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற் தகுதி பெறுவதற்கு, உங்கள் சேமிப்புக் கணக்கில் ஆகக் குறைந்த மாதாந்த நிலுவையாக ரூ. 10,000/- ஐ அல்லது உங்களுடைய நடைமுறைக் கணக்கில் ரூ. 5,000/- ஐ வைத்திருங்கள்

✦ அதுமட்டுமல்ல! நீங்கள் வைப்புச் செய்யும் ஒவ்வொரு மேலதிக ரூ. 5,000/- மும் உங்கள் வெற்றித் தருணத்தை மேம்படச் செய்யும்.

**மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ 2 இன் மூலம் வெற்றி பெறுங்கள்.**

✦ வனிதா வாசனா மற்றும் NRFC/RFC ஆகிய சேமிப்புக் கணக்குகள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

மக்கள் வங்கி 40 ஆண்டுகள் மக்கள் சேவையில்

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

PEOPLE'S BANK




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஆகவே, பருத்தியிலிருந்து துணியும், மண்ணில் இருந்து குடமும், மரத்திலிருந்து நாற்காலியும் வரவேண்டும் என்றால், அவ்வாறு வருவிப்பதற்கு அறிவுடையவன் ஒருவன் இருக்கத்தான் வேண்டும். அவற்றை உருவாக்கத் தக்க கருவிகளும் அவனிடம் இருக்கத்தான் வேண்டும். ஆகவே ஒருபொருள் தோன்ற வேண்டுமாயின், முதற்பொருள், கருவிப்பொருள், அறிவுப்பொருள் ஆகிய மூன்றும் ஒருங்கே இருந்து செயல்படவேண்டும் என்பது தெளிவு. இவற்றை முறையே முதற்காரணம் என்று கூறுதல் மரபு.

உலகம் ஒருபொருள். இப்பொருள் தோன்றுவதற்கு மூலமாகிய முதற்பொருள்தான் மாயை, கருவிதான் சக்தி, அறிவுப்பொருள் தான் இறைவன். இறைவனை, "மருவிடும் அனாதி முத்த சித்துரு" என்று சிவஞான சித்தியார் செப்புகிறது.

உலகம் என்று எதைச் சொல்கிறோம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியனவும் இவற்றில் காணப்படும் உயிர்ப்பொருள்கள், உயிரில் பொருள்கள் யாவும் சேர்ந்ததுதான் உலகம் என்கிறோம். பல்வேறு உறுப்புக்கள் சேர்ந்தது உலகம். உறுப்புக்களைத் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்தால் உலகம் எனத்தனியாக ஒன்றும் இருக்காது. உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் அதன் உறுப்பு என்றோம். ஒவ்வொரு பொருளும் தோன்றுகிறது. இருக்கிறது, பின் மறைகிறது. தோற்றம், இருப்பு, ஒடுக்கம் என்ற முத்தொழில்களையும் இந்தப் பொருள்கள் தாங்களே செய்து கொள்கின்றனவா? தாங்களே செய்துகொள்ள முடியும் என்றால் நீண்ட நெடுங்காலம் தொடர்ந்து இருக்கலாமே! ஆகவே, இப் பொருள்களின் தராதரம் பார்த்துத் தோற்றுவித்து இருக்கச் செய்து ஒடுக்கும் முதல்வன் (கர்த்தா-வினைமுதல்) ஒருவன் இருக்கத்தான் வேண்டும். உறுப்பாகிய ஒருபொருளுக்கு ஒத்தது. முதலாகிய உலகத்திற்கும் ஒத்ததே என்றும் உணர்தல் வேண்டும்.

உலகில் காணப்படும் எந்தப் பொருளையும், ஆண், பெண், பிற என்ற மூன்றுவகையாகப் பாகுபடுத்தலாம். இத்தகைய வேறுபாடுகளை இந்தப் பொருள்கள் தாமே தமக்கு ஆக்கிக் கொண்டிருத்தல் இயலாது. இப்பாகுபாட்டினை அமைத்தவன் ஒருவன் உளனாதல் வேண்டும். இன்னோரன்ன சிந்தனைகளை,

"ஒருவனோ டொருத்தி ஒன்றென்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும்
ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான்
முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு
மன்னி நின்றே"

என்ற திருவிருத்தத்தில் அருணந்தி சிவம் அழகுற விளக்குதல் அறிந்து மகிழத்தக்கது, இப்பாடல் சிவஞானபோதத்தின் முதல் நூற்பாவின் விளக்கமாகத் திகழ்கிறது.

**சார்பு**

உலகின் வாழும் உயிரினங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துதான் உள்ளன. ஓர் உயிரிக்கும் கூட சுதந்திரமான வாழ்க்கை இல்லை. சார்ந்தே வாழும் நிலை உயிர்களிடம் காண்கிறோம். இப்பொருள்கள் அனைத்தும் சார்ந்து நிற்பதற்கு உரிய பரம்பொருள் ஒன்று இருக்கத்தான் வேண்டும். அப்பரம்பொருள், தான் எதையும் சார்ந்து நில்லாததாய், எல்லாப் பொருள்களும் சார்ந்து நிற்பதற்கு இடம் அளிப்பதாய் இருக்கவேண்டும். அப்பொருளையே சார்பாகப் பற்றிக்கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர்,

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின்
மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்"

என்று பிறவிநோயினைப் போக்க வழி சொல்லுதல் இங்கு எண்ணத்தக்கது. நமக்குச் சார்பாக இருக்கும் இறைவனை உணர வேண்டும் என்பது வள்ளுவர் உள்ளம்.

உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் இன்பம், துன்பம், ஆதி அந்தம், நன்மை தீமை, சார்பு சார்பின்மை ஆகிய எதிரும் புதிருமான இரு துருவங்களாகவே உள்ளன. இவ்விருவகை முரண்பட்ட இயல்புகளின் வேறுபட்ட நடுப்பொருளாய், அவ்விருவகைப் பொருள்களில் கலந்தும் கடந்தும் இருப்பதாய் ஒருபொருள் உளதாதல் வேண்டும். நன்மை தீமை, இன்பம் துன்பங்களுக்கு அப்பாற்பட்ட தாய், ஆதி, அந்தம் கடந்ததாய் உள்ள அப்பொருளைத்தான் இறைவன் என்று நம் பெரியோர்கள் போற்றினர்.

அந்த இறைவன் யார்? அவனே சிவன் என்று கண்டனர் ஏன்? உலகமும் உயிர்வருக்கமும் ஊழிமுடிவில் யாரிடம்போய் ஒடுங்குவதாக நூல்கள் கூறுகின்றன? உலகத்தை ஒடுக்கும் தொழிலைச் செய்பவன் யார்? பிறவிப்பயணங்களில் ஏற்பட்ட களைப்பினை நீக்கி உயிர்கள் இளைப்பாறுதற்பொருட்டு ஈசன் ஒடுக்குகிறான். படைக்கும் தெய்வம், காக்கும் தெய்வம் உள்ளிட்ட தேவர்களும் யாவர்க்கும் ஈசனால் ஒடுக்கப்படுபவர்களே, ஆகவே, ஒடுக்குகிறவன்தான் பெரிய கடவுளாக தேவ தேவனாக இருக்க முடியும். யாரிடம் உலகம் ஒடுங்கியதோ அவரிடம் இருந்துதான் அது மீளவும் தோன்றும். உலகின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் யாவும் பரம்பொருளின் ஆணையால் நிகழ்வன என்பது தெளிவு.

## தாயுமிலி தந்தையுமிலி

தோன்றும் பொருள்கள் அனைத்துக்கும் தாய் தந்தை உண்டு. எல்லாப் பொருள்களுக்கும் மூலமாக உள்ள பொருள் தான் எதிலிருந்தும் தோன்றியதாக இருக்கக்கூடாது. தமக்கு ஒரு தாய் தந்தை இல்லாததாகத் தான் இருக்க வேண்டும். தனக்கும் ஒரு தாய் தந்தை உடையதாக இருந்தால் அந்தப் பொருளை நாம் மூலப் பொருளாகச் சொல்ல முடியுமா? ஆகவே, மூலப்பொருள், தான் எதிலிருந்தும் பிறவாததாய், எல்லாப் பொருட்களுக்கும் பிறப்பதற்கு ஏதுவாக இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. அந்தப் பொருளைத் தான் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று இளங்கோவடிகளும், "தாயுமிலி தந்தையுமிலி தனியன் காணேடி" என்று மாணிக்கவாசகரும் போற்றியுள்ளனர். ஏனைய சிறு தெய்வங்களைப் போல், சிவபிரான் யோனிவழிப் பிறந்ததாகக் கதையில் கூடக் காணப்படவில்லை. அன்பர்க்காக, அருள் காரணமாகச் சங்கற்ப மாத்திரையான் சிவப் பரம் பொருள் காட்சி கொடுத்தல் பனுவல்வழி அறியப்பெறும்.

சிவபிரான் தீமைகளைக் களையும் பொருட்டுத் தன் ஆற்றலையே விநாயகர், முருகன் என்ற வடிவில் வெளிப்படுத்தினர் என்று ஆகமங்கள் கூறுவதால் இவரையும் ஈசனாகவே எண்ணி நம்மவர்கள் வழிபட்டு வருதல் காணலாம்.

## உலகவசனம்

ஒரு பொருளின் உண்மையினை நிலை நாட்டுதற்குத் தருக்க சாத்திரம் வல்லவர்கள் காட்சி, கருதல், ஆகமம், உவமானம் முதலாக உலக வசனம் எனப்படும் ஐதிகம் ஈறாகப் பத்துப் பிரமாணங்களில் ஒன்றோ, பலவோ தாக்கல் செய்வர். இவற்றுள் உலக வசனம் என்பது உலகில் உள்ள பெரியவர்கள் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் பற்றி நீண்ட நெடுங்காலமாக ஒரு முகமாகச் சொல்லிவரும் கருத்தாகும். இதனை மணி மேகலையில் ஐதிகம் என்று சாத்தனார் சுட்டி யுள்ளார். "ஐதிகம் என்பது உலகுரை" என்பது அவர் வாக்கு. திருவள்ளு வர் உலக வசனத்தை உடன்படாதவனை பேய் என்றே பேசுகிறார்.

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்"

இக்குறளின் விளக்கவுரையில்,

"உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவான் இல்லை என்று சொல்லுவான் வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும்" என்று மொழிந்து; பின்னரும்,

"கடவுளும் மறுபிறப்பும் இருவினைப் பய னும் முதலாக அவர் உள என்பன பலவேனும் சாதி பற்றி 'உண்டென்பது' என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும், வடிவால் ஒவ்வா மையும் உடைமையின் தன்யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல 'அலகை' என்றும் கூறினார்." என்று தெளி வுறுத்தப் பரிமேலழகர் எழுதியிருத்தல் இங் குக் கருதத் தக்கது.

எனவே, தொன்றுதொட்டு கடவுள் உண்டு என்று வழங்கிவரும் உலக வசனத்தை ஒரு பிரமாணமாக ஒப்புக்கொண்டு நல்வழிப்படுத் தல் சான்றோர் விருப்பமும் ஆகும்.

இறைவன் இருக்கத்தான் வேண்டும் என் பதற்குச் சில சான்றுகளைக் கண்டோம். இறை வன் என்ற சொல்லிற்கே எவ்விடத்தும் தங்கி யிருப்பவன் என்பது பொருளாகும். இறை வனை நம்பிக்கையினால் மட்டுமே வழிபட்டுக் காணமுடியும். அனுபவ ஞானத்தினாலும் ஆராய்ச்சியினாலும் பெரியவர்கள் இறைவ னைக் கண்டு உணர்த்தியுள்ளனர். அவர்தம் அருட் செயல்களையும் தத்துவ நூல்களை யும் பயில்வது இறை உணர்வினை வளர்க்க உதவும்.

சைவ சித்தாந்தப் பெருநெறி வாழ்விய லோடு ஒட்டியது, தன்னை உணரவும் தலை வனை உணரவும் ஆற்றுப்படுத்துவது, அறி வியலோடு பொருந்துவது, சித்தாந்தச் செந் நெறியை அறிந்து இன்றைய இளைஞர்கள் ஏற்றம் பெறுவார்களாக.

1. Theism in Medieval India, p.351.

2. "The Siddhanta Philosophy is tha Choicest product of the Dravidian intellect." - G.U. Pope.

3. "The Saiva Siddhanta doctrine which is characteristic of South India and is one of the most significant products of the Tamil Genius" - Fore word to Saiva Siddhanta Lectures, 1948 (Annamalai University).

4. "The Saiva Siddhanta Philosophy of south India one is of the classical products of the Tamil nadu" - A Logical presentation of the Saiva Siddhanta Philosophy, p. 1.
5. The Heart of India, p. 82.

6. "The Tamil races are the greatest temple builders in the world and the great pagoda at Tanjore is by far the grandeast temple in India"

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கவிமணி' சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்

# தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன்

கலியுகவரதனாம் கந்தப்பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங் களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்கி யருள் புரிவதற்காக நல்லையம்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளியுள்ளான். மிக வும் புனிதமும் அருளும் நிறைந்த தொன்மை மிகு பதி நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவத்தையும் தமிழையும் தம்மிரு கண்ணெனப் போற்றியவர். அந்த மகான் பிறந்த இடமும் இந்த நல்லூரே. சங்கிலி மன்னன் ஆட்சி செய்த இராஜதானி யும் நல்லூரிலேதான் அமைந்திருந்தது. கற்ற வர்களும் மற்றவர்களும் இங்கு கந்தனின் கழலிணைகள் பணிவதற்குக் கூடிவிடுவார்கள். முருகா! முருகா!! என்று கூறிக்கொண்டு பக்தர்கள் வீதிவலம் வருங்காட்சி நெஞ்சை உருக்கும்.

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன் இல்லையெனாது வரமீந்தருள் செய்ய இங்கு நல்லைப் பதியிலே எழுந்தருளி வீற் றிருக்கின்றான். முருகனுக்குப் பல பெயர்கள் உள்ளன. அவற்றில் சரவணன், சண்முகன், குகன், கந்தன், வேலன், சரவணபவன், வள்ளி மணாளன், வடிவேலன், ஆறுமுகன், சுப்பிர மணியன் என்பவை அடியவர்கள் அன்றாடம் சொல்லி அழைப்பதனால் மகிமை பெறுகின்றன.

'முருகு - அன்' இதன் பொருளைச் சற்று நோக்குவோம். முருகு என்றால் இளமை, அழகு, மணம், கடவுள்த் தன்மை என்று பொருள் கூறப்படுகிறது. "அன்" ஆண்பால் விகுதி "முருகு" என்னும் பதம் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று இனங்கள் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்களால் ஆகின்றது. அந்த உயிர்மெய் எழுத்துக்களி லுள்ள மெய்யெழுத்துக்களை அதாவது ம், ர், க் ஆகியவற்றை நீக்கிவிட்டுப் பார்ப்போமா னால் மூன்று உகரங்களே மிகுதி

அ - படைத்தல்
உ - காத்தல்
ம் - அழித்தல்

இந்த மூன்றும் சேர்ந்தே "ஓம்" என்ற பிரணவமாம். இம் மூன்றில் இடையிலுள்ள உகரம், உயிர்காத்தல் தொழிலைக் குறிக் கும். மற்றைய பெயர்களில் இத்தகைய தன்மை கிடையாது. அதனால் தான் எல்லோரும் எடுத் ததற்கெல்லாம் "முருகா" என்று சொல்லிப் பழக்கப்பட்டுவிட்டார்கள். "முருகா என ஓர்தர மோதடியார் முடிமீதிருதாள் புனைவோனே" என்பது அருணகிரி வாக்கு.

ஆகவே, முருக நாமம் வலிமை மிக்கது. வினை நீக்க வல்லது. இதனை உண்மையாக உச்சாடனம் செய்து அனுபவித்தவர்களுக்குத் தான் அதன் அருமை புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! முருகா!! என உன் திருநாமம் கூவியழைத்து
கோபுர வாசல் வந்தெம்மை காட்சிதந்து - அருள் தருவாய்
ஈழநல்லூர் குடிகொண்ட ஆறுமுக பெருமானே
பக்தர்கள் புடைசூழ்ந்து வடமிழுக்க தேரேறி அமைதி தாருமையா.

# லிங்கன் கிறீம் ஹவுஸ்

**119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## லிங்கன்
## என்றால் நினைவுக்கு வருவது
## 'ஐஸ்கிறீம்'

**சுவைத்துப் பாருங்கள்**
**சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட**

- ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- சொக்லேட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- வெனிலா ஐஸ்கிறீம்
- மட்டன் றோல்
- பட்டர் கேக் வகைகள்
- மிக்ஸர்
- லட்டு
- மஸ்கட்

**அங்கர் பட்டர்**
**ஸ்பெஷல் பீடா**

**அத்தனையும் ஒரே இடத்தில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வருங்காலத்துக்கு வழிகாட்டும்
# தேசிய சேமிப்பு வங்கி

**வாடிக்கையாளர்களின் எதிர்காலத் தேவைகளுக்கேற்ப பயன்தரும் எமது சேமிப்புத் திட்டங்கள்:-**

01. புஞ்சிஉறப்பன் /உறப்பன் - சிறுவர்களுக்கான சேமிப்பு கணக்கு. இக்கணக்கை பிள்ளைகள் தாங்களே ஆரம்பித்து நடைமுறைப்படுத்த முடியும். ரூபா 2,500/- ற்கு மேற்பட்ட வைப்புக்களுக்கு சலுகை அட்டைகளைப் பெறும் வாய்ப்பும் உண்டு. சிறுவயது முதல் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டுவர இக் கணக்கு வழிகாட்டுகிறது.

02. பிரார்த்தனா - சின்னஞ்சிறுவர்களுக்கு சிறந்த கணக்கான பிரார்த்தனாவில் சிறிய தொகையை வைப்புச்செய்து பிள்ளையின் 16 ஆவது வயதில் லட்ச ரூபாவைப் பெறமுடியும்.

| பிள்ளையின் வயது | 1 மாதம் | 1 வயது | 2 வயது | 3 வயது | 4 வயது | 5 வயது |
|---|---|---|---|---|---|---|
| சான்றிதழின் பெறுமதி 100,000/- | 13,185/- | 14,964/- | 16,985/- | 19,278/- | 21,880/- | 24,834/- |

03. தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள் - அதி உயர் வட்டியாக 18.8 ஐ வழங்குகிறது.

| கட்ட வேண்டிய தொகை | நான்கு வருட முடிவில் |
|---|---|
| 14,269 /- | 25,000 /- |
| 57,076 /- | 100,000 /- |
| 285,380 /- | 500,000 /- |
| 570,760 /- | 1,000,000 /- |

04. 'ரிதீரேகா' - 10/- விற்கு ஒரு இலக்கம் என்ற அடிப்படையில் நடைபெறும் இச் சீட்டிழுப்பில் கூடியதொகையினை முதலீடு செய்வதால் தங்கள் கனவுகள் நனவாகும் வாய்ப்பினைப் பெறலாம். எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள மாபெரும் சீட்டிழுப்பில் முதலாம் பரிசு 35 லட்சம். பணத்தை மீளப்பெற முடிவதால் அதிஸ்டத்தை விலைகொடுத்து வாங்குங்கள்.

05. ஓய்வூதிய கணக்கு - ஓய்வூதியம் இல்லாதவர்களின் நலன்கருதி இக்கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை தொடர்ந்து 61 மாதங்கள் வைப்புச் செய்தால் 62ஆவது மாதம் தொடக்கம் அதே தொகையை ஆயுள்பூராவும் பெறும் வாய்ப்பும் உண்டு. இன்னொருவரை நியமிக்கும் உரிமையும் உள்ளது.

06. வைப்புக்களுக்கெதிரான இலகுவானதும் விரைவுமான கடன் திட்டம் - (Speed Loan) 15 நிமிடங்களில் கடன்தொகையைப் பெறமுடியும்.

07. இத்துரு மித்துரு சேமிப்பு கணக்கு - 16 வயது முதல் 30 வயதுவரையான இளைஞர் யுவதிகளுக்கான சேமிப்பு கணக்கு. 5,000/- ரூபாவிற்கு மேல் வைப்பிலுள்ளவர்களுக்கு சலுகை அட்டை வழங்கப்பட்டு அதிஷ்டசாலிகள் இருவருக்கு வெளிநாடு சென்றுவர வாய்ப்பும் வழங்கப்படும்.

**சகல அனுகூலங்களுக்கும் அரசாங்கம் உத்தரவாதமளிக்கின்றது.**

NSB

# தேசிய சேமிப்பு வங்கி
## உங்கள் குடும்ப வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி முருகனுடைய அவதாரப் பெருமை பற்றிச் சிறிது நோக்குவோம். சூரனைச் சங் கரிப்பதற்காகவே சிவனின் நெற்றிக் கண்ணி லிருந்து தோன்றியவன் முருகன். முருகனும் சிவனும் ஒன்றுதான். பேதமில்லை. கந்தபுரா ணத்திலே "ஆதலின் நமது சக்தி அறுமுகன். அவனும் யாமும் பேதமில்லோம்" என்று பரம் பொருளே கூறியிருக்கின்றார்.

ஆணவ மலமாகிய சூரனை அழிப்பதே முருகனின் தோற்றம். 'ஒருதிருமுருகன் வந் தாங்குதித்தனன் உலகமுய்ய' என்றார் கச்சி யப்பர். சூரியன் என்றும் உள்ள பொருள். அது மறைந்து மறுநாள் விடிகிறது. ஒவ்வொரு நாளும் கதிரவன் உதிக்கின்றான். அவன் வராவிட்டால் எமக்கு வாழ்வில்லை. அதே போல முருகன் உதித்திருக்காவிட்டால் நாம் வாழ்ந்திருக்க முடியாது.

சூரன் போரில் நாம் அறியு வேண்டிய உண்மைகள் பல. நம் ஒவ்வொருவருடைய உள்ளமும் போர்க்களம். அந்தப் போர்க்களத் தில் தினமும் போர் நடக்கின்றது. அதாவது ஆணவம், கன்மம், மாயை; இது மும் மலங்கள். சூரன் - ஆணவம், சிங்கன் - கன்மம், தாரகன் - மாயை, முருகன் - அருட்கடவுள். ஆன்மாக்களை மும்மலங்களும் பிணித்துக் கொண்டு துன்புறுத்துகின்றன. துன்பமுற்ற உயிர் இறைவனை நாடுகிறது. இதுவே சூரன் போர் தத்துவம். மலங்கள் ஒடுங்கியதும் முரு கன் காட்சி தருகின்றான்.

| | |
|---|---|
| முருகன் | - அருட்கடவுள் |
| சூரன் | - ஆணவம் |
| சிங்கன் | - கன்மம் |
| தாரகன் | - மாயை |
| வள்ளி | - ஆன்மா |
| தோழி | - நல்வினை |
| வேடர் | - ஐம்புலன்கள் |
| யானை | - பிரணவம் |
| தினைப்புனம் | - ஞானப்பயிர் |
| பறவைகள் | - தீவினைக் கூட்டம் |
| வேல் | - ஞானம் |
| மயில் | - விந்து |
| சேவல் | - நாதம் |
| நாரதர் | - தபோபலம் |
| கிரவுஞ்சமலை | - சஞ்சிதவினை |
| நம்பிராஜன் | - தலைவன் |
| வேங்கை மரம் | - உலகபோகம் |

எவ்வளவோ தத்துவங்கள் அடங்கிய சூரன் போர் இங்கே மிகவும் தத்ரூபமாகக் காட்டப் படுகிறது. நல்லூரிலே நடைபெறும் சூரன் போர் மக்களுக்குத் தத்துவத்தை எடுத்துக் கூற ஏதுவானதாக இருக்கின்றது.

நல்லூர் கொடியேறிவிட்டாலே கொண்டாட் டம்தான். ஒவ்வொரு நாளும் "அரோகரா" கோஷத்துடன் அடியார்கள் அதிகாலையி லேயே இங்கு கூடிவிடுவார்கள். பக்தியின் உச்சக்கட்டத்தை இங்குதான் காணலாம். முருக நாமத்தை உச்சரித்த வண்ணம் அடி யார் அங்கப்பிரதட்சணம் செய்யும் அழகே தனி. வேறு எங்குமே இந்தக் காட்சியை காண முடியாது. அருட் கந்தனாக வீற்றிருந்து அரு ளாட்சி புரிகின்றான் வேலவன். அவனுடைய அலங்காரங்கள் காணக் கண்கோடி வேண்டும். 'நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அருணகிரியார் அங்க லாய்ப்பது உண்மைதான். நல்லூரிலே நல் விழாப் பொலிவு காணக் கொடுத்து வைத் திருக்க வேண்டும். நாமெல்லாம் பாக்கிய சாலிகள். இருபத்தைந்து நாளும் எழிற் கோலங்காட்டி முருகன் வள்ளி தேவசேனா சமேதராக வீதிவலம் வருங்காட்சியே அலாதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி முருகன் பெருமை சொல்லிக் கொண்டே போகலாம். அதற்கு எல்லையே கிடையாது. முருகன் குமரன் குகனென்று மொழிந்துருகுஞ் செயலும் அவனே தரவேண்டும். அவனுடைய அருளில்லாவிட்டால் நாம் அவனைக் காணமுடியாது. அவனருளாலேயே அவன்தாள் வணங்க வேண்டும். நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக முருகனைப் பாடும் பணியே மிகவும் பெரியது. ஆகவே, நாம் முருகன் புகழ்பாடி ஏத்தி அவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி அவனருளை முன்வைத்து - நல்லன செய்து - தீயன விலக்கி - நல்லூரெம் பெருமானார் நம்மை நல்லவாறு வாழ வைக்க வேண்டி புவியில் புதுவாழ்வு வாழ்வோமாக.

**நல்லைக் குமரன் தாள் பணிவோம்!**

★

## தினந்தினம் உன்புகழ் எந்நாவில் ஊறுமே!

உன்னை ஒன்றும் கேட்கவும் மாட்டேன்
உற்ற துணைக்கு நல்லூரா நாடேன்
"பின்னை ஏன்தான் வந்தே இங்கு
பிதற்றினாய்" என்றே கேட்பாய் முருகா
உன்னைப் பார்த்துத் தொழுதால் போதும்
ஒன்றும் உன்னிடம் கேட்கவும் மாட்டேன்
என்னே உன்தன் வீதி உலாக்கள்
ஏங்கித் தவிக்கிறேன் வரவை நோக்கி!

உன்தன் அழகில் என்னைக் கொடுத்தேன்
உலவும் காட்சி வீதியில் கண்டேன்
முன்னை வினைகள் தீரும் என்றே
முருகா முருகா என்று சொல்வேன்
அன்னை உமையின் மைந்தா முருகா
அருகினில் வள்ளி தெய்வி இணைந்தே
என்னை இழுக்கும் சக்தி யாலே
ஏங்கித் தவித்தேன் வீதியில் நின்று

தினமொரு கோலமாய் வருகின்ற முருகா
திசையெலாம் உன்நாமம் ஒலித்திடும் முருகா
வனக்குற வள்ளியும் தெய்வியும் இனிதே
வருகின்ற காட்சியைக் காண்டிடும் அடியார்
மனக்குறை நீக்கியே மகிழ்வாய் முருகா
மலரணி சாத்தினில் அழகோ அழகு
தினைப்புனக் கள்வா கந்தா முருகா
தினந்தினம் உன்புகழ் என்நாவில் ஊறுமே.

- கவிஞர் துரையர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சிவசங்கரநாதன் சரசாலை.

# இறைவனின் குழந்தைகள் நாம்

இறைவன் திருவாதவூரரை திருப்பெருந் துறையில் குருவடிவில்வந்து ஆட்கொண்டான். வாதவூரரும் வள்ளலின் வண்ணத்திருவடி களை வருடி வாழ்த்தித் திருவருள் அருளி ஞானம்பெற்று இன்பம் துய்த்து உலகை மறந்து இருந்தார். பின்னர் இறைவன் பிரிந் தான். தனியே விடப்பட்ட மணிவாசகர் இறை வன் திருவடிக்கு உருகித் தவித்தார். இனி என்றுகாண்போம் என்று ஏங்கினார்.

உடன் அழைத்துச் செல்லவில்லையே என்று இரங்கினார். மீண்டும் உண்டு உடுத்து உலக வாழ்வில் உலாவ நேர்ந்ததே என்று சோர்ந்தார். உலக வாதனைகளும் அவரை விடாது வந்து வருத்தின. இறைவனைப் பேண வேண்டிய தாம் புலால் உடலைப் பேண வேண்டி நேர்ந்ததே என்று வருந்தினார். இறைவனை எங்கும் தேடினார். வினையின் சேட்டைகள் அவரிடம் வந்து விளையாடின. இறைவனைப் பிரிந்ததே குற்றம் என்று அழுது அல்லலுற்றார். இறைவனின் திருக்குறிப்பை மீறிய கொடிய பாவியாகத் தம்மை இகழலுற் றார். இறைவனைப் பிரிந்தநிலையில் உண்மை யன்பிருக்குமானால் உடனே உயிர் விட்டி ருக்க வேண்டும் என்று உன்னினார். தம்மைப் பெரும் பொய்யனாகக் கருதிக் கதறினார்.

உயிர்போகவில்லையே என்றும் உருகி னார். இறைவன் திருவடியைக் கண்ட திருக்கண்கள் மேன்மேலும் கண்டு திளைத் துக் களிகூராமல் புண்களாகி விட்டனவே என்று புழுங்கினார். இறைவனை நினைக்க விடாதபடி உலகவாழ்வுக்குரிய தேவைகளின் நினைப்பு வந்துவிட்டதே என்று நொந்து தவித்தார்.

இனி மீண்டும் இறைவன் வந்தால் அவன் முகத்தில் எப்படி விழிப்பது என்று சிந்தித்தார். இறைவன் முன்செல்ல நாணமாய் இருக்குமே என்று நைந்துருகினார். தாம் பொறுத்தற்கரிய பெரும் பிழையைச் செய்துவிட்டதாகக் கூசி னார், குமுறினார், குலைவுற்று நடுங்கினார். அவர் இறைவனிடம் காதலாகிக் கசிந்து கண் ணீர் மல்கிக் கரைந்துருகுவதைக் காணுங்கள்.

காணும தொழிந்தேன் நின்திருப்பாதம்
கண்டுகண்களி கூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும
தொழிந்தேன்
பின்னை யெம்பெருமானே
தாணுவே அழிந்தேன்
நின்னினைந்துருகும்
தன்மையென் புன்மைகளால்
காணும தொழிந்தேன் நீயினி
வரினும்
காணவும் நாணுவனே.

பெரிதும் தவறிழைத்துவிட்ட வீட்டுப் பைய னுக்கு இப்பாடல் எவ்வளவு பொருத்தமா யுள்ளது என்பதை எளிதிற் காணலாம். அந் நிலையில் மாணிக்கவாசகர் தம்மையும் கருதிப் பேசுகிறார். சிறிதும் திரிபுணர்ச்சி யின்றிச் சிந்தையிடையறா அன்பு பூண்டு சிவத்தொண்டினை மேற்கொண்ட மணிவாச கரே இவ்வாறு கூறுவாரானால் அறவே இறை வனை மறந்து உலக வாழ்க்கையில் மூழ்கிக் கிடக்கும் ஏனைய உயிர்கள் எத்தகையோர் ஆவார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவும் அச்சமாய் இருக்கிறது. நாம் அனைவரும் முன்னொருகால் நம் தந்தையாகிய இறை வனை விட்டுப்பிரியாது அவன் அரவணைப் பிலும் அருட் கூட்டத்திலும் கலந்து வாழ்ந்து களித்தவர்களே. நம் ஊழ்வினை வயத்தால் நம் அப்பனைவிட்டுப் பிரிந்தோம். அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டுண்டோம். உடம்பு என்னும் இருட்சிறையில் அடைபட்டு உலகில் விளைந்தோம். இங்கு நமக்கு புதிய உறவுகள் ஏற்பட்டுச் சுற்றம் பெருகிக் குடும்பமும் வலுத்துவிட்டது. ஒருபொழுதும் வாழ்வதறியாது கோடி எண்ணம் கொண்டு குலாவுகிறோம். நாம் சிவகுமாரர்கள் என்பதை எண்ணாது தந்தை இறைவனை மறந்து விட்டோம்.

இந்தநிலை நம் புன்மைகளாலேயே ஏற் பட்டுள்ளது. இனி இறைவன் நேரில்வந்து எதிர்ப்படும்பொழுது நாம் அவனை எப்படிக் காண்போம். நாணாமல் கூசாமல் அஞ்சாமல் யாம் அவனைக் கண்டுகளிக்க வேண்டாமா? அங்ஙனமாயின் நமக்கு அவன்பால் மெய் யன்பு உண்டாவதாக. யாம் இறைவனின் குழந்தைகள் என்பதையும் இறைவன் எம் தந்தை என்பதையும் உணர்ந்து நடக்க வேண்டும். இறைவனை வழிபட்டு நல்வாழ்வு வாழ்வோமாக. ★

## உருவத்தைத் தேடாதீர்

இறைவன் நிறம் இல்லாதவன். ஆனால் எல்லா நிறமும் கொண்டவன். அவன் உருவம் இல்லாதவன். ஆனால் அவனே உருவம் அனைத்தை யும் படைப்பவன். கள்ளங் கபடமற்ற உள்ளத்தோடு, தூய பக்தியுடன் இறைவனை வணங்கவேண்டும். உருவமற்ற அந்தப் பரம்பொருளை உருவமாகத் தேடி ஏன் அலைகிறீர்கள்?

- கபீர்தாசர்.

## எனது தாய்

அகில உலகங்களுக்கும் தாயாக இருப்பவளே எனது தாய். அவள் அனைத்து அண்டங்களுக்கும் நாயகனாகிய சிவனுக்குப் பிரியமானவளா கவும், பக்தர்களின் கண்களுக்கு மகிழ்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுக்கும் நீலமேக சியாமளாவாகவும் தோன்றுகிறாள்.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரன் மலருக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

# உங்களுக்கு எம்மிடமிருந்து

# 50%

# கூடுதலான போனஸ்

கொமர்ஷல் வங்கியின் முற்போக்கு சேமிப்புக் கணக்கு
தற்போது உங்கள் வட்டிக்கு ஒவ்வொரு நிதிக்
காலாண்டிலும் **50%** போனஸை வழங்குகிறது.

முற்போக்கு
சேமிப்புக் கணக்கு

இப்போது ஒவ்வொரு நிதிக்காலாண்டிலும் போனஸை
இழக்காமல் ஒருமுறை பணத்தை மீளப் பெறவும் முடியும்.

ஒரு தடவைக்கு கூடுதலாக மீளப்பெற்றாலும் சேமிப்புக்
கணக்குக்குரிய வட்டி வழங்கப்படுகிறது.

அதிக போனஸ்! சிறந்த சேமிப்பு!

கொமர்ஷல் வங்கி
உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும் முருகா!
கார்த்திகை திருநாளில் கந்தன் திருநாமம் கூறி
தினைமா தேனுடன் மாவிளக்கேற்றிடுங் கால்
முருகா! நம் மக்களின் வாழ்வு நலம்பெற வேண்டுகிறோம்.

நதிகளின் சங்கமம் **மகாநதி!**
புடவைகளின் சங்கமம் கேள்விப்பட்டீர்களா? அதுதான்
**'மகாநதி புடவை அகம்'**
அங்கே புகுந்தால் புளகாங்கிதம் தான். அற்புத டிஸைன்கள் முகூர்த்தப்பட்டு, புடவைகள், றெடிமேட் ஆடைகள் இன்னும் பல அதிர்ஷ்டம் தரும் புடவை அகம் நாடி வாருங்கள்

# மகாநதி புடவை அகம்

# MAHANATHY TEX

16, New Market, Jaffna.

வேல் வேல் என்று வெந்த மனம் நொந்து
சிரத்தையுடன் கரம் குவித்து நாடி வரும் நல்லூரில்
வேல் கொண்டு மயில் மீது பவனிவரும் முருகா!
ஆறுமுகமாகி நின்வரம் வேண்ட யுத்தம் நீங்கிட வரம் தாருமையா!!

நாளைய நவநாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து வைப்பதில்
யாழ்.நகரில் தையல்கலையில் இன்றைய முன்னோடிகள்
தரம்! மலிவு! அமோக தெரிவிற்கு! என்றும் உங்கள் கைராசியான நண்பன்

# சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(Spceialist in Wedding Coats & Sutts)

**73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**

கிளை: **123, மின்சாரவீதி, யாழ்ப்பாணம்.**
**535A, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.**

உங்கள் வீட்டுத் தளபாடங்கள், அலுவலகத்துக்குத் தேவையான தளபாடங்களை
உங்கள் எண்ணம்போல் உறுதியானதும் தரமானதும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள
அன்றும்! இன்றும்! என்றும்! நாடவேண்டிய இடம்

# மங்களா வீட்டுத் தளபாட நிலையம்

**(தளபாட பொருட்களின் ராஜ முத்திரை)**
**153, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகரசபையின் கௌரவ அங்கத்தவர்கள்



இருப்போர் இடமிருந்து வலம் - திரு.கிங்ஸ்லி கணேசன், திரு.செல்லையா விஜயரட்ணம், திரு.மு.தவநாதன், மாண்புமிகு மாநகர முதல்வர் நடராஜா ரவிராஜ், கௌரவ பிரதி முதல்வர் செ.கந்தையன், திரு.த.சுபத்திரன்.

நிற்போர் இடமிருந்து வலம் - திரு.த.முகுந்தன், திரு.க.கருணானந்தன், திரு.ச.அரவிந்தன், திரு.ம.கருணாநிதி, திரு.க.பரராஜசிங்கம், திரு.ச.மருசலீன், திரு.சி.இரத்தினசபாபதி, திரு.ச.ஜெயச்சந்திரன், திரு.ம.மங்களநேசன்.

படத்தில் இடம்பெறாதோர் - திரு.க.விக்கினேஸ்வரன், திரு.ஜெஸ்னுலாப்தீன் முகமட் பசீர், திரு.மோஸஸ் எட்வேட், திரு.து.இளங்கோ, திரு.மா.கனகரத்தினம், திரு.க.துரைரத்தினம், திரு.மைக்கோல் ஜேசுதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. அன்னலிங்கம்
வ. கணேசமூர்த்தி

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

**முகவுரை**

இன்று ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் முதலில் தரிசிப்பது கிழக்கு வாயிலிலுள்ள இராஜகோபுரமாகும். இது 71 அடி உயரமானதும் 7 தளங்களையும் 350 சிலைகளையும் கொண்டதாகும். இதில் திருநாராயண மூர்த்தியின் இருபத்து நான்கு மூர்த்தங்களையும் தசாவதார லீலைகள், கோவிலின் வரலாறு முதலியவை சிலையாக அமைக்கப்பட்டுள்ளன. உள்ளே கண்ணபிரான் சுதர்சன மூர்த்தியாக கருவறையில் இருந்து மக்களை காத்தருளுகின்றார்.

வரலாற்றுப்பழைமை, புராணப்பழைமை, இறையருள் தொடர்பான விடயங்கள், செவி வழி நம்பிக்கைகள், கதைகள் என்பன கொண்டு விளங்கும் இத்திருத்தலம் ஈராயிரம் ஆண்டுகளிற்கு மேலான வழிபாட்டு மரபு கொண்டுள்ளது எனத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுவர்.

வல்லிய தேவன் என்னும் அதிகாரி நிர்வாகம் செய்த இடமாதலால் வல்லிபுரம் எனவும், வலிபுரம் (மணலூர்) எனும் சிங்களப் பெயரின் திரிபெனவும் இந்தியாவிலுள்ள பழைய விஷ்ணு ஸ்தலம் ஒன்றின் பெயராகிய வல்லிபுரம் எனும் பெயரே இங்கும் வழங்கப்பட்டு வந்தது. (இந்தியாவில் செங்கல்பட்டுக் கடலோரத்திலிருந்து இருபது மைல் தொலைவிலுள்ள ஓர் விஷ்ணு ஆலயம் வல்லிபுரம் என அழைக்கப்படுகின்றது.) எனவும், பூமிதேவி எனப் பொருள்படும் வல்லி என்பவள் மஹாவிஷ்ணுவைப் பூசித்த இடமாதலால் ("வல்லி என்பவளின் இடமாதலால்") இப்பெயர் ஏற்பட்டதெனவும் வல்லிபுரம் எனும் பெயர் வழங்கப்பட்டு வருதற்கு ஏதுக்கள் கூறப்படுகின்றன. வட இலங்கையில் ஒரு பெரிய நகராக விளங்கிய சிங்கைநகர் பட்டணம் பெரியதுறைமுகப் பிரதேசமாகவும் விளங்கியது. இச் சிங்கை நகர் பற்றிய பல விபரங்களைத் தொல்லியல் அறிஞர்கள் கூறியுள்ளார்கள். கேகாலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் "பொங்கொலி நீர்ச்சிங்கைநகர் ஆரியர் கோன்" என்ற வாக்கியம் காணப்பட்டுள்ளது. கி.பி.15ஆம் நூற்றாண்டிற்குரிய சிங்களக் காவியங்களில் ஒன்றான கோகிலசந்தேசய (குயில்விடு தூது)விலும் இவ் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வல்லிபுரப் பிரதேசத்திலேயே இச் சிங்கை நகர்ப்பட்டணம் விளங்கியது எனக் கூறப்படுகின்றது.

தமிழரின் முல்லை நிலத்தெய்வமாகத் திருமால் திகழ்ந்ததை இலக்கியங்கள் சுட்டுகின்றன. "மாயோன் மேய காடுறை உலகம்" என தொல்காப்பியத் தொடர் சுட்டுகின்றது. "ஸ்வர்ணாலயம் வல்லிபுரம் விஷ்ணோ, க்ஷேத்ரத்வயம்ததா" என பொன்னாலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுரத்தையும் தக்ஷிணைகைலாஸ மான்மியம் புகழ்ந்துரைக்கின்றது. வடமொழியிலுள்ள ஸ்கந்தபுராணத்திலே தக்ஷணகைலாஸ மான் மியத்தில் ஒரு அத்தியாயமாக வல்லிபுரமான் மியம் அமைந்துள்ளது. காலத்தையும் சமயப் பிரிவுகளையும் கடந்து நிற்கின்ற இந்துக்களின் வழிபாட்டு நெறியில் சைவத்தையே பெருநெறி யாகக் கொண்ட ஈழத்தமிழர்கள் திருமாலை யும் வழிபடும் பண்பைப்பேணி வருகின்றார்கள் என்பதற்கு சான்றாக வடக்கிலுள்ள மூன்று பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களும் விளங்குகின்றன.

ஸ்ரீவிராட் புருஷனது சரீரமாகிய பிரமாண் டத்தின் இடைநாடி ஸ்தானமெனப் பெற்றும், வாயு தேவனாற் பறித்தெறியப்பட்ட மஹா மேருவின் கொடுமுடிகளுள் ஒன்றாயதும் தெக்ஷிண கைலாச மாஹாத்மிய முதலியவை களினால் வியந்து கூறப்பட்டதுமாகிய ஈழ மண்டலத்தின் வடதிசையில் சகல ஆன்ம கோடிகளையும் இரட்சிக்கும் பொருட்டு மச்ச அவதாரமாகிய திருவவதாரத்தினை எடுத்துக் காத்தற் கடவுளாய் விளங்கும் ஸ்ரீவல்லிபுர சுவாமியின் பேரருளால் உருவாக்கியவை களாம். சிற்பங்கள் திசைதோறும் நின்று நோக்குவார் உள்ளம் கவர்ந்து இந்திரலோ கத்தமரரும் தம் கரமலர் குவித்து அஞ்சலியி யற்றுவர் தெய்வீகசிலைகள் பலவற்றுடன் 7 தள இராஜகோபுரம் அமைந்துள்ளது.

**சக்கர வழிபாடு:**

வைஷ்ணவர்கள் பகவானை விக்கிரகரூப மாகவும் அஷ்டாக்ஷரி மஹாமந்திர ரூபமாகவும் சாளக்கிராம ரூபமாகவும் வழிபட்டு வரு கின்றனர். தெய்வ அம்சத்தை சக்கரவடிவில் கொண்டு வழிபடும் மரபு இந்து சமயத்தின் சைவ, வைஷ்ணவ, சாக்த பிரிவுகளிலும் பௌத்த ஜைன நெறிகளிலும் காணப்பட்டு வருகின்றது. சாக்த வழிபாட்டில் சிறப்பாக இடம்பெறும் சக்கரத்தைத் தெய்வ அம்சமா கப் போற்றி வழிபடும் இம்மரபானது கிறீக், எகிப்து ஆகிய நாடுகளிலும் உரிய வழிபாட்டு மரபுகளில் காணப்பட்டுவருகின்றது. தமிழ் நாட்டில் கும்பகோணத்தின் வடபாற் குடந்தை யில் காணப்படும் ஓர் விஷ்ணு ஆலயத்திலும் மாயவன் சக்கர ரூபமாக இருப்பதாகக் கூறப் படுகின்றது. திருமால் தம் திருக்கரத்தில் சக்கராயுதத்தையே சிறப்பாகக் கொண்டவர். திருமாலின் சக்கரத்தையே திருமாலாகக் கொண்டு சுதர்ஸனர் என்ற திருநாமத்தில் வைஷ்ணவர்கள் போற்றுவர். சக்கரத்திற்குரிய தெய்வமாகிய சுதர்ஸனர் அக்கிரமத்தையும் அறியாமையையும் அழிக்கும் இயல்பினர். ஆழ்வார்கள் சக்கரத்தாழ்வார் என இவரை அழைப்பர். சுதர்ஸனசக்கரம் பற்றி விஷ்ணுதர் மோத்தரம், சில்பரத்தினம் ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. சுதர்ஸன மூர்த்தியின் வடிவம் பற்றிப் பல்வேறு விதமாக நூல்கள் கூறுகின்றன. அவை ஷட்கோண சக்கரத்தின் மையத்தில் சுதர்ஸனரும் பிற்புறத்தில் திரிகோண சக்கரத்தில் யோக நரசிம்மரும் வழிபடப்படுவதாக எடுத்தியம்புகின்றன. இன் னொருவகையில் சுதர்ஸனர் இன்றி ஷட் கோணங்கள் மட்டும் காணப்படுகின்றது. சுதர்ஸன மூர்த்தியின் பெருமைகளை வேதாந் தமாக தேசிகர் பாடிய சுதர்ஸனாஷ்டகம் நன்கு விளக்குகின்றது.

இவ்வல்லிபுர ஆழ்வார் ஆலயம் பற்றி வல்லிபுரமான்மியம் குறிப்பிடுகையில் வல்லி என்னும் கன்னிகையினுடைய மடியில் மீன் வடிவமாக விழுந்து பின் மானுடப்பிள்ளை போல விஷ்ணு மூர்த்தி தோன்றினார். பின் மறைந்து மீண்டும் பிராமணவடிவத்தில் தோன்றி எல்லாப்படைக் கலங்களுக்குள்ளும் சிறந் தோங்கும் இச் சக்கராயுதத்தை வழங்கி நல்ல சுபமுகூர்த்தத்தில் நல்ல இலக்கணத்தில் விதிப்படி பிரதிட்டை செய்து பேரன்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய நைமித்திக பூசைகளை நடாத்தி வழிபட்டு விரும்பிய எல்லாவற்றையும் அடைவீர்களாக என்று கூறிமறைந்தார் எனக் கூறுகின்றது.

சர்வாயுததேசு முக்கியந்து சக்கரம்
த்வதிமுதாசஹு'
சுமுகூர்த்தே சுலக்னேச ப்ரதிஷ்டா ப்ய:
யதாவிதி'
நித்ய பூஜாதிகம் க்ருத்வா பஜத்வமதி
பக்தித:'
பூஜநாதஸ்ய யூயம்து சர்வான்
காமாநவாப்னுத'

மேலும், இவ்வல்லிபுரத்தலமானது விஷ்ணு மூர்த்திக்கு உவப்பைக் கொடுக்கின்றதும் வைகுண்டபதத்தில் அனுபவிக்கும் முத்தி இன்பத்தைக் கொடுப்பதுமாகும் என வல்லிபுர மான்மியம் கூறுகின்றது.

"வல்லிபுர மஹாஷேத்ரம் வைகுண்டப்ரீதி தாயகம்"

இவ்வல்லிபுரத்தலம் கிழக்குக் கடலோடு அமைந்து சூரியநாராயண அம்சமாக இருப்பதனால் இங்கு ஞாயிற்றுக்கிழமையே வழிபாட்டுக்குரிய விஷேட தினமாகப் பின்பற்றப்படுகின்றது.

இத்தலத்தோடு தொடர்பான பலாப்பழக் கதையானது அன்பருக்குரியது, இறைவனுக்கு உரியது என்ற தத்துவத்தைப் புலப்படுத்திக் காட்டுகின்றது. சிங்கைநகரைக் கடல்கொண்ட போது பக்தர்கள் பரமனை வேண்ட பரமன் தம் திருக்கையால் கடலை நிறுத்தினார் என செவிவழியாகக் கதையும் கூறப்படுகின்றது.

"சீரியநற் திருநீறு சிவநற்சின்னம்
திருமண்ணே திருமாலுக்குரிய சின்னம்"

நேரியலில் இவையிரண்டுமு வந்துபேணி இங்கு அடியார்கள் சைவ-வைணவ மரபினை இணைத்துப்பேணி திருமால் மீது உயர்பக்தி கொள்கின்ற இத்திருத்தலத்தில் தொன்று தொட்டு பரம்பரையாக உள்ள குருமார்களினால் நித்திய நைமித்திய பூஜைகள் முறைப்படி நிகழ்த்தப்பெற்றும் ஆலய அறங்காவலர் சபையினரால் நன்கு பாலனம் செய்யப்பட்டும் வருவது பக்தர்களுக்கு பேருவகை தருவதாக அமைகின்றது.

"சூகரமானவன் மாயவனான்முகன்
றோன்றுதற்கன்
றாகரமானவன் வல்லிபுரத்தி
லமர்ந்தருள்வோன்" (41)
"கதவுருவாகி விழுங்குமசுரன்
கலக்கமுற
வகமகல் சஞ்சு கிழித்தகு கண்ண
வசோதை சுத
சகமுயர் வல்லிபுரப்பதி மாயநின்
றாளடியேன்
சிகரமுறவருள் பாபவினைகள்
சிதைவுறவே" (49)

என்ற பாடல் அடிகள் நோக்கத்தக்கன.

**ஆலயம் தொடர்பாகக் கூறுகின்ற நூல்கள்**

இவ்வாலயத்தைப் பற்றிய-இதனோடு தொடர்புடைய விடயங்களை பரணவிதான, போல்பரீஸ், பெக்ஸி, கலாநிதிகள், கணபதிப்பிள்ளை, இந்திரபாலா, வேலுப்பிள்ளை, வித்தியானந்தன், சிற்றம்பலம், முதலியார் முத்துத்தம்பி, குலசபாநாதன் கலைப்புலவர், குலரத்தினம், சுவாமி ஞானப்பிரகாசர், ஆ.தேவராசன், செங்கைஆழியான் ஆகியோர் தமது நூல்களிலும் கட்டுரைகளிலும் கூறியுள்ளனர். கலாநிதி பாலசுந்தரம் எழுதிய யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயராய்வு என்னும் நூல் வல்லிபுர இடப்பெயர் விளக்கத்தைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.சிவசாமி அவர்களும் வல்லிபுரத்தோடு தொடர்பான தொல்லியல் பற்றிய கட்டுரை களை எழுதியுள்ளார். ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஓர் ஆய்வு நோக்கு என்ற தலைப் பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையில் சிறப்புக்கலை பயின்ற ஓர் மாண வியும் ஆய்வுகள் செய்து கட்டுரை சமர்ப் பித்துள்ளார்.

தக்ஷிணகைலாய புராணம், ஸ்காந்தபுரா ணம், கோகுல சந்தேஸ, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, வைபவமாலை, இலங்கை புராதன இந்து ஆலயங்கள், வல்லிபுரத் திருவந்தாதி, குருக்கட்டுத்திருவந்தாதி, பள்ளியெழுச்சி, கரு டன் விடுதூது, திருவடிப்புகழ்ச்சி, ஆழ்கட லான், மும்மணிமாலை, வல்லிபுரநாதர் பதிகம், கொன்றைப்பத்து, சிங்கைநகர்ப்பதிகம், வல்லிபுர போதம், ஸ்ரீவல்லிபுர மான்மியம், வல்லிபுர ஆழ்வார் துதி, போற்றித்திரு அகவல், வல்லிபுரத்தான் தலபுராணம், வல்லி புர மாயன் பிள்ளைத்தமிழ், வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பூர்வீக வரலாறு, வல்லிபுரம் திருமாலை, திருக்குடமுழுக்கு மலர், என்னும் நூல்கள் வல்லிபுரத்தின் பெருமைகளையும் மாயவனின் அருட் சிறப்பையும் எடுத்தியம்பு கின்றன.

### ஆலய முகாமை

ரி.ஆர். 72 நீதிமன்ற முகாமைத்திட்டப் படியே நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. மகாசபை உறுப்பினர்களாக 42 பேர் உள்ள னர். இவர்களிலிருந்து அறங்காவலர் சபைக்கு 5 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அறங்காவலர் சபையின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். இவ்வறங்காவலர் சபையில் துன்னாலை, வல்லிபுரம், கற்கோவளம், புலோலி ஆகிய கிராமத்தினைச் சேர்ந்தவர் இடம்பெறு வார்கள். ஒவ்வொரு ஆண்டும் மகாசபைக் கூட்டம் நடைபெற்று வருகின்றது. அதில் வரு டாந்த வரவு செலவு கணக்காய்வு அறிக்கை கள் சமர்ப்பிக்கப்படும்.

★

## உற்சவங்கள்

| | |
|---|---|
| பொது உற்சவங்கள் | ஞாயிறு, ஏகாதசிகள் (மாதம்) |
| விசேட உற்சவங்கள் | கிருஷ்ணஜெயந்தி, இராம நவமி, மார்கழி நோன்பு, வீம ஏகாதசி, சுவர்க்க ஏகாதசி. |
| மகோற்சவங்கள் | 17 நாட்கள் நடைபெறுகின்றது. கொடியேற்றம், விநாயகர் தரிசனம், வெண்ணெய் திருடல், துகில்திருடல், பாம்பு நடனம், ஸ்ரீகிருஷ்ணன் போர், வேட்டை, சப்பறம், தேர், சமுத்திர தீர்த்தம், பட்டுத் தீர்த்தம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதமது நல்லூர் முருகன் கொண்டாட்டம்
நாவலர் சைவம் வளர்த்த நல்லூர் எம்பதியிலே
கொண்டாடும் பெருவிழா நல்லூர் முருகனல்லவோ
அவனருள் வேண்டி வரும் மக்கள் இன்னலை களைந்திடுவாய்

யாழ்.நகர் மத்தியில் சுவை ததும்பும்

பிரபல சைவ உணவகம்

# சரஸ்வதி விலாஸ்

எதுவானாலும் சுவையூட்டும் பலகாரம்
ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத்தொடர்பு சேவைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்

**195 (57), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி - 021.2809, 021.3077**

தமிழ்த் தெய்வம் முருகன் அவன் தமிழ் காக்கும் தெய்வம்
திக்குத் தெரியா ஈழமக்கள் தரமுயர
சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான
சகல நூல்களுக்கும்

- பிறந்ததின வாழ்த்து மடல்கள்
- திருமண வாழ்த்து மடல்கள்
- வாராந்த ~ மாதாந்த சஞ்சிகைகள்
- காகிதாதிகள் ~ அலுவலக, பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றிற்கும்

யாழ். / கொழும்பு சகல புதினப் பத்திரிகைகளுக்கும்
யாழ்.நகரில் கலையகமாக மிளிரும் ஸ்தாபனம்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

340, செட்டியார் தெரு,
கொழும்பு.
தொ.பே. - 422321.

4, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம்),
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனைக் கந்தனாம் அவன்
காவடிக் கந்தனாம் நல்லருள்
முருகன் அவன்தாழ் சரணம்! சரணம்!!
நல்வாழ்வு தந்தெமை காத்திடுவாய் சரவணபவா.

உங்கள் தேவை எதுவோ
அதுவே எங்கள் சேவை

All type of
Official Work
Under
One Roof

SRI MURUGAN

Tele Communication Service,
Computer Service & Agency Post Office
T.P. - 021-2670, 3214, 3588, Fax - 021-3214
No.303, K.K.S. Road, Jaffna.
E-mail - del-smskr@ eureka.lk

நல்லைநகர் பெருமை கொள் தங்க வேலவனே
உமதருள் வேண்டி அலையும் அடியார்க்கு
தங்கமா மயிலோனே தங்கரத காட்சி தந்து
சோதனைகள் போதுமென்று அமைதியை தாருமையா

Suthaas Ice Cream Suthaas Ice Cream

சுதாஸ்

SUTHAAS Ice Cream

சுதாஸ் ஐஸ் கிறீம்

அக மகிழ்ந்து சிரித்து சிரித்து தினமும் ஏராளமானோர் சுவைத்து மகிழும்
ஐஸ்கிறீம் நல்லூரில் அமைந்துள்ளது. தினமும் வாருங்கள் சுவைத்துப் பாருங்கள்

சுதாஸ் ஐஸ் கிறீம்

448, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

**ஓம்**

பூர் புவ ஸ்வக
தத் ஸவித்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
திய் யோ யோந ப்ரசோதயாத்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

## காயத்திரி மந்திரம் மொழிபெயர்ப்பு

ஓம் மாதா! முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே! எனது புத்தியைக் கூர்மை அடையச் செய்து, சூர்யப் பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல் எனது சகல அறியாமையையும் அகற்றி, எனது புத்தியைச் சாந்த சித்த நிர்மல மானதாகப் பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக் கிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

## மணங்கமழ பங்களித்த உங்களுக்கு

# எங்கள் உளங் கனிந்த நன்றி



2001ஆம் ஆண்டின் நல்லைக் குமரனின் ஒன்பதாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களுக்கும், மதுரை, நல்லூர் ஆதீன முதல்வர் களுக்கும், அந்தணச் சிவாச்சாரியர்களுக்கும், இராமகிருஷ்ணமிசன் சுவாமி களுக்கும் சைவப்பெரியோர்களுக்கும்,

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும்,

மலருக்கு விளம்பரங்கள் தந்து உந்து சக்தியாக இருந்த வணிகப் பெருமக்களுக்கும், வங்கி நிறுவனங்களுக்கும், பொதுஸ்தாபனங்களுக்கும், இவ்விளம்பரங்களைப் பெற்றுத்தந்துதவிய இளைப்பாறிய சிறாப்பர் திரு.த.கனகசபை அவர்களுக்கும்

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய பாரதி பதிப்பகத்தாருக்கும்,

இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன் புள்ளங்கள்

அனைவருக்கும்,

எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன்தாள் பணி கின்றோம்.

சைவசமய விவகாரச் குழு,
மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் மலர்

# 2001



வெளியீடு

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற**

**சைவசமய விவகாரக் குழு**

noolaham.org | aavanaham.org

Nelliady.